ஆரோக்கியம் அருளும் ஆலய விருட்சங்கள்!



ஜே.வி.நாதன்

விகடன்
பிரசுரம்



ஜே.வி.நாதன்

சிதம்பரத்தில் பிறந்தவர், தற்போது வாசம் வேலூரில். இவருடைய மனைவி ஜெயா வேலூர் டி.கே.எம். மகளிர் கல்லூரி முதல்வராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர். இந்தத் தம்பதிக்கு ஒரு மகன், ஒரு மகள்.

தமிழக அரசின் மருத்துவத்துறை மற்றும் சமூகநலத்துறை இரண்டிலும் மொத்தம் இருபது ஆண்டுகள் பணியாற்றி விட்டு, எழுத்தார்வத்தால் அரசுப் பணியிலிருந்து விருப்ப ஓய்வு பெற்றவர். மௌனி, அகிலன், நா.பா. போன்ற எழுத்தாளர்களின் நெருக்கத்தால் சிறுகதைகள் எழுதத் தொடங்கினார். பின்பு, ஜூனியர் விகடன் தொடங்கியது முதல் கட்டுரைகள் எழுதுவதில் ஈடுபட்டார்.

சிறந்த சிறுகதைக்கான 'இலக்கியச் சிந்தனை' பரிசை மூன்று முறை பெற்றுள்ளார். 'முகமூடி இல்லாத கொள்ளைக்காரர்கள்!' என்ற தலைப்பில் ஜூனியர் விகடன் இதழில் வெளிவந்த இவரது கட்டுரை, 'தமிழில் வெளிவந்த மிகச் சிறந்த புலனாய்வுக் கட்டுரை' என்று சென்னை 'விஜில்' அமைப்பால் தேர்ந்தெடுக்கப்பட்டு, தங்கப்பதக்கம் உள்ளிட்ட 'பாஞ்ச ஜன்யம்' என்ற விருதைப் பெற்றது.

எழுத்தாளர் ஜெயகாந்தன் முன்னுரையோடு 'வேட்டை', மற்றும் விகடன் நிறுவன வெளியீடாக 'அதிதி' என்று மொத்தம் இரண்டு சிறுகதைத் தொகுதிகள் இதுவரை வெளிவந்துள்ளன.

ஆரோக்கியம் அருளும் ஆலய விருட்சங்கள் !

ஜே.வி.நாதன்

விகடன்
பிரசுரம்

Title :
AAROKKIYAM ARULUM
AALAYA VIRUTCHANGAL
© J.V.NATHAN

ISBN : 978-81-8476-402-4

விகடன் பிரசுரம்: 636

நூல் தலைப்பு:
ஆரோக்கியம் அருளும்
ஆலய விருட்சங்கள்!

நூல் ஆசிரியர்:
© ஜே.வி.நாதன்

முதற்பதிப்பு : ஜனவரி, 2012

விலை : ₹ 125

பதிப்பாளர்:
பா.சீனிவாசன்

ஆசிரியர்:
இரா.சரவணன்

முதன்மை பொறுப்பாசிரியர்:
பொன்ஸீ

தலைமை உதவி ஆசிரியர்கள்:
எஸ்.கோபால், எம்.நாகமணி, கே.பாசுமணி

உதவி ஆசிரியர்:
சிவராஜ்

முதன்மை வடிவமைப்பு:
மு.ராம்குமார்

தலைமை வடிவமைப்பு:
அ.அன்பழகன்

விகடன் பிரசுரம்
757, அண்ணா சாலை, சென்னை-600 002.
எடிட்டோரியல் பிரிவு போன்: 044-28524074 / 84
விற்பனை பிரிவு போன்: 044-42634283 / 84
e-mail: publications@vikatan.com

 5-)

நலம் பெற வலம் வருவோம்!

இயற்கை சக்திகளான பஞ்சபூதங்களையும் தெய்வ வடிவில் வணங்கும் வழக்கம் இந்து சமயத்தின் ஆணி வேர். இந்து சமய வழிபாட்டு முறைகள் ஒவ்வொன்றுமே அறிவியல்பூர்வமானவை. நெற்றியில் திருநீறு பூசுவது முதல் தல விருட்சங்களை வலம் வருவது வரை இதில் அடக்கம்.

அபூர்வ மருத்துவ குணமுடைய மரம், செடி-கொடிகளை 'தல விருட்சம்' என்ற பெயரில் ஆலயங்களில் நட்டு வளர்த்தனர் முன்னோர். ஆலயங்களில் இருப்பதால், விருட்சங்களின் உண்மையான பலன்கள் புரியாவிட்டாலும், மக்கள் அவற்றை வழிபடுவதோடு, பாதுகாக்கவும் செய்வார்கள் என்பது நம் முன்னோர்களின் கணிப்பு!

ஒன்பது கிரகங்கள், பன்னிரண்டு ராசிகள், இருபத்தியேழு நட்சத்திரங்கள் - ஆகியவற்றுடன் தொடர்புகொண்ட விருட்சங்கள் உள்ள ஆலயங்களுக்கு, இந்த நூலின் ஆசிரியர் ஜே.வி.நாதன் நேரில் சென்று விரிவாக விவரங்கள் சேகரித்து இருக்கிறார். இதனை, 'சக்தி விகடன்' இதழில் 'ஆரோக்கியம் அருளும் ஆலய விருட்சங்கள்!' என்ற தலைப்பில் அவர் தொடராக எழுதியபோதே, வாசகர்களிடத்தில் ஏக வரவேற்பு. அந்தத் தொகுப்பே அற்புத நூலாக இங்கே வடிவம் பெற்றுள்ளது.

தல விருட்சங்கள் உள்ள ஆலயங்களின் தல புராணம், அங்கு உறைந்துள்ள தெய்வங்களின் அருட்சக்தி, விருட்சங்களின் அபூர்வ மருத்துவ குணங்கள், சங்க இலக்கியங்களில் இந்த விருட்சங்கள் இடம் பெற்றுள்ள பாடல்கள் என எதனையும் விட்டுவைக்காமல் விவரித்திருக்கும் இந்த நூல் ஓர் ஆராய்ச்சிக் கருவூலமாக பக்தர்களைப் பரவசப்படுத்தும். ஆன்மிக அன்பர்களும், மருத்துவ ஆர்வமுள்ளவர்களும் போற்றிப் பாதுகாக்க வேண்டிய பொக்கிஷம் இந்த நூல்!

— ஆசிரியர்

என்னுரை

சிறுகதைகள் மற்றும் ஜூனியர் விகடனில் கட்டுரைகள் என்று எழுதிவந்த என்னிடம் "உங்களால் 'ஆலய விருட்சங்கள்' பற்றி ஒரு தொடர் எழுத முடியும். எழுதுங்கள்!" என்று நெருங்கிய நண்பர் ஒருவர் சொன்னார். ஏற்கெனவே 'தல விருட்சங்கள்' மீது அதீத ஆர்வம் கொண்டிருந்த எனக்கு அது மிகுந்த உற்சாகம் அளித்தது.

தொடர்ந்து மூலை முடுக்குகளில் இருந்த பழைமையான பல கோயில்களுக்குப் படையெடுக்க ஆரம்பித்தேன். ஆலயங்கள் தமிழக அரசின் இந்து அறநிலையத்துறைக் கட்டுப்பாட்டிலும், ஆதீனங்களின் கட்டுப்பாட்டிலும் இருந்தபோதிலும் அவர்கள் அனைவரும் உரிய அனுமதியும் ஒத்தாசையும் வழங்கி உதவினார்கள். இந்த முயற்சியில் பெரும்பாலான ஆலயங்களுக்குச் சென்று விவரம் சேகரிக்க, சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் தொடர்புகொண்டு ஒரு பாலமாகச் செயல்பட்டுப் பேருதவி செய்தவர் என் கெழுதகை நண்பரும் விகடன் தலைமை நிருபர் பணியில் உள்ளவருமான கரு.முத்து அன்னாரின் உதவி என்றும் மறவா நன்றிக்குரியது.

வாணியம்பாடியில் 108 ஏக்கர் பரப்பளவில் 'மொகல் கார்டன்' என்று பெரிய தோட்டம் அமைத்து தல விருட்சங்கள், மற்றும் ஏராள செடி-கொடிகள் நட்டு வளர்த்துப் பராமரிப்பதுடன் அது தொடர்பான மருத்துவ ஆராய்ச்சியிலும் ஈடுபட்டு வருபவர் டாக்டர் அக்பர் கவுசர் அவர்கள். என் கட்டுரைகளின் மருத்துவக் குறிப்புகள் தொடர்பாகவும், விருட்சங்கள் குறித்த என் சந்தேகங்கள் தொடர்பாகவும் அவர் அளித்த உதவிகள் அளப்பரியது. அவருக்கு என் நெஞ்சார்ந்த நன்றிகள்!

தமிழகத்தின் பல கோயில்களுக்குச் சென்றபோது, சில கோயில்களில் 'தல விருட்ச'த்தின் முக்கியம் தெரியாமல் காலக்கிரமத்தில் அது பட்டுப்போக விட்டிருக்கிறார்கள். சில இடங்களில் சம்பந்தப்பட்ட ஆலயத்தின் தல விருட்சத்துக்குப் பதிலாக வன்னி மரம், வில்வ மரம் என்று வேறு விருட்சத்தை வளர்த்து வருவதையும் காண முடிந்தது. மதுரை ஸ்ரீமீனாட்சியம்மன் ஆலயத்தில் கடம்ப மரம் தல விருட்சம். பட்டுப்போன கடம்ப மரத்தின் ஒரு கிளையை வெள்ளிக் கவசம் சார்த்திப் பாதுகாத்து வைத்திருப்பதைப் பக்தர்கள் காண முடியும். சிதம்பரம் ஸ்ரீநடராஜப் பெருமான் ஆலயத்தில் தொழுநோய்க்கு மருந்தாகப் பயன்படக்கூடிய தில்லை என்ற தல விருட்சம் பல வருடங்களாக இல்லையாம்!

இதுபோன்ற நிலையை மாற்றிட சம்பந்தப்பட்ட ஆலயப் பொறுப்பாளர்களும், ஆன்மிக அன்பர்களும் முயற்சி எடுத்து, அழிந்துபட்ட தல விருட்சங்களை ஆலயங்களில் நிறுவுதல், மனித சமுதாயத்துக்குச் செய்யும் ஒரு தொண்டாகும் என்பதில் ஐயமில்லை!

'ஆரோக்கியம் அருளும் ஆலய விருட்சங்கள்' என்ற தலைப்பில் நான் எழுதிய 48 கட்டுரைகளைச் சிறப்பாகத் தொடர்ந்து வெளியிட 'சக்தி விகடன்' ஆசிரியர் குழுவினர் காட்டிய அக்கறையும் ஆர்வமும் நெஞ்சை நெகிழ்விக்கச் செய்தது. குழுவினருக்கு என் நெஞ்சார்ந்த நன்றிகள்!

– ஜே.வி.நாதன்

5, மூன்றாவது குறுக்குத் தெரு,
வள்ளலார் நகர்,
சாயிநாதபுரம், வேலூர் - 632 001.
மின்னஞ்சல்: vaithiyanathan@gmail.com

இந்த நூல்....

என் எழுத்துப் பணிக்கும், வாழ்வுக்கும் அன்பு என்னும்
நீர் வார்த்து, உறுதுணையாக இருந்து, எந்நேரமும் என்னை
ஊக்குவித்து, உற்சாகப்படுத்தி வரும் என் மகள்
ஜே.வி.பூர்ணிமாவுக்கு...

வெள்ளெருக்கு மகிமை!

1

சூரியன் திருத்தலம்
ஸ்ரீசூரியனார் திருக்கோயில்

இயற்கையை வழிபடத் துவங்கிய ஆதிகாலத்தில், இறைவனின் திருவுருவாக எண்ணி, நேசமுடனும் பக்தியுடனும் மனிதர்கள் அதிகம் வழிபட்டது மரங்களைத்தான். இந்த மரங்களுக்கும் சமயங்களுக்குமான தொடர்பை, பல்வேறு சமய இலக்கிய நூல்கள் விரிவாக எடுத்துக் கூறுகின்றன.

கிளைகளாய் கிளைத்த பல கொப்பெலாம்

சதுர்வேதம் கிளைகளீன்ற

களையெல்லாம் சிவலிங்கம் கனியெல்லாம் சிவலிங்கம்

கனிகளீன்ற சுளையெல்லாம் சிவலிங்கம்...

- என்று போற்றுகிறது குற்றாலக் குறவஞ்சி!

விதை முதல் இலைகள் வரை அனைத்தையும் உயிரினத்துக்குச் சமர்ப்பிக்கும் விருட்சங்களை, தெய்வமாகக் கருதி மனிதன் வழிபட்டதில் வியப்பில்லைதான். கால ஓட்டத்தில்... இறைவனைக் குடியிருத்தி ஆலயங்கள் எழுந்தபோது, இந்த தெய்வ விருட்சங்கள், ஸ்தல விருட்சங்களாயின! ஆன்மிகச் சிறப்பு மட்டுமா? மருத்துவ மகத்துவமும் நிறைந்தவை ஸ்தல விருட்சங்கள். இதுபற்றியும் இந்த

நவக்கிரக தோஷங்கள் விலகும்!

"சூரியனுக்கு 'அர்க்கன்' என்றும் பெயர் உண்டு. இவருக்கு உகந்த நிறம் - சிவப்பு. பிடித்த வஸ்திரம் - சிவப்பு ஆடை. எனவேதான் இவருக்கு செந்நிற மலர்களும் செவ்வாடையும் அணிவித்து வழிபடுவார்கள். இவருக்கு உகந்த சமித்து வெள்ளெருக்கு.

முன்பொரு காலத்தில் எருக்க வனமாக இருந்த இடம் இது. பிரம்மனின் சாபத்தால் நவக்கிரகங்களை தொழுநோய் பற்றிக்கொண்டது. அவர்களிடம் அகத்தியர், தயிர் அன்னத்தை எருக்க இலையில் வைத்துச் சாப்பிடுமாறு கூறினார். அதற்கான காரணத்தைக் கேட்டபோது, 'இது தேவ ரகசியம். எருக்க இலையின் சாரத்தில் ஒரு அணுப் பிரமாண அளவு தயிரன்னத்தில் கலக்கும். தொடர்ந்து 78 நாட்கள், இதேபோல் சாப்பிட்டு வந்தால் தொழுநோய் பூரண குணமாகும்'



என்று அருளினார். அவ்வளவு மகத்துவம் வாய்ந்தது எருக்கன் இலை! ரத சப்தமி (தை மாதம்) நாளில், ஏழு எருக்க இலைகள், எள், அட்சதை ஆகியவற்றைத் தலையில் வைத்து நீர்நிலைகளில் ஸ்நானம் செய்தால், நவக்கிரக தோஷம் விலகும்; எருக்கஞ் செடியைச் சுற்றி வலம் வந்தால், திருமணத் தடை நீங்கும்; குழந்தை பிறக்காதவர்களுக்கு குழந்தை பிறக்கும்" என்கிறார் கோயிலின் நடன தியாகராஜ குருக்கள்!

விருட்சங்களால் புகழ் பெற்ற தலங்கள் குறித்தும் இந்த நூலில் விரிவாகத் தெரிந்துகொள்ளப் போகிறோம். முதல் தரிசனம்... சூரியனார் கோயில்!

உலகின் மிகத் தொன்மையான நூல்களில் ஒன்றான ரிக் வேதத்திலும் சூரிய வழிபாடு பற்றிய குறிப்புகள் உண்டு. தமிழில் தொல்காப்பியமும், சிலப்பதிகாரத்திலும் சூரிய வழிபாடு மற்றும் சூரிய வணக்கம் குறித்த குறிப்புகள் உண்டு. இதன் மூலம் சூரிய வழிபாட்டின் தொன்மையையும் மகிமையையும் தெளிவுற அறியலாம். சங்க காலத்தில் பூம்புகாரில் இருந்த 'உச்சிக்கிழான் கோட்டம்' என்ற சூரியக் கோயில், கடல் சீற்றத்தால் அழிந்துவிட்டபோதிலும்... தஞ்சை மாவட்டத்தில் உள்ள சூரியனார் கோயில் மிகப் பொலிவுடன் திகழ்கிறது!



வெள்ளை எருக்கன் பூ

தஞ்சை மாவட்டத்தில் காவிரியின் வடகரையில் அமைந்துள்ளது சூரியனார் கோயில். கும்பகோணத்தில் இருந்து சுமார் 14 கி.மீ. தூரம். இதைக் கட்டுவித்து (1079-1120), அதற்குரிய நிவந்தங்களையும் அளித்தவன் முதலாம் குலோத்துங்க சோழன். 1988-ல் திருவாவடுதுறை ஆதீனத்தின் பேராதரவினால் இந்தக் கோயிலின் திருப்பணிகள் நிறைவேற்றப்பட்டு, மகாகும்பாபிஷேகம் செய்யப்பெற்றது.

சுதைச் சிற்பங்கள் நிறைந்த... சுமார் 50 அடி உயர ராஜகோபுரம் கம்பீரம்! கோயிலுக்குள் ஸ்ரீஉஷாதேவி- சாயாதேவி சமேதராக திருமணக் கோலத்தில் திகழ, இவரது சந்நிதிக்கு எதிரிலேயே குருபகவான் தரிசனம். குருவின் பார்வையில், தம்பதி சமேதராக சூரியபகவான் காட்சி தருவதால், திருமண யோகம் அருளும் அற்புதத் தலம் எனப் போற்றுகின்றனர் பக்தர்கள். அதுமட்டுமா? சகல சனி தோஷங்களும் இன்னும்பிற நவக்கிரக தோஷங்களுக்கு ஆளானவர்களும்... இந்தத் தலத்துக்கு வந்து, சுமார் 78 நாட்கள் தங்கியிருந்து, நவதீர்த்தங்களில் நீராடி, விரதமிருந்து வழிபட்டால், களத்திர தோஷம், விவாகப் பிரதிபந்த தோஷம், புத்திர தோஷம், புத்திரப் பிரதிபந்த தோஷம், உத்தியோகப் பிரதிபந்த தோஷம் உட்பட சகல தோஷங்களில் இருந்தும் நிவர்த்தி பெறலாம் என்கிறார்கள். சூரிய தசை- சூரிய புத்தி நடப்பவர்களும்... ஞாயிறுதோறும் இங்கு வந்து வழிபட்டுப் பலனடையலாம். இத்தகு மகிமைகள் நிறைந்த சூரியனார் கோயிலின் இன்னொரு சிறப்பு... ஸ்தல விருட்சமான வெள்ளெருக்கன்!

சிவனாரை பூஜிக்க உகந்த பூக்களில், வெள்ளை எருக்கன் பூவுக்கு முக்கிய இடம் உண்டு. விசேஷ மருத்துவ குணம் நிறைந்த வெள்ளெருக்கன் பூ, புராண - இலக்கியங்களிலும் போற்றப்படுகிறது. '*வெள்ளெருக்கன் சடை முடியான், வெற்பெடுத்த திருமேனி...*' என்று சிவனாரின் சடைமுடியில் சூடப்பட்ட வெள்ளெருக்கன் பூக்கள் குறித்து ராமாயணத்தில் போற்றுகிறார் கம்பர். சங்க இலக்கியம் இதை, 'எருக்கு' எனக் குறிப்பிடுகிறது. புறநானூறில், 'எருக்கம்புதர்ச்செடி' என விவரிக்கிறார் கபிலர். '*குறுமுகிழ் எருக்கங் கண்ணி*' என நற்றிணையும், '*குவிமுகிழ் எருக்கங் கண்ணியும்..*' என்று குறுந்தொகைப் பாடலும் எருக்கனின் சிறப்பைப் போற்றுகின்றன.

போருக்குப் புறப்படும் மன்னர்கள், ஆலயத்துக்கு வந்து ஸ்வாமியை தரிசிப்பதுடன், ஸ்தல விருட்சத்தில் இருந்து எருக்க இலை ஒன்றைப் பறித்து, கிரீடத்தின் ஓரத்தில் செருகிக்கொண்டு செல்வார்களாம்; வெற்றியுடன் திரும்புவார்களாம்! 'அக்னி புராணம்' இதுகுறித்து விரிவாக விளக்குகிறது. 'நாரத புராண'த்தில்,

---

'ஆலய விருட்சங்கள்... ஆத்ம திருப்திக்காக!'

வாணியம்பாடி என்றதும் மதுவுக்கு அடிமையானவர்களை மீட்பவரும், கிட்னி சிகிச்சை நிபுணருமான 'காசினிக் கீரை' புகழ் டாக்டர் அக்பர் கவுசர் நினைவுக்கு வருவார். இவரது அடுத்தகட்ட பரிணாமம்... நோய்களை குணப் படுத்தும் இந்துக் கோயில்களின் ஸ்தல விருட்சங்கள் குறித்த ஆய்வு!

வாணியம்பாடி, கணவாய்புதூர் காசினி தோட்டத்தின் அருகில் உள்ள, அழகிய ஆரோக்கிய விநாயகர் ஆலயத்தில் டாக்டர் அக்பர் கவுசரைச் சந்தித்தோம் (இந்தக் கோயிலைக் கட்டியது மட்டுமின்றி, சென்னை -மயிலாப்பூர் கபாலீஸ்வரர் கோயில் சிவாச்சார்யர்களைக் கொண்டு, கடந்த 18-8-2002 அன்று கும்பாபிஷேகம் செய்தவரும் இவர்தான்!).



டாக்டர் அக்பர் கவுசர்

"நோய்களை குணமாக்கும் அரிய வகை மரம் - செடிகளை ஸ்தல விருட்சமாக வைத்துள்ளனர். இதுகுறித்து ஆய்வு மேற்கொண்டபோது, வியப்பும் பிரமிப்பும் அதிகரித்தது. இந்த மரங்கள் அழிந்துவிடக் கூடாது; அடுத்தடுத்த தலைமுறைக்கும் இதன் மகத்துவம் போய்ச்சேரவேண்டும் எனும் எண்ணம் மேலோங்கியது. உலகில் இந்த விருட்சமானது அழிந்து போனாலும், கோயிலுக்குள் உள்ள ஒரேயொரு மரத்தில் இருந்தேனும் விதைகள் பரவி, பன்மடங்காகப் பெருகும் என சிந்தித்துள்ளனர் ஆன்றோர்!

சிவனாருக்கு எருக்கம்பால் நைவேத்தியம் செய்யப்படுவது குறித்தும், சிவபூஜையில் எருக்கன் பூக்கள் முக்கியத்துவம் பெறுவது குறித்தும் கூறப்பட்டுள்ளது. இது பற்றிய தகவலை, 'சிவமஞ்சரி' என்ற நூலிலும் காணலாம். இத்தகு மகத்துவங்கள் நிறைந்த எருக்கம் பூவை ஸ்தல விருட்சமாகக் கொண்ட சூரியனார் கோயிலை தரிசிப்பது விசேஷம் என்பர்.

ஆலயத்தில், கிழக்கு நோக்கி சிம்ம ராசியின் மீது ஆட்சி செய்கிறார் சூரியபகவான். எனவே, சிம்ம ராசிக்காரர்களது நோய் மற்றும் வினைகளை, வெள்ளெருக்கன்



வெள்ளை எருக்கன் செடி

ஆனால், ஸ்தல விருட்சங்களின் பெருமையை உணரவில்லை நாம்! இன்னும் சில தலங்களில் விருட்சங்களே இல்லை. புராண-புராதனப் பெருமை கொண்ட சிதம்பரம் தலத்தின் விருட்சம் - தில்லை. தொழுநோய்க்கு மருந்தாக உள்ள இந்த 'தில்லை' எனும் விருட்சம், தில்லையில் இல்லை என்பது வேதனை!

எனவே, அழிந்துவரும் அரிய வகை மரம், செடி-கொடிகளைப் பிற நாடுகளுக்கும் மாநிலங்களுக்கும் நான் செல்லும்போதெல்லாம் வாங்கிவந்து 108 ஏக்கர் பரப்பளவில், 'மொகல் தோட்டம்' என பெயரிட்டு வளர்த்து வருகிறேன். இங்கேயுள்ள எந்தத் தாவரமும் விற்பனைக்கு அல்ல; இது ஆத்ம திருப்திக்காக! அவ்வளவுதான்..." என்கிறார்.

ஆயிரக்கணக்கில் அரிய வகைத் தாவரங்கள்! இதனைப் பராமரிக்க 100-க்கு மேற்பட்ட பணியாளர்கள். நவக்கிரகம், ராசி மற்றும் நட்சத்திரத்துக்கு உரிய விருட்சங்கள் என பிரிவு பிரிவாக, விருட்சத்தின் பெயர், எந்த ஸ்தலம், இதன் தாவரப் பெயர், மருத்துவ குணங்கள் என அழகுற பட்டியலிட்டு வைத்துள்ளார் அக்பர் கவுசர்.

ஸ்தல விருட்சங்கள் குறித்த தனது ஆய்வுக் கருத்துகளையும் நம்மோடு பகிர்ந்துகொண்டார். அத்துடன், அவர் தந்த எண்ணற்ற தகவல்களும் பிரமிக்க வைத்தன. மிக அரிதானதும் அற்புதமானதுமான இந்தத் தகவல்களுடன், விருட்சங்களால் சிறப்புப் பெற்ற ஆலயங்களின் பெருமைகளையும் இணைத்துத் தரும் முயற்சி இது!





ஸ்ரீசிவ சூரியப்பெருமான் திருக்கோயில்

தீர்த்து வைப்பதாகச் சொல்வர். சூரியன் வெப்பமானவன். எருக்கம் பூவும் உடல் உஷ்ணத்தை அதிகப்படுத்தக் கூடியதுதான். காய் போல் இருக்கும் சிறிய எருக்கம் பூக்களை விரலால் அழுத்தினால் உடைந்துவிடும். உள்ளே விதை இருக்கும். இந்த தாவரத்தின் இலைகள், பூக்கள், தண்டு, வேர் என அனைத்து பாகங்களிலும் பால் இருக்குமாம். இந்தப் பால் தோல் வியாதியைப் போக்கவல்லது. பற்களின் கறைகளை அகற்றும் வல்லமை கொண்ட இந்தப் பூ, நம் மனதின் கறைகளையும் அகற்றி, நமக்குள் தெளிவைத் தரவல்லது! மலேரியா குளிர் ஜுரம் போன்றவற்றுக்கு அருமருந்து... வெள்ளெருக்கம் பூவின் மொட்டுகள்!

திருஎருக்கத்தம் புலியூர் மற்றும் திருக்கானாட்டு முள்ளூர் ஆகிய கோயில்களிலும் வெள்ளெருக்கன் ஸ்தல விருட்சமாக அமைந்துள்ளது. அமாவாசை மற்றும் பௌர்ணமி தினங்களில், திருஎருக்கத்தம் புலியூர் இறைவனுக்கு வெள்ளெருக்கம் பூ மாலை சார்த்தி சிறப்பு பூஜை நடைபெறும். திருக்கானாட்டு முள்ளூரில் வெள்ளெருக்குடன் அத்தியும் ஸ்தல விருட்சமாக இருப்பது விசேஷம்! வெள்ளெருக்கு வேரில் விநாயகர் செய்து வழிபட சகல பாவங்களும் விலகும்; சந்தோஷம் பிறக்கும் என்பார்கள்!

மருத்துவ மகத்துவம் கொண்ட தாவரங்கள், இறைவன் குடியிருக்கும் ஆலயத்தின் விருட்சமாக கொலுவிருக்கும்போது, அதன் சாந்நித்தியம் பன்மடங்கு உயர்ந்திருக்கும் என்கின்றனர் முன்னோர். எனவே, தலங்களுடன் ஸ்தல விருட்சங்களையும் தரிசிப்பது சிறப்பு. நாமும் தொடர்ந்து தரிசிப்போம்!

வில்வமும் வாழையும்!

2

சந்திரன் திருத்தலம்
திங்களூர் திருக்கோயில்

மகாவிஷ்ணுவின் இதயத்தில் இருந்து தோன்றியவர்; பாற்கடலைக் கடையும்போது, திருமகளுக்கு முன்னதாகத் தோன்றியவர்; அத்திரி முனிவர்-அனுசுயாதேவி தம்பதிக்கு மகனாக அவதரித்தவர்; நவக்கிரகங்களில் சுபக் கிரகர்; சிவனாரின் முக்கண்களில் இடது கண்ணாகத் திகழ்பவர்; மூன்று வகை நாடிகளில் இடைகலை நாடியாக உள்ளவர்; மூவகை குணங்களில் சாத்விக குணத்துக்குச் சொந்தக்காரர் என்றெல்லாம் சந்திரனைப் போற்றுகின்றன புராணங்கள்.

மன்மதனின் வெண்கொற்றக் குடையாகவும், மருத்துவ குணம் கொண்ட பயிர்களைச் செழிக்கச் செய்பவராகவும், பராசக்தியின் அம்சமாகவும், மிகுந்த அழகு உடையவராகவும், நவக்கிரகங்களில் 2-ஆம் இடத்தைப் பெற்றவருமாகிய சந்திரபகவானுக்கு உரிய திருத்தலம்... திங்களூர்!

கும்பகோணத்தில் இருந்து சுமார் 33 கி.மீ. தொலைவில் உள்ளது திங்களூர். இங்கே ஸ்ரீபெரியநாயகி சமேதராக திருக்கோயில் கொண்டிருக்கிறார் ஸ்ரீகயிலாச நாதர். திருநாவுக்கரசர்

பாடிப்பரவிய இந்த ஆலயம், கி.பி.7-ஆம் நூற்றாண்டுக்கும் முந்தையதாம். இங்கே தனிச்சந்நிதியில் அருளும் சந்திரனுக்கு சிறப்பிடம் உண்டு.

அஸ்வினி முதலான தன்னுடைய 27 பெண்களையும் சந்திரனுக்கு மணம் செய்து வைத்தான் தட்சன். இவர்களில் ரோகிணியிடம் மட்டுமே அளவற்ற பிரியம் கொண்டிருந்தான் சந்திரன். மற்றவர்கள் தந்தையிடம் சென்று முறையிட, கோபத்தில் சந்திரனைச் சபித்தார் தட்சன். சாபத்தின் விளைவால் களையிழந்த (தேய்ந்துபோன) சந்திரன் இந்தத் தலத்து இறைவனை தவம் செய்து வழிபட, சிவனருளால் வளரும் சக்தி பெற்றான் என்கிறது தல புராணம். இந்த ஆலயம், வில்வம் - வாழை என இரண்டு ஸ்தல விருட்சங்களுடன் திகழ்வது விசேஷம்.

'ஏக வில்வம் சிவார்ப்பணம்' என்பர். அத்தனை மகத்துவம் வாய்ந்தது வில்வம். இதன் இலை, பூ, பிஞ்சு, காய், பழம், வேர், பிசின், பட்டை, ஓடு... அனைத்தும் மருத்துவப் பயன்கள் கொண்டவை! உடற்சூட்டைத் தணிக்கும் வல்லமை வில்வத்தில்

வாழையும் ஸ்தல விருட்சம்!

"திங்களூருக்கு திருநாவுக்கரசர் வந்தபோது பாடசாலை, கோசாலை, தர்மசாலை, தண்ணீர்ப்பந்தல் எல்லாமே தன் பேரில் இருந்ததைப் பார்த்து வியந்தார். இந்தப் பணிகளைச் செய்த அப்பூதியடிகளின் வீட்டுக்குப் போனார்.

நாவுக்கரசருக்கு உணவு ஏற்பாடு பண்ணினார் அப்பூதியடிகள். சாப்பாடு பரிமாறுவதற்கு குருத்து இலையா நறுக்கிட்டு வரும்படி தன் பையன்கிட்ட சொல்ல, அவன் வீட்டுக்குப் பின்னால் இருக்கிற வாழைத் தோட்டத்துக்குப் போனான். அங்கே அந்தச் சின்னப்பையனை பாம்பு கடிச்சு, அங்கேயே இறந்து போயிட்டான்.


தேவியுடன் சந்திரபகவான்

ஆனா, பையன் இறந்த சோகம் மொத்தத்தையும் மறைச்சுக்கிட்டு, நாவுக்கரசருக்கு சாப்பாடு பரிமாறினார் அப்பூதியடிகள். அப்புறம் விஷயம் தெரிஞ்சதும், 'விடம் தீர்த்த பதிகம்'

உண்டு. ஜுரம், சளி, வயிற்றுக்கடுப்பு முதலான பிணிகளில் இருந்து நிவாரணம் தரக்கூடியது வில்வம் என்கின்றனர் மருத்துவ ஆய்வாளர்கள்.

வில்வப் பூவை 'கூவிளம்' என்கிறது குறிஞ்சிப் பாடல். கபிலர் இயற்றிய இந்தப் பாடலுக்கு நச்சினார்க்கினியர் எழுதிய உரையில், கூவிளம் என்று தெளிவுறக் குறிப்பிட்டுள்ளார். தவிர, யாப்பிலக்கணத்தில் கூவிளம், 'கூவிளந்தண்பூ' எனும் அசைச் சீர்களுக்கான வாய்ப்பாடாகவும் அமைந்துள்ளது சிறப்பு.

தில்லைச் சிற்றம்பலத்தில் வில்வத்தின் இலைகள் தொடுக்கப்பட்ட கண்ணியைப் பொன்னால் செய்து, அணுக்கத் திருவறையில் அருவுருவாகிய ஆண்டவனுக்குச் சூட்டியுள்ளனர். வில்வத்தை சிவபிரான் சூடும் மலராகப் பாடியுள்ளார் சுந்தரர்.

திருக்கோவிலூருக்கு அருகில் உள்ள அரகண்டநல்லூர்-ஸ்ரீஅரையணியேசர் ஆலயம், திருவஹீந்திரபுரம் - ஸ்ரீதேவநாத சுவாமி திருக்கோயில், மதுரை மாவட்டம் திருவேடகத்தில் உள்ள திருஏடகநாதர் ஆலயம், திருமோகூர்-ஸ்ரீகாளமேகப் பெருமாள்



ஒன்றை நாவுக்கரசர் பாட... இறந்து கிடந்த சிறுவன் உயிரோடு எழுந்து வந்தான் என்கிறது ஸ்தல புராணம்.

அப்பேர்ப்பட்ட இந்தத் திங்களூர் ஸ்தலத்துல, நாகம் தீண்டினா விஷம் ஏறாதுங்கறது ஐதீகம். சிவ ஸ்தலம்கறதால வில்வமும்; வாழை இலை பறிக்கப்போன சிறுவனை நினைவுபடுத்தும் வகையில், வாழையும் இங்கே ஸ்தல விருட்சம். ரெண்டு விருட்சம் இருக்கிற ஸ்தலத்துக்கு வந்து, பகவானை வழிபடுறது ரொம்பவே விசேஷம்" என்று சிலிர்ப்புடன் சொல்கிறார் கோயிலின் அர்ச்சகர் சுப்ரமணிய சிவாச்சார்யர்.

தொடர்ந்து, "கடக ராசிக்கு அதிபதி சந்திரன். அவனோட வாகனம் வெள்ளைக் குதிரை. சந்திரனுக்குப் பிடிச்ச நிறம் வெண்மை. அதனால, சந்திரனுக்கு வெண்மை நிற வஸ்திரம் சார்த்தி, வெண்ணிறப் பூக்கள் கொண்ட பூமாலை அணிவித்து, தயிர் சாதம் நைவேத்தியம் பண்ணி வழிபட்டால், சந்திர தோஷம் விலகும்; நிம்மதி பிறக்கும்" என்றும் தெரிவித்தார்.


சுப்ரமணிய சிவாச்சார்யர்



கோயில், நாகை மாவட்டம் திருக்கடையூர்-ஸ்ரீ அமிர்தகடேஸ்வரர் ஆலயம் மற்றும் சிறுபுலியூரில் உள்ள ஆறுமுகக் கடலமுதன் போன்ற ஆலயங்கள் பலவற்றிலும் ஸ்தல விருட்சமாகத் திகழ்கிறது வில்வம்!

சரி... திங்களூரின் ஸ்தல விருட்சமாக வாழை இடம் பெற்றது எப்படி? இதற்கு, அப்பூதியடிகளின் மைந்தன் பாம்பு கடித்து இறந்துபோக, திருநாவுக்கரசரின் பதிகத்தால் அவன் உயிர்பெற்ற வரலாறை காரணமாகக் கூறுகிறது ஸ்தல புராணம்.

தேக ஆரோக்கியத்துக்குத் தேவையான அனைத்து ஊட்டச்சத்துகளும் வாழைப் பழத்தில் அடங்கியுள்ளன. வாழைத்தண்டு சிறுநீரகக் கோளாறை நீக்கவல்லது. வாழை மட்டையின் சாற்றைக் கொண்டு, நாகத்தின் விஷத்தையே முறிக்க முடியுமாம்! இன்றைக்கும் வாழை இலையில் சாப்பிடுகிற வழக்கம் உண்டு. வாழை இலையில் உணவு சாப்பிட்டால், பித்தம் உள்ளிட்ட மொத்தக் குறைபாடுகளும் நீங்கும் என்கின்றனர் சான்றோர். வாழைப் பூவைப் பெண்கள்







வில்வம்

சாப்பிட்டுவந்தால், மாதாந்திரக் கோளாறுகள் நீங்கும்; மாதவிடாய் காலத்தை ஒழுங்குக்கு கொண்டுவரும்.

திங்களூரில் மட்டுமின்றி, திருவையாறில் இருந்து சுமார் 3 கி.மீ. தொலைவில் உள்ள திருப்பழனம் - ஸ்ரீஆபத்சகாயநாதர், திருச்சி மண்ணச்ச நல்லூர் அருகேயுள்ள திருப்பைஞ்ஞீலியில் அருளும் ஞீலிவனநாதர், ஆடுதுறை - ஸ்ரீஆபத்சகாயேஸ்வரர் மற்றும் குடவாசல் - ஸ்ரீகோணேஸ்வரர் ஆலயத்திலும் வாழையே ஸ்தல விருட்சம்!

வில்வம் மற்றும் வாழையை ஸ்தல விருட்சமாகக் கொண்ட ஆலயத்தை வலம் வந்து வணங்குங்கள்; வளம் பெறுங்கள்!

வேம்பு மகிமை!

3


அங்காரகன் (செவ்வாய்) திருத்தலம்
ஸ்ரீவைத்தீஸ்வரன் கோயில்

மூர்த்தி, தலம், விருட்சம், தீர்த்தம் மற்றும் கீர்த்தி என ஐந்து அம்சங்கள் ஆலயத்தில் இருக்க வேண்டும் என்பது ஆகம விதி. ஆனால் சாலையோரங்களிலும், குறுகலான இடங்களிலும் ஆலயம் அமைப்பது பெருகிவிட்ட தற்காலச் சூழலில், ஸ்தல விருட்சங்களின் முக்கியத்துவம் குறையத் துவங்கியிருப்பது வேதனையான விஷயம். தெய்வீக மகத்துவம் மட்டுமின்றி தேக ஆரோக்கியத்துக்கும் வழிகாட்டும் ஸ்தல விருட்சங்கள் குறித்து விழிப்பு உணர்வை இன்றைய இளைய தலைமுறையினர் பெற வேண்டும்.


சூரியனார் கோயில் மற்றும் சந்திரன் கோயில் மகிமைகளையும் ஸ்தல விருட்ச சிறப்புகளையும் பார்த்தோம். இந்த அத்தியாயத்தில் அங்காரகன் எனப்படும் செவ்வாய் அருளும் வைத்தீஸ்வரன் கோயிலைப் பார்ப்போம். இந்தத் தலத்தின் விருட்சம் - வேம்பு!

நாகை மாவட்டம் சீர்காழியில் இருந்து சுமார் 5 கி.மீ. தொலைவில் உள்ளது வைத்தீஸ்வரன் கோயில். தீராத நோயுடன் தன்னை நாடி வரும் பக்தர்களின்

திருச்சாத்துருண்டையின் மகத்துவம்!







திருசாத்துருண்டை



வைத்தியநாத குருக்கள்

"**வை**த்தீஸ்வரன் கோயில் திருச்சாத்துருண்டை, அபூர்வமான மருந்து! இங்குள்ள விபூதி குண்டத்தின் விபூதி, சித்தாமிர்தத் தீர்த்த நீர் ரெண்டையும் கலந்து அரைச்சு, மிளகு அளவுல உருண்டையா செஞ்சு, அம்பாளோட திருவடியில வைச்சு, அர்ச்சனை பண்ணிக் கொடுப்போம். இதை உட்கொண்டால், தீராத நோயும் தீரும்!

இங்கே... தனிச்சந்நிதில காட்சி தர்றார் அங்காரகன். மூணு குணங்கள்ல, ராஜச குணத்தைக் கொண்டவர்; பூமிகாரகன்! பெருந்தன்மை, கண்டிப்பு, வைராக்கியம், பகைவரை எதிர்க்கும் ஆற்றல் ஆகியவற்றை அருள்பவர்! அங்காரகனுக்கு உகந்த நிறம் சிவப்பு. அதுனால, சிவப்பு நிற வஸ்திரம், சிவப்பு நிறப் பூக்களை இவருக்கு சார்த்துவது சிறப்பு. அதேபோல, இங்கேயுள்ள ஸ்ரீசுப்ரமணியரை வழிபடுறதும் பவழத்தை மாலையாகவோ மோதிரமாகவோ அணியறதும், சிவப்பு நிற ஆடையை உடுத்துவதும், துவரை தானியத்தையும் சிவப்பு நிறம் கொண்ட காளையையும் தானம் செய்றதும் நல்லது. கிருத்திகை தினங்களிலும் செவ்வாய்க் கிழமைகளிலும் விரதம் இருந்தா, செவ்வாய் தோஷம் விலகும்" என்கிறார் வைத்தியநாத குருக்கள்.

நோயைத் தீர்த்து வைக்க, ஸ்ரீவைத்தியநாதனாக ஈசன் எழுந்தருளியிருக்கும் ஒப்பற்ற ஆலயம். புள்ளிருக்குவேளூர் எனும் திருநாமமும் இந்தத் தலத்துக்கு உண்டு. புள் (ஜடாயு), இருக்கு (ரிக் வேதம்), வேள் (முருகப்பெருமான்), ஊர் (சூரியன்) ஆகிய நால்வரும் பூஜித்ததால் புள்ளிருக்குவேளூர் எனப்படுகிறது. ஜடாயுவின் வேண்டுகோளின்படி, அவரது உடலை ஸ்ரீராமன் தகனம் செய்த தலமும் இதுவே. எனவே, 'ஜடாயு குண்டம்' என்ற பெயரும் உண்டு.

ஊரின் நடுவே, அழகுற அமைந்துள்ளது ஆலயம். தருமபுர ஆதின மடத்தின் பராமரிப்பின் கீழ் வரும் இந்த ஆலயத்தில், ஸ்ரீவைத்தியநாதர் மேற்கு நோக்கியும் ஸ்ரீதையல்நாயகி தெற்கு நோக்கியும் அருள்கின்றனர். ஸ்ரீவீரபத்திரர், ஸ்ரீபைரவர், ஸ்ரீகற்பக விநாயகர் மற்றும் ஸ்ரீகாளிதேவி ஆகியோர் திசைக்கு ஒருவராக காவல் தெய்வங்களாக காட்சி தருகின்றனர். சூரபத்மனின் மார்பைப் பிளக்க முருகப்பெருமான் வேல் வாங்கியது இந்தத் தலத்தில்தான்! இங்கேயுள்ள ஸ்ரீசெல்வமுத்துக்குமார ஸ்வாமிக்கு அர்த்தசாம பூஜையில் சாத்தப்படும், 'நேத்திரப்பிடி' சந்தனப் பிரசாதத்தை அணிந்துகொண்டால், வேண்டிய பலன்கள் கிட்டும் என்பது நம்பிக்கை. அங்காரகன் எனப்படும் செவ்வாய், இங்கே தனிச்சந்நிதியில் அமர்ந்து அருள்கிறார். ஆகவே இது, செவ்வாய் தோஷம் நீக்கும் ஸ்தலமாகப் போற்றப்படுகிறது. பார்வதிதேவியைப் பிரிந்த சிவபெருமான், கல்லால மரத்தின் கீழ் தவத்தில் இருந்தபோது, அவரது நெற்றிக் கண்ணில் இருந்து நீர்த்துளி ஒன்று பூமியில் விழுந்தது. அதிலிருந்து பிறந்தவரே அங்காரகர். இதனால் குஜன் (பூமியின் மைந்தன்) என்றும் அழைக்கப்படுகிறார்.

மன்னனும் பூக்களும்...

சேரனுக்கு பனம்பூ; சோழனுக்கு ஆத்திப்பூ; பாண்டியனுக்கு வேப்பம்பூ என அடையாளமாகத் திகழ்ந்தனவாம் விருட்சங்கள்.



அவர்களின் படை வீரர்களும் அந்தந்தப் பூக்களைச் சூடிக் கொள்வராம்! யுத்தத்தில், எந்த மன்னனின் படைவீரர்கள் என்பதை அறிய இந்தப் பூக்கள் உதவுமாம். 'கருங்கால் வேம்பின் ஒண்பூ யாணர்' என குறுந்தொகையும் 'கருஞ்சினை விறல் வேம்பு' என பதிற்றுப்பத்தும் இதுபற்றி விவரிக்கின்றன.



வைத்தீஸ்வரன் கோயிலில் உள்ள தல விருட்சம் – வேம்பு

இவர், பரத்வாஜ முனிவரின் மகனாகப் பிறந்து, பூமாதேவியால் வளர்க்கப்பட்டவர் என்றும், தட்ச யாகத்தை அழித்த ஸ்ரீவீரபத்திரர், தேவர்களின் வேண்டுகோளை ஏற்று உக்கிரம் தணிந்து அங்காரக வடிவம் பெற்றார் என்றும் செவ்வாய் பகவான் குறித்து பலவாறு சிலாகிக்கின்றன புராணங்கள். அங்காரகன் செந்நிறமானவர் ஆதலால், செவ்வாய் என்பர். விண்ணில் செவ்வொளி வீசி விளங்கும் செவ்வாய் கிரகத்தை, 'செம்மீன்' என்கின்றன தமிழ்

'பாண்டியன் தலையாலங் காணத்து செருவென்ற நெடுஞ் செழியன், கன்னிப் போருக்குப் புறப்பட்டான். மதுரை மூதூரின் வாயிலில் அமைந்த குளத்தில் நீராடினான்: பொது மன்றத்து வேம்பின் குலையைச் சூடினான்: வெற்றி மடந்தையை நாடிப் புறப்பட்டான்' என்கிறார் இடைக்குன்றூர்க்கிழார் எனும் புலவர். 'பாண்டியன் நெடுஞ்செழியன், போர் முடிந்த இரவில் பாசறையில் புண்பட்டுக் கிடந்த வீரர்களுக்கு ஆறுதல் கூறச் சென்றான். அவன் கையில் வேல் இருந்தது. அதன் உச்சியில் வேப்பிலை செருகப்பட்டிருந்தது' என்கிறது நெடுநல்வாடை.

சுமார் 400 வருடங்கள் வரை முதிர்ந்து வளருமாம் வேம்பு. இந்த மரத்தை கரையான் அரிப்பதில்லை!

தஞ்சை மாவட்டம் திருக்குடந்தைக் காரோணம் - ஸ்ரீசோமீசர் ஆலயம், திருச்சி சமயபுரம் - ஸ்ரீமாரியம்மன், திருவாட்போக்கி-ஸ்ரீரத்தினேஸ்வரர் ஆகிய ஆலயங்களிலும் வேப்ப மரமே ஸ்தல விருட்சமாக விளங்குகிறது.

விருட்சங்களில் வேம்புக்கு தனி மகத்துவம் உண்டு. அம்மை நோய் வந்தால், வேப்பிலையைப் பரப்பி அவர்களை படுக்கவைப்பதும், அம்மைக் கொப்புளங்கள் மீது வேப்பிலையை அரைத்துப் பூசுவதும், அம்மை பரவாமல் இருக்க, வீட்டு வாசலில் வேப்பிலைக் கொத்துகளை செருகி வைப்பதும் வழக்கம். நச்சுக்கிருமிகளை அழிக்கும் வல்லமையும் வேம்புக்கு உண்டு என உலக அளவிலான ஆய்வுகளில் தெரிய வந்துள்ளது. வேப்பம்பூ பசியைத் தூண்டும்; நா வறட்சி, வாந்தி, ஏப்பம் மற்றும் வாய்வுப் பிரச்னையைத் தீர்க்கும். அந்தக் காலத்தில் பல வீடுகளில் அடிக்கடி வேப்பம்பூ ரசம் வைத்துச் சாப்பிடுவார்கள். வேப்பெண்ணெய் சிறந்த பூச்சிக்கொல்லி மருந்து. தலையில் உள்ள பொடுகு, சிரங்கு, சொறி, கரப்பான் ஆகியவற்றை தீர்க்கவல்லது. வேப்பங்குச்சியால் பல் துலக்கினால், பல் நோய்கள் வர வாய்ப்பே இல்லையாம்! வந்துவிட்ட பல் நோய்களையும் வேப்பங்குச்சி அடித்து விரட்டும் என்பர். தினமும், வேப்பந்தளிர் இரண்டை மென்று விழுங்க, சர்க்கரை நோயைத் தவிர்க்கலாம்.

கசப்பு சுவையுடைய எந்த உணவும் உடலுக்கு நன்மையைத் தரும் என்றனர் முன்னோர். வேம்பின் கசப்பும் லேசான புளிப்பும் கண்டு கொசுக்கள் தலைதெறிக்க வேறு திசை நோக்கி பறந்துவிடுமாம்! கொசுவில் இருந்து விடுதலை பெற, வீட்டுக்கு ஒரு வேம்பை வளர்ப்போம்!

பூளைச் செடி (இரும்பூளை) மகிமை!

4

குரு பகவான் திருத்தலம்
ஆலங்குடி ஸ்ரீஆபத்சகாயேஸ்வரர் கோயில்

தெளிவு குருவின் திருமேனி காண்டல்
தெளிவு குருவின் திருநாமம் செப்பல்
தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்
தெளிவு குருஉருச் சிந்தித்தல் தானே.

- **திருமந்திரம்**

காவிரிக் கரையில் அமைந்த சிவத் தலங்களில் குறிப்பிடத்தக்கது ஆலங்குடி. பஞ்ச ஆரண்ய தலங்கள் என்று புராணங்கள் போற்றும் திருக்கருகாவூர், திருஅவளிவன நல்லூர், திருஅரதைப் பெரும்பாழி, திருக்கொள்ளம்புதூர், திருஇரும்பூளை ஆகியவற்றில், திருஇரும்பூளை என்பது ஆலங்குடியைக் குறிக்கும். தேவாரப் பாடல் பெற்ற இந்தத் தலம், நவகிரகத் தலங்களில் குரு (வியாழன்) பரிகாரத் தலமாகவும் திகழ்கிறது.

பாற்கடலைக் கடைந்தபோது உருவான ஆலகால விஷத்தைப் பருகி தேவர்களைக் காத்ததால், ஸ்ரீஆபத் சகாயேஸ்வரர் எனும் திருநாமத்துடன் ஸ்வாமியும், ஸ்ரீஏலவார் குழலியம்மை எனும் திருநாமத்துடன் அம்பாளும் அருளும் அற்புதத் தலம் இது. ஆலம்



தேவியுடன் ஸ்ரீகுரு பகவான்

மஞ்சள் நிறம் பிடிக்கும்!


"நல்ல மனைவி, அருமையான குழந்தைகள், ஆதரவான உறவு, நிலையான கௌரவம், புத்தியில் தெளிவு, தேர்ந்த ஞானம் ஆகியவற்றை பக்தர்களுக்கு வழங்கும் வள்ளல், குரு பகவான்!" என குரு பகவானின் பெருமையையும், தலத்தின் மகிமையையும் சிலிர்ப்போடு விவரிக்கிறார் கோயிலின் அர்ச்சகர் ஜோதிராமலிங்க சிவாச்சார்யர்.

"குரு பார்த்தாலே கோடிக் குற்றங்கள் நீங்கும் என்பார்கள். அகத்தியர், காகபுஜண்டர், சுகப்பிரம்மர் முதலான ரிஷிகளும் முனிவர்களும் இங்கே குருவருள் பெற்றுள்ளனர். திருமணத் தடையால் அவதிப்படுவோர், வியாழக் கிழமையில் இங்கு வந்து குரு பகவானை வழிபடுவது உத்தமம். அதேபோல, பிள்ளை பாக்கியம் இல்லாதவர்களும் குரு பகவானை வேண்டினால், குழந்தை வரம் கிடைப்பது உறுதி. குரு தோஷம் உள்ளவர்கள், இங்கு 24 முறை வந்து, 24 நெய்த் தீபங்களை ஏற்றி வழிபட்டால், தோஷம் நிவர்த்தியாகும் என்பது ஐதீகம். தவிர, தனுசு மற்றும் மீன ராசிகளின் அதிபதி, குரு பகவான். எனவே இந்த ராசிக்காரர்கள், குருவுக்கு உகந்த வியாழனன்று வந்து, அவருக்குப் பிடித்த மஞ்சள் வஸ்திரம் சார்த்தி, மஞ்சள் நிறப் பூக்களால் அர்ச்சித்து வழிபடுவது விசேஷ நன்மைகளைத் தரும்" என்கிறார் ஜோதிராமலிங்க சிவாச்சார்யர்.



ஜோதிராமலிங்க சிவாச்சார்யர்

தலம் இது. ஆலம் (விஷம்) உண்ட ஸ்வாமி அருள்பாலிப்பதால் இந்தத் தலத்துக்கும் ஆலங்குடி என்றே பெயர் அமைந்தது. கும்பகோணத்தில் இருந்து சுமார் 17 கி.மீ. தொலைவில்




பூளைச் செடி

உள்ளது ஆலங்குடி. இங்குள்ள கோயிலின் ராஜகோபுரம், மூலவரான ஸ்ரீஆபத்சகாயேஸ்வரர் சந்நிதிக்கு நேராக அமையாமல், குரு பகவான் எழுந்தருளியிருக்கும் தெற்கு திசையில் அமைந்துள்ளது சிறப்பம்சம்!

பிரம்ம புத்திரரான ஆங்கீரச முனிவருக்கும் சிரத்தா தேவிக்கும் மைந்தனாகப் பிறந்தவர் குரு பகவான். கல்வி-கேள்வியில் சிறந்து விளங்கிய இவரை, இந்திரன் தனது அமைச்சராக்கிக் கொண்டதாகவும், தேவர்கள் அனைவருக்கும் இவரே குருவாகத் திகழ்ந்தார் எனவும் புராணங்கள் விவரிக்கின்றன. இவரின் திருவருள் கிடைத்தால் கல்வி ஞானமும், அஷ்ட ஐஸ்வர்யங்களும் கிடைக்கப் பெறுவர்; குபேர யோகத்துடன் வாழ்வர் என்பது ஐதீகம்.

தேவ குரு பிரகஸ்பதியின் திருவருள் பரிபூரணமாகக் கிடைப்பதற்கு சிவகுரு ஸ்ரீதட்சிணாமூர்த்தியை வழிபட வேண்டும். இறைவனுள் இறைவியும் குடியிருக்கும் அற்புதத் திருவடிவமே ஸ்ரீதட்சிணாமூர்த்தி. அம்பிகை வேறு, தட்சிணாமூர்த்தி வேறல்ல; அம்மை-அப்பன் இருவரது சக்திகளும் சங்கமிக்கும்


குரு பகவான்


ஸ்ரீஆபத்சகாயேஸ்வரர் கோயில்

அற்புதமே ஸ்ரீதட்சிணாமூர்த்தம்! அப்பேர்ப்பட்ட மூர்த்தம் குடிகொண்டிருக்கும் ஒப்பற்ற திருத்தலம் ஆலங்குடி.

சரி... தேவ குருவும், அவருக்கும் குருவான ஸ்ரீதட்சிணாமூர்த்தியும் அருளும் இந்தத் திருத்தலத்தின் ஸ்தல விருட்சம் என்ன தெரியுமா?

பூளை எனப்படும் பூளைச் செடி!

7-ஆம் நூற்றாண்டில் இந்தத் தலத்துக்கு வந்த திருஞானசம்பந்தர், இங்கே எங்கு திரும்பினாலும் பூளைச் செடி இருப்பதைக் கண்டார். இந்தத் தலத்தின் இறைவனை பாடித் தொழுதவர்...

இலக்கியங்கள் போற்றும் வெற்றிப் பூ!

கபிலர் தனது குறிஞ்சிப் பாட்டில், 'குரீ இப் பூளை குறு நறுங் கண்ணி' என்று குறிப்பிடுகிறார். கோட்டை மதிலைத் தாக்க எழுந்த யானை, பூளையொடு உழிஞைப் பூவையும் சூடிச் சென்றதாக பட்டினப்பாலை குறிப்பிடுகிறது.

பூளைப் பூக்களை 'வெற்றிப் பூ' எனக் கொண்டாடுகிறது பிங்கல நிகண்டு. அவ்வளவு ஏன்... திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுளான ஈசனைக் குறிப்பிடும் போது, 'பூளைச் சூடி' என்று பாடுகிறார் கம்பர்.

'சீரார் கழலே தொழுவீ ரிது செப்பீர்
வாரார் முலைமங் கையொட்டும் உடனாகி
ஏரார் இரும்பூளையிடங் கொண்ட ஈசன்
காரார் கடல்நஞ்சு அமுதுண்ட கருத்தே...'

– என்று பூளைச் செடியின் சிறப்பையும் போற்றி மகிழ்ந்தார். திருஇரும்பூளை தேவாரத் திருப்பதிகத்தில் அவர் போற்றிக் கொண்டாடிய பூளைச் செடி, இன்றைக்கும் கோயிலின் வெளிப் பிராகாரத்தில் அடர்த்தியாக வளர்ந்து நிற்கிறது.

கணுவுக்குக் கணு மொட்டுக் கட்டினாற் போல், அரும்பிப் பூத்திருக்கும் பூளைப் பூக்கள், வெகு அழகு! கண்ணில் பூளை வழிந்ததுபோல் இருப்பதால், கண்ணுப் பூளைச் செடி என்றும் சொல்வர். துளசி, தும்பை போலவே, பூளைச் செடியும் மருத்துவ மகத்துவம் வாய்ந்தது! துளசியைப் போலவே, விஷ ஜந்துக்களை அண்டவிடாமல் தடுக்கும் சக்தி, பூளைக்கும் உண்டு. ஆலங்குடியில் விஷ ஜந்துக்கள் கடித்து எவரும் பாதிக்கப்பட்டது இல்லை என்பதற்கு, பூளைச் செடியும் காரணமாக இருக்கலாம் என்கின்றனர் பக்தர்கள்.

குழந்தைகளுக்கு நெஞ்சில் கபம் கட்டிக் கொண் டால், மூலிகைச் சாறுடன் பூளைச் செடி இலையின் சாற்றையும் சேர்த்துக் கொடுப்பார்கள். துளசியில் ஒருவித காரம் உண்டு; கசக்கும் தன்மை கொண்டது வேப்பிலை. ஆனால், பூளை இலையின் சாறு இப்படியெல்லாம் இருக்காது!

இன்னொரு விஷயம்... கிராமப்புறங்களில் பொங்கல் விழாவின்போது, கோயில் மற்றும் வீட்டு வாசல்களில், வண்டி-வாகனங்களில்... ஆவாரம்பூ, மாவிலை ஆகியவற்றுடன் பூளைச் செடியையும் தோரணமாகக் கட்டித் தொங்கவிடுவர். இதனால், விஷப் பூச்சிகள் ஏதும் ஊருக்குள் அண்டாது; எந்தக் குறையுமின்றி விழாவும் சிறப்பாக நடைபெறும் என்கின்றனர் ஊர்மக்கள்!

ஆல், கொன்றை, வில்வம்!

5

புதன் பகவான் திருத்தலம் – திருவெண்காடு ஸ்ரீஸ்வேதாரண்யேஸ்வரர் திருக்கோயில்

நாகை மாவட்டம், சீர்காழிக்கு அருகில் உள்ளது திருவெண்காடு. வடமொழியில் 'ஸ்வேதாரண்யம்' என்று பெயர் (ஸ்வேதம் என்றால், வெண்மை; ஆரண்யம் என்றால் காடு). ஸ்ரீநடராஜருக்கு, இங்கும் சபை உண்டு. தில்லைச் சிதம்பரத்துக்கு முன்னதாக இங்கே திருநடனம் புரிந்ததால், இதனை ஆதிசிதம்பரம் என்பர்.

திருவெண்காட்டில், எழுந்தருளும் ஸ்வாமியின் திருநாமம் - ஸ்ரீஸ்வேதாரண்யேஸ்வரர். ஈசனின் சக்தியாக, பிரம்ம வித்யாம்பாள் எனும் ஸ்ரீபெரியநாயகி காட்சி தருகிறாள். பிரம்மாவுக்கு வித்தையைக் கற்பித்ததால், ஸ்ரீபிரம்மவித்யாம்பிகை என்று திருநாமம் கொண்டாள், அம்பிகை!

வேதராசி எனும் அந்தணன், வெளியூர் செல்லும்போது, தான் எடுத்துச்சென்ற கட்டுச் சாதத்தை இங்கேயுள்ள ஆலமரப் பொந்தில் வைத்தான். அந்தச் சோற்றில் நாகம் ஒன்று, நஞ்சினை உமிழ்ந்தது. அது தெரியாமல் அந்தச் சாதத்தை ஏழை அந்தணனுக்கு வேதராசி வழங்க, அந்த உணவைச் சாப்பிட்ட ஏழை இறந்து போனான். வேதராசி,





ஆல்





கொன்றை





வில்வம்

பிரம்மஹத்தி தோஷத்துக்கு ஆளானான். பிறகு திருவெண்காட்டு இறைவனை வழிபட, தோஷத்தில் இருந்து மீண்டான் என்கிறது ஸ்தல வரலாறு.

உத்தால முனிவரின் மகன் ஸ்வேதகேது, எட்டு வயதுடன் தனது ஆயுள் முடியும் என்பதை அறிந்தான்; திருவெண்காட்டுத் தலத்துக்கு வந்து, சிவபூஜையில் ஈடுபட்டான். எட்டு வயது முடியும் வேளையில், எமதர்மன் வந்து அவன்மீது பாசக்கயிற்றை வீச, 'சிவபூஜை தடைப்படுகிறதே' என வருந்தி அழுதான் ஸ்வேதகேது. அப்போது, திருக்காட்சி தந்த சிவனார், எமனது வலிமையை அழித்து, ஸ்வேதகேதுவைக் காத்தருளினார். 'ஸ்வேதாரண்ய க்ஷேத்திரத்தில் எமனை ஈசன் எப்படி சம்ஹாரம் செய்தாரோ, அதேபோல் கரதூஷணர்களை ஸ்ரீராமன் சம்ஹாரம் செய்தார்' என ராமாயணத்தில் இந்தத் தலத்தைக் குறிப்பிட்டுப் போற்றியுள்ளார் வால்மீகி.

காசிக்கு நிகரான ஆறு திருத்தலங்களுள் திருவெண்காடு தலமும் ஒன்று (திருவையாறு, மயிலாடுதுறை, திருவிடைமருதூர், திருச்சாய்க்காடு (பூம்புகார் அருகில் உள்ள சாயாவனம்), திருவாஞ்சியம் ஆகியன பிற தலங்கள்). ஈசன் இங்கே ஆனந்தத் தாண்டவம், காளி நிருத்தம், கௌரி தாண்டவம், முனி நிருத்தம், ஸந்தியா தாண்டவம், திரிபுர தாண்டவம், புஜங்க லலிதம், சம்ஹாரத் தாண்டவம், பைஷாடனம் என ஒன்பது தாண்டவங்களை ஆடினாராம். எல்லாவற்றுக்கும் மேலாக... நவக்கிரகங்களுள் ஒருவரான புதனுக்கு உரிய ஸ்தலம் இது! சந்திரனுக்கும் தாரைக்கும் மகனாகப் பிறந்த புதன், சகலகலா வல்லவர். கல்வி, அறிவு, பேச்சு, இசை, ஜோதிடம், கணிதம், சிற்பம், மருத்துவம் மற்றும் பன்மொழிப்புலமையை அருள்பவர். வித்யாகாரகனான இவரது சந்நிதி, ஸ்ரீபிரம்மவித்யாம்பிகைக்கு இடது பக்கத்தில் அமைந்துள்ளது.

இந்தத் தலத்துக்கு ஆல், கொன்றை, வில்வம் என மூன்று ஸ்தல விருட்சங்கள்!

பிரம்மாண்டமானது மட்டுமின்றி மிகப் பழைமை வாய்ந்தது ஆலமரம். இந்து, சமணம் மற்றும் பௌத்த சாமியார்களும் மடாதிபதிகள் பலரும் வைத்திருக்கும் புனித தண்டம், ஆல மரத்தில் இருந்து தயாரிக்கப்பட்டது என்பதே இதன் மகத்துவத்தை எளிதாக விளக்கிவிடும்! இதன் குச்சி, பல்லுக்கு உறுதியைத் தரும்; வேர்ப் பட்டை, சர்க்கரை நோயை குணமாக்கும். உடலில் உள்ள புண்ணுக்கு ஆலமரப் பட்டை சிறந்த மருந்து; பட்டையைச் சாறாக்கிக் குடித்தால், வாந்தி-பேதி உடனே நிற்கும்! விரதம் இருந்து, ஆலமரப் பூக்களைச் சாப்பிட்டால், குழந்தை பிறக்கும் என்பது ஐதிகம் (ஆல இலையைக் கஷாயமாக்கிச் சாப்பிட்டால், ரத்தத்தில் உயிரணுக்களின் எண்ணிக்கை அதிகரிக்கும்; குழந்தைப்

மூணு பெருமைகள்...



ஸ்ரீபுதன் பகவான்

கோயிலின் அர்ச்சகர் பாபு குருக்கள், "ஸ்வேதாரண்யர் கோயில்ல ஸ்தல விருட்சம் மட்டுமா மூணு?! இன்னும் மூணு மூணா பல விஷயங்கள் உண்டு" என்றவர், தொடர்ந்தார்...

"இந்தக் கோயில்ல ஸ்ரீஸ்வேதாரண்யேஸ்வரர், ஸ்ரீநடராஜர், ஸ்ரீஅகோர மூர்த்தின்னு மூணு சிவ மூர்த்தங்களைத் தரிசிக்கலாம். ஸ்ரீபிரம்மவித்யாம்பிகை, ஸ்வேத மகாகாளி, சௌபாக்கிய துர்கைன்னு மூணு சக்திகளா அம்பாள் இருக்கா. அக்கினி, சூரியன், சந்திரன்னு மூணு தீர்த்தங்களும், ஆல், கொன்றை, வில்வம்னு மூணு விருட்சங்களும் இங்கே இருக்கு. காசியிலும் கயாவிலும் இருப்பது போல, அக்ஷய வடம் எனும் அழியாத ஆலமரம் இருக்கு. கயையில விஷ்ணுபாதம் இருக்கு; இங்கே, ஆலமரத்தடியில ருத்ரபாதம் இருக்கு.

பித்ரு கடன் தீர்க்கும் உத்தமமான தலம் இது. இங்கே திதி கொடுத்தா, 21 தலைமுறைகள் கடந்தும் பலன் கிடைக்கும்கிறது ஐதீகம். இந்த அருமையான ஸ்தலத்துலதான், புதன் பகவான் கோயில்கொண்டிருக்கார். அறிவைக் கொடுப்பவர்; ஞானகாரகன்; தீய கிரகங்களால் விளையும் தீமைகளை நீக்குபவர்; கல்விக்கு, குறிப்பாக மருத்துவப் படிப்புக்கு அருள்பவர் புதன் பகவான்.



பாபு குருக்கள்

புதன் பகவானுக்கு உகந்த வெளிர் பச்சை நிறத்தில் வஸ்திரம் மற்றும் மலர்களைச் சார்த்தி, அவரை வணங்குங்கள். பிள்ளை பாக்கியம் உள்பட கல்வி, செல்வம் என எல்லா நலனும் கிடைக்கும்" என்கிறார்.

பேறு உண்டாகும் என்கின்றனர் மருத்துவ ஆய்வாளர்கள்). '*அன்று ஆலின்கீழ் இருந்து அறமுரைத்தான்*' எனப் போற்றுகிறார் மணிவாசகர். '*ஆல்கெழு கடவுள்*' என திருமுருகாற்றுப் படையும் '*ஆல் அமர் செல்வன் அணிசால் பெருவிறல்*' என கலித் தொகையும் குறிப்பிடுகின்றன. திருஅன்பிலாந்துறை, திருப்பழவூர், திருவாலம்பொழில் ஆகிய சைவத் தலங்களிலும் திருமெய்யம், திருவில்லிபுத்தூர் ஆகிய வைணவ தலங்களிலும் ஆலமரமே ஸ்தல விருட்சம்.




ஸ்ரீஸ்வேதாரண்யேஸ்வரர் திருக்கோயில்

ஆலயத்தின் இன்னொரு ஸ்தல விருட்சம்... கொன்றை. குல்கந்து தயாரிக்க கொன்றைப் பூக்கள் பயன்படும். கொன்றையின் மருத்துவ மகத்துவம் குறித்து சங்க இலக்கியங்கள் விவரிக்கின்றன. இதன் மலர்கள், சிவனாருக்கு உரியவை; ஆகவே அவருக்கு 'கொன்றை வேய்ந்தான்' எனும் திருநாமமும் உண்டு. 'கொன்றை வேய்ந்த இணையடி' என்று தொல்காப்பியமும் போற்றுகிறது. சுசீந்திரம் ஸ்ரீதாணுமாலய ஸ்வாமி கோயில், பண்ருட்டி- திருத்துறையூர் ஸ்ரீபசுபதீஸ்வரர் கோயில், காரைக்குடியில் இருந்து 20 கி.மீ. தூரத்தில் உள்ள திருப்பத்தூர் ஸ்ரீதிருத்தளிநாதர் கோயில் போன்று இன்னும் பல கோயில்களிலும் கொன்றை, ஸ்தல விருட்சமாக திகழ்கிறது.

அடுத்து... வில்வம். ஆயுர்வேதத்தில் வில்வ வேர் முக்கியப் பங்கு வகிக்கிறது. வில்வத்தின் வேர், காய், கனி, இலை என எல்லாமே தேக ஆரோக்கியத்தையும் புத்துணர்வையும் தருகின்றன. பேரளம் அருகில்... திருமீயச்சூரில் அமைந்துள்ள ஸ்ரீலலிதாம்பிகை சமேத ஸ்ரீமேகநாதர் ஆலயம், திருவாரூர்- நன்னிலம் ஸ்ரீமதுவனேஸ்வரர் கோயில், திருத்துறைப்பூண்டி ஸ்ரீஔஷதீஸ்வரர் கோயில், தஞ்சை பெரிய கோயில் போன்ற எண்ணற்ற சிவாலயங்களில் ஸ்தல விருட்சமாக வில்வம் அமைந்துள்ளது!

'பகைவரது தலைகளாகிய அடுப்பில் கூவிள மரத்தின் (வில்வத்தின்) விறகைக் கொண்டு எரிப்பர்' என்கிறது புறநானூறு. சுந்தரரும், வில்வ மலரைச் சிவபெருமான் சூடும் மலர் எனப் பாடிப் பரவியுள்ளார்.

புரசு (பலாஸ் - முருக்கன்) மகிமை!

6

சுக்கிரன் திருத்தலம் - கஞ்சனூர்
ஸ்ரீகற்பகாம்பாள் சமேத ஸ்ரீஅக்னீஸ்வரர் ஆலயம்

கோயில் நகரமாம் கும்பகோணத்தில் இருந்து சுமார் 16 கி.மீ. தொலைவில் உள்ளது கஞ்சனூர். பலாச வனம், பராசரபுரம், அக்னிபுரம், முக்திபுரம், கம்சபுரம் என்றெல்லாம் இந்தத் தலத்தைப் போற்றுகின்றன புராணங்கள். இதில், கம்சபுரம் என்ற பெயரே 'கம்சனூர்' என்றாகி, பிறகு 'கஞ்சனூர்' என்று மருவியதாகச் சொல்வர்.

கேட்டதைத் தரும் கற்பக விருட்சமாக ஸ்ரீகற்பகாம்பாளும், அள்ளிக் கொடுக்கும் அண்ணலாக ஸ்ரீ அக்னீஸ்வரரும் கோயில் கொண்டிருக்கும் அற்புதத் தலம் இது.

ஒருமுறை, சௌனகர் முதலான முனிவர் பெருமக்கள் கங்கைக் கரையில் சத்ரயாகம் செய்யத் துவங்கினர். சுமார் 12 வருடங்கள் நீடித்த இந்த யாகம், நிறைவடையும் தருணத்தில், சூத மகா முனிவர் அங்கே வந்தார். சௌனகாதி முனிவர்கள் இன்முகத்துடன் அவரை வரவேற்றனர். அப்போது அவர்களிடம், "புனிதமான கங்கை நதிக்கு இணையான காவிரியின் வடகரையில் அமைந்துள்ளது கம்சபுரம் எனும் பலாச வன க்ஷேத்திரம். பராசர முனிவரின் சித்தப் பிரமை




நிவர்த்தியானதும், அக்னி பகவான் மற்றும் கம்ச மகாராஜனின் நோய் குணமானதும், சந்திரன், சித்திரசேனன், இந்திரன் ஆகியோரின் பாவங்கள் நீங்கியதும் இந்தத் தலத்தில்தான். அதுமட்டுமா... காலகண்டன் எனும் வேடன், இறை அருளால் மோட்சம் பெற்றதும், தேவர்கள் சுக்கிரதோஷம் நீங்கப்பெற்றதும் இந்தத் தலத்தில்தான்" என சூத மகா முனிவர் கஞ்சனூரின் மகிமைகளை விவரித்ததாகக் கூறுகிறது ஸ்தல புராணம்.

ஆமாம்... நமது துன்பத்தை எல்லாம் போக்கி, சுகத்தை அருளும் ஸ்ரீசுக்கிர பகவானும் இங்கு குடியிருக்கிறார்.

பரணி, பூரம், பூராடம் ஆகிய நட்சத்திரங்களுக்கு உரியவர், சுக்கிர பகவான். அசுரர்களின் குரு என்பதால், இவரை சுக்ராச்சார்யர் என்பர். மீன ராசியில்

'இனி, சுக்கிர யோகம்தான்!'

"ஆறாவது கிரகமான சுக்கிரனின் ஸ்தலம், கஞ்சனூர். பிரம்மதேவரின் மானஸ புத்திரன் பிருகு முனிவர். இவரின் குமாரன், சுக்கிரன். எனவே இவருக்கு. 'பார்கவன்' என்றும் பெயர் உண்டு. மகாகவிஞரான சுக்கிரன் எழுதிய 'சுக்கிர நீதி' எனும் நீதி சாஸ்திரம், அற்புதமான நூல்! மழைக்கு அதிகாரியும் சுக்கிரன்தான்" என்று சுக்கிரனின் பெருமைகளை விவரிக்கிறார் ஆலயத்தின் கணேச குருக்கள்.



"வெள்ளி நிறத்தைக் கொண்டவர் சுக்கிரன்; ஐங்கோண மண்டலத்தில் வெண் பட்டாடை உடுத்தி, வெண் தாமரை மலர் அணிந்து, கருட வாகனத்தில் வீற்றிருப்பவர்; இவருக்கு முதலை வாகனமும் உண்டு!

உச்சமும் கன்னி ராசியில் நீச்சமும் அடைபவர், சுக்கிரன். இவர் ஒரு ராசியில், சுமார் ஒரு மாதம் வரை சஞ்சரிப்பார். சுக்கிர திசை என்பது, 20 வருடங்கள் வரை நீடிக்கும்.

திருமால் வாமனராக அவதரித்து வந்து, மகாபலியிடம் மூன்றடி மண் கேட்டபோது, 'மூன்றடி மண் தராதே' என மகாபலிக்கு அறிவுறுத்தியவர் சுக்கிர பகவான்தான்! இவரது அறிவுரையை ஏற்காமல், கெண்டியிலிருந்து தண்ணீரை வார்த்துக் கொடுக்க முனைந்தான் மகாபலி. உடனே சுக்கிரன், வண்டாக உருவெடுத்து, கெண்டியின் மூக்குப் பகுதிக்குள் சென்று, தண்ணீர் வெளியேறாதவாறு அடைத்துக்கொண்டார். உடனே வாமனர், தனது பவித்திரத்தை எடுத்துக் கெண்டியின் மூக்கினுள் செருக... அந்த பவித்திரம் குத்தியதால், தனது ஒரு கண்ணை இழந்தார் சுக்கிரன் என்கிறது புராணம்.

சரி... கஞ்சனூர் தலத்துக்கு வருவோம்!

முன்னொரு காலத்தில் இந்தப் பகுதி, பலாஸ வனமாக இருந்தது.

வனத்தில் வளர்ந்துள்ள மரம், செடி-கொடிகளில் ஒன்றைத் தல விருட்சமாக நிறுவுவதை நம் முன்னோர்கள் வழக்கமாகக் கொண்டிருந்தனர். மருத்துவ குணம் மிகுந்த விருட்சங்கள் அழிந்து போக நேர்ந்தாலும், அவற்றில் ஒன்றைக் கோயிலில் தல விருட்சமாக



கணேச குருக்கள்

களத்திரகாரகன் எனும் பெருமை சுக்கிர பகவானுக்கு உண்டு. எனவே வேலைவாய்ப்பு, தொழில் முன்னேற்றம், நல்ல இடத்தில் திருமணம், வாகன வசதியுடன் கூடிய வாழ்க்கை... என சுகபோகமாக வைத்திருக்கும் வள்ளல் சுக்கிர பகவான். இலக்கியம் மற்றும் கவிதை எழுதும் ஆற்றலை பக்தர்களுக்கு அளிக்கும் அருளாளரும்கூட!

கஞ்சனூர் தலத்துக்கு வந்து சுக்கிர பகவானை வழிபட்டால், நன்மதிப்பு, அதிர்ஷ்டம் ஆகியவற்றை அள்ளித் தருவார். அதேபோல், கோயிலின் ஸ்தல விருட்சமான புரசு எனும் பலாச மரத்தை 11 முறை வலம் வந்து வேண்டினால், கடன் தொல்லையிலிருந்து மீளலாம்; குபேர யோகம் கிடைக்கப் பெறுவர். மூளை சம்பந்தமான நோயால் அவதிப்படுபவர்களும் மனக்குழப்பம் மற்றும் சஞ்சலத்தால் தவிப்பவர்களும் இங்கு வந்து புரசு மரத்தைச் சுற்றிச் சுக்கிரனை வழிபட, வாழ்க்கை வளமாகும்; சகல ஐஸ்வரியங்களும் கிடைக்கப்பெறுவர்" என்று மெய்சிலிர்க்க விவரித்தார் கணேச குருக்கள்.





புரசு மரம்

வைத்துப் பராமரிக்கும்போது, அதன் விதைகள் காற்றில் பரவி, மண்ணில் விழுந்து வேர் பிடித்து வளரும்; குறிப்பிட்ட அந்த விருட்சத்தின் இனம் மீண்டும் தழைக்கும் என்பதே நம் முன்னோரின் திட்டம். அதன் அடிப்படையிலேயே கோயிலுக்குக் கோயில் தல விருட்சங்களை வைத்து வழிபட்டனர். அந்த வகையில், கஞ்சனூர் பகுதியில் ஏராளமாக செழித்து வளர்ந்த புரசு (பலாஸ்) மரமே, இந்தக் கோயிலின் தல விருட்சமாக வைத்துப் பராமரிக்கப்பட்டு இருக்கிறது.

புரசு மரம், வாய்வுத் தொல்லையை நீக்கும்; வயிற்றுக் கிருமியைச் சாகடிக்கும்; ஜுரத்தைக் கட்டுப் படுத்தும்; புண்ணை குணமாக்கும்; பாம்பின் விஷத்தை முறிக்கும். இந்த மரத்தில் இருந்து தயாரிக்கப்படும் எண்ணெயை, காக்கை வலிப்பு எனும் நோய்க்குச் சொட்டு மருந்தாகப் பயன் படுத்துவார்கள், மருத்துவர்கள்! அதுமட்டுமா? புரசு மரப்பட்டையை லேசாக வெட்டினால், சிவப்பு நிறத்தில் பால் வடியும். இது, தொண்டைப் புண், வாந்தி-பேதி ஆகியவற்றைக் குணமாக்கும். இதன் பட்டையை இரவில் நீரில் ஊறவைத்துக் காலையில் பருகினால் மண்டைச் சளி, ஆஸ்துமா, இருமல் ஆகியன உடனே நீங்கும்.





ஸ்ரீகற்பகாம்பாள் சமேத ஸ்ரீஅக்னீஸ்வரர் ஆலயம்

அவ்வளவு ஏன்... இதிலிருந்து தயாரிக்கப்படும் எண்ணெயைத் தலையில் தடவிக் கொண்டால், வழுக்கையே காணாமல் போகுமாம்! இன்னொரு விஷயம்... வாழை இலைக்கு மாற்றாக ஒருகாலத்தில் புரசு இலைகளில் உணவு பரிமாறினார்களாம்!

புரசு மரத்தின் சங்க இலக்கியப் பெயர், பலாசம். புழுகு, புனமுருக்கு, செம்பூ என்றும் வேறு பெயர்கள் உண்டு. '*பகன்றை பலாசம் பல்பூம் பிண்டி*' எனக் குறிஞ்சிப் பாட்டில் குறிப்பிடுகிறார் கபிலர். இதற்கு உரை எழுதிய நச்சினார்க்கினியர் 'பலாசம் பூ' என்றே வர்ணிக்கிறார். *பிங்கல நிகண்டு* மற்றும் *சூடாமணி நிகண்டு* ஆகியன புரசு மரத்தை, 'புனமுருக்கு' என்கின்றன. '*பொங்கழல் முருக்கெனச் சிவந்த முருக்கு மலர்*' என அகநானூறு அழகுற விவரிக்கிறது. தாம்பூலம் மென்று சிவப்பேறிய சிவந்த வாய்க்கு உவமையாக, திருத்தக்க தேவரும் இந்த மலரைக் குறிப்பிட்டுள்ளார். சிவனாரின் திருமுடியில், புரசுவின் மலரைச் சேர்த்து அழகுபார்க்கிறார் திருஞானசம்பந்தர். '*எருக்கொடு முருக்கு சடைமேல் அணிந்த எம் அடிகள்*' எனப் பாடிப் பரவுகிறார் அவர்!

நாகப்பட்டினம் - ஸ்ரீசௌந்தரராஜ பெருமாள் ஆலயம், திருநாங்கூர் வண்புருஷோத்தமன் ஆலயம், திருவாரூர்-ஸ்ரீநாராயண பெருமாள் ஆலயம், காவிரிப்பூம்பட்டினம் அருகில் உள்ள நாண்மதியப் பெருமாள் கோயில், திருச்சி கோயிலடி-அப்பக்குடத்தான் கோயில் போன்ற ஆலயங்களில் புரசு மரத்துக்கு சிறப்பு பூஜைகள் செய்யப்படுகின்றன.

தர்ப்பைப் புல் மகிமை!

7

சனி பகவான் திருத்தலம் – திருநள்ளாறு
ஸ்ரீதர்ப்பாரண்யேஸ்வரர் ஆலயம்

முனிவர்கள் தேவர் ஏனை மூர்த்திகள் முதலானோர்கள்
மனிதர்கள் சகல வாழ்வுன் மகிமைஅல்லால் வேறுண்டோ
கனிவுள தெய்வம் நீயே கதிர்சேயே காகம்ஏறும்
சனிபக வானே போற்றி தமியனேற்கருள் செய்வாயே.

– நவக்கிரக ஸ்தோத்திரம்

காரைக்காலில் இருந்து பேரளம் செல்லும் வழியில் சுமார் 3 கி.மீ. தொலைவில் உள்ளது திருநள்ளாறு. இங்கேயுள்ள இறைவனின் திருநாமம் - ஸ்ரீதர்ப்பாரண்யேஸ்வரர். அந்தக் காலத்தில் தர்ப்பை வனமாக இருந்த பகுதியாம் இது; இங்கு எழுந்தருளியதால், தர்ப்பையிலான வடுக்கள் இறைத் திருமேனியில் இன்றைக்கும் காணப்படுவதாகச் சொல்வர்!

அம்பிகையின் திருநாமம்-ஸ்ரீபோகமார்த்த பூண்முலையாள். பக்தியுடன் வழிபடுவோருக்கு, உயிருக்கு உயிராக இருந்து தாயுள்ளத்துடன் காத்தருள்வதால், அம்பிகைக்கு ஸ்ரீபிராணாம்பிகை எனும் திருநாமமும் உண்டு.

திருநள்ளாறு திருத்தலத்தின் முக்கியமான மூர்த்தி...

ஸ்ரீசனீஸ்வர பகவான்தான் என்பது நமக்குத் தெரியும். அரசன் முதல் ஆண்டி வரை அனைவரையும் ஆட்டிப்படைக்கிற பெருமான், இவர்! இவரின் பிடியில் இருந்து எவராலும் தப்பமுடியாது. இவரின் கோபத்தைக் கட்டுப்படுத்தவும் இறைவனின் கருணைப் பார்வையைப் பெறவும், எண்ணற்ற பக்தர்கள் இந்தத் தலத்துக்கு வந்து வழிபடுகின்றனர்.

சனீஸ்வர பகவான், ஒவ்வொரு ராசியிலும் இரண்டரை வருடங்கள் வசிக்கிறார். 12 ராசிகளையும் சனீஸ்வர பகவான் ஒருமுறை சுற்றி வருவதற்கு, 30 வருடங்கள் ஆகும்.

கறுப்பு வஸ்திரம் பிடிக்கும்!

"தர்ப்பை வனமாக இருந்த தலம் என்பதால், இறைவனுக்கு ஸ்ரீதர்ப்பாரண்யேஸ்வரர் என்று பெயர் வந்தது. தர்ப்பை வனத்தில், தர்ப்பைப் புற்களுக்கு நடுவே காட்சி தந்ததால், இங்குள்ள இறைவனின் நெற்றியில் இயற்கையாகவே மூன்று தர்ப்பைக் கோடுகள் இருக்கின்றன.



உயிர் எனும் ஜீவ சக்தியை, ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்துக்குக் கொண்டுசெல்லும் சக்தி தர்ப்பைக்கு உண்டு. நம் திருமணம், ஆயுஷ்ஹோமம் ஆகிய சடங்குகளின்போது, தர்ப்பைக்கு முக்கியத்துவம் தருகிறோம்" என்று சொல்கிறார் இந்த ஆலயத்தில் பணிபுரியும் வெங்கடேச குருக்கள்.

"கோயிலுக்கு அருகிலேயே உள்ளது, நள தீர்த்தம். இதில் நீராடினால், அனைத்து கிரக தோஷங்களும் நீங்கும் என்பது ஐதீகம்! நள மகாராஜா, தன்னுடைய தோஷம் நீங்குவதற்காக, இந்தத் தீர்த்தத்தில் நீராடிவிட்டு, இறைத் தரிசனம் பெற்றார் என்பது நம்பிக்கை.

சனி பகவானின் வாகனம் - காகம்: நிறம் - கறுப்பு. எனவே, கறுப்பு நிற வஸ்திரத்தை சனீஸ்வர பகவானுக்குச் சார்த்தி, எள் எண்ணெய் தீபமேற்றி அர்ச்சனை செய்து வழிபட, சனிக்கிரக தோஷங்கள் யாவும் நீங்கும் என்பது ஐதீகம்" என்கிறார் வெங்கடேச குருக்கள்.



வெங்கடேச குருக்கள்



தர்ப்பைப் புல்

எனவே 30 வருடத்தில், இவரது பிடியில் சிக்காதவர்களே இருக்கமுடியாது.

சனீஸ்வர பகவான், 12, 1, 2 ஆகிய வீடுகளில் பிரவேசிக்கும்போது, அதை ஏழரைநாட்டுச் சனி என்பர். 4-ஆம் வீட்டில் அர்த்தாஷ்டம சனியாகவும், 7-ஆம் வீட்டில் கண்டகச் சனியாகவும், 8-ஆம் வீட்டில் அஷ்டமச் சனியாகவும் இருந்து, கர்ம வினைகளுக்குத் தகுந்த பலாபலன்களைத் தருவார் சனீஸ்வர பகவான் என்கின்றன ஜோதிட நூல்கள்.

சனியின் பிரவேசத்தால் வியாபாரத்தில் மந்தம், சொத்துகள் இழப்பு, மனைவி, குழந்தைகள் மற்றும் அரசாங்கத்தால் தொல்லைகள் ஆகியன மட்டுமின்றி, ஒருசிலருக்கு தொழுநோய் பீடிப்பதற்கும் வாய்ப்பு உண்டு என்கின்றனர் ஜோதிட வல்லுநர்கள்.

மனித வாழ்வில், ஏழரைநாட்டுச் சனி என்பது மூன்று முறை ஏற்படும். முதலில் மங்கு சனி; அடுத்து பொங்கு சனி; மூன்றாவதாக மரணச் சனி என்பர். 'சனியைப் போல கொடுப்பாரும் இல்லை; கெடுப்பாரும் இல்லை' என்பார்கள். சனீஸ்வரனை வழிபட்டால், கஷ்டங்களைப் போக்கி, நிம்மதியைத் தந்தருள்வார் என்பது உறுதி.

சனீஸ்வர பகவான் தன்னைப் பிடிக்கப் போவதை உணர்ந்த இந்திரன், "நான் இந்திரலோகத்தின் அதிபதி என்பதால், என்னைப் பிடிக்காமல் விடக்கூடாதா?" என்று கேட்டான். அதற்குச் சனீஸ்வர பகவான், "விதியை மீறுவதற்கு நான் யார்? எவராக இருந்தாலும் விதிப்படி அவரைப் பிடித்தே ஆகவேண்டும்" என்று கூற, இந்திரன்



ஸ்ரீதர்ப்பாரண்யேஸ்வரர் ஆலயம்



சனீஸ்சர பகவான்

கோபமானான். 'தேவலோகத்தின் அதிபதியான என்னையே மிரட்டுகிறாயா? உனக்குப் பாடம் புகட்டுகிறேன், பார்' என்று உள்ளுக்குள் கறுவியபடி, "சரி... என்றைக்கு என்னைப் பிடிக்கப் போகிறாய்?" என்று கேட்டான். அந்த நாளையும், நேரத்தையும் சொன்னார் சனி பகவான்.

அந்த நாளும் வந்தது; நேரமும் நெருங்கியது. அப்போது, பெருச்சாளியாக வடிவம் கொண்ட இந்திரன், சாக்கடைக்குள் புகுந்து, ஒளிந்துகொண்டான். சனி விடுபடும் நேரம் வரை ஒளிந்திருந்தவன், பிறகு சனீஸ்வர பகவானிடம், "உன் பிடியிலிருந்து எப்படித் தப்பித்தேன் பார்த்தாயா?" என்று மார்தட்டினான். சனி பகவான் அமைதியாகச் சொன்னார்... "தேவலோக அதிபதியான உன்னைச் சாக்கடைக்குள் கொஞ்ச நேரம் வாசம் செய்ய வைத்ததே, அடியேனின் வேலைதானே?!"

சனீஸ்வர பகவான் குடிகொண்டிருக்கும் தலத்தின் விருட்சம்- தர்ப்பைப் புல். இதனை குசா என்றும் சொல்வர். ஸ்ரீராமபிரானின் இரண்டாவது மைந்தனின் திருநாமம் - குசா. இதனைக் குறிக்கும் வகையில், தர்ப்பைக்கு குசா என்று பெயர் அமைந்ததாகவும் சொல்வர்.



சங்க இலக்கியமான 'பெரும்பாணாற்றுப் படை'யில் கடியலூர் உருத்திரங் கண்ணனார் எனும் புலவர்,

'வேழம் நிரைத்து வெண்கோடு வரைகி

தாழை முடித்து தருப்பை வேய்ந்த

குறியிறைக் குரம்பைப் பறியுடை முன்றில்'

- என்று பாடியுள்ளார்.

அந்தக் காலத்தில், வீட்டுக் கூரை வேய்வதற்கு தர்ப்பையைப் பயன் படுத்தினார்களாம். *'வேழக் கோலாலே வரிசை நிரைத்துத் தாழையின் நாரினாலே கட்டுவார்கள்'* என நச்சினார்க்கினியார் குறிப்பிட்டுள்ளார்.

மகத்துவம் கொண்ட தர்ப்பைக்கு, மருத்துவ குணங்களும் உண்டு. இது உஷ்ணத்தைத் தணிக்கவல்லது; சிறுநீரகப் பிரச்னையைப் போக்கும் தன்மை கொண்டது; பாம்புக் கடி விஷத்தை அகற்றும் வீரியம், தர்ப்பையில் உண்டு. பித்தம், கபம், வாதம் ஆகிய பிரச்னைகளை நீக்குகிறது. ரத்தத்தில் தேங்கிவிடும் யூரியா, கிரியாட்டினின் எனும் கழிவுப் பொருட்களை அகற்றும் சக்தி கொண்டது. அவ்வளவு ஏன்... உடல் எடையைக் குறைக்கவும் பயன்படுகிறது தர்ப்பை என்கின்றன மருத்துவ நூல்கள்.

உஷ்ண வீரியமும், அதிவேகமும் கொண்ட தர்ப்பையில், தாமிரத்தில் உள்ள மின் சக்தியும் உண்டு. இதனால்தான், தங்கம், வெள்ளிக் கம்பிகள் உள்ள இடத்தில் தர்ப்பையையும் பயன்படுத்துகின்றனர்.

அதுமட்டுமா? ஆசனங்களில் தர்ப்பாசனமே சிறந்தது என்கின்றனர் முனிவர்கள். இறை வழிபாடு, ஜபம், ஹோமம், தானம், பித்ரு தர்ப்பணம் ஆகியவற்றின்போது, கையில் பவித்திரமாக (மோதிரம்) தர்ப்பையை அணிவது உரிய பலனைத் தரும் என்கிறது சாஸ்திரம். தர்ப்பை மோதிரம் அணிந்துதான் பிராணாயாமம் செய்ய வேண்டும் என்பதும் வழக்கமாக உள்ளது.

கிரகண மற்றும் அமாவாசை காலங்களில், தர்ப்பைக்கு வீரியம் அதிகம் என்பதால், அந்த வேளையில் உணவுப் பண்டங்கள் கெட்டுப்போகாமல் இருக்க, தூய்மையான தர்ப்பையைப் பரப்பி வைப்பது, இன்றைக்கும் நடைமுறையில் உள்ள ஒன்று!

செண்பக மர மகிமை!

8

ராகு பகவான் திருத்தலம்
ஸ்ரீநாகநாத ஸ்வாமி திருக்கோயில் – திருநாகேஸ்வரம்

வாகுசேர் நெடுமால் முன்னம் வானவர்க் கமுதமீயும்
போதுநீ நடுவி ருக்கப்புகழ் சிரம் அற்றுப் பின்னர்
நாகத்தின் உடலோ டுன்றன் நற்சிரம் வாய்க்கப் பெற்ற
ராகுவே போற்றி போற்றி ரட்சிபாய் ரட்சிப்பாயே!

- நவக்கிரக ஸ்தோத்திரம்

கோயில் நகரமாம் கும்பகோணத்தில் இருந்து சுமார் 8 கி.மீ. தொலைவில் உள்ளது திருநாகேஸ்வரம்.

இரண்டு பக்கங்களிலும் கலைமகளும் அலைமகளும் அருள, நடுநாயகமாக ஸ்ரீகிரிகுஜாம்பிகையும் ஸ்ரீநாகநாத ஸ்வாமி எனும் திருப்பெயர் கொண்டு அப்பனும் கோயில் கொண்டிருக்கும் அற்புதத் தலம் இது. நாகம்-பாம்பு; நாதன்-நம் இறைவன்! ஆமாம்... இங்கே நாகநாதராக அருளாட்சி செய்கிறார் ஈசன்.

நவக்கிரகங்களுள் ஒருவரான ராகு பகவான் சிவ வழிபாடு செய்த தலமாதலால், திருநாகேஸ்வரம் என்று பெயர் கொண்டதாம் இவ்வூர். ஆதிசேஷன், தட்சன், கார்கோடகன், நளன் ஆகியோரும் இங்கே வழிபட்டு அருள் பெற்றதாக புராணக் குறிப்பு உண்டு.



செண்பகப் பூ

இந்தத் தலத்துக்கு வந்து, ராகு காலத்தில் ஸ்ரீராகு பகவானுக்கு பாலபிஷேகம் செய்து வணங்குவது விசேஷம். இராகுவின் திருவுருவ விக்கிரகத்தில் அபிஷேகிக்கப்படும் பாலானது நீல நிறத்தில் வழிந்தோடுவது, வேறெங்கும் காண்பதற்கரிய அற்புதம்!

இங்கே ஸ்ரீநாகவல்லி-ஸ்ரீநாககன்னி சமேதராக... மற்ற தலங்களைப் போல் பாம்பு உருவில் இல்லாமல், மனித வடிவிலேயே காட்சி தருகிறார் ராகு பகவான்.

பூமி நீள்வட்ட பாதையில் சூரியனைச் சுற்றுகிறது. அதேபோல் சந்திரன், பூமியைச் சுற்றுகிறது. இந்தப் பயணத்தில்... பூமியின் கதியை (அதாவது, சூரியனைச் சுற்றும் பூமியின் பாதையை), இரண்டு இடங்களில் சந்திரன் சந்திக்கிறது. அவ்வாறு சந்திரன் மேல்நோக்கிச் செல்லும்போது, பூமியின் கதியில் குறுக்கிடும் இடம் - ராகு என்றும், கிழ்நோக்கி வரும்போது பூமியின் கதியில் குறுக்கிடும் இடம் - கேது என்றும் அழைக்கப்படுகிறது. ராகுவும் கேதுவும் நிழல் கோள்கள்; இவை இரண்டுமே பூமிக்கு மேலும் கீழும் ஒரே நேர்க்கோட்டில்... அதற்கு 180 டிகிரி வித்தியாசத்தில் எதிரெதிரே அமைகின்றன.

நவகோள்களில், ராகு-கேது பலம் மிகுந்தவர்களாக உள்ளனர். ராகுவுக்கு எந்த வீடும் சொந்தமில்லை; எந்த ராசியும் சொந்தமில்லை. எந்தக் கோள்களால் பார்க்கப்படுகிறாரோ, எந்தக் கோள்களின் சேர்க்கை பெற்றுள்ளாரோ அதற்குத் தக்கபடி பலன்களைத் தருவார். ஒருவரின் ஜாதகத்தில்



செண்பக மரம்



ஸ்ரீநாகநாத ஸ்வாமி திருக்கோயில்

ராகு பகவான் நல்ல இடத்தில் இருந்துவிட்டால் நல்ல மனைவி, நல்ல வேலைக்காரர்கள், ஆட்சி மற்றும் செல்வாக்கு ஆகியன சிறப்புற அமையும். பிறமொழிகளிலும் தேர்ச்சி பெற்றவராகத் திகழலாம். மருந்து, ரசாயனம், நூதனத் தொழில் மற்றும் நுட்பமான கருவிகள் ஆகியவற்றுக்கும், அவ்வப்போது மாறிவரும் நவநாகரீகத்துக்கும் ராகுவுடன் இணைந்த சுக்கிரன் காரணமாகிறார்.

அனுகூல ராகு இருப்பின், கீழ்மட்டத்தில் இருப்பவன் கூட அரசனாகிவிடுவான் என்கிறது *'பூர்வ பராசரீயம்'* எனும் ஜோதிட நூல். அதேநேரம், ராகு தோஷம் இருந்துவிட்டால், பல இன்னல்களையும் சந்திக்க நேரிடும். ஜாதகத்தில் 7-ஆம் இடத்தில் ராகு பகவான் இருந்தால், திருமணம் தள்ளிப்போகும். 5-ஆம் இடத்தில் ராகு இருந்தால், குழந்தைப்பேறு இல்லாத நிலை ஏற்படும். இப்படி ராகு தோஷத்துடன் கூடிய ஜாதகக்காரர்கள், தங்களின் தோஷங்கள் நீங்க, திருநாகேஸ்வரம் வந்து, ராகு பகவானைத் தரிசிப்பது சிறப்பு.

திருமணத்தில் தாமதம், தம்பதிக்கு இடையே சச்சரவு, பிள்ளை பாக்கியம் இல்லாத துயரம், களத்திர தோஷம் மற்றும் சர்ப்ப தோஷம் ஆகியவற்றால் பாதிப்புக்கு ஆளானோர் இங்கு வந்து வேண்டினால், நிச்சயம் பலன் பெறலாம். இதே போல், வாழ்வில் மேன்மை, வியாபார விருத்தி, எதிரிகளை வெல்லுதல், அயல்நாட்டுப் பயணம் ஆகிய பிரார்த்தனைகளுடன் வரும் பக்தர்களுக்கு அருளை அள்ளி வழங்குகிறார் ராகு பகவான்!

தலம், மூர்த்தம் மட்டுமின்றி... சூரிய புஷ்கரணி, கௌதம தீர்த்தம், இந்திர தீர்த்தம், பிருகு தீர்த்தம் முதலான இங்குள்ள 12 தீர்த்தங்களும் விசேஷமானவை!

திருநாகேஸ்வரம் கோயிலின் தல விருட்சம் - செண்பக மரம். சிலருக்கு, பிரசவத்துக்குப் பிறகு தாய்ப்பால் சுரக்காத நிலை உருவாகும். அல்லது, போதிய அளவு பால் சுரக்காது. அவர் களுக்கு அருமருந்தாக உதவுகிறது செண்பகம்.

செண்பகப் பூக்கள் நறுமணம் கொண்டவை; தலை மற்றும் கண் சம்பந்தமான நோய்கள், மூக்கடைப்பு ஆகியவற்றுக்கு செண்பக மலர்களைப் பயன்படுத்துவர். கீல் வாதம், பித்தக் காய்ச்சல், சொறி, சிரங்கு, தொழு நோய், கண் அழலை மற்றும் பால்வினை நோய்களை குணமாக்கும் சக்தி செண்பக மலர்களுக்கு உண்டு. இதன் இலைகள், உடல் சூட்டைத் தணிக்கும்; பசியைத் தூண்டும். வயிற்று வலிக்கு மருந்தாகவும் பயன்படுகிறது. இதன் விதைகளில் இருந்து எடுக்கப்படும் எண்ணெய் பாத வெடிப்பு, அஜீரணம், சிறுநீர் பிரிவதில் சிக்கல் ஆகிய பிரச்னைகளுக்கு அருமருந்தாகத் திகழ்கிறது!

'நீல வஸ்திரம்... உளுந்து தானம்!'

"அந்தக் காலத்தில் செண்பகாரண்ய க்ஷேத்திரமாக இருந்த தலம், இன்றைக்கு ராகு தோஷங்களை நிவர்த்தி செய்யும் ஒப்பற்ற திருத்தலமாகத் திகழ்கிறது" என ஆலயத்தின் சிறப்புகளை விவரிக்கத் தொடங்குகிறார் சங்கர குருக்கள்.



"கார்த்திகை கடைஞாயிறு இங்கே பத்துநாள் விழா களை கட்டும். இந்த ஆலயத்தில், இரண்டு அம்பிகைகள்; சிவனாரின் சந்நிதிக்கு இடப் புறத்தில் தனிச்சந்நிதி கொண்டு திகழ்கிறாள், பிறையணிவாள் நுதல் அம்மை! கார்த்திகை மாத பௌர்ணமியின்போது, இரவு 7:30 மணிக்கு, சந்திரன் தனது கிரணங்களால், இந்த அம்பாளைப் பாதாதிகேசமாக வழிபடுவதாக ஐதீகம்.

மற்றொரு அம்பிகை ஸ்ரீகிரி குஜாம்பிகை, தனிக்கோயிலில் அருள் பாலிக்கிறாள். அம்பிகையின் இடப்புறம்

தஞ்சாவூர் அருகேயுள்ள குரு தலமான திட்டை ஸ்ரீவசிஷ்டேஸ்வரர் கோயில், சுவாமி மலை அருகில் உள்ள திருஇன்னம்பர்-ஸ்ரீஎழுத்தறிநாதர் ஆலயம், கும்பகோணத்துக்குத் தென்கிழக்கில் சுமார் 5 கி.மீ. தூரத்தில் உள்ள திருச்சிவபுரம் - ஸ்ரீசிவபுரநாதர் கோயில், நன்னிலம் ஸ்ரீமதுரவனேஸ்வரர் ஆலயம் திருச்சேறை-ஸ்ரீசாரங்கநாதர் கோயில் மற்றும் திருநந்திபுர விண்ணகரம்-ஸ்ரீஜகந்நாத பெருமாள் ஆலயம் ஆகிய தலங்களிலும் செண்பக மரமே ஸ்தல விருட்சம்!

சங்க இலக்கியங்களில், 'செண்பகம்' என எங்கும் குறிப்பேதும் இல்லை. மாறாக, கபிலர் தனது குறிஞ்சிப் பாட்டில் '*செருந்தி அதிரல் பெருந்தண் சண்பகம்*' எனக் குறிப்பிட்டுள்ளார். இதேபோல், திருமுருகாற்றுப் படையில் நக்கீரரும், கலித்தொகையில் நல்லாந்துவனாரும், '*பெருந்தண் சண்பகம்*' எனக் கூறியுள்ளனர்.

'இந்தப் பூவானது மலர்ந்தவுடன், போர்ச் சேவலின் காலில் உள்ள (முள்) நகங்களைப் போல இருக்கும்' என வர்ணித்துள்ளார் திருத்தக்கதேவர். இன்னொரு விஷயம்... '*மகளிர் நிழல் பட்டால் மலரும் பூ*' எனப் பெண்டிரையும், செண்பக மலரையும் போற்றிப் பாடியுள்ளனர் புலவர்பெருமக்கள்!

கலைமகளும் வலப்புறம் திருமகளும் காட்சி தரும் அருமையான தலம் இது! சிவனார் மட்டும் என்னவாம்... ஸ்ரீநாகநாதராகவும் ஸ்ரீஅர்த்தநாரீஸ்வரராகவும் திருக்காட்சி தருகிறார்.



ஸ்ரீகிரிகுஜாம்பிகை

இந்தத் தலத்துக்கு வந்து ஸ்வாமிக்கு பாலபிஷேகம் செய்து தரிசித்த எண்ணற்ற பக்தர்களுக்கு ராகு தோஷம் நீங்கி, நல்லது நடந்திருக்கிறது. தோஷ நிவர்த்திக்கு விளக்கேற்றி வழிபடுங்கள்; விரைவில் வாழ்க்கை செழிக்கும்!

ராகு பகவானுக்கு உகந்த நீல நிறத்தில் வஸ்திரம் சார்த்தி, ஸ்ரீநாகநாதருக்கும் ஸ்ரீதுர்கைக்கும் அர்ச்சனை செய்து, உளுந்து தானியத்தை தானம் செய்து வழிபட்டால், ராகு தோஷங்கள் நிவர்த்தியாகும்!" என்கிறார் சங்கர குருக்கள்.



சங்கர குருக்கள்

9

கேது பகவான் திருத்தலம்
ஸ்ரீநாகநாத ஸ்வாமி திருக்கோயில் – கீழப்பெரும்பள்ளம்

கேதுத் தேவே கீர்த்தித் திருவே
பாதம் போற்றி, பாவம் தீர்ப்பாய்!
வாதம் வம்பு வழக்குக ளின்றி
கேதுத் தேவே கேண்மையாய் ரட்சி!

– கேது ஸ்துதி

பிற்காலச் சோழர்களின் ஆட்சியின்போது, சோழவள நாட்டில் எண்ணற்ற கோயில்கள் எழுப்பப்பட்டன. அவற்றுள், நாகை மாவட்டம்-கீழப்பெரும்பள்ளத்தில் உள்ள ஸ்ரீநாகநாத ஸ்வாமி கோயிலும் ஒன்று. சீர்காழியில் இருந்து சுமார் 15 கி.மீ. தொலைவில் உள்ள இந்தத் தலம், கேது பரிகாரத் தலமும்கூட!

தேவர்களும் அசுரர்களும் அமிர்தம் பெறுவதற்காக மந்திர மலையை மத்தாகவும், வாசுகிப் பாம்பைக் கயிறாகவும் கொண்டு பாற்கடலைக் கடைந்தனர். அப்போது வலி பொறுக்காமல், வாசுகிப் பாம்பு விஷத்தைக் கக்க, தேவ-அசுரர்கள் அலறித் துடித்து, சிவபெருமானைத் தஞ்சம் அடைந்தனர். அவர்களைக் காப்பாற்றஎண்ணிய சிவனார், விஷத்தைத் தாமே பருகினார்.



மூங்கில்



ஸ்ரீகேது பகவான்

அருகில் இருந்த பார்வதிதேவி பதறியபடி, சிவனாரின் கழுத்தைப் பிடித்துக்கொண்டாள். இதனால் விஷம் சிவனாரின் கண்டத்திலேயே தங்கிவிட, அவருக்கு நீலகண்டர் எனும் திருநாமம் ஏற்பட்டது.

அதைத் தொடர்ந்து, பாற்கடலில் அமிர்தம் வெளிப்பட... திருமால் மோகினியாக வந்து அந்த அமிர்தத்தை தேவர்களுக்குப் பகிர்ந்தளித்தார். அப்போது அசுரன் ஒருவன், அசுரகுரு சுக்ராச்சார்யரின் துணையுடன், தேவர்களில் ஒருவனாக வடிவம் எடுத்துவந்து மோகினியாளிடம் அமிர்தம் வாங்கிப் பருகினான். அதையறிந்த சூரிய-சந்திரர்கள், அசுரனின் வஞ்சகத்தைத் திருமாலிடம் தெரிவித்தனர். கோபம் கொண்ட திருமால், கையில் இருந்த கரண்டியால் அசுரனின் தலையில் ஓங்கி அடித்தார். இதில் தலைவேறு, உடல்வேறாக அசுரன் வெட்டுப்பட்டு வீழ்ந்தபோதும், அமிர்தம் பருகியிருந்ததால் சாகவில்லை. அவனின் தலைப் பகுதி, பாம்பின் உடலுடன் பொருந்தி ராகுவாகவும், உடல் பகுதி பாம்பின் தலையுடன் பொருந்தி கேதுவாகவும் ஆனதாகச் சொல்கிறது புராணம்.

பாற்கடலைக் கடைந்தாயிற்று; அமிர்தமும் வந்தது. ஆனால், அது நமக்குக் கிடைக்கவில்லையே எனும் கோபத்தில், அசுரர்கள் வாசுகிப் பாம்பை வைக்கோல் பழுது போலத் தூக்கி வீசிவிட்டனர். அது, ஒரு மூங்கில் காட்டில் போய் விழுந்தது. உடல் நைந்து, உயிர் போகும் நிலையில் இருந்த அந்தப் பாம்பு, உயிருக்குப் போராடிப் பிழைத்தது. எனினும், 'தன்னால்தானே சிவனார்

விஷம் அருந்த நேர்ந்தது' என வருந்தி, தனது பாவத்துக்குப் பரிகாரம் தேடி, சிவனாரை வேண்டித் தவம் இருந்தது.

அதன் தவத்துக்கு மனமிரங்கிய சிவனார், அந்தப் பாம்புக்கு காட்சி தந்தார். "கேது தோஷத்துடன் வருந்தும் மக்கள், இந்த மூங்கில் வனத்துக்கு வந்து வணங்கினால், அவர்களின் தோஷங்களை நிவர்த்தி செய்து அருளுங்கள். இதுவே, நான் செய்த பாவத்துக்குப் பரிகாரமாக அமையட்டும்" என வேண்டியது வாசுகிப் பாம்பு. 'அப்படியே ஆகட்டும்' என்ற ஈசன், அந்த மூங்கில் வனத்திலேயே லிங்க வடிவமாக எழுந்தருளினார். இதனால், இறைவனுக்கு ஸ்ரீநாகநாத ஸ்வாமி எனும் திருநாமம் உண்டானதாம்; அம்பாளின் திருநாமம் - ஸ்ரீசௌந்தர நாயகி. அற்புதமான இந்த ஆலயத்தில், மேற்கு நோக்கி அருள்கிறார் ஸ்ரீகேது பகவான்.

இந்த ஆலயத்தின் ஸ்தல விருட்சம் - மூங்கில். திருநெல்வேலி ஸ்ரீநெல்லையப்பர் ஆலயம், சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்துக்கு அருகில் திருவேட்களம்- ஸ்ரீவேணுவனநாதர் கோயில், சீர்காழி ஸ்ரீபிரம்மபுரீஸ்வரர் ஆலயம் போன்ற தலங்களிலும் மூங்கில் மரமே ஸ்தல விருட்சம்.

பெருமூங்கில் என்பது சுமார் 60 வருடங்கள் வரை வளர்ந்த பிறகே பூக்கும். இந்த மலரை 'ஆய் மலர்' எனக் குறிப்பிடுகிறார் நக்கீரர். '*விரி மலர் ஆவிரை வேரல் ஆரல்*' என குறிஞ்சிப் பாட்டில் குறிப்பிடுகிறார் கபிலர். கூத்தர், பாணர் ஆகியோரை

பல வண்ண வஸ்திரம் பிடிக்கும்!

"கேது பகவான் குறித்து, வேதத்தில் பல இடங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. மற்ற கிரகங்களுக்கு இல்லாத பெருமை இது" எனப் பெருமை பொங்கச் சொல்கிறார் கீழப்பெரும்பள்ளம் ஆலயத்தின் அர்ச்சகர், மணிகார்த்திகேய குருக்கள்.

"கேது பகவானை வழிபட்டால் தோஷம் நீங்குவதுடன், ஸ்வர்ண சம்பத்தை அடையலாம். வெளிநாட்டில் வேலை, கடின உழைப்பு, ஞானம், மோட்சம் ஆகியவற்றையும் அருளுவார். கேதுவுக்குப் பல வண்ணங்கள் கொண்ட வஸ்திரம்தான் இஷ்டம். பிடித்த தானியம் - கொள்ளு.


மணிகார்த்திகேய குருக்கள்

ஆகவே, கொள்ளு தானம் செய்து, பல வண்ணங்கள் கொண்ட வஸ்திரத்தை கேது பகவானுக்குச் சார்த்தி, கொள்ளுப் பொடி கலந்த அன்னத்தை நைவேத்தியம் செய்து வழிபட... நல்லது நடக்கும்; வாழ்க்கையில், கேதுகாரகன் துணை நிற்பார்!

ஆற்றுப்படுத்திய பெருங்கௌசிகனார், "வழுக்கக்கூடிய வழியில் செல்லும்போது, அங்கே வழி முழுவதும் பின்னி வளர்ந்த நுண்ணிய கோல்களைக் கொண்ட சிறு மூங்கிலோடே, வேழத்தினது மெல்லிய கோல்களையும் பற்றுக் கோடாகப் பிடித்துக்கொண்டு போவீராக!" என்று அவர்களுக்கு அறிவுரை வழங்குகிறார். சங்க இலக்கியங்களில் மூங்கில், 'உந்தூழ்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

சுமார் 50 வருடங்கள் வரை வளருமாம் மூங்கில்! இதன் இலைகள், வேர், விதைகள், மரத்தின் உள்ளே உள்ள வெள்ளை நிற உப்பு ஆகியன மருந்தாகப் பயன்படுகின்றன. வயிறு மற்றும் வாய்ப்புண்களுக்கும், உடல் உஷ்ணம், விட்டுவிட்டு வரும் ஜுரம் மற்றும் பித்தத்தால் உண்டாகும் ஜுரம் ஆகியவற்றைக் குணப் படுத்தும் வல்லமை மூங்கில் உப்புக்கு உண்டு. ஆடும் பற்களை உறுதிப்படுத்தவும் இது பயன்படுகிறது. இன்னொரு விஷயம்... இந்த உப்பை, மருத்துவரின் ஆலோசனைப்படி, ஒரு கிராமில் இருந்து எட்டு கிராம் வரை பயன்படுத்தலாம். அதற்கும் அதிகமாகப் பயன்படுத்தினால், ஆண்மைத்தன்மையும் நுரையீரலும் பாதிப்படையும் அபாயம் உண்டு!


அம்மை நோயால் உண்டான புள்ளிகளை அகற்றுவதற்கு, மூங்கிலின் வேரை தனித்தோ அல்லது உரிய மருந்துகளுடன் கலந்தோ பயன்படுத்தலாம். இதன் வேரை எரித்துப் பவுடராக்கி சொட்டைத் தலை, சொறி மற்றும் சிரங்கு உள்ள இடத்தில் தடவினால்

ஜாதகத்தில் இவரின் நிலை சரியில்லை எனில், கெட்ட சிநேகிதம், மயக்கம், தோல் நோய், தீராத வலி, ஜுரம், சட்டச் சிக்கல்கள் எனப் பல பிரச்னைகளையும் சந்திக்க நேரிடும்.

கேதுவின் தசைக்காலம் என்பது ஏழு வருடங்கள்! அஸ்வினி, மகம் மற்றும் மூலம் ஆகியவை கேதுவுக்கு உரிய நட்சத்திரங்கள். இந்த நட்சத்திரக்காரர்களுக்கு, முதலில் கேது தசை துவங்கும். இந்தத் தலத்துக்கு வந்து வழிபட்டால், கேதுவால் உண்டான தோஷங்கள் விலகும் என்பது ஐதீகம்!" என்கிறார் மணிகார்த்திகேய குருக்கள்.



ஸ்ரீகேது பகவான்





நல்ல பலன் கிடைக்கும் என்கின்றனர் மருத்துவர்கள். வாயுத் தொல்லை மற்றும் வயிற்றுவலியால் அவதிப் படுபவர்கள், மூங்கில் இலைகளைக் கஷாயமாக்கிப் பருகினால் நிவாரணம் பெறலாம். மாதவிடாய்க் கோளாறுகளால் அவதிப் படுபவர்களும் இதனைப் பயன்படுத்திப் பலனடையலாம். மூங்கிலின் துளிர் இலைகளைக் கஷாயமாக்கி உட்கொள்ள, நாக்குப் பூச்சிகள் அழியும்; ரத்த வாந்தி எடுப்பது நிற்கும்; நாள்பட்ட அல்சர் புண்கள் முற்றிலும் ஆறும்; மூட்டு வலியையும் போக்க வல்லது எனப் போற்றுகின்றனர் மருத்துவர்கள். சர்க்கரை நோய்க்காரர்கள், மூங்கிலின் விதைகளைப் பயன்படுத்தினால், சர்க்கரை நோய் கட்டுப்படுமாம்.

பொதுவாக, எந்த வைத்திய முறையானாலும், தானே எடுத்துக் கொள்ளாமல், அதில் அனுபவம் உள்ள மருத்துவரின் ஆலோசனைப்படி மேற்கொள்வதே நல்லது!

சிவப்புச் சந்தன மரம்

மேஷ ராசிக்கு உகந்த விருட்சம்

10

தேரழுந்தூர்
ஸ்ரீவேதபுரீஸ்வரர் திருக்கோயில்

செவ்வாய் கிரகத்துடன் தொடர்பு கொண்டு இருப்பதோடு, நட்சத்திர மண்டலத்தின் கதிர் வீச்சுகளைத் தன்னுள் சேமித்துக்கொண்டு, பல வகையிலும் நன்மை அளிக்கும் அற்புத ராசி மேஷம்.

இந்த ராசிக்காரர்களுக்கும், மிருகசீரிடம், சித்திரை, அவிட்டம் ஆகிய நட்சத்திரக்காரர்களுக்கும், மார்ச் 21 முதல் ஏப்ரல் 20 வரையிலான நாட்கள் மற்றும் செவ்வாய்க் கிழமைகளில் பிறந்தவர்களுக்கும் உகந்த விருட்சம் சிவப்புச் சந்தன மரம். இந்த அன்பர்கள் சிவப்புச் சந்தன மரத்தை (அரசு அனுமதியுடன்) வீட்டிலேயே வளர்த்துப் பயனடையலாம்.

மேஷ ராசிக்காரர்கள், சிவப்புச் சந்தன மரத்தின் அருகில் தினமும் 30 நிமிடங்கள் செலவிட்டால் போதும் (குறிப்பாக, மரத்தைக் கட்டிப்பிடித்தபடி), மரத்தின் மருத்துவ குணங்கள் அவர்களின் உடலுக்குப் பரிமாற்றம் ஆகும்; இதனால் நோய் எதிர்ப்புச் சக்திகள் அதிகரித்து, நோய்கள் பலவும் குணமாகும். இதையே, 'ரெய்கி' சிகிச்சை முறை என்கின்றனர் மருத்துவர்கள்.

ஆரோக்கியம் அருளும் ஆலய விருட்சங்கள்!

நாகை மாவட்டம் தேரழுந்தூரில் உள்ள ஸ்ரீசௌந்தரநாயகி சமேத ஸ்ரீவேதபுரீஸ்வரர் ஆலயத்தின் ஸ்தல விருட்சமும் சிவப்புச் சந்தன மரம்தான்.

மயிலாடுதுறையில் இருந்து சுமார் 12 கி.மீ. தொலைவில் உள்ளது தேரழுந்தூர். இந்தத் தலத்தின் இன்னொரு சுவாரஸ்யம்... சிவாலயத்தின் எதிரிலேயே பெருமாளும் கோயில் கொண்டிருக்கிறார்!

உபரிசிரவஸ் என்ற மன்னனிடம், பறக்கும் வல்லமை கொண்ட தேர் ஒன்று இருந்தது. இந்தத் தேர் வானில் பறக்கும்போது, அதன் நிழல் பட்டு உயிரினங்கள் கடும் துன்பத்துக்கு உள்ளாயின. உயிர்களின் துன்பம் தீர்க்கவும், கர்வத்துடன் திரியும் மன்னனுக்குப் புத்தி புகட்டவும் திருவுளம் கொண்டார் கண்ணபிரான்.

ஒருநாள், பறக்கும் தேரில் மன்னன் பயணித்துக்கொண்டு இருந்தபோது, தமது திருவடி விரலால் அதை அழுத்தி, பூமியில் புதையச் செய்தார் கண்ணபிரான். தேர் அழுந்திய தலம் என்பதால், இது தேரழுந்தூர் எனப் பெயர் பெற்றதாம்.

சக்தி விகடன் மூலம்... தலத்துக்கு வந்த விருட்சம்!

ஸ்ரீசௌந்தரநாயகி சமேத ஸ்ரீவேதபுரீஸ்வரர் கோயில் கொண்டிருக்கும் தேரழுந்தூர் திருத்தலத்தின் ஸ்தல விருட்சம் சிவப்புச் சந்தன மரம். 'சந்தனாரண்யம்' எனப் புராணங்களால் போற்றப்பட்ட இந்தத் தலத்தின் கோயிலில் ஸ்தல விருட்சம் இல்லை என்று அறிந்தபோது வேதனையே மிஞ்சியது.

இந்தக் குறையைத் தீர்ப்பதென்று 'சக்தி விகடன்' முடிவு செய்தது. வாணியம்பாடி டாக்டர் அக்பர் கவுசரைத் தொடர்புகொண்டோம். அவரது மொகல் தோட்டத்தில் இல்லாத செடி-கொடிகளே இல்லை. இந்துக் கோயில்களின் தல விருட்சங்கள் அனைத்தையும் அரும்பாடுபட்டு வளர்த்து வருகிறார் டாக்டர் அக்பர் கவுசர். அவரிடம் விவரம்





ஒருமுறை, உமையவளை நடுவராகக் கொண்டு சிவனாரும் பெருமாளும் சொக்கட்டான் ஆடினார்கள். பகடைக்காய் உருண்டு விழுந்த எண்ணிக்கையில் இருவருக்கும் சந்தேகம் எழ... சிவனாருக்கு எதிராக தீர்ப்பு சொன்னாள் பார்வதி தேவி. இதனால் கோபம் கொண்ட சிவனார், 'பசுவாகக்கடவது' என்று தன் தேவியைச் சபித்தார். 'தன்னால்தானே சகோதரி சாபம் பெற்றாள்' என வருந்திய பெருமாள், மாடு மேய்ப்பவராக அவதரித்து, அந்தப் பசுவைப் பாதுகாக்கும் பொறுப்பை ஏற்றார். ஆகவே, இந்தத் தலத்துப் பெருமாளுக்கு ஆமருவியப்பன் (நிரை மேய்ப்பவர், பாதுகாப்பாளர்) என்று திருநாமம். தாயார்- ஸ்ரீசெங்கமலத் தாயார்.

சாபம் பெற்ற பார்வதிதேவி, தலங்கள் பலவற்றுக்கும் சென்று ஈசனை வழிபட்டாள். இறுதியாக இந்தத் தலத்துக்கு வந்து, இறைவனின் திருவருளால் சாபவிமோசனம் பெற்று, முன்பு போலவே அழகிய உருவை அடைந்தாளாம். எனவே, இங்கு உறையும் அம்பிகைக்கு ஸ்ரீசௌந்தரநாயகி என்று பெயர்.



சொன்னதும், "சிவப்புச் சந்தன மரக் கன்றுதானே?! ஒன்றென்ன... இருபது மரக்கன்றுகள் தருகிறேன்" என்று முன்வந்தார். அதன்படி, அவரிடம் நேரில் சென்று, மரக் கன்றுகளை வாங்கிக்கொண்டு தேரழுந்தூரை அடைந்தது, சக்தி விகடன் குழு.

கோயில் பிராகாரத்தில், ஊர்ப்பெரியவர்கள் கன்றுகளை நட, பெண்கள் குடத்தில் தண்ணீர் எடுத்து வந்து ஊற்ற, அமைதியாக நடந்தேறியது தலவிருட்சம் நடும் விழா! மரக் கன்றுகள் ஒவ்வொன்றையும் ஒவ்வொரு குடும்பத்தினர் தத்தெடுத்துப் பராமரிப்பது என முடிவு செய்யப்பட்டது. நீண்ட காலத்துக்குப் பிறகு, கோயிலுக்கு விருட்சம் வந்ததைக் கொண்டாடும் வகையில், ஸ்வாமிக்கும் அம்பாளுக்கும் சிறப்பு அபிஷேக-ஆராதனைகள் நடைபெற்றன.

தற்போது அந்த 20 கன்றுகளும் துளிர்விட்டு, நன்றாக வளர்ந்து வருவதாக ஊர்மக்கள் மகிழ்ச்சியுடன் தெரிவித்தனர்.

விருட்சம் வளர வளர... தேரழுந்தூர் மட்டுமின்றி, நம் தேசமும் வளரும்; செழிக்கும்!



மனைவிக்கு சாபம் கொடுத்தாலும், அவளது பிரிவால் தவித்து மருகிய சிவனார், சந்தனாரண்யத்துக்கு வந்து, வேதியர்களுக்கு வேதம் பயிற்றுவித்தாராம். இதனால் அவருக்கு ஸ்ரீவேதபுரீஸ்வரர் என்று திருப்பெயர்.

சிவபெருமானும் பெருமாளும் விளையாடிய சொக்கட்டான் பலகை, வேதபுரீஸ்வரர் கோயில் முன்மண்டப விதானத்தில், 20-க்கு 20 அடி எனும் சதுர அளவில் இன்றைக்கும் காட்சி தருகிறது. காவிரி மற்றும் அகத்தியருக்கு இங்கே சாப விமோசனம் கிடைத்ததால், இருவருக்கும் இங்கு தனித்தனிச் சந்நிதிகள் உள்ளன.

கற்கசன் எனும் திருடனை, மன்னருக்கு எதிரே நிறுத்துவதற்காகச் சேவகர்கள் இழுத்துச் சென்றனர். அன்று சோமவாரம் (திங்கட்கிழமை) என்பதால், ஸ்ரீவேதபுரீஸ்வரர் ஆலயம் சர விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டு, தீபாராதனை நடந்துகொண்டிருந்தது. பக்தர் கூட்டம், 'ஹர ஹர' எனும் கோஷத்தை எழுப்பியது. அதில் லயித்த கற்கசன், அப்படியே சமாதி நிலையை அடைந்தான். ஆனால் காவலர்களோ, அவன் நடிப்பதாகக் கருதி, அவனை மிகவும் துன்புறுத்தினர்.

அப்போது, அவனது உயிரைக் கவர்ந்துசெல்ல எம தூதர்களும் வந்துசேர்ந்தனர். ஆனால், அவர்களைத் தடுத்த சிவகணங்கள், "கற்கசன் சற்று நேரத்துக்கு முன்பு வேதபுரீஸ்வரரைத் தியானித்துப் புண்ணியம் பெற்றான். எனவே, அவனை நாங்கள் கயிலாயம் அழைத்துச் செல்ல உள்ளோம்" என்று கூறி, கற்கசனை அழைத்துச்



சிவப்புச் சந்தன மரம்



ஸ்ரீவேதபுரீஸ்வரர் கோயில் கோபுரம்

'துயர் தீர்க்கும் திருத்தலம்!'

"திருஞானசம்பந்தர் பாடிய தலம் இது. மாசி மாதம் 23, 24, 25 ஆகிய தேதிகளில், மாலை 6 முதல் 6.10 மணிக்குள், கோபுர மாடங்கள் வழியே சூரியக் கதிர், சுமார் 400 அடி தூரத்தில் உள்ள ஸ்ரீவேதபுரீஸ்வரரின் லிங்கத் திருமேனியில் ஒரேயொரு நிமிடம் விழுகிறது. இதைத் தரிசிக்க, பக்தர்கள் திரளாக வந்து கலந்துகொள்கின்றனர்.



ஸ்ரீவேதபுரீஸ்வரர்



ஸ்ரீசௌந்தரநாயகி

நான்கு கால பூஜை நடைபெறும் இந்தக் கோயிலில், ஸ்ரீசௌந்தரநாயகி சமேத ஸ்ரீவேதபுரீஸ்வரரை வணங்கினால், மனக்குறைகள் யாவும் தீரும்; துன்பங்கள் அனைத்தும் நீங்கும் என்பது பக்தர்களின் அசைக்க முடியாத நம்பிக்கை" என்று பெருமிதத்துடன் சொல்கிறார் இந்த ஆலயத்தின் அர்ச்சகர் கஜேந்திர பிரகாஷ்ராவ் ஜோஷி.



கஜேந்திர
பிரகாஷ்ராவ் ஜோஷி

சென்றனர். ஆகவே, திங்கட்கிழமை அன்று வேதபுரீஸ்வரரை வணங்கினால், பாவங்கள் நீங்கிப் புண்ணியங்கள் பெருகும் என்பது ஐதிகம்!

தேரழுந்தூர் ஸ்ரீஆமருவியப்பன், மாசி மாத புனர்வசு நட்சத்திர நாளில் ஸ்ரீராமபிரானாக எழுந்தருள, ஸ்ரீவேதபுரீஸ்வரர் அப்போது காட்சி தரும் மாசி புனர்வசு விழா சிறப்புறக் கொண்டாடப் படுகிறது. சைவ- வைணவ ஒற்றுமையை வலியுறுத்தும் அற்புதமான விழா இது.

இவ்வளவு மகத்துவங்கள் கொண்ட தேரழுந்தூர் தலத்தின் விருட்சமாக சிவப்புச் சந்தன மரம் திகழ்வது சிறப்பிலும் சிறப்பு!

சிவப்புச் சந்தன மரத்தின் கட்டையை அரைத்துப் பவுடராக்கி, தேனில் கலந்து சாப்பிட்டால், உடல் உஷ்ணம் தணியும்; சந்தனத்தை நெற்றியில் இட்டுக்கொள்ள சூடு தணியும்; வீக்கங்கள், தலைவலி ஆகியவற்றில் இருந்து நிவாரணம் பெறலாம்; மார்பு வலி, இதய படபடப்பு மற்றும் இதய பலவீனம் ஆகியவற்றையும் குணமாக்கும்.

நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிக்கும் வல்லமை சந்தனத்துக்கு உண்டு. எய்ட்ஸ் நோய்க்கு மருந்தாக இதனைப் பயன்படுத்துகின்றனர். சந்தனம், முகப்பருவைப் போக்குகிறது; ரத்தப் போக்கைத் தடுக்கிறது; வெட்டை மற்றும் மேக நோயில் இருந்தும் நிவாரணம் தருகிறது. சிறுநீரைப் பெருமளவில் வெளியேற்றும் சக்தி, சந்தனத்துக்கு உண்டு!

சிவப்புச் சந்தனக் கட்டையை எலுமிச்சைப் பழச் சாற்றில் அரைத்துப் பூசினால், சொறி, சிரங்கு, புண், தோல் வெடிப்பு, மருக்கள், பருத்தொல்லை ஆகியவை நீங்கும். அழகுடனும் ஆரோக்கியத்துடனும் வாழலாம். சந்தன மர இலைகளை அரைத்து, அதனை நெல்லிக்காய் சாற்றில் கலந்து சாப்பிட, சர்க்கரை நோய் மட்டுப்படுமாம்.

சங்க இலக்கியங்களில், *'ஆரம் காழ்வை கடியிரும் புன்னை'* (குறிஞ்சி) எனக் கபிலர், ஆரம் எனப்படும் சந்தன மலரையும் பிற மலர்களுடன் வைத்துக் குறிப்பிடுகிறார். ஆனாலும், ஆரத்தின் மலரில் வாசனை இல்லை; மரத்திலேயே சந்தனத்தின் நறுமணம் கமழ்கிறது.

பட்டினப்பாலை, குறுந்தொகை, கலித்தொகை, அகநானூறு, சிறுபாணாற்றுப்படை, மலைபடு கடாம் ஆகிய நூல்களில் சந்தன மரம் சிறப்புறக் கூறப்பட்டுள்ளது.

நாகை மாவட்டத்தில் உள்ள திருவீழிமிழலை, ஸ்ரீவாஞ்சியம் ஆகிய தலங்களிலும் சந்தன மரம் தல விருட்சமாக போற்றப் படுகிறது.

ஏற்றம் தரும் ஏழிலைப்பாலை!

ரிஷப ராசிக்கு உகந்த விருட்சம்

11

திருப்பாலைத்துறை
ஸ்ரீபாலைவனநாதர் திருக்கோயில்

சுக்கிர கிரகத்துடன் தொடர்பு கொண்ட ரிஷப ராசிக்காரர்களுக்கும், வெள்ளிக் கிழமைகள் மற்றும் ஏப்ரல் *21* முதல் மே *21*-ஆம் தேதி வரையிலான நாட்களில் பிறந்தவர்களுக்கும் அதிக அளவு பயன் தரும் மரம் ஏழிலைப்பாலை. ஒரு காம்பில் ஏழு இலைகளுடன் அழகுறக் காட்சி தரும் இந்த மரம், அரிய மருத்துவ குணங்கள் கொண்டது.

சுக்கிர கிரகம் மற்றும் ரிஷப ராசி நட்சத்திரக் கூட்டம் ஆகியவற்றின் நல்ல கதிர்வீச்சுகளைத் தனக்குள் சேமித்து வைத்திருக்கிறது ஏழிலைப்பாலை. இந்த மரத்தை வீடுகளில் வளர்த்தால், நோய்கள் பலவற்றிலும் இருந்து நிவாரணம் பெறலாம்; சுக்கிர தோஷம் நீங்கும் என்கின்றனர் சாஸ்திர வல்லுநர்கள்.

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகிய ஐவகை நிலங்களில், வெப்பத்தால் தகிக்கும் நிலப்பகுதி பாலை. இந்தப் பகுதியில் கள்ளியும் பாலை மரமும் மட்டுமே நன்கு வளரும். பாலை மரத்திலும் பல வகைகள் உண்டு. அவற்றில், தெய்வீக மரமாகத் திகழ்வது ஏழிலைப்பாலை. கேரளப்




ஏழிலைப்பாலையின் இலைகள்



ஏழிலைப்பாலை மரம்

பகுதிகளில், இந்த மரத்தின் கிளையை வெட்டிக்கொண்டு வந்து நட்ட பிறகே, விழாக்களைத் துவங்குவார்களாம்.

நம் தமிழகத்தில்... தேவாரப் பாடல் பெற்ற தலங்களில் தில்லை வனம், கடம்ப வனம், வில்வ வனம், வன் பார்த்தான் பனங்காட்டூர், திருப்புறவார்ப் பனங்காட்டூர், நெல்லிக்கா, ஆலம்பொழில், இரும்பூளை, பனையூர், பாதிரிப்புலியூர், பாலைத்துறை, எருக்கத்தம்புலியூர், திருக்கொட்டையூர், இடை மருதூர், திருப்பனந்தாள், திருப்பராய்த்துறை, திருப்புன்கூர் ஆகிய தலங்கள், விருட்சங்களின் பெயரைக் கொண்டே திகழ்கின்றன.

திருப்பாலைப்பந்தல், திருக்கழிப்பாலை, திருப்பாலை வனம் முதலான தலங்கள், பாலையின் பெயரால் அமைந்த தலங்களாகும்!

இவற்றுள், ஏழிலைப்பாலையை விருட்சமாகக் கொண்ட திருப்பாலைத்துறை, காவிரியின் தென்கரைத் தலங்களில் ஒன்று. இந்த ஊர், தஞ்சாவூரை அடுத்துள்ள பாபநாசத்தில் இருந்து சுமார் ஒரு கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. இங்கே கோயில் கொண்டிருக்கும் சிவனாரின் திருநாமம் - ஸ்ரீபாலைவனநாதர்; அம்பாளின் திருநாமம் - ஸ்ரீதவள வெண்ணகையாள்.

பாண்டிய மன்னனான மலையத்துவசன் என்பவன், புனித நதியாம் தாமிரபரணியில் நீராடிவிட்டு, கரையில் இருந்த காலவ முனிவரின் குடிலுக்குச் சென்றான். அவனுக்கு நல்லுபதேசங்களை அருளினார் முனிவர்.

ஆனால், அவரது அறிவுரைகளை மன்னன் ஏற்கவில்லை. மாறாக, 'முனிவர்களைவிட அரசர்களே பெரியவர்கள்' என்று வாதிட்டான். கோபம் கொண்ட முனிவர், கரடியாகும்படி மன்னனைச் சபித்தார். அதையறிந்த மன்னனின் மனைவி பத்மாவதி பதறினாள். ஓடோடி வந்து முனிவரின் கால்களில் விழுந்து, தன் கணவனை மன்னிக்கும்படி வேண்டினாள். மனமிரங்கிய முனிவர், அகத்திய முனிவரை வழிபடும்படி அறிவுறுத்தினார்.



ஸ்ரீபாலைவனநாதர்



ஸ்ரீதவள வெண்ணகையாள்

'மன உளைச்சல் நீங்கும்!'

"பாண்டிய மன்னன் மலையத்துவசன் மட்டுமல்ல, வசிஷ்ட மகரிஷியும் வழிபட்ட புண்ணியத் தலம் இது. இவர்கள் பூஜித்த லிங்கங்களும் இங்கே உண்டு. ராவணனை வென்று அயோத்திக்குத் திரும்பும் வழியில், தன் குருநாதர் வழிபட்ட இந்த சிவாலயத்தில் ஸ்ரீராமனும் வழிபட்டிருக்கிறார். இப்படிப் பல பெருமைகள் இந்தக் கோயிலுக்கு உண்டு" என்கிறார் கோயிலின் ராமலிங்க குருக்கள்.


"இந்தத் தலத்தின் அம்பிகை, முத்துச் சிரிப்புடைநாயகி. அதாவது, ஒளிவீசும் நிலவின் சிரிப்பைக் கொண்டவள் (தவள வெண்ணகையாள்). இங்கு வந்து, பாலைவனநாதரையும் தவள வெண்ணகையாளையும் மனமுருகி வழிபட்டால், பழி-பாவத்தில் இருந்து விடுபடலாம்; மன உளைச்சல் நீங்கும்; ஒளிமயமான எதிர்காலம் அமையும். இதை அனுபவத்தில் உணர்ந்த பக்தர்கள் ஏராளம்!" எனப் பெருமிதத்துடன் சொல்கிறார் ராமலிங்க குருக்கள்.



ராமலிங்க குருக்கள்



ஆலயத்தின் உள்ளே நெற்களஞ்சியம்



திருப்பாலைத்துறை ஆலய ராஜகோபுரம்

கரடி உருவம் கொண்ட மன்னனும் அதன்படியே அகத்திய முனிவரை தரிசித்து வணங்கினான். அவர், "திருப்பாலைத்துறை வனத்துக்குச் செல்க" என்று அறிவுறுத்தினார். அதையடுத்து, பாலைத்துறை வனத்துக்கு வந்த கரடி (மன்னன்), பாலைவனநாதரை அனு தினமும் பூஜித்தது. ஒருநாள், அந்தப் பகுதிக்கு வந்த வேடன் ஒருவன், கரடியின் மீது அம்பு தொடுத்தான். தப்பித்து ஓடிய கரடி, காவிரி ஆற்றில் குதிக்க... சாப விமோசனம் கிடைத்தது; மலையத்துவசன் சுய உருவம் பெற்றான் என்கிறது தலபுராணம்.

பாண்டவர்களின் வனவாசத்தின்போது, அர்ஜுனன் பாதாள லோகத்துக்குச் செல்ல வேண்டியிருந்தது. அவன், இந்தத் தலத்துக்கு வந்து ஸ்ரீபாலைவனநாதரை வழிபட்டான். அவனுக்குக் காட்சி தந்த பாலைவனநாதர், பாதாள லோகத்துக்குச் செல்ல வழி காட்டினார். மேலும், வழியில் ஏற்படும் இடர்களைச் சமாளிக்க, அர்ஜுனனுக்கு வில் வித்தை நுணுக்கங்களையும் அருளினாராம். அர்ஜுனனும் இந்தத் தலத்து இறைவனின் திருவருளால் பாதாள லோகம் சென்று, உலூபி எனும் அரசிளங் குமரியை மணந்து வந்ததாக விவரிக்கின்றன புராணங்கள்.

இத்தகு புராணப் பெருமைகள் கொண்ட திருப்பாலைத்துறை கோயிலுக்குச் சிறப்பு சேர்க்கிறது, கோபுரத்தையொட்டி இடதுபுறம் அமைந்துள்ள நெற்களஞ்சியம்! தஞ்சை நாயக்க மன்னர்கள் வழிவந்த ரகுநாத நாயக்கரால் (கி.பி.1600- 1634) கட்டப்பட்ட இது, சுமார் 36 அடி உயரத்தில், வட்டவடிவில், மேற்பகுதி கூம்பு

போல் அமைந்துள்ளது. இதில், 1,500 மூட்டை தானியங்களைச் சேமிக்கலாம் என்கின்றனர்.

இந்தத் திருத்தலத்தில், ஸ்வாமி சந்நிதிக்கு வலது பக்கத்தில் அம்பாள் சந்நிதி. இத்தகைய அமைப்புடன் திகழும் கோயில்களை, திருமணக்கோலத் திருக்கோயில்கள் எனப் போற்றுவர். இங்கு வந்து வழிபட, திருமணத் தடை நீங்கி, விரைவில் மணப்பேறு கிடைக்கும்.

இத்தனைச் சிறப்புகள் கொண்ட திருப்பாலைத்துறை தலத்தின் விருட்சமான ஏழிலைப்பாலையை, 'சப்த சாதா' எனக் குறிப்பிடுகிறார் வால்மீகி. வட இந்தியாவில், இதை 'சப்த பர்னா' என்கின்றனர்.

பெரும்பாலும், நான்கு அல்லது ஐந்து இலைகள் கொண்ட ஏழிலைப்பாலையையே காணமுடியும். புராதனமான ஆலயங்களில், ஏழு இலைகள் கொண்ட ஏழிலைப்பாலையைக் காணலாம். இந்த மரத்திலிருந்து, மாணவர்கள் பயன்படுத்தும் சிலேட்டுகளின் பார்டர் பலகை தயாரிக்கப்படுகிறது.

இதன் இலையை வறுத்துப் பொடித்து, சீழ் வடியும் புண்களின் மேல் வைத்துக் கட்டிவிட்டால், விரைவில் புண்கள் குணமாகும் என்கிறது சித்த மருத்துவம். இஞ்சிச் சாறுடன் ஏழிலைப்பாலை இலையின் சாற்றையும் கலந்து, குழந்தையைப் பெற்றெடுத்த பெண்களுக்குத் தருவார்கள். நீண்ட நாள் வயிற்றுப்போக்கை, இந்த மரப் பட்டை கட்டுப்படுத்தும்; ரத்த பேதியும் நிற்கும்.

சூலை, குன்மம் முதலானவற்றைக் குணப்படுத்தும் வல்லமை, ஏழிலைப்பாலையின் வேருக்கு உண்டு. இந்த வேரை உலர்த்திப் பொடியாக்கி ஒரு சிட்டிகை அளவு சாப்பிட்டு வந்தால், விரைவாத நோய் குணமாகும். புண்கள் மீதும், மூட்டு வீக்கத்தின்மேலும் ஏழிலைப்பாலை மரத்தின் பாலைப் பூசுவதால் குணம் பெறலாம். இதன் பால், புண்களைக் குணப்படுத்தும் சக்தி கொண்டது; கீல் வாதம், காது வலி ஆகியவற்றுக்கு எண்ணெய்யுடன் சேர்த்து உபயோகிக்கலாம்.

அஜீரணம், வயிற்று உப்புசம், வயிற்று வலி போன்றவற்றில் இருந்து குணம்பெற, இந்த மரம் பயன்படுகிறது. தோல் நோய்க்காரர்கள், இதன் இலைகளைக் கஷாயமாக்கிச் சாப்பிடலாம். குளிர் ஜுரம், யானைக்கால் வியாதி போன்றவற்றை குணமாக்கும் சக்தியும் இந்த மரத்துக்கு உண்டு. இந்த மரத்தின் குச்சிகள், மூட்டு வலிக்கு நிவாரணமாகப் பயன்படுகின்றன. இளஞ்செடி பருவத்தில் உள்ள ஏழிலைப்பாலையை எரித்து, அதன் சாம்பலைப் பிளவைக்கட்டிகள் மீது பூசினால், கட்டி விரைவில் பழுத்து, உடையுமாம்!

‘பலா’ பலன்!

மிதுன ராசிக்கு உகந்த விருட்சம்

12

சீர்காழி
ஸ்ரீதாடாளன் திருக்கோயில்

முக்கனிகளுள் ஒன்றான பலா, மிதுன ராசிக்காரர்களுக்குப் பலனும் பலமும் தரும் முக்கியமான விருட்சம்! மிதுன ராசி, புதன் கிரகத்துடன் தொடர்புகொண்டது. எனவே, மிதுன ராசிக்காரர்கள், புதன்கிழமை பிறந்தவர்கள் மற்றும் மே 21 முதல் ஜூன் 20-ஆம் தேதி வரை பிறந்தவர்களுக்கு அதிக அளவு பலன் தரக்கூடியது பலா மரம். இவர்கள் அனைவரும் தங்கள் வீட்டில் பலா மரத்தை நட்டு வளர்க்கலாம்.

‘காழிச் சீராம விண்ணகரம்’ எனப் போற்றப்படும் ஸ்ரீபூமி நீளா லோகநாயகி சமேத ஸ்ரீதிரிவிக்கிரம நாராயணப் பெருமாள் தாடாளன் கோயிலின் ஸ்தல விருட்சமாகப் போற்றப்படுகிறது பலா. நாகை மாவட்டம் சீர்காழியில் உள்ளது இந்தத் திருக்கோயில்.

திருமாலின் வாமன அவதாரமும் திரிவிக்கிரம அவதாரமும் வேதக் கருத்துகளை அடிப்படையாகக் கொண்டவை. மகாபலிச் சக்கரவர்த்தியின் கொடுமையைத் தாங்கமுடியாத தேவர்கள், தங்களைக் காப்பாற்றும்படி பெருமாளைச் சரணடைந்தனர்.



பலா மரம்



ஸ்ரீதாடாளன் (மூலவர்)

அசுர குரு சுக்ராச்சார்யரின் ஆலோசனைப்படி பல்வேறு யாகங்களும் தவமும் செய்து பலம் பெற்றிருந்த மகாபலியை ஆயுதங்களால் அழிக்கமுடியாது என்பதை அறிந்த திருமால், வாமன அவதாரம் எடுத்தார்.

கேரளா - கொச்சியிலிருந்து சுமார் 10 கி.மீ. தொலைவில் உள்ளது திரிக்காக்கரா ஆலயம். இங்கே, வாமன மூர்த்தியாக அருள்கிறார் மகா விஷ்ணு. மகாபலிச் சக்கரவர்த்தியின் தலைநகரமான இங்குதான் வாமன அவதாரம் நிகழ்ந்ததாகச் சொல்கிறது புராணம். மகாபலியை பாதாளத்தில் அழுத்துவதற்கு முன், அவன் கேட்டுக்கொண்டபடி, வருடத்துக்கு ஒருமுறை அவன் பூவுலகம் வந்து தன்னுடைய நாட்டு மக்களைச் சந்திக்கலாம் என்று வரம் தந்தார் திருமால். அதன்படி, பூலோகத்துக்கு வரும் மகாபலிச் சக்கரவர்த்தியை வரவேற்க, ஓணம் திருவிழாவை பத்து நாள் விழாவாகக் கொண்டாடுகின்றனர் கேரள மக்கள்.

மிகக் குள்ளமான வாமன வடிவில் வந்த பெருமாள், மூன்றடி மண்ணைத் தானமாகக் கேட்டார். "ப்பூ... இத்துனூண்டு உருவம் கொண்ட உனக்கு மூன்றடி மண்தானே வேண்டும். எடுத்துக்கொள்!" என்று அனுமதித்தான் மகாபலி. சட்டென்று விண்ணளாவ ஓங்கி வளர்ந்த பெருமாள், முதல் அடியாக... இடக்காலைத் தூக்கி விண்ணை அளந்தார். இந்த அழகு ததும்பும் அழகுக் கோலத்தை தாடாளன் கோயிலிலும், 2-வது அடி அளந்த திருக்கோலத்தை காஞ்சிபுரம் (திருஊரகம்) ஸ்ரீஉலகளந்தபெருமாள் கோயிலிலும், மூன்றாவது திருவடிக்கு இடம் எங்கே என்று கேட்கும் திருக்கோலத்தைத் திருக்கோவிலூரிலும் தரிசிக்கலாம்!

சீர்காழி தலத்தில், கைகளில் சங்கு - சக்கரம், மார்பில் பிராட்டி, வனமாலை, சாளக்ராம மாலை, சகஸ்ரநாம மாலை ஆகியவற்றுடன் காட்சி தருகிறார் பெருமாள். அவரது சந்நிதிக்குத் தென்புறம், தனிச்



ஸ்ரீசீதா–லட்சுமணனுடன் ஸ்ரீராமர்



தாயார்–ஸ்ரீதிரிவிக்ரமநாராயணன்

தாயாரை தரிசித்தால் பதவி உயரும்!

"திருமங்கை ஆழ்வாரால் மங்களாசாசனம் செய்யப்பட்ட ஆலயம்: 108 திவ்விய தேசங்களில் 26-வது திருத்தலம் எனும் பெருமைமிகு திருக்கோயில் இது" என்கிறார் இந்தக் கோயிலின், பத்ரிநாராயண பட்டாச்சார்யர்.



பத்ரிநாராயண பட்டாச்சார்யர்

"மகாபலிச் சக்கரவர்த்திக்கு வாமன அவதாரத்தில் காட்சி தந்ததுடன், அவருக்கு மோட்சம் அளித்த தலம் இது. திரிவிக்கிரமப் பெருமாள், பூமியை அளந்த வலது திருவடியை, வைகுண்ட ஏகாதசி நாளில் இங்கு தரிசிக்கலாம். இதனை தரிசித்தால், மறுபிறவி இல்லை என்பது ஐதீகம். ஸ்ரீலோகநாயகித் தாயார், பக்தர்களின் குறைகளைப் பரிவுடன் தீர்த்து வைப்பவள். ஒன்பது வெள்ளிக்கிழமைகள் தொடர்ந்து வந்து தாயாரை அர்ச்சித்துத் தரிசித்து, ஸ்தல விருட்சமான பலா மரத்தையும் வணங்கி வழிபட்டால், ஆயுள் விருத்தியாகும்; திருமணத் தடை அகலும்; புத்திர பாக்கியம் கிடைக்கும்; உத்தியோகத்தில் ஊதிய உயர்வு மற்றும் பதவி உயர்வு கிடைக்கப் பெறுவர்" என்று பெருமிதத்துடன் சொல்கிறார் பத்ரிநாராயண பட்டாச்சார்யர்.

சந்நிதியில், ஸ்ரீலோகநாயகி தாயார் அருள்பாலிக்கிறார். இங்கே, ஸ்ரீஆண்டாளுக்கும் ஸ்ரீகோதண்டபாணியான ஸ்ரீராமருக்கும் தனிச்சந்நிதிகள் அமைந்துள்ளன. இடது கையில் வில்லேந்தி, ஓரடி எடுத்து வைப்பது போன்ற கோலத்தில் காட்சி தருகிறார் ஸ்ரீராமர். அவருடன் ஸ்ரீசீதை, ஸ்ரீலட்சுமணர் மற்றும் ஸ்ரீஆஞ்சநேயரும் திருக்காட்சி தருகின்றனர்.

மடியிலா மன்னவன் எய்தும் அடியளந்தான்

தாஅயது எல்லாம் ஒருங்கு

- எனும் குறளில், 'மூவுலகு' என்று குறிப்பிடாமல், 'அடியளந்தான் தாஅயது எல்லாம்' எனப் போற்றுகிறார் திருவள்ளுவர். அதேபோல் பரிமேலழகர், 'தன் அடி அளவினால் எல்லா உலகையும் அளந்த இறைவன் கடந்த பரப்பு முழுமையும்' என்கிறார்.

பலாவின் தாயகம் இந்திய தேசம்தான். கிறிஸ்து பிறப்புக்குச் சுமார் 300 வருடங்களுக்கு முன் வாழ்ந்த கிரேக்க வரலாற்று அறிஞர் தியோபிராஸ்டிஸ் என்பவர், 'இந்தியாவில் உள்ள ரிஷிகள், பலாப்பழத்தை உணவாகச் சாப்பிட்டு வந்தனர்' என்று தனது பயணக்குறிப்பில் தெரிவித்துள்ளார். இத்தனை பழைமை வாய்ந்த பலா, மருத்துவ குணங்களும் கொண்டது!

பலா இலையைப் பக்குவப் படுத்திச் சாப்பிட்டால் பெரும் வயிறு, படை முதலானவை நீங்கும். இலைக் கொழுந்தை அரைத்துச் சிரங்குகளில் பூசிக்கொள்ள, உடனே குணம் பெறலாம்.

இதன் இலைகளை எரித்து, அந்தச் சாம்பலை ஒரு சிட்டிகை எடுத்து தினமும் காலையில் சாப்பிட்டு வர, அல்சர் மற்றும் வயிற்றுப் புண்கள் குணமாகும். நெரிக்கட்டிகள், கழலைக் கட்டிகள்மீது பலாவின் பால், பிசினுடன் சிறிது காடி (வினிகர்) கலந்து பூசினால், தானாகவே பழுத்து உடையும். பலா வேர் மற்றும் இலையைச் சேர்த்து அரைத்து இரண்டு கிராம் தேனில் கலந்து, பெண்கள் சாப்பிட்டுவர, தாய்ப்பால் அதிகம் சுரக்கும்.

மாலைக்கண் நோய், காயங்கள், சொறி, சிரங்கு, தேமல், கல்லீரல் வீக்கம், அஜீரணம், வாயுத் தொல்லை, விஷப்பூச்சிக் கடி, பல் வலி போன்ற பல நோய்களை நீக்கிக் குணமாக்கும் வல்லமை பலாவுக்கு உண்டு.

பலவு என்றும், வேர்ப் பலா, ஆலடிப் பலா, கோட்டுப் பலா என்றும் சங்க இலக்கியங்களில் பலாவைப் பற்றிக் கூறப்பட்டுள்ளன.

சீர்காழி தாடாளன் கோயிலில் மட்டுமின்றி, கொல்லிமலை ஸ்ரீஆறுமுகப்பெருமான் ஆலயம், திருச்சி திருமங்கலம் ஸ்ரீசமயா தீஸ்வரர் ஆலயம், குற்றாலம் ஸ்ரீகுரும்பலா ஈசர் கோயில் ஆகிய தலங்களிலும் பலா மரம் தல விருட்சமாகப் போற்றப்படுகிறது.

முருக்கன் (பலாச மரம்) மகிமை!

கடக ராசிக்கு உகந்த விருட்சம்

13

திருநாங்கூர் ஸ்ரீவன்புருஷோத்தமர் திருக்கோயில்

வானத்தில் நண்டு வடிவில் காட்சி தரும் நட்சத்திரக் கூட்டத்தை, கடக ராசி என்பார்கள். இந்த நட்சத்திர மண்டலம், சந்திர கிரகத்துடன் தொடர்பு கொண்டது. இதன் கதிர்வீச்சு, மார்பு மற்றும் நெஞ்சுப்பகுதியில் உள்ள உள் உறுப்புகளைச் சீரமைக்கிறது. பஞ்ச பூதங்களில் ஒன்றான நீருடன் தொடர்பு கொண்டது இது!

கடக ராசியில் பிறந்தவர்கள் பெற்றோரிடம் அன்பாக இருப்பார்கள்; இவர்களின் குணங்கள் அடிக்கடி மாறிக்கொண்டே இருக்கும்! கடக ராசி - புனர்பூசம், பூசம் மற்றும் ஆயில்ய நட்சத்திரங்களில் பிறந்தவர்கள், ஜூன் 21 முதல் ஜூலை 22-ஆம் தேதி வரை பிறந்தவர்கள் மற்றும் திங்கட்கிழமை அன்று பிறந்தவர்கள் ஆகியோருக்குப் பயன் தரும் மரம் - முருக்கன் எனப்படும் பலாச மரம்! இந்த மரத்தை, தினமும் அரை மணி நேரம் கட்டிப்பிடித்தாலோ, அல்லது, மர நிழலில் அமர்ந்திருந்தாலோ சந்திர கிரக தோஷம் நீங்கும் என்பர்.

பௌத்தத் துறவிகள், முருக்கன் மரப்பூக்களில் இருந்து காவிநிற ஆடை தயாரித்து, அணிவார்களாம்.



முருக்கன் எனப்படும் பலாச மரம்


வட இந்திய மக்கள், ஹோலி முதலான பண்டிகைகளில், இதில் இருந்து பெறப்படும் காவிநிறப் பொடியை ஒருவர்மீது ஒருவர் வீசியும் அப்பியும் குதூகலிப்பார்கள்!

கடக ராசிக்கான விருட்சம் - முருக்கன் எனப்படும் பலாச மரம். இதனைத் தல விருட்சமாகக் கொண்ட தலம், திருநாங்கூரில் உள்ள ஸ்ரீவண்புருஷோத்தமன் ஆலயம். திருமங்கையாழ்வாரால் மங்களாசாசனம் செய்யப்பட்ட தலம்; 108 திவ்விய தேசங்களுள் இதுவும் ஒன்று.

இந்தத் தலத்து ஸ்வாமியின் திருநாமம் - அயோத்தி ராமர்; வண்புருஷோத்தமராகக் காட்சி தருகிறார். வேறெந்த வைணவத் தலத்திலும், ஸ்ரீவண்புருஷோத்தமன், தனிச்சந்நிதி கொண்டிருக்கவில்லை.

திருநாங்கூரில் இரண்டு வருடங்கள் தங்கி, இறைப்பணி செய்துள்ளார் ஸ்ரீமணவாள மாமுனிகள். கோயிலுக்கு வடக்கே திருப்பாற்கடல் எனும் தீர்த்தம் உள்ளது. ஸ்ரீவண்புருஷோத்தமனுக்குப் பிடித்த மலர் செண்பகப் பூ!

சீர்காழி - நாகப்பட்டினம் சாலையில், சுமார் 9 கி.மீ. தொலைவில் உள்ளது திருநாங்கூர். இங்கே, நின்ற கோலத்தில், கிழக்குப் பார்த்தபடி, ஸ்ரீதேவி பூதேவியுடன் அருள்கிறார் ஸ்ரீவண்புருஷோத்தமர். தேவியின் திருநாமம் - ஸ்ரீபுருஷோத்தம



ஆலய நுழைவாயில்...

நாயகி: தென்மேற்கு மூலையில், அமர்ந்த திருக்கோலத்தில் காட்சி தருகிறாள். ஸ்ரீஆண்டாள், ஸ்ரீசீதை, ஸ்ரீலட்சுமணருடன் ஸ்ரீராமர், ஸ்ரீஆஞ்சநேயர், ஸ்ரீநம்மாழ்வார், ஸ்ரீராமானுஜர், சேனைமுதலியார் ஆகியோரும் காட்சி தருகின்றனர்.

திவ்ய கவியான பிள்ளைப் பெருமாள் ஐயங்கார், 108 திருப்பதி அந்தாதியின் பாசுரம் ஒன்றில், 'தேவர்களுக்கெல்லாம் தேவனாகிய அழகிய புருஷோத்தமனின் (திருமாலின்) திருப்பதிகளாவன: எம்பெருமான் பள்ளி கொண்டுள்ள ஸ்ரீரங்கம், குளிர்ந்த திருவேங்கடமலை, திருக்குடந்தை, திருமாலிருஞ்சோலை, அழகிய துவாரகை மற்றும் திருவண் புருடோத்தமம்' எனக் குறிப்பிடுகிறார்.

நைமிசாரண்யத்தில் சூத பௌராணிகர், சனகாதி முனிவர்களுக்கு ஸ்ரீபத்ம புராணத்தை எடுத்துரைத்தார். அதில், தீர்த்தம், க்ஷேத்திரம் ஆகியவற்றைக் கூறும்போது, 'பலாச' வன மகாத்மியம் என இந்தத் தலத்தைப் போற்றுகிறார். அதன் ஆறாவது அத்தியாயத்தில், திருநாங்கூர் ஸ்ரீவண்புருஷோத்தம திவ்விய தேச வைபவத்தில், 'புருஷர்களில் உத்தமன் ஸ்ரீராமன். அதிலும் வேண்டியவர்களுக்கு வேண்டியன கொடுப்பவன் ஸ்ரீவண்புருஷோத்தமன்' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஒருகாலத்தில், இந்தப் பகுதி, பலாச வனமாக இருந்ததாம். அப்போது, வியாக்ரபாத முனிவர், இங்கே பர்ணசாலை அமைத்துத் தங்கி, தவம் இருந்தார். அவருடைய மகன் உபமன்யு. இவனுக்கு மூன்று வயது இருக்கும் வேளையில், புருஷோத்தமபுரத்துக்கு வந்து, பெருமாள் சந்நிதியில் குழந்தையை விட்டுவிட்டு, அர்ச்சனை செய்வதற்குப் பூக்கள் பறிக்கச் சென்றார் வியாக்ரபாதர். அப்போது, குழந்தை திடீரெனப் பசியால் அழ... ஸ்ரீவண்புருஷோத்தமப் பெருமாள் வந்து, குழந்தையை வருடிக் கொடுத்து, சமாதானப்படுத்தி, பிராட்டியாரின் தூண்டுதலால் திருப்பாற்கடலையும் விரஜா

நதியையும் வரவழைத்தார். பாற்கடலில் இருந்து பாலை எடுத்து வந்து, விரஜா நீரில் கலந்து, குழந்தைக்குப் புகட்டினாளாம் பிராட்டி; பசி நீங்கியது மட்டுமின்றி, பெருமாளின் அருளையும் பெற்றது, குழந்தை!

'கார்த்திகை சுக்லபட்சம், துவாதசி அருணோதய காலத்தில், திருப்பாற்கடல் வரவழைக்கப்பட்டது. எனவே, அந்த வேளையில், எல்லா புண்ணிய தீர்த்தங்களும் அங்கே கூடுகின்றன. அப்போது திருப்பாற்கடலில் நீராடி, ஸ்ரீவண்புருஷோத்தமனைச் சேவித்தால், தீவினைகள் அகன்று, நிம்மதியும் சந்தோஷமும் பொங்க வாழ்ந்து, முக்தி கிடைக்கவேண்டும்' என திருமாலிடம் உபமன்யு வேண்டினான்; அப்படியே ஆகட்டும் என வரம் தந்தருளினார் திருமால்!

திருநாங்கூர் ஸ்ரீவண்புருஷோத்தமர் கோயிலின் ஸ்தல விருட்சமான முருக்கன் எனும் பலாச மரம், மருத்துவ மகிமைகள் கொண்டது. முருக்கன் மரத்தின் பட்டையை 5 முதல் 12 கிராம் வரை, தினமும் ஒருவேளை பயன்படுத்தினால், பேதி, வெள்ளைப்படுதல், கர்ப்பப்பை சுருங்கி சிறுத்துப் போதல், மாதவிலக்கு முதலான கோளாறுகள் நீங்கும். முருக்கன் மரத்தின் பிசினை, 250 மி.கி. முதல் ஒரு கிராம் வரை மருந்தாகப் பயன்படுத்தினால், வாயுத் தொல்லை

'பித்ரு தோஷம் விலகும்!'

"திருஞானசம்பந்தருக்கு, உமையவள் வந்து ஞானப்பால் தந்ததுபோல், ஸ்ரீபுருஷோத்தமநாயகி, பாற்கடலை அள்ளியெடுத்து, வியாக்ரபாதரின் மகனுக்குப் புகட்டிப் பசியாற்றிய தலம் இது" எனச் சிலிர்ப்புடன் தெரிவிக்கிறார் ஆலயத்தின் கண்ணன் பட்டாச்சார்யர்.

"அதமன், மத்திமன், உத்தமன் என்று மூன்று குணங்கள் உண்டு. அதிஉத்தம புருஷனாக இருப்பவன் ஸ்ரீவண்புருஷோத்தமன் அதாவது, ஸ்ரீராமன். அப்பேர்ப்பட்ட ராமபிரான் குடி கொண்டிருக்கும் அற்புதத் தலம் இது.



கண்ணன் பட்டாச்சார்யர்

பங்குனியில் பத்துநாள் பிரம்மோத்ஸவம்; 9-ஆம் நாள், திருத்தேர். ஆவணியில் பவித்ரோத்ஸவம்; தை அமாவாசைக்கு மறுநாள் கருட சேவைத் திருவிழா என விழாக்களுக்கு ஆலயத்தில், குறைவே இல்லை.

ஸ்ரீதேவி பூதேவி சமேத ஸ்ரீவண் புருஷோத்தமரையும் ஸ்ரீபுருஷோத்தம நாயகித் தாயாரையும் சகஸ்ரநாம அர்ச்சனை செய்து வழிபட்டால், பூர்வ ஜன்ம பாவங்கள் அனைத்தும் விலகும்; பித்ரு தோஷங்கள் நீங்கும்; திருமணத் தடை அகலும் என்பது ஐதீகம்" என்கிறார் கண்ணன் பட்டாச்சார்யர்.



தேவியருடன் பெருமாள்

நீங்கும்; ஜுரத்தைக் கட்டுப்படுத்தும்; புண்களைச் சுத்தப்படுத்திக் குணமாக்கும்; பாம்புக்கடியின் விஷத்தை முறிக்கும்! வலிப்பு நோய் உள்ளவர்களுக்கு, இந்த மருந்தை ஒரேயொரு சொட்டு தருவார்கள்.

தென்னிந்தியாவில் பல ஓட்டல்கள் மற்றும் விருந்துகளில் பலாச இலையில் தயாரிக்கப்படும் தட்டுகளைப் பயன்படுத்துவதைக் காணலாம்.

முருக்கன் இலைச் சாறுடன் தேன் கலந்து சாப்பிட, வயிற்றில் உள்ள நாக்குப் பூச்சிகள் வெளியேறிவிடும். மேலும் வயிற்றுவலி, மலட்டுத்தன்மை, கர்ப்பப்பை வளர்ச்சியின்மை, ஆண்களுக்குப் போதிய உயிரணுக்கள் இல்லாத நிலை, சிறுநீர் கழிக்கும்போது உண்டாகிற எரிச்சல் ஆகியன குணமாகும்! இந்த இலைகளை இடித்து வெந்நீரில் கலந்து, எலும்பு மூட்டுப் பகுதியில் பற்றுப் போட்டால், வலியும் வீக்கமும் குறையும். இலைகளைத் தேங்காய் எண்ணெயில் வறுத்துச் சாப்பிட, பெண்களுக்கு தாய்ப்பால் அதிகமாகச் சுரக்குமாம்!

சங்க இலக்கியத்தில் கபிலர், '*பகன்றை பலாசம் பல்பூம் பிண்டி*' எனப் பாடியுள்ளார். பிற்கால இலக்கியங்களும், புரசு, முருக்கு, புன முருக்கு, புழகு, புன முருங்கை, மலை முருங்கு என்றெல்லாம் குறிப்பிட்டுள்ளன. தவ யோகியரின் கைகளில் உள்ள 'தண்டம்' புரச மரத்தில் செய்யப்படுவது வழக்கம்!.

திருத்தலைச்சன்காடு, திருக்கஞ்சனூர், திருப்பார்த்தன்பள்ளி, திருப்பேர்நகர், திருவெள்ளக்குளம் ஆகிய ஆலயங்களிலும், பலாச மரமே தல விருட்சமாக அமைந்துள்ளது!

பாதிரி மரத்தின் மகிமை!

சிம்ம ராசிக்கு உகந்த விருட்சம்

14

அவிநாசி
ஸ்ரீஅவிநாசிலிங்கேஸ்வரர் திருக்கோயில்

சூரியனுடன் தொடர்பு கொண்டது சிம்ம ராசி. ஞாயிற்றுக் கிழமை மற்றும் ஜூலை 23 முதல் ஆகஸ்ட் 22 வரையிலான தேதிகளில் பிறந்தவர்கள், மகம், பூரம், உத்திரம் ஆகிய நட்சத்திரக்காரர்கள் இயல்பிலேயே நிலையான குணம் கொண்டவர்களாகவும், பிள்ளைகளின் மீது அதீத பாசம் உள்ளவர்களாகவும் திகழ்வர்.

பஞ்சபூதங்களில், நெருப்புடன் தொடர்பு கொண்டது சிம்ம ராசி! இந்த ராசி மண்டல நட்சத்திரக் கூட்டத்தின் கெட்ட கதிர்வீச்சுகளால் பலவகையான நோய்களும் கிரக தோஷங்களும் உண்டாகும் என்பர். அவற்றையெல்லாம் தீர்ப்பதற்கு உதவுகிறது பாதிரி மரம்! முனிவர்களும் தீர்த்தங்கரர்களும் (சமணர்கள்), இந்த மரத்தடியில் தவம் இருந்து, ஞானம் பெற்றுள்ளனர். இந்த மரத்தின் ஒரு பகுதிக்கும் மின்காந்த சக்திக்கும் தொடர்பு உள்ளதாம்!

கொங்கு தேசத்தில் அவிநாசி, திருமுருகன்பூண்டி, பவானிகூடல், கொடுமுடி, திருச்செங்கோடு, கரூர், திருவெஞ்சமாக்கூடல் ஆகியன பாடல்பெற்ற தலங்கள். இவற்றில், அவிநாசி தலத்தின் விருட்சம்-



தல புராண ஓவியம்

பாதிரி மரம்! கோவையில் இருந்து சுமார் 40 கி.மீ. தொலைவில் உள்ள அவிநாசியில், அருளும் பொருளும் அள்ளித் தந்து, ஆட்சி செய்து வருகிறார் ஸ்ரீஅவிநாசிலிங்கேஸ்வரர்.

திருப்புக்கொளியூர்-அவிநாசி தலத்தின் பழைய பெயர்! சிவனாரின் அக்னித் தாண்டவத்தைக் கண்டு அஞ்சிய தேவர்கள், இந்தத் தலத்தில் புகுந்து ஒளிந்து கொண்டதாகவும் (புக்கு ஒளி ஊர் - புக்கொளியூர்), பிறகு இறைவனின் அருளைப் பெற்றதாகவும் சொல்கிறது ஸ்தல புராணம். ஸ்ரீஅவிநாசிலிங்கேஸ்வரர், ஸ்ரீஅவிநாசியப்பர், பிரம்மன் வணங்கியதால் ஸ்ரீபிரம்மபுரீஸ்வரர் என இந்தத் தலத்து இறைவனுக்குப் பல திருநாமங்கள் உண்டு!

ஸ்வாமி சந்நிதிக்கு வலப்பக்கத்தில் அம்பாள் ஸ்ரீகருணாம்பிகையின் தரிசனம். அம்பாள் சந்நிதிக்கு நேராக பொள்ளாச்சி நா. மகாலிங்கம் திருப்பணி செய்த அழகிய ராஜகோபுரம் அசத்துகிறது.

ஒருமுறை, திருப்புக்கொளியூருக்கு வந்த சுந்தரர், இங்கு அந்தணர் வாழும் வீதி வழியே சென்றார். அப்போது எதிரெதிரே இருந்த இரண்டு வீடுகளில், ஒரு வீட்டில் இருந்து மங்கல ஒலியும், மற்றொரு வீட்டில் இருந்து அழுகைச் சத்தமும் கேட்டது. தெருவில் உள்ளோர் சுந்தரரை வணங்கி, "மூன்று வருடங்களுக்கு முன், இந்த இரண்டு வீட்டுப் பிள்ளைகளும் அருகில் உள்ள தாமரைக் குளத்தில் குளித்தனர். அப்போது, அவர்களில் ஒருவனை முதலை ஒன்று பிடித்து விழுங்கிவிட்டது. மற்றொருவன் தப்பித்துவிட்டான். அவனுக்கு, இன்று உபநயனம். எனவே, அவனது வீட்டிலிருந்து மங்கல ஒலி

கேட்கிறது. பிள்ளையை இழந்தவர்கள், 'நம் பிள்ளை உயிரோடு இருந்திருந்தால், அவனுக்கும் இப்படி உபநயனம் செய்திருப்போமே..!' என எண்ணிக் கதறுகின்றனர்" என்று தெரிவித்தனர்.

அதேநேரம், சுந்தரர் வந்திருக்கும் சேதி அறிந்து, மகனை இழந்த பெற்றோர் ஓடி வந்து அவரை வணங்கினர். தங்களின் துக்கத்தை மறைத்து, இன்முகத்துடன் சுந்தரரை வரவேற்றனர். அவர்களிடம், "உங்களின் பிள்ளையை முதலை விழுங்கிய குளம் எங்கே உள்ளது?" என்று கேட்டார் சுந்தரர். அவர்கள் வழிகாட்ட, குளக்கரையை அடைந்தார். அங்கே, '*எற்றார் மறக்கேன்*' எனத் துவங்கும் பாடலைப் பாடி, சிவனாரைத் தொழுதார். அவர் நான்காவது பாடலைப் பாடியதும், பெருமழை பொழிந்தது. வறண்டு கிடந்த தாமரைக் குளம் நிரம்பியது; தாமரைப் பூக்கள் மலர்ந்து மணம் பரப்பின. குளத்துக்குள் இருந்து ஒரு முதலை வெளியேறி கரையை அடைந்ததும், ஓர் அற்புதம் நிகழ்ந்தது. ருத்திரன் தாதுவை உண்டுபண்ண, பிரம்மன் உருவத்தை உண்டாக்க, எமன் அந்த உருவத்துக்கு உயிரைக் கொடுக்க, திருமால் அந்த உடலை வளரச் செய்ய, முதலையானது சிறுவனை உமிழ்ந்து மறைந்தது. தேவர்கள் பூமாரி பொழிய, மக்கள் அதிசயித்தனர்!

பிறகு, அவனையும் பெற்றோரையும் ஆலயத்துக்கு அழைத்துச் சென்ற சுந்தரர், ஸ்ரீஅவிநாசியப்பரையும் ஸ்ரீகருணாம்பிகையையும் வழிபட்டார்; மேளங்கள் முழங்க, அவனுக்கு உபநயனம் செய்துவைத்து, அங்கிருந்து கிளம்பினார்.

கோயிலில் உள்ள தீர்த்தக் கிணற்றில், காசியின் கங்கை உறைந்திருப்பதாக ஐதீகம். அருகிலேயே, ஸ்ரீகாலபைரவரையும் தரிசிக்கலாம்!

இந்தத் தலத்துக்கு வந்த பதஞ்சலி முனிவர், இங்குள்ள கிணற்று நீரை, காசியின் கங்கை என நிரூபிப்பதற்காக, தனது கைத் தண்டத்தை, கிணற்றில் போட்டாராம். பிறகு, சக முனிவர்களுடன் அவர் காசிக்குச் சென்றபோது, கங்கையில் நீராடும் வேளையில், நீரில் மிதந்து வந்து அவரை அடைந்ததாம் அந்தக் கைத்தண்டம்! உடன் வந்திருந்த முனிவர்கள், காசிக்கு நிகரான தலம் அவிநாசி எனச் சிலிர்த்துப் பூரித்தனர். இந்தத் தலத்து இறைவனை மனதாரப் பிரார்த்தித்தால், இழந்த பொன்- பொருள், சந்தோஷம் அனைத்தையும் திரும்பப் பெறலாம் என்பது ஐதீகம்!

அவிநாசி தலத்தின் விருட்சமான பாதிரியும் மகிமைகள் நிறைந்ததுதான்.

சமண மதத்தின் 11-வது தீர்த்தங்கரர், பாதிரி மரத்தடியில்தான் ஞானம் பெற்றார். சரகா, சுஸ்ரதா, வராஹமித்ரா ஆகிய நூல்கள் பாதிரி விருட்சத்தைப் போற்றுகின்றன. இதன் இலைச் சாற்றினைத் தலையில் தேய்த்துக் குளித்தால், உஷ்ணம் குறையும். இதன் பூவை



ஆலயத்தின் உள்ளே...



பாதிரி மரம்

அரைத்துத் தேனில் குழைத்துச் சாப்பிட்டால், மேக நோய் அகலும்; ஜுரம் நீங்கும்.

தவிர, தொண்டை நோய், பேதி மற்றும் ரத்தப்போக்கு ஆகியவற்றைத் தடுக்கும் சக்தி இதன் பூக்களுக்கு உண்டு. மேலும், பாதிரி மரத்தின் வேரைக் காயவைத்து, பொடியாக்கிச் சாப்பிட்டால், மூல நோய், கை-கால் எரிச்சல், சொறி- சிரங்கு ஆகிய பிரச்னைகள் நீங்கும்.

'போங்கம், திலகம், தேங்கமழ் பாதிரி' எனப் புகழ்கிறார் கபிலர். தேனின் நறுமணம் கமழும் பாதிரி என நச்சினார்க்கினியர் உரை எழுதியுள்ளார். பாதிரி மலரை புதிய மண்பானையில் போட்டுவைத்து, பிறகு அதை அகற்றிவிட்டுத் தண்ணீரை நிரப்பி வைத்தால், பூவின் மணம் தண்ணீரிலும் நிறைந்திருக்கும் என்கிறது நாலடியார். 'பாதிரிப் பூ வாடிவிடும்; புதிதான பானையும் ஒரு நாள் உடையும். ஆனால், பாதிரிப்பூவின் நறுமணம் மட்டும் அழியவே அழியாது'

ஸ்ரீகாலபைரவருக்கு வடைமாலை!



ஸ்ரீகாலபைரவர்

"இந்தத் தலத்தில், பாதிரி மரத்தடியில் அம்பாள் அமர்ந்து தவமிருந்தாள்; எனவே, இந்தத் தலத்தின் விருட்சம் - பாதிரி மரம். இங்கே தவக்கோலத்தில் காட்சி தரும் ஸ்ரீகருணாம்பிகைக்குத்தான் முக்கியத்துவம்!" என்கிறார் கோயிலின் அர்ச்சகர் சிவகுமார் குருக்கள்.

"பாதிரி மரம், பங்குனி முதல் வைகாசி வரை பூக்கும்; ஆனால், காய்க்காது. இந்த மாதங்களில், ஸ்வாமிக்குப் பாதிரி மலர்களால் பூஜைகள் நடைபெறும். இந்தப் பூக்கள் குளிர்ச்சி நிறைந்தவை.

இந்த ஆலயத்தின் உட் பிராகாரத்தில் ஸ்ரீகாலபைரவர் அமைந்திருப்பது சிறப்புக்குரிய ஒன்று!



சிவகுமார் குருக்கள்

குடும்பத்தில் குழப்பம், வீண் பகை, வழக்கில் இழுபறி எனச் சிக்கித் தவிப்பவர்கள், ஸ்ரீகாலபைரவரை வணங்கினால் நன்மை உண்டு. குறுமிளகைத் துணியில் முடிந்து, பூசணி அல்லது தேங்காயில் தீபமேற்றி, ஸ்ரீகாலபைரவரை வழிபட... தொல்லைகள் யாவும் நீங்கும். அமாவாசை மற்றும் பௌர்ணமி தினங்களில், ஸ்ரீகாலபைரவருக்கு வடைமாலை சார்த்தி வணங்குவது விசேஷம்!" என்கிறார் சிவகுமார் குருக்கள்.

என நீலகேசி, குண்டலகேசியிடம் வாதிட்டதாக விவரிக்கிறது இலக்கியம்.

அவிநாசி மட்டுமின்றி திருப்பாதிரிப்புலியூர், திருவலிதாயம், திருஆதனூர், திருநாகை ஆகிய தலங்களிலும் விருட்சமாகத் திகழ்கிறது பாதிரிமரம்.

‘மா’ மருந்து!

கன்னி ராசிக்கு உகந்த விருட்சம்

15

கோயிலூர் (திருவுசாத்தானம்) ஸ்ரீமந்திரபுரீஸ்வரர் திருக்கோயில்

சிலர், ஏதேனும் நோய்வாய்ப்பட்டு, எப்போதும் மருந்து மாத்திரையுமாக, ஆஸ்பத்திரியும் ஊசியுமாக இருப்பார்கள். அவர்கள் பிறந்த நேரத்தில் ஆட்சி புரிந்த கிரகம், ராசி மற்றும் நட்சத்திர தோஷங்களும், கெட்ட கதிர்வீச்சுகளுமே இதற்குக் காரணம் என்கிறது வானவியல் மூலிகை சாஸ்திரம்!

கன்னி ராசியிலும், புதனின் ஆட்சியிலும், ஆகஸ்ட் 23-ஆம் தேதி முதல் செப்டம்பர் 22-ஆம் தேதி வரையிலும் பிறந்தவர்கள், பொதுவாக நோயாளிகளாகவும் இரட்டை மனநிலை கொண்டவர்களாகவும் இருப்பார்கள். இந்தக் கிரகம், பஞ்சபூதங்களில் மண்ணுடன் தொடர்பு கொண்டது. இவற்றின் கெட்ட கதிர்வீச்சுகள் வயிறு மற்றும் குடல் பகுதிகளில் பெருமளவு பாதிப்பை ஏற்படுத்தும். இந்தக் கிரக தோஷத்தை நீக்குவதற்கு மாமரம் உதவுகிறது. கன்னி ராசி மற்றும் நட்சத்திர மண்டலத்தின் நல்ல கதிர்வீச்சுகளைத் தன்னுள் நிரப்பிக்கொள்ளும் தன்மை மாமரத்துக்கு உண்டு!

மாமரத்தின் நிழலில் இளைப்பாறுபவர்களுக்கும், தினமும் 30 நிமிடம் மாமரத்தைக் கட்டிப்பிடித்தபடி

அஷ்ட யோகங்களும் கிடைக்கும்!

"**சி**தம்பரத்தில், மாலை நேரத்தில் ஸ்ரீநடராஜரின் ஆனந்தத் திருநடனத்தைக் காண முடியாத வருத்தத்துடன், திருவுசாத்தானம் கோயிலுக்கு வந்தார் விஸ்வாமித்திரர். தில்லையில் காணத் தவறிய ஆனந்த நடனத்தை, இங்கே அர்த்தஜாமப் பூஜையில் கண்டார். எனவே, இந்தத் தலத்தை ஆதிசிதம்பரம் என்றும் போற்றுவர்" என்கிறார் கோயிலில் பணிபுரியும் சிவா குருக்கள்.



சிவா குருக்கள்

மேலும், "பதஞ்சலி முனிவர், இங்கு வந்து சூத வனத்தை அழித்து, கோயில் அமைத்து வழிபட்டார். செப்புத் திருமேனியராக, பதஞ்சலி முனிவர் காட்சி தரும் தலம் இது. சித்திரையிலும் மார்கழித் திருவாதிரையிலும் பத்து நாள் திருவிழா நடைபெறும். இங்கேயுள்ள தெற்கு நோக்கிய ஸ்ரீசனீஸ்வரரை, 'அனுகூல சனீஸ்வரன்' என்பர். இவரை வணங்க, நினைத்ததெல்லாம் நிறைவேறும் என்பது நம்பிக்கை. இந்தத் தலத்துக்கு 12 தீர்த்தங்கள் உண்டு. காசி க்ஷேத்திரத்தை விட அதிகப் பலன்கள் தரும் என்பது ஐதீகம். ஆலயத்தில் உள்ள நவகன்னியரை வழிபட்டால், விரைவில் திருமண பாக்கியம் கைகூடும். இங்கேயுள்ள ஈசனை வழிபட்டால், அஷ்ட சித்திகள், அஷ்ட யோகங்கள், சித்த சுத்தியாதி பரமுக்தி கிட்டும்; பாவங்கள் தொலையும் என்கிறது ஸ்தல புராணம்" என்று பெருமிதத்துடன் தெரிவிக்கிறார் சிவா குருக்கள்.

இருப்பவர்களுக்கும் உடலில் நோய் எதிர்ப்புச் சக்தி அதிகரிக்கும் என்கிறது ரெய்கி மருத்துவம். முக்கனிகளில் முதன்மையானதாகத் திகழ்கிறது, மாங்கனி!

திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி வட்டம், முத்துப்பேட்டை யில் இருந்து சுமார் 1 கி.மீ. தொலைவில் உள்ளது திருவுசாத்தானம் (கோயிலூர்) எனும் அற்புதத் தலம். பாடல்பெற்ற தலம் இது. இங்கே அமைந்துள்ள ஸ்ரீபெரியநாயகி அம்மன் சமேத ஸ்ரீமந்திரபுரீஸ்வரர் ஆலயத்தின் ஸ்தல விருட்சம் - மாமரம்.

ஊரின் நடுவே, ஐந்து நிலை ராஜகோபுரத்துடன், கிழக்கு நோக்கிய நிலையில் அமைந்துள்ளது ஆலயம். உள்ளே நுழைந்ததும், மூன்று நிலை கோபுரமும் உண்டு. இதனைச் சிங்களகோபுரம் என்பர். கருவறையில் சுயம்பு மூர்த்தமாக, இடதுபுறம் சற்றே சாய்ந்தும், குனிந்தும் லிங்க ரூபமாகக் காட்சி தருகிறார் ஸ்ரீமந்திரபுரீஸ்வரர்.

திருச்சுற்று மாளிகையின் தென்புறம், வடக்கு நோக்கியபடி, அசுரனை மிதித்த கோலத்தில் ஸ்ரீவடபத்ரகாளியும், ராகு



ஸ்ரீபெரியநாயகி



ஸ்ரீமந்திரபுரீஸ்வரர்

மற்றும் கேதுவும் தனித்தனியே வீற்றிருந்து அருள்பாலிக்கின்றனர். அடுத்து, ஸ்ரீதட்சிணாமூர்த்தியும், ஸ்தல சூதவன விநாயகரும் காட்சி தருகின்றனர். பிராகார மேற்கில், வருணன், ஸ்ரீராமர் பூஜித்த லிங்கங்கள், இந்திரன், பிரம்மன், ஸ்ரீஅன்னபூரணி, ஸ்ரீசரஸ்வதி, ஸ்ரீகஜலட்சுமி, ஸ்ரீசுப்ரமணியர் ஆகியோருக்குச் சந்நிதிகள் உள்ளன. ஸ்ரீநடராஜர், ஸ்ரீசனீஸ்வரர், ஸ்ரீபைரவர், சந்திரன், சூரியன், நாயன்மார்கள் அறுபத்து மூவர், சப்தமாதர்கள் ஆகியோரும் தனித்தனிச் சந்நிதிகளில் காட்சி தருகின்றனர். நவக்கிரக சந்நிதி மட்டும் இல்லை.

தெற்கு நோக்கியபடி, தனிக் கோயிலில் அருள்கிறாள் ஸ்ரீபெரியநாயகி. தென்மேற்கு மூலையில், சூத வனம் இருந்ததன் அடையாளமாக, மாமரங்கள் உள்ளன. சூத வனம் என்றால் மாங்காடு. மாமரங்கள் சூழ்ந்த காட்டில் தோன்றியதால், இங்கேயுள்ள ஸ்ரீவிநாயகருக்கு 'சூதவன விநாயகர்' என்று திருநாமம். இன்னொரு விஷயம்... இரண்டு கைகளில் மாவிலைக் கொத்துக்களையும், துதிக்கையில் மாங்கனியையும் ஏந்தியபடி காட்சி தருகிறார் இந்த விநாயகர்.

இங்கே அருள்பாலிக்கும்... மூன்று திருமுகம் மற்றும் மூன்று திருப்பாதங்களுடன் காட்சி தரும் ஜுரதேவரை வழிபட்டால், தீராத காய்ச்சலும் நீங்கும் என்பது நம்பிக்கை.


சோழர் காலத்தில் கட்டப்பட்ட பழைமையான இந்த ஆலயத்துக்கு இலக்குவன், ஜாம்பவான், சுக்ரீவன் ஆகியோர் புடைசூழ ஸ்ரீராமர் வந்து, இலங்கைக்குச் செல்ல, கடலில் பாலம்



மா மரம்



ஆலய முகப்பு



கட்டுவதற்கு, இறைவனிடம் மந்திராலோசனை பெற்றுச் சென்றார் (இந்தத் தலத்துக்கு அருகில் ஸ்ரீராமர் கோயில், ஜாம்பவான் ஓடை, அனுமன் காடு, சுக்ரீவன்பேட்டை, தம்பிக்குநல்லான் பட்டணம் என்னும் ஊர்கள் அமைந்து உள்ளன). இதனால் ஈசனுக்கு, ஸ்ரீமந்திரபுரீஸ்வரர் எனத் திருநாமம் அமைந்ததாம்! கடலில் பாலம் கட்ட உதவியதால், உசாத்தானம் எனப் பெயர் அமைந்தது. அதேபோல், ஸ்ரீராமனுக்கு ஆலோசனை சொல்வதற்காக, தலை சாய்த்துப் பேசினாராம் ஈசன். இன்றளவும் அதே சாய்ந்த திருக்கோலத்தில் காட்சி தந்தருள்கிறார்.

வருண பகவான் சிவ பூஜை செய்து, சாப விமோசனம் பெற்ற தலம் இது. மார்க்கண்டேயன் மீது பாசக்கயிற்றை எமன் வீசியபோது, லிங்கத் திருமேனியிலும் விழுந்து தழும்பு ஏற்பட்டது திருக்கடையூரில். அந்தத் தழும்பு நீங்கிய திருத்தலம், திருவுசாத்தானம்.

சிங்கள தேசத்துக்குப் படையெடுத்துச் சென்றான் சோழ மன்னன். அப்போது சோழ வீரன் ஒருவன், 'எங்கள் அரசன் போரில் வென்றால், எனது தலையைப் பலியிடுகிறேன்' என்று ஸ்ரீதுர்கையிடம் பிரார்த்தித்தான். அதன்படி மன்னனும் வெல்ல, வீரன் தனது தலையை ஸ்ரீதுர்கைக்குப் பலி தரும் காட்சி, இந்த ஆலயத்தில் சிற்பமாக வடிக்கப்பட்டுள்ளது.

பிராகாரத்தில், ஸ்தல விருட்சமான மாமரங்கள் இரண்டு உள்ளன. இதயத்துக்கு சக்தி தருவது, உடல் வளர்ச்சியை மேம் படுத்துவது, ஆண்மையைப் பலப்படுத்துவது, ஜீரண சக்தியை வழங்குவது, சிறுநீர்ப்பையின் குறைபாடுகளைப் போக்குவது எனப் பல மருத்துவ குணங்கள் கொண்டது, மாமரம். மாவிலைகளை உலர்த்திப் பவுடராக்கிச் சாப்பிட, பேதித் தொல்லை நீங்கும். சர்க்கரை நோயாளிகளுக்கு அருமருந்து இது! இலை மற்றும் தண்டுப் பகுதியைக் கஷாயமிட்டுச் சாப்பிட, தசைச் சுருக்கங்கள் நீங்கும்; ரத்தம் வெளியேறுவதைத் தடுக்கும். கஷாயத்தைக் கொண்டு வாய் துலக்கினால், பல்வலி நீங்கும். தொண்டை வறட்சி சரியாகும். மாம்பழ விதைகளில்... வாந்தி, பேதி, மார்பு அழற்சி, தீப்புண்கள் ஆகியவற்றைக் குணப் படுத்தும் தன்மை உள்ளது. அமிலத் தன்மையையும் இது கட்டுப்படுத்தும். தவிர, மாதவிடாய்ப் பிரச்னை, ரத்த மூலம், நுரையீரல், சிறுநீர்ப்பை மற்றும் குழாய்களில் ஏற்படும் ரத்தப்பெருக்கு ஆகியவற்றை குணப்படுத்தும் வல்லமையும் மாமரத்துக்கு உண்டு. கதவு, ஜன்னல், மேஜை ஆகியவை தயாரிக்கவும் மாமரம் பயன்படுகிறது. மாவிலையில் கிருமி நாசினித் தன்மை அதிகம் இருப்பதால், வீட்டு வாசல் மற்றும் பந்தலில் தோரணம் கட்டித் தொங்கவிடுகின்றனர்.

மாமரத்தைத் 'தேமா' எனக் குறிப்பிடுகிறார் கபிலர். தேமா, கலிமா என இரண்டு மாமலர்களைக் குறிஞ்சிப் பாட்டில் விவரிக்கிறார், அவர். '*செங்கொடுவேரி தேமா மணிச்சிகை*', '*கரந்தை குளவி கடி கமழ் கலிமா*' ஆகிய வரிகளுக்கு, நச்சினார்க்கினியர் 'தேமாம்பூ' என்றும், 'விரை கமழத் தழைத்த மாம்பூ' என்றும் உரை எழுதியுள்ளார்.

காஞ்சிபுரம் ஸ்ரீஏகாம்பரேஸ்வரர், கொள்ளிடத்துக்குக் கிழக்கே 6 கி.மீ. தூரத்தில் நல்லூர்ப்பெருமணம் திருவெண்ணீற்று உமையம்மை, மயிலாடுதுறை ஸ்ரீமயூரநாதர், திருவானைக்காவலில் இருந்து சுமார் 9 கி.மீ. தொலைவில் உள்ள ஸ்ரீஆம்ரவனநாதர் ஆகிய ஆலயங்களிலும் மாமரமே ஸ்தல விருட்சமாகப் போற்றப்படுகிறது.

மகிமை மிக்க மகிழம்!

துலாம் ராசிக்கு உகந்த விருட்சம்

16

கோவை – கோட்டைமேடு ஸ்ரீசங்கமேஸ்வரர் திருக்கோயில்

வானில் உள்ள ராசி மண்டலங்களில், துலாம் ராசி மண்டலம், சக்தி வாய்ந்தது. இந்த ராசி, சுக்கிர கிரகத்துடன் தொடர்பு கொண்டது. வெள்ளிக்கிழமை அன்று பிறந்தவர்கள், செப்டம்பர் 23 முதல் அக்டோபர் 21-ஆம் தேதி வரை பிறந்தவர்கள் மற்றும் சித்திரை நட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்கு உரிய மண்டலமும் இதுவே!

இந்த மண்டலத்தின் கெட்ட கதிர்வீச்சுகளால் இவர்களுக்கு அலர்ஜி, சளி, மூக்கடைப்பு, ஜுரம், தலைவலி, மூக்கு, தொண்டை மற்றும் பற்களில் பிரச்னை என அடிக்கடி வந்து இம்சை செய்யும். இவர்களது உடல் மற்றும் மனரீதியான நோய்களுக்கும் பிரச்னைகளுக்கும் பலன் தருவதாக விளங்குவது, மகிழ மரம்! கிரக, ராசி, நட்சத்திரத்தின் நன்மை தரும் கதிர்வீச்சுகளை ஈர்த்து, தன்னுள் நிரப்பிக்கொள்கிறது இந்த மரம்.

மேற்கண்ட ராசி, நட்சத்திரம் மற்றும் தேதிகளில் பிறந்த அன்பர்கள், வீட்டுத்தோட்டத்தில் மகிழ மரத்தை வளர்க்கலாம். தினமும் அரை மணி நேரம் இந்த மரத்தைக் கட்டிப்பிடித்தாலோ அல்லது மர



மகிழ மரம்




மகிழம் பூ

நிழலில் அமர்ந்தாலோ, கிரக தோஷம் விலகும்; தேகத்தில் எதிர்ப்பு சக்தி வளரும்; உடலில் வலிமையும் மனதுள் நிம்மதியும் பெருகும். மகிழ்ச்சியைப் பெருக்கும் இந்த மரத்துக்கு, இதனால்தான் மகிழ மரம் என்று பெயர் அமைந்ததாகவும் சொல்வர்!

பஞ்சபூதங்களில் துலாம் ராசி, காற்றுடன் தொடர்பு கொண்டது. கோவை - கோட்டைமேடு ஸ்ரீஅகிலாண்டேஸ்வரி சமேத ஸ்ரீசங்கமேஸ்வரர் கோயிலின் ஸ்தல விருட்சம் - மகிழ மரம்.

முதலாம் பராந்தகச் சோழன் (கி.பி. 907 - 948), இந்தக் கோயிலைக் கட்டியிருக்கலாம் என்கின்றனர் வரலாற்று ஆய்வாளர்கள். கி.பி.1300 முதல் 1365-ஆம் வருடம் வரையிலான கால கட்டங்களில், கோயில்கள் பலவும் சிதைக்கப்பட்டனவாம்! இதையடுத்து இந்த ஆலயமும் சிதிலம் அடைந்த நிலையில், வழிபாடுகளும் இன்றிக் காணப்பட்டதாம். பிறகு, விஜயநகரப் பேரரசர்களின் ஆட்சிக் காலத்தில், சங்குபுஷ்பக் காடுகளாக இருந்த பகுதியை அழித்து, கோட்டை கட்டத் திட்டமிட்டனர். அப்போது, புதருக்குள் மறைந்திருந்த கோயில் தென்படவே...



ஆலயத்தின் கொடிமரம்



ஆலயத்தின் நுழைவாயில்

திருப்பணிகள் செய்யப்பட்டு, பொலிவுபடுத்தப்பட்டது இந்த ஆலயம் என்கின்றனர். இதன்பிறகு 17-ஆம் நூற்றாண்டில், மீண்டும் இன்னொரு தாக்குதலுக்கு உள்ளானது கோயில். திரும்பவும் புதுப்பிக்கப்பட்டு, கும்பாபிஷேகம் நடத்தப்பட்டதாகச் சொல்கிறது, ஸ்தல வரலாறு.

சோழ மன்னனால் பிரதிஷ்டை செய்யப்பட்டு ஆலயம் அமைக்கப்பட்டதால், இறைவனுக்கு ஸ்ரீசோழீஸ்வரமுடையார் எனும் திருநாமமும் உண்டு. விஜயநகரப் பேரரசுக்குச் சங்க வம்சம் என்றும் பெயர் உண்டு. எனவே, அவர்கள் திருப்பணி செய்த ஆலயம் என்பதை நினைவுபடுத்தும் வகையில், ஸ்வாமிக்கு ஸ்ரீசங்கமீஸ்வரர் எனும் திருநாமமும் அமைந்ததாம்! இதுவே பின்னாளில் ஸ்ரீசங்கமேஸ்வரர் என மருவியதாகச் சொல்வர்.

இத்தனைப் புராதனப் பெருமைகள் கொண்ட ஆலயத்தின் ஸ்தல விருட்சம் - மகிழ மரம். நறுமணம் மிகுந்ததும் அதிக தேனை உள்ளுக்குள் வைத்திருப்பதுமான மகிழம் பூக்களை நுகர்ந்தாலே உற்சாகம் பிறக்கும்; மண்டைச் சளி வெளியேறும்; தலைவலி நீங்கும் என்கின்றனர் மருத்துவ ஆய்வாளர்கள்!

'செவ்வாய் தோஷம் நீக்கும் ஸ்ரீசக்தி விநாயகர்!'

"இங்கு தூண் ஒன்றில் காட்சி தரும் அனுமன் வளர்வதாக நம்பிக்கை. இவரை, 11 நாட்கள் வலம் வந்து வழிபட, பிரிந்த குடும்பம் ஒன்று சேரும்" என்று சிலிர்ப்புடன் சொல்கிறார், கோவை-கோட்டைமேடு ஸ்ரீசங்கமேஸ்வரர் கோயில் அர்ச்சகரான வெங்கட சுப்ரமணிய சிவாச்சார்யர்.

"ஆலயத்தின் ஸ்ரீசண்முக சுப்ரமணியர் கொள்ளை அழகு. இவரை, சந்தனக்காப்பு அலங்காரத்தில் காணக் கண் கோடி வேண்டும். சஷ்டியின்போது ஆறு குருக்கள், ஆறு வித புஷ்ப அலங்காரம் மற்றும் ஆறு வித நைவேத்தியங்கள் எனச் சிறப்பு வழிபாடுகள் நடைபெறும். மூலமந்திர திரிசதி பூஜையும் இங்கு விசேஷம். ஸ்ரீசங்கமேஸ்வரரை வணங்கினால், தீராத நோயும் தீரும். திருமண வரமும் தந்தருள்கிறார். குழந்தை வரம் வேண்டுவோர், தயிர் உறை குத்தி எடுத்து வந்து, (மதியம் 3 மணி) அபிஷேகத்துக்குத் தந்து பிரார்த்திக்க... குழந்தை வரம் கிடைக்கப்பெறுவர் என்பது நம்பிக்கை!



வெங்கட சுப்ரமணிய சிவாச்சார்யர்

இங்கேயுள்ள ஸ்ரீசக்தி விநாயகர், நவக் கிரகங்களில் செவ்வாயை நேரடியாகப் பார்ப்பதால், விநாயகரையும் நவக் கிரகத்தையும் வலம் வந்து வழிபட, செவ்வாய் தோஷம் நீங்கும்" என தெரிவித்தார் வெங்கட சுப்ரமணிய சிவாச்சார்யர்.

மகிழம்பூவிலிருந்து தயாரிக்கப்படும் எண்ணெய், காயம் மற்றும் புண்களை ஆற்ற உதவுகிறது. காய்ச்சலுக்கு டானிக் போல பயன்படுத்தலாம். இதனைக் கொண்டு வாய் கொப்புளிக்க, பற்களும் ஈறுப் பகுதியும் உறுதிப்படும். மகிழ மரத்தின் வேரை, விழுது போல அரைத்து, வினிகரில் கலந்து, முகத்தில் ஏற்பட்ட வீக்கத்துக்குத் தடவினால், விரைவில் குணம் கிட்டும்.

கண் நோய்க்கான சொட்டுமருந்து தயாரிக்க, மகிழ விதை பயன்படுகிறது. விதையிலிருந்து தயாரிக்கப்படும் மருந்து, வயிறு சம்பந்தமான பிரச்னைகளைக் குணப்படுத்துகிறது. விதையிலிருந்து தயாரிக்கப்படும் எண்ணெய், மூட்டு வலி மற்றும் வீக்கத்தைப் போக்குகிறது. விதைகளைப் பவுடராக்கி, அதில் தேன் அல்லது நெய் கலந்து சாப்பிட... உடலுக்கு வலு கிடைக்கும்; ஆண்மைச் சக்தி அபிவிருத்தியாகும்! மகிழம்பூவில் இருந்து எண்ணெய்

எடுத்து, அதனைச் சந்தனமர எண்ணெயுடன் கலந்து வாசனைத் திரவியங்கள் தயாரிக்கவும் பயன்படுத்துகின்றனர்.

இந்துக்களுக்கு மட்டுமின்றி, பௌத்த மற்றும் சமணத்தவர்களுக்கும் புனிதமான மரமாகத் திகழ்கிறது மகிழ மரம்! திருவண்ணாமலை கோயில் ஸ்தல புராணத்தில், மகிழம் என்றால் மங்கலம் என்று பொருள் கூறப்பட்டுள்ளது. அண்ணா மலையாரை வழிபட்டு, ஆலயத்தில் உள்ள மகிழ மரத்தடியில் சற்று நேரம் அமர்ந்தால், பாவங்கள் விலகும்; நோய்கள் நீங்கும் என்பது நம்பிக்கை! மகிழ மரத்தைச் சுற்றி வந்து, மரக்கிளையில் தொட்டில் கட்டி வழிபட்டால், ஆண் குழந்தை பிறக்கும் என்பது பக்தர்களின் நம்பிக்கை.

மகிழத்துக்கு 'வகுளம்' என்றும் பெயருண்டு; ஈசனுக்கு வகுளவனநாதர் எனும் திருநாமம் உண்டு. கபிலர், தனது பாடல்களில் மகிழ மரத்தை, வகுளம் என்று குறிப்பிட்டிருப்பதாக நச்சினார்க்கினியர் உரை எழுதியுள்ளார். மகிழத்தை இலஞ்சி, மகிழ் என்றெல்லாம் பிற்கால இலக்கியங்கள் தெரிவிக்கின்றன. ஸ்ரீராமனின் கொப்பூழ்க்கு (தொப்புள்) இந்தப் பூவை உதாரணப்படுத்தியுள்ளார் கம்பர்!

தேர்க்காலின் வடிவமைப்புக்கு இணையாக மகிழ மரத்தை ஒப்பிட்டுப் பாடியுள்ளார் திருத்தக்க தேவர். மகிழம்பூவானது, மரத்திலிருந்து விழுவது அழகு; இதனை சிலந்திப் பூச்சி கீழே விழுவது போல் உள்ளது என விவரிக்கிறார் அவர்!

தேக பலம் தரும் கருங்காலி மரம்!

விருச்சிக ராசிக்கு உகந்த விருட்சம்

17

அம்பர் மாகாளம்
ஸ்ரீமகா காள நாதர் திருக்கோயில்

வான மண்டலத்தில், தேள் வடிவில் காட்சி தரும் நட்சத்திரக் கூட்டத்தை 'விருச்சிகம்' என்பர். இந்த ராசி மண்டலம், உடலில் இனவிருத்தி உறுப்புகளுடனும், பஞ்சபூதங்களில் நீருடனும் தொடர்புகொண்டது.

விருச்சிக ராசிக்காரர்கள் பயந்த சுபாவமும், நிலையான குணமும் கொண்டவர்கள். செவ்வாய்க் கிழமைகள், மார்ச் 21 முதல் ஏப்ரல் 20-ஆம் தேதி வரையிலான நாட்கள், அஸ்வினி, பரணி, விசாகம், அனுஷம், கேட்டை ஆகிய நட்சத்திரங்கள், மேஷம் மற்றும் விருச்சிக ராசிகளில் பிறந்தவர்களுக்கு நலம் தரும் விருட்சம்- கருங்காலி. விருச்சிக ராசியின் மின்கதிர் வீச்சுகளைத் தன்னில் சேகரித்துவைத்து, தன்னைத் தொடுவோருக்கும் தனது நிழலில் அமருவோருக்கும் அந்தக் கதிர்வீச்சுகளை மாற்றிவிடுகிறது கருங்காலி. செவ்வாய் தோஷத்தை நீக்குவதில் கருங்காலிக்கு முக்கிய இடம் உண்டு. வானியல் சாஸ்திரமும், 'கருங்காலி வகை முள் மரங்கள், தோஷத்தை நீக்கச் சிறந்த மருந்து' என்கிறது.

செவ்வாய் கிரகத்தின் பாதிப்பு, உச்சந்தலை முதல் கழுத்து வரையிலும்... கண் அழற்சி, வீக்கம்,



ரத்த வாந்தி, பசியின்மை, தொழு நோய், வெண் குஷ்டம், மூலம், சர்க்கரை நோய், தேக பலவீனம் என்று பாதிப்புகளை ஏற்படுத்தும். இவை அனைத்துக்கும் அருமருந்தாக விளங்குகிறது கருங்காலி மரம். இந்த மரத்தை விருட்சமாகக் கொண்ட தலம் திருமாகாளம் எனும் அம்பர் மாகாளம். நன்னிலம் தாலுகா, பூந்தோட்டத்துக்கு அருகில் உள்ள இந்தத் தலத்தில் கோயில்கொண்டிருக்கும் ஸ்வாமி-ஸ்ரீமகாகாளநாதர்; அம்பாள் - ஸ்ரீபயக்ஷயாம்பிகை (பயத்தைப் போக்குபவள்). மனிதனது ஆயுள் நீட்டிப்புக்கான தலம் இது. உஜ்ஜயினி மாகாளம், அம்பர் மாகாளம் மற்றும் இரும்பை மாகாளம் ஆகிய தலங்களில், அம்பர் மாகாளத்தைத் தரிசிக்க, அனைத்துப் பலன்களும் கிடைத்துவிடும் என்பது ஐதீகம்.

ஸ்வாமி சந்நிதிக்கு வலதுபுறம் அம்பிகை சந்நிதி கொண்டிருக்கிறாள். இங்கு மோட்ச லிங்கம், ஸ்ரீதியாகராஜ ஸ்வாமி, ஸ்ரீநீலோத்பலாம்பாள், ஸ்ரீநரமுக விநாயகர், ஸ்ரீநரமுக முருகன் ஆகியோரும் அருள்கின்றனர்.

ஒருமுறை, அம்பல் ஸ்ரீபிரம்மபுரீஸ்வரரைத் தரிசிக்க வான் வழியே சென்ற துர்வாசரை கண்டு, அவர்மீது மையல் கொண்ட மதலோலை என்பவள், ‘எனக்குப் புத்திரப் பேறு

அருளுங்கள்' எனப் பிரார்த்தித்தாள். துர்வாசரும் 'அப்படியே ஆகட்டும்' என வரம் தந்தார். மதலோலை வரம் கேட்டது, மதியப்பொழுது. ஆகவே, அவள் கருவுற்ற நேரமும் மதியமானது. நடுவானில், அம்பன், அம்பாசுரன் எனும் இரண்டு அசுர குணமுள்ள ஆண் குழந்தைகளை ஈன்றெடுத்தாள்!

மகவு ஈன்றதும், தாயின் மார்பகம் சுரந்தது. குழந்தைகளை அள்ளியெடுத்துப் பால் கொடுக்க முனைந்தாள். அந்தக் குழந்தைகள் தாய்ப்பாலுடன், அவளது ரத்தத்தையும் சேர்த்து உறிஞ்சின. தாய் துடித்தாள்! ஆனாலும், தன்னுடைய குழந்தைகள் என்பதால், பொறுத்துக் கொண்டாள். பின்பு, "நீங்கள் பிரம்மபுரீஸ்வரரை வழிபடுங்கள்!" என அவர்களுக்கு வழிகாட்டிவிட்டு, அவர்களிடமிருந்து பிரிந்து சென்றாள்.

அதையடுத்து, அம்பனும் அம்பாசுரனும் ஸ்ரீபிரம்மபுரீஸ்வரை தினமும் வழிபட்டனர். வில், வாள் மற்றும் மல்யுத்தங்களில் தேர்ச்சி பெற்றனர். தங்களது அசுர குணத்தால், கண்ணில் பட்டவரையெல்லாம் அழிக்க முற்பட்டனர். அவர்களது கொடுமையைப் பொறுக்காத தேவர்களும் முனிவர்களும் மும்மூர்த்திகளிடம் முறையிட்டனர். அவர்களது துயரம் தீர்க்க முடிவுசெய்த ஈசன், தனது கடைக்கண்ணால் பார்வதியாளைப் பார்த்தார். அதன் பொருளை உணர்ந்த அம்பிகை, மோகினி

'பயம் விலகும்... குழப்பம் தீரும்!'

"திருமணத் தடையால் கலங்குவோர், தொடர்ந்து ஐந்து வெள்ளிக்கிழமைகள் கோயில் மாகாளம் வந்து, இறைவனுக்கும் இறைவிக்கும் செவ்வரளிப் பூமாலை சார்த்தி வழிபட்டு, ஒரு மாலையை கழுத்தில் அணிந்துகொண்டு பிரார்த்தித்தால், விரைவில் திருமணம் நடந்தேறும்" என்கிறார் கோயில் மாகாளத்தின் அர்ச்சகர் தியாகராஜ குருக்கள்.



உற்ஸவர் தரிசனம்...

"பௌர்ணமியில் அம்பாளுக்குச் சிறப்பு பூஜைகள், மூலமந்திர ஜபம், வேத பாராயணம், ஹோமங்கள் ஆகியன நடைபெறுகின்றன. இதில் கலந்துகொண்டு அம்பிகையைப்

உருவெடுத்தாள். அவளுடன் மகாவிஷ்ணு வயோதிக உருவத்தில் சென்றார். அம்பலில் உள்ள பெருமாள் கோயிலுக்குச் சென்றவர்கள் அங்கே அமர்ந்தனர்.

அங்கே வந்த அனைவரும் மோகினியின் அழகைக் கண்டு வியந்தனர். விஷயமறிந்த அம்பனும் அம்பாசுரனும் பெருமாள் கோயிலுக்கு வந்தனர். மோகினியின் அழகில் மயங்கி, திருமண விருப்பத்தைத் தெரிவித்தனர். "இருவரையும் மணக்க இயலாது; உங்களில் எனக்குப் பொருத்தமானவர் எவர் என நீங்களே முடிவு செய்யுங்கள்" என்றாள் மோகினி. அவ்வளவுதான்... சகோதரர்கள் இருவருக்கும் சண்டை மூண்டது. இறுதியில் அம்பராசுரனைக் கொன்றான்



ஸ்தல விருட்சம்...

பிரார்த்திக்க, வீண் பயம், திருமணத் தடை, குடும்பத்தில் குழப்பம் ஆகியன நீங்கும்; எதிலும் வெற்றி உண்டு.



தியாகராஜ குருக்கள்

காசியைச் சேர்ந்த விமலன் எனும் அந்தணன், புத்திர பாக்கியத்துக்காகப் பல தலங்களுக்குச் சென்று வழிபட்டான்; பலன் இல்லை. இங்கு வந்து ஸ்ரீசிவனார், ஸ்ரீநரமுக விநாயகர், ஸ்ரீநரமுக முருகன் ஆகியோரை வழிபட, பிள்ளை வரம் கிடைத்தது. இதனால், மகாதேவன் எனக் குழந்தைக்கு நாமம் சூட்டினான். குழந்தை வரமின்றித் தவிப்பவர்கள், இங்கேயுள்ள ஹம்ஸ தீர்த்தத்தில் நீராடி, இறைவனைத் தரிசித்தால், விரைவில் வீட்டில் தொட்டில் சத்தம் கேட்பது உறுதி. நாக தோஷம், புத்திர தோஷம், திருமணத் தடை ஆகியவற்றுக்கு ஞாயிறு மற்றும் வெள்ளிக்கிழமைகளில், ராகு காலத்தில் ஸ்ரீவாசுகிக்குப் பாலபிஷேகம் செய்வது நல்ல பலனைத் தரும்" என்று சிலிர்ப்புடன் தெரிவித்தார் தியாகராஜ குருக்கள்.





ஸ்ரீமகாகாளநாதர்

அம்பன். அதன்பின், மோகினியாள் பத்ரகாளியாக உக்கிரத்துடன் தோன்றினாள். உடனே அம்பன், எருமைக் கிடாவாக மாறினான். அப்படி அவன் உருமாறிய இடம், கிடாமங்கலம் (கோயில் திருமாகாளத்துக்குக் கிழக்கே, காரைக்கால் செல்லும் வழியில் உள்ளது) எனப்படுகிறது. அசுரன் அம்பனை, காளிதேவி விரட்டிச் சென்று அழித்த இடம் அம்பகரத்தூர் என்றானது.

அசுரவதம் முடிந்தது என்றாலும், அம்பன்- அம்பராசுரன் இருவரும் காளியின் சிரசிலும் காதிலும் பிரம்மஹத்தியாக இடம்பெற்றதால் காளிதேவி, கோயில் திருமாகாளத்துக்குச் சென்று, லிங்கப் பிரதிஷ்டை செய்து, வில்வத்தால் அர்ச்சித்து பூஜித்து தோஷம் நீங்கப்பெற்றாள். எனவே, பிரம்மஹத்தி தோஷ நிவர்த்திக்கு வழிபட வேண்டிய தலம்- கோயில் திருமாகாளம். அம்பகரத்தூர் சென்று ஸ்ரீகாளியை வணங்கிவிட்டு, கோயில் திருமாகாளம் சென்று வழிபட்டால்தான், பிரார்த்தனை பூர்த்தியடையும் என்பர்.

அஷ்ட நாகங்களுள் ஒன்றான வாசுகியும், இங்கு வந்து வழிபட்டு தோஷநிவர்த்தி அடைந்ததாகச் சொல்கிறது தல புராணம். ஆக, நாக தோஷம் போக்கும் தலமாகவும் திகழ்கிறது கோயில் மாகாளம்.



ஆலய கோபுரம்



ஸ்ரீபயக்ஷயாம்பிகை

பெருமைகள் நிறைந்த இந்தக் கோயிலின் விருட்சமான கருங்காலி மரம், செவ்வாய் தோஷத்தை நீக்குவதுடன், கொடிய நோய்களையும் அகற்றி குணமாக்குகிறது.

கருங்காலி மரப்பட்டையை மன நோய், கண் நோய், ரத்தம் சம்பந்தப்பட்ட நோய்களுக்குப் பயன்படுத்துவர். மரத்தின் தூளை ஜுரம், பேதி, வீக்கம், வலி, உடல் பலஹீனம், வெண் குஷ்டம், குஷ்டம், தோல் அரிப்பு, சர்க்கரை நோய் ஆகியவை நீங்கத் தருவார்கள். சீமைக்காசிக்கட்டி எனும் இதன் பிசினை வெற்றிலைப் பாக்குடன் சேர்த்துச் சாப்பிட, பற்களில் ரத்தக் சசிவு மற்றும் ஈறுகளில் உணர்வற்ற நிலை ஆகியன சரியாகுமாம். யுனானி மருத்துவத்தில் கருங்காலி பூக்கள், இலைகள், வேர் அனைத்தும் மருந்தாகப் பயன்படுத்தப்படுகின்றன. இதை முறையாகப் பதப்படுத்தி கிட்னி ஃபெயிலியர், ஹார்ட் ஃபெயிலியர், ஆஸ்துமா போன்ற நோய்களுக்கு மருந்தாகத் தருகிறார்கள்.

சங்க இலக்கியத்தில் 'மாரோடம்' எனக் குறிப்பிடப்படுகிறது கருங்காலி. கபிலர் இதை, 'சிறுமாரோடம்' எனக் குறிப்பிட்டுள்ளார். 'செங்கருங்காலிப்பூ' என்று உரையே எழுதியுள்ளார் நச்சினார்க்கினியர். தழைத்துச் செழித்த கருங்காலியை 'பசு மாரோடம்' என்றும், மலரின் மணத்தை 'நறு மாரோடம்' என்றும், மலரின் அளவைச் 'சிறு மாரோடம்' என்றும் வியந்துள்ளனர் புலவர்கள்.

விருட்சங்களின் அரசன்!

தனுசு ராசிக்கு உகந்த விருட்சம்


18

திருவாவடுதுறை
ஸ்ரீமாசிலாமணீஸ்வரர் திருக்கோயில்

பஞ்சபூதங்களில், நெருப்புடன் தொடர்புடைய தனுசு ராசிக்காரர்கள், பெரும்பாலும் பயணத்தில் ஆர்வம் உள்ளவர்களாக இருப்பர். இந்த ராசிக்காரர்களுக்கும், மீன ராசிக்காரர்களுக்கும், புனர்பூசம், விசாகம், பூரட்டாதி ஆகிய நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கும், வியாழக்கிழமை மற்றும் நவம்பர் 21 முதல் டிசம்பர் 20-ஆம் தேதி வரை பிறந்தவர்களுக்கும் உகந்தது அரச மரம்.

இவர்கள், அரச மரத்தை தினமும் அரைமணி நேரம் கட்டிப்பிடித்துக் கொண்டிருந்தாலோ, அதன் நிழலில் இளைப்பாறினாலோ நற்பலன்களைப் பெறலாம். குழந்தை வரம், திருமண வரம், பண வரவு ஆகிய காரியங்களுக்கு உதவும் கிரகமாக வியாழனைச் சிறப்பிக்கின்றன சாஸ்திரங்கள். இந்தக் கிரகத்துக்கும் அரச மரத்துக்கும் நேரடித் தொடர்பு உண்டு.

அரச மரத்திலிருந்து தயாரிக்கப்படும் மருந்துகளைச் சாப்பிட்டால், நல்ல நிவாரணம் பெறலாம். பொதுவாக எல்லா தாவரங்களும், 12 மணி நேரம் ஆக்ஸிஜனையும், 12 மணி நேரம் கார்பன்டைஆக்ஸைடையும் வெளியேற்றுமாம்.



ஸ்வாமி சந்நிதி...

ஆனால், அரச மரம் மட்டுமே 24 மணி நேரமும் ஆக்ஸிஜனை வெளியேற்றக்கூடியது. அதனால்தான் ஆலயங்களைச் சுற்றிலும், சுற்றுப்புறச் சூழலைப் பேணும் பொருட்டு அரச மரங்களைப் பராமரித்து வளர்க்கின்றனர்போலும்!

காவிரி தென்கரைத் தலங்களில் 36-வது தலமான திருவாவடுதுறை ஸ்ரீஒப்பிலாமுலையம்மன் சமேத ஸ்ரீகோமுத்தீஸ்வரர் (ஸ்ரீமாசிலாமணீஸ்வரர்) கோயிலின் ஸ்தல விருட்சம் - அரசமரம் (படர் அரசு). பசுக்கள் கூட்டமாக வந்து இளைப்பாறவும், மேயவும் வசதியான காவிரியாற்றுத்துறை என்பதால், திரு+ ஆ + அடு+ துறை என்று தலப்பெயர் அமைந்ததாம்.

மயிலாடுதுறை-கும்பகோணம் சாலையில், சுமார் 15 கி.மீ. தொலைவில், திருவாவடுதுறை ஆதீன மடமும், ஸ்ரீமாசிலாமணீஸ்வரர் ஆலயமும் அமைந்துள்ளன. அகத்தியர், திருமூலர், போகர், போகரின் சீடர்களில் முக்கியமானவர்களான திருமாளிகைத் தேவர், கருவூர்த் தேவர், கொங்கணர் முதலான நவகோடி சித்தர்களும், இங்கு வந்து இறைவனை வழிபட்டு அட்டமா



ஸ்ரீகோமுத்தீஸ்வரர்



ஸ்ரீஒப்பில்லாமுலையம்மன்

ஸித்திகளைப் பெற்றதால், இதனை நவகோடி சித்தர்புரம் என்றும் அழைப்பர்.

பசுவாக உருவெடுத்த ஸ்ரீபார்வதிதேவி, திருவாவடுதுறை இறைவனை வழிபட்டுச் சாபம் நீங்கப் பெற்றாளாம். பூச நன்னாளில், அம்பிகையின் கோ (பசு) உருவை நீக்கி, அவளின் திருவுருவை அணைத்து எழுந்தருளியதால், ஸ்வாமிக்கு 'அணைத்தெழுந்த நாயகர்' எனும் பெயரும் உண்டு. பிரிந்த தம்பதியர், இங்கு வந்து, ஸ்ரீஅணைத்தெழுந்த நாயகரை வழிபட, பிரச்னைகள் நீங்கும்; பிரிந்தவர்கள் சேருவர் என்பது ஐதீகம்.

நான்கு கரங்களுடன், நின்ற கோலத்தில் அருள்கிறாள் அம்பிகை. ஸ்ரீதுணை வந்த விநாயகர், ஸ்ரீஅழகிய பிள்ளையார், ஸ்ரீதட்சிணாமூர்த்தி (அகத்தியரின் வெண்குஷ்டத்தை நீக்கியருளியவர் இவர் என்கிறது ஸ்தல புராணம்) ஆகியோருக்கும் சந்நிதிகள் உண்டு. மேலும், வடக்கு நோக்கியவராக ஸ்ரீதிருநிறைகண்ட விநாயகர் காட்சி தருவது சிறப்பு. இங்குள்ள நந்தி. தஞ்சை பெரியகோயில் நந்தியைவிட பெரியது என்கிறார்கள். மாடுகளுக்கு ஏதேனும் வியாதி வெக்கை வந்தால், உடனே கோயிலுக்கு அழைத்து வந்து, இந்த நந்தியின் முன்னே நிறுத்தி பூஜிக்க, நோய்கள் யாவும் நீங்கும் என்பது நம்பிக்கை!


அந்தக் காலத்தில் அரச வனமாகத் திகழ்ந்த பகுதியாம் இது. மரங்களின் அரசன் என்பதால், இந்த மரத்துக்கு



அரச மரம்

இப்படியொரு பெயர் அமைந்ததாம். ஓர் அரசங்கன்றை நட்டு வளர்த்தால் போதும்... நம் சந்ததியினர் அனைவருக்கும் சொர்க்கத்தில் இடம் உண்டு என்கிறது விருட்ச ஆயுர் வேதம்! இந்த மரத்துக்கு கார்மேகங்களைக் கவரும் வல்லமை உண்டு. எனவே, வேள்விகளில் அரசங்குச்சியை சமித்தாகப் பயன்படுத்துவர்.

'மரங்களில் நான் அரச மரம்' என்கிறார் ஸ்ரீகிருஷ்ணர். காலையில் நீராடியதும் இந்த மரத்தை வலம் வர வேண்டும் என்கிறது மகாபாரதம். மரத்தை வலம் வரும்போது, நம் மீது படுகிற மரத்தின் காற்றால், நோய் நிவாரணம் கிடைக்கும்; ஆயுள் அதிகரிக்கும். குழந்தை பாக்கியம் வேண்டுவோர், அரச மரத்தைச் சுற்றினால், சூலகம் தூண்டப்படும்; ஆண்கள் வலம் வந்தால், சுக்கிலம் தூண்டப்பட்டு, ஜீவ அணுக்கள் அதிகரிக்கும் என்கிறது ஆயுர்வேதம்.



திருமூலர்



ஸ்ரீஅணைத்தெழுந்த நாயகர்

திருமூலர் சமாதி

திருவாவடுதுறை ஆலயத்தின் படர் அரச மரத்தின் கீழ், 3,000 ஆண்டுகள் யோகத்தில் அமர்ந்து, வருடத்துக்கு ஒரு பாடல் வீதம் 3,000 பாடல்களைப் பாடினாராம் திருமூலர். அதுவே திருமந்திரம்! இவரது சமாதி, ஆலயத்தின் வாயுமூலையில் தனிச்சந்நிதியாக உள்ளது. இவரது சந்நிதிக்கு அருகில், மனம் குவித்துப் பிரார்த்தித்தால், யோக நிலையைப் பெறலாம்.

திருவாவடுதுறை ஆதீன மடத்தின் சரஸ்வதி மஹால் நூல் நிலையத்தில், திருமூலரின் திருமந்திர ஓலைச்சுவடிகள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. இந்த நூலுக்கு, 'பஞ்சாக்கர தீப உரை' எனும் பெயரில், மகாவித்வான் தண்டபாணி தேசிகர் விரிவுரை எழுதியுள்ளார். மேலும், திருமந்திரம் தொடர்பாக, திருவாவடுதுறை மடத்தின் நிர்வாகம் இதுவரை 85-க்கும் மேற்பட்ட நூல்களை வெளியிட்டுள்ளதாம். அன்பே சிவம், சிவமயம் எனும் வார்த்தைகளையும், எழுதத் துவங்கும்போது பிள்ளையார் சுழி போடும் பழக்கத்தையும் முதன் முதலில் ஏற்படுத்தியவர் திருமூலரே என்பது குறிப்பிடத்தக்கது.

பிள்ளை வரம் தரும் புத்திரத் தியாகேசர்!

“திருமந்திரத்துக்கு மறு மந்திரம் கிடையாது என்பார்கள். அப்படிப்பட்ட உயரிய நூலான திருமந்திரம் பிறந்த இடம் இது. ஆண்களுக்கு புஜம் அழகு; பெண்களுக்கு தனம் அழகு. இந்த அம்பாள், ஒப்புவமை இல்லாத தன அழகு பெற்றவள் எனப் போற்றப்படுகிறாள்.



முசுகுந்தனுக்கு மகப்பேறு அருளிய தலம் எனவே 'புத்திரத்தியாகேசர்' எனும் நாமத்துடன் ஸ்ரீதியாகேசர் சந்நிதி கொண்டிருக்கிறார். இவரை வழிபட குழந்தை வரம் கிடைக்கும். தை, ரத சப்தமி திருவிழா இங்கே விசேஷம்!” என்கிறார் ஸ்ரீமாசிலாமணீஸ்வரர் கோயிலின் தண்டபாணி குருக்கள்.

தண்டபாணி குருக்கள்

அரசும் வேம்பும் இணைந்து வளரும் போது, அங்கே மின்சக்தி நிலவுவதாகத் தெரிவிக்கிறது அறிவியல். அரசம் பழங்களைப் பவுடராக்கி, மாதவிலக்கு முடிந்ததும், சுமார் 3 கிராம் அளவில், தாய்ப்பாலில் கலந்து சாப்பிட, குழந்தை பாக்கியம் கிடைக்கும். இந்த மரத்தின் பழங்கள், பித்த நோய்களையும் ரத்தக் குறைபாடுகளையும் குணமாக்குமாம். இதன் உலர்ந்த பழங்கள் ஆஸ்துமா, மலச்சிக்கல் ஆகியவற்றை நீக்குகிறது. எலும்பு முறிவு சிகிச்சைக்கு, இளம் மரத்தின் பட்டை பயன்படுகிறது; இது இடுப்பு வலி மற்றும் புண்களையும் குணப்படுத்தும் என்பர்.

அரசஇலைத் துளிரைப் பாலில் அல்லது தண்ணீரில் வேகவைத்து வடிகட்டி, சர்க்கரை கலந்து குடித்தால், மூளைக்குச் சக்தி கிடைக்கும். இலைகளை நிழலில் உலர வைத்து அரைத்து குல்கந்து சேர்த்து, தினமும் ஒரு டீஸ்பூன் சாப்பிட, மலச்சிக்கல் நீங்கும்! அரச இலையையும் வேப்பிலையையும் நன்றாக அரைத்து மூலக் கட்டி மீது பூசினால், வலி குறையும்.

அரச மரத்தின் ஏழு முதிர்ந்த இலைகளை எரித்துத் தண்ணீரில் போட்டு, சிறிது நேரம் கழித்து, வடித்துக் குடித்தால் வாந்தி நிற்கும். மரத்தின் பட்டையையும் இலைகளையும் தண்ணீரில் கொதிக்கவைத்துத் தேன் கலந்து குடித்தால் வெட்டை நோய், குஷ்ட நோய் ஆகியன நீங்கும்; ரத்தம் சுத்தமாகும்!

திருநல்லம், திருப்பரிதிநியமம், திருக்கச்சி, திருப்புட் குழி, திருப்புல்லாணி ஆகிய ஆலயங்களிலும் அரச மரமே ஸ்தல விருட்சமாகப் போற்றப்படுகிறது.

சக்தி தரும் வெள்வேல விருட்சம்!

கும்ப ராசிக்கு உகந்த விருட்சம்

19

திருவேற்காடு ஸ்ரீவேதபுரீஸ்வரர் திருக்கோயில்

கும்ப ராசிக்கான கிரகம் மற்றும் நட்சத்திரங்களின் நல்ல கதிர்வீச்சுகளையும் மின்காந்த சக்தியையும் ஈர்த்து, தனக்குள் சேமித்துவைக்கும் வல்லமை கொண்ட தெய்வீக மரம் - வெள்வேலம்.

கும்ப ராசிமண்டலத்தில் பிறந்தவர்களும், சனிக்கிழமை மற்றும் ஜனவரி 20 முதல் பிப்ரவரி 18 வரையிலான தினங்களில் பிறந்தவர்களும் போற்றிக் கொண்டாட வேண்டிய தெய்வ விருட்சம் இது! இவர்கள் இந்த மரத்தைக் கட்டிப்பிடித்தாலோ, இதன் நிழலில் அமர்ந்தாலோ, மரம் சேமித்து வைத்திருக்கும் மின்காந்த அலைகள், அவர்களின் உடலில் மாபெரும் சக்தியை ஏற்படுத்தும் என்கின்றன வானவியல் மற்றும் மூலிகை சாஸ்திரங்கள்.


வேல மரத்தை வெள்வேலம், கருவேலம், குடைவேலம் என்று வகை பிரித்துள்ளனர். இதில் 'பரம்பை' என்றும் சிறப்பிக்கப்படும் வெள்வேல மரம், பல ஆலயங்களின் ஸ்தல விருட்சமாகவும் திகழ்கிறது. அந்த ஆலயங்களில் குறிப்பிடத்தக்கது சென்னை - திருவேற்காடு ஸ்ரீபாலாம்பிகை சமேத ஸ்ரீவேதபுரீஸ்வரர் ஆலயம்.



வெள்வேலம் மரம்



சென்னை-கோயம்பேடு பேருந்து நிலையத்திலிருந்து சுமார் 18 கி.மீ. தொலைவில் உள்ள இந்தத் தலம், முற்காலத்தில் வெள்வேல மரங்கள் சூழ்ந்த பகுதியாகத் திகழ்ந்ததால், வேற்காடு என்று பெயர் பெற்றதாக ஸ்தல புராணம் விவரிக்கிறது.



ததீசி எனும் சிவபக்தருக்கும் திருமாலுக்கும் பகை ஏற்பட்டதாம். இருவருக்குமான சண்டையில், திருமாலின் அனைத்து பாணங்களும் வீணாயின. ததீசியை அவரது சிவபக்தி காத்தருளியது. இறுதியாக, சக்ராயுதத்தைப் பிரயோகித்தார் திருமால். அதிலிருந்தும் ததீசி தப்பித்தார்! அதையடுத்து, சிவபூஜையில் ஈடுபட்டார் திருமால். தினமும் 1000 மலர்களால் ஈசனை வழிபடுவது என முடிவு செய்தார்.

ஒரு நாள்... ஒரு பூ குறைந்து போக, தனது ஒரு கண்ணையே பெயர்த்து ஆயிரமாவது பூவாக

திருமணத் தடை நீங்கும்!

"இந்தப் பகுதி வேலங்காடாகத் திகழ்ந்ததால், ஊர்ப் பெயர் மட்டுமல்ல... ஸ்ரீவேற்காட்டு ஈஸ்வரன் என்று ஸ்வாமிக்கும், வேற்கண்ணியம்மை என்று அம்பாளுக்கும் பெயர் வந்தது" என்று சிலாகிக்கிறார், திருவேற்காடு சிவாலயத்தின் சுப்ரமணிய குருக்கள்.



ஸ்ரீகாமாட்சி அலங்காரம்...

மேலும், "சித்ரா பௌர்ணமியில், இங்கு ஆற்றூரல் விழா வெகு பிரசித்தம். அருகில் உள்ள பாலி ஆற்றுக்கு ஸ்வாமி ஊர்வலமாகச் செல்வார்; அங்கே மண்டகப்படி நடைபெறும். பங்குனியில் திருக்கல்யாண உத்ஸவம், மாசி மகா சிவராத்திரி என விழாக்கள் விமரிசையாக நடந்தேறும். தூண் ஒன்றில், ஸ்ரீகருமாரியம்மனின் அழகுத் திருவுருவத்தையும் தரிசிக்கலாம்.

அகத்திய முனிவருக்குத் திருமணக் கோலம் காட்டிய தலம் என்பதால், இங்கு வந்து வழிபட, திருமணத் தடைகள் நீங்கும்" என்று சிலிர்ப்புடன் தெரிவித்தார் சுப்ரமணிய குருக்கள்.

சிவனாருக்குச் சமர்ப்பித்தார் திருமால். அந்த நிமிடமே அவருக்குத் திருக்காட்சி தந்தார் சிவனார். இழந்த கண்ணையும், சுதர்சன ஆயுதத்தையும் பெருமாளுக்கு வழங்கியதுடன், அவருக்குக் 'கண்ணன்' என்றும் பெயர் சூட்டி அருள்புரிந்தார் என்கிறது ஸ்தல புராணம்.

இதைக் கண்ணுற்று மனமுருகிய ஆதிசேஷன், 'எங்கள் திருமால் ரத்தம் சிந்திய இந்தத் திருவிடத்தில், எவரையும் தீண்டமாட்டோம்; எவருக்கும் தீங்கு செய்யமாட்டோம்' என உறுதி ஏற்றாராம். திருமால் சிவபூஜை செய்த அந்தத் திருவிடம் - திருவேற்காட்டின் ஒரு பகுதியான கண்ணபாளையம்!

அதுமட்டுமா? அகத்தியருக்கு தமது திருமணக்கோலத்தை சிவனார் காட்டியருளிய தலங்களில் ஒன்று; மூர்க்க நாயனார் அவதரித்த பூமி; 12 பாடல்களால் திருஞான சம்பந்தர் பாடித் துதித்த திருவிடம்; சேக்கிழார் போற்றிய திருத்தலம்... எனப் பெருமைகள் பல உண்டு இந்தத் தலத்துக்கு!

கருவறையில், லிங்க ரூபமாகக் காட்சி தருவதுடன், ஸ்ரீவிநாயகர் மற்றும் ஸ்ரீபாலாம்பிகையுடன் அருள்புரிகிறார் ஸ்ரீவேத புரீஸ்வரர். மூர்க்க நாயனார், சேக்கிழார், கோயிலைக் கட்டிய அநபாய

கருமாரித் தாயே சரணம்!

ஸ்ரீவேதபுரீஸ்வரர் ஆலயத் தூண் ஒன்றில், ஸ்ரீகருமாரியம்மனின் திருவுருவம் உள்ளது. ஸ்ரீதுர்கை, ஸ்ரீமகா காளி, ஸ்ரீமகாலட்சுமி ஆகிய தெய்வங்களின் அம்சம்தான், ஸ்ரீகருமாரி.

இந்தக் கோயிலில் இருந்து, சுமார் 2 கி.மீ. தொலைவில் அன்பர் ஒருவர் இடம் வழங்க, அங்கே, 1937-ஆம் வருடம் ஸ்ரீகருமாரிக்குக் கோயில் எழுப்பி, வழிபட்டு வருகின்றனர். அன்று துவங்கி இன்றளவும் திருவேற்காடு ஸ்ரீகருமாரியம்மன் தனது அருளாட்சியை நடத்தி வருகிறாள்! அம்பாளின் சிரசு மட்டுமே காட்சி தர, பின்னே... சதுர்புஜங்களுடன் கூடிய ஸ்ரீரேணுகாம்பிகையின் வடிவில் காட்சி தருகிறாள், அன்னை. 24 மணி நேரமும் கருமாரியின் சந்நிதியில் எரிந்து பிரகாசித்துக் கொண்டிருக்கிற 'பதி விளக்கு' இங்கு விசேஷம்!



ஸ்ரீகருமாரியம்மன்...



சுப்ரமணிய குருக்கள்





ஸ்ரீபாலாம்பிகை சமேத ஸ்ரீவேதபுரீஸ்வரர் ஆலயம்

சோழன் ஆகியோரின் திருவுருவச் சிலைகளும் இங்கே உள்ளன. சனீஸ்வரர் மற்றும் அருணகிரியார் சந்நிதிகளையும் தரிசிக்கலாம். வெளிப் பிராகாரத்தில், கம்பீரமாக நிற்கிறது வெள்வேல மரம்!

மருத்துவப் பயன்கள் மிகுந்தது வெள்வேலம். இதன் குச்சிகள் பல் துலக்கவும், பற்கள் உறுதிப்படவும் உதவுகின்றன. இதன் இலையை மென்றாலும் பற்கள் உறுதிப்படுமாம். வெள்வேல இலைகளை அரைத்துப் பூசினால், புண்கள் ஆறிவிடும்; வீக்கமும் குறையும்.

சிறுநீர் கழிக்கும்போது எரிச்சல், வெட்டை, வீக்கம் ஆகியவற்றையும் குணப்படுத்தவல்லது, வேல இலை. பல் முளைக்கும்போது குழந்தைகளுக்கு பேதி ஏற்படுவதைக் கட்டுப்படுத்த, வேல இலைகளை நீரில் கொதிக்க வைத்துக் கஷாயமாக்கிக் கொடுப்பார்கள்.

விதை பிடிக்காத வேலங்காய்களைப் பறித்து, உலர வைத்துப் பவுடராக்கி, சம அளவு சர்க்கரை யுடன் பாலில் கலந்து சாப்பிட்டால், இந்திரிய கசிவுப் பிரச்னையில் இருந்து விடுபடலாம்.

அரிப்பு, படை முதலான தோல் நோய்களுக்கு, வேலம் பூக்கள் மருந்தாகப் பயன்படுகின்றன. வேலம் பிசினை எடுத்து, நெய்யில் வறுத்துச் சாப்பிட்டால், பெண்களுக்கு வெள்ளைப்படுதல் பிரச்னை நீங்கும்.

அதுமட்டுமா?! வேல விதைகளை அரைத்துத் தேனில் கலந்து, உடைந்த எலும்புகளின் மேல் வைத்துக் கட்டினால், உடைந்த எலும்புகள் விரைவில் ஒன்று சேரும் என்கின்றன மருத்துவ நூல்கள்!

ஈசன் குடியிருக்கும் கடுக்காய் மரம்!

மகர ராசிக்கு உகந்த விருட்சம்

20

திருக்குறுக்கை
ஸ்ரீவீரட்டேஸ்வரர் திருக்கோயில்


பஞ்சபூதங்களில், பூமியுடன் தொடர்புகொண்ட ராசி - மகரம். இந்த ராசியில் பிறந்தவர்களுக்குச் சமூகத்தில் நல்ல மரியாதை கிடைக்கும்.

சனிக்கிழமை மற்றும் டிசம்பர் 21 முதல் ஜனவரி 19 வரையிலான தேதிகளில் பிறந்தவர்களுக்கும், மகர ராசிக்காரர்களுக்கும் உகந்தது கடுக்காய் மரம். சனிக் கிரகத்துடன் நேரடித் தொடர்பு கொண்ட கடுக்காய் மரம் குறித்துப் புராணங்கள், வேதங்கள் மற்றும் 2500 வருடங்களுக்கு முன் எழுதப்பட்ட சுராக்கா சம்ஹிதை, சுஸ்ருத சம்ஹிதை முதலான நூல்களில் விவரிக்கப்பட்டுள்ளது.

மகர ராசியின் நச்சுத்தன்மை கொண்ட கதிர்வீச்சுகள், மனிதனின் முழங்கால் மூட்டுகளைச் சேதப்படுத்தும் தன்மை கொண்டது; ரத்தக்கசிவு நோயை ஏற்படுத்தும். இந்த ராசிக்காரர்கள், நச்சுக் கதிர்வீச்சுகளால் உண்டாகும் உடல் நோய்கள் மற்றும் மனரீதியான பிரச்னைகளைச் சரிசெய்ய, கடுக்காய் மரத்தை தினமும் அரை மணி நேரம் கட்டிப் பிடித்தபடி நின்றிருந்தால் நல்லது. அதன் நிழலில் தினமும் அரை மணி நேரம் உட்கார்ந்திருந்தாலும்

சிறந்த பலன் கிடைக்கும். அதேபோல், கடுக்காயைக் கொண்டு தயாரிக்கப்படும் மருந்துகளைச் சாப்பிட்டும் நிவாரணம் பெறலாம்.

நாகை மாவட்டம், திருக்குறுக்கையில் (மயிலாடுதுறையில் இருந்து சுமார் 10 கி.மீ. தொலைவு) அமைந்துள்ளது ஸ்ரீஞானாம்பிகை சமேத ஸ்ரீவீரட்டேஸ்வரர் திருக்கோயில். தருமபுரம் ஆதீன மடத்தின் பராமரிப்பில் உள்ள இந்தக் கோயிலின் ஸ்தல விருட்சம் கடுக்காய் மரம். இங்கே உள்ள ஸ்வாமிக்கு ஸ்ரீயோகேஸ்வரர் எனும் திருநாமமும் உண்டு.



உற்ஸவர் தரிசனம்...

'பிரிந்தவர் சேருவர்!'

"மாசி மகம், சிவராத்திரியின்போது லட்ச தீபம் என விழாக்கள் விமரிசையாக நடைபெறும் கோயில் இது" என்கிறார் திருக்குறுக்கை ஸ்ரீவீரட்டேஸ்வரர் ஆலயத்தின் சோமசுந்தர குருக்கள்.

"தினமும் நான்கு கால பூஜைகள் நடைபெறும் இந்தத் தலத்துக்கு வந்து ஸ்வாமியை தரிசித்தால், பூர்வ ஜென்ம பாவங்கள் விலகும். ஸ்வாமியை அர்ச்சனை செய்து வழிபட, களத்திர தோஷங்கள் நீங்கும்; தொழில் மற்றும் வியாபாரத்தில் ஏற்பட்ட தடைகள் யாவும் நீங்கும். ஸ்ரீவீரட்டேஸ்வரரை வழிபட்டால், இழந்த பொருள் அல்லது பதவியை திரும்பப் பெறலாம். தம்பதிகளுக்கிடையே மனக் கசப்புகள் நீங்கும்; பிரிந்தவரும் ஒன்றுசேர்வர். தம்பதியர், ஒற்றுமையாகவும் அன்பாகவும் வாழ... இந்தத் தலத்துக்கு வந்து தரிசிக்கலாம்!" எனச் சிலிர்ப்புடன் தெரிவிக்கிறார் சோமசுந்தர குருக்கள்.



சோமசுந்தர குருக்கள்




ஸ்ரீவீரட்டேஸ்வரர் திருக்கோயில்

உள்ளே நுழைந்ததும், குறுங்கை விநாயகரின் அற்புதத் தரிசனம். அருகிலேயே தீர்க்கவாகு முனிவர் விக்கிரகத்தையும் தரிசிக்கலாம். தலங்கள்தோறும் சிவதரிசனம் செய்து வந்த தீர்க்கவாகு, இங்கு வந்து சிவ பூஜைக்காக ஆகாய கங்கையை அழைத்தாராம். கங்கை வராதது மட்டுமின்றி, முனிவரின் கைகளும் குறுகிப்போனதாம். இதில் வேதனை அடைந்த முனிவர், விநாயகரைப் பிரார்த்தித்தார். அவருக்குத் தரிசனம் தந்த விநாயகர், "இங்கு திரிசூல கங்கை இருப்பதால், ஆகாய கங்கை வரமாட்டாள். எனவே, திரிசூல கங்கை நீரால் ஸ்வாமிக்கு அபிஷேகம் செய்!" என்று அருளினார். அத்துடன், முனிவரது மனக்குறையைப் போக்கும்விதமாக, தனது கைகளையும் குறுக்கிக்கொண்டார் ஸ்ரீவிநாயகப்பெருமான் என்கிறது ஸ்தல புராணம். இந்த விநாயகருக்கு, 'பிணி நீக்கும் கணபதி' எனும் திருநாமமும் உண்டு. இவரது விமானம், கஜபிருஷ்ட அமைப்பில் இருப்பது குறிப்பிடத்தக்கது!

ஒருமுறை, கடுக்காய் மரத்தடியில் யோக நிலையில் அமர்ந்திருந்த ஈசனின் தவத்தைக் கலைக்கப் பலரும் முயன்று தோற்றுப் போயினர். பிறகு நாரதரின் திட்டப்படி, சிவனார் மீது மன்மதன் பாணம் தொடுக்க, ஈசன் அவனை எரித்துச் சாம்பலாக்கிய கதை நாமறிந்ததே! மன்மதன் விட்ட பாணத்தால் ஏற்பட்ட பாதிப்பால், அம்பாளைக் காதலுடன் நோக்கினாராம் கயிலையான். பிறகு, இருவருக்கும் திருமணஞ்சேரியில் திருமணம் நடைபெற்றதாக ஐதீகம்!

மன்மதன் எரிந்து சாம்பலான இடம், திருக்குறுக்கை ஆலயத்துக்கு அருகில், 'விபூதிக்குட்டை' எனும் பெயரில் அமைந்துள்ளது.



கடுக்காய்




அங்கேயுள்ள மண், விபூதியைப் போலவே காட்சி தருகிறது!

ஸ்தல விருட்சமான கடுக்காய் மரத்துக்கு அருகில் உள்ள நந்தியை, 'செவி சாய்த்த நந்தி' என்கின்றனர். சிவனாரின் தவத்தைக் கலைக்க மன்மதன் வந்தபோது, அவனுக்குச் செவிசாய்த்து அனுமதித்ததால், நந்திக்கு இந்தப் பெயர் அமைந்ததாகச் சொல்வர்!

மன்மதன் எரிந்ததைக் கண்டு சோகமானாராம் பெருமாள். இதனால், ஸ்ரீமகாலட்சுமி சிவனாரிடம் முறையிட, ரதிதேவியின் கண்களுக்கு மட்டும் மன்மதன் தெரிவான் என சாப விமோசனம் தந்தருளினார் சிவனார். பெருமாளின் சோகமும் தீர்ந்தது என்பர்.

திருநாவுக்கரசரால் பாடப்பெற்ற தலம் இது. இங்கு, விஜயநகரப் பேரரசின் கல்வெட்டுகளைக் காண முடிகிறது. இத்தனைச் சிறப்புகளைக் கொண்ட இந்தத் தலத்தின் விருட்சமாகத் திகழும் கடுக்காய் மரம் மருத்துவ மகத்துவம் வாய்ந்தது.

தினமும் உணவுக்குப் பிறகு, கடுக்காய் ஒன்றைக் கடித்து அதன் சாற்றை விழுங்கி வந்தால், எந்த நோயும் அண்டாது என்பர். சிவனாரின் மற்றொரு திருநாமமான 'ஹர' எனும் பெயருடன் திகழும் கடுக்காய் மரத்தில், சிவனார் உறைந்திருப்பதாக ஐதீகம்! மாம்பிஞ்சு அளவுக்கு இருக்கும்போது, கடுக்காயைப் பறித்து உலர வைத்தால், கறுப்பாகத் தோன்றும்.



இதனை 'தான்றிக்காய்' என்றும் சொல்வர். மரத்திலேயே விதை பிடித்துப் பழுத்து, மஞ்சள் நிறத்தில் இருக்கும்போது பறிப்பது வழக்கம். எனவே, இதனை 'மஞ்சள் கடுக்காய்' என்பர். பழுத்து, முதிர்ந்து தானாகவே விழுவதை 'காபூலிக் கடுக்காய்' என்பர். ஆக, இந்த மூன்று வகை கடுக்காய்களுக்கும் தனித்தனியே மருத்துவ குணங்கள் உள்ளன.

தான்றிக்காயை நெய்யில் ஊறவைத்து, அதன்மீது கோதுமை மாவைப் பூசி, நெருப்பில் புதைத்துச் சுட்டபிறகு, வெட்டிச் சிறு துண்டுகளாக்கி, கற்கண்டுடன் சேர்த்துச் சாப்பிட... ஆஸ்துமா, இளைப்பு, இருமல் முதலான நோய்கள் நீங்கும்.

மஞ்சள் கடுக்காயின் தோலை மலத்துவார எரிச்சல், அரிப்பு, வீக்கம், வலி, கட்டிகள், மருக்கள் குணமடைவதற்குப் பயன்படுத்தலாம். இந்தத் தோலை தண்ணீரில் அரைத்து, இமைகளில் பூசினால், கண் நோய், எரிச்சல், உஷ்ணம் ஆகியன நீங்கும். கடுக்காய்த் தோலைப் பவுடராக்கி, கறுப்பு வெல்லத்தில் கலந்து, மாத்திரைகளாக உருட்டி வைத்துக்கொண்டு, தினமும் காலை, மாலை இரு வேளையும் வெந்நீர் அல்லது மோரில் கலந்து சாப்பிட்டு வந்தால், மூல நோய் நீங்கும். இதேபோல், கடுக்காய் பவுடருடன், வாஸலைன் கலந்து களிம்பு போல தீப்புண் மற்றும் புண்களில் பூச, விரைவில் ஆறும்.

'கடுகலித்து எழுந்த கண் அகழ் சிலம்பில்' எனும் சங்க இலக்கியத்தின் 'மலைபடுகடாம்' வரிகளுக்கு, 'கடுமரம் மிக்கு வளர்ந்த இடமகன்ற பக்க மலையில்...' என உரை எழுதியுள்ளார் நச்சினார்க்கினியர். இதில், 'கடு' என்பது கடுக்காயைக் குறிப்பதாகச் சொல்வர்!

சூரியன் வழிபடும் ஆலமர்செல்வன்!

மீன ராசிக்கு உகந்த விருட்சம்

21

திருஆலம்பொழில்
ஸ்ரீஆத்மநாதேஸ்வரர் திருக்கோயில்

மீன ராசி, தண்ணீருடன் தொடர்பு கொண்டது. மீன ராசிக்காரர்கள் சட்டென்று உணர்ச்சிவசப்படக் கூடியவர்கள். திடுமென, நெருங்கிய நண்பர்களையே பகைத்துக் கொள்வார்கள். இத்தகைய மீன ராசிக் காரர்களுக்கும், பிப்ரவரி 19 முதல் மார்ச் 20-ஆம் தேதி வரை பிறந்தவர்களுக்கும், நன்மைகள் தருவது ஆலமரம்!

மீன ராசி மண்டல நட்சத்திரக் கூட்டத்தின் கெட்ட கதிர்வீச்சுகளால் உண்டாகும் நோய்கள், கெடுதல்கள், தோஷங்கள் ஆகியன ஆலமரத்தால் நீங்கும். மேற்சொன்ன காலகட்டத்தில் பிறந்தவர்களும் மீன ராசிக்காரர்களும் தினமும் ஆலமரத்தை அரைமணி நேரம் கட்டிப்பிடித்து, அதன் நிழலில் சற்றுநேரம் இளைப்பாறலாம். இதனால், வியாழக் கிரகம், மீன ராசி மற்றும் அதன் நட்சத்திர மண்டலத்தின் நல்ல கதிர்வீச்சுகளை உறிஞ்சி, தனக்குள் நிரப்பிக்கொண்டு, அதனை மனித உடலுக்கு மாற்றி வலிமையைத் தரவல்லது ஆலமரம் என்கிறது வானவியல் சாஸ்திரம்!

அருள்வளர் ஞானாம்பிகை சமேத

ஸ்ரீவடமூலேஸ்வரர் (எ) ஸ்ரீஆத்மநாதேஸ்வரர் அருளும் திருஆலம்பொழிலின் ஸ்தல விருட்சமும் ஆலமரமே!

திருவையாறில் இருந்து சுமார் 8 கி.மீ. தொலைவில், குடமுருட்டி ஆற்றுக்கு அருகில் அமைந்துள்ளது திருஆலம்பொழில். அப்பரால் பாடப்பெற்ற தலமும்கூட! ஸ்ரீமூல விநாயகர், ஸ்ரீகாசிவிஸ்வநாதர், வள்ளி - தெய்வானையுடன் ஸ்ரீமுருகன், ஸ்ரீவிஷ்ணு, ஸ்ரீதுர்கை, ஸ்ரீதட்சிணாமூர்த்தி, அரசமர விநாயகர், பிரம்மா, பஞ்ச லிங்கங்கள் ஆகிய தெய்வங்களையும் இங்கே தரிசிக்கலாம். இந்தத் தலத்து இறைவன், மேற்கு நோக்கி அருள்வது விசேஷ அம்சம் என்கின்றனர்! இந்த ஆலயத்தைக் கட்டியவர், மாமன்னன் ராஜராஜ சோழன்.

அஷ்டவசுக்கள் பூஜித்து இட்ட சத்தி பெற்றதும், சூரிய பகவான், வெண்தாமரை தீர்த்தத்தில் நீராடி, இறைவனை வழிபட்டு, தனது பிரம்மஹத்தி தோஷம் நீங்கப்பெற்றதும் இங்குதான்.

வருடந்தோறும் ஏப்ரல் 21-ஆம் தேதி முதல் 23-ஆம் தேதி வரை, லிங்கத் திருமேனியில் சூரியக் கதிர்கள் விழுந்து வணங்குவது கண்கொள்ளாக் காட்சி!

தோள் கொடுத்த பெருவிழா!

"**வை**காசி மாதத்தில் தோள் கொடுத்த பெருவிழாவும் ஐப்பசியில் கந்தசஷ்டியும் திருக்கார்த்திகையும் புரட்டாசியில் நவராத்திரியும் என விழாக்களுக்குப் பஞ்சமில்லாத தலம்" எனப் போற்றுகிறார், ஆலம்பொழில் ஆத்மநாதேஸ்வரர் ஆலயத்தின் சரவண குருக்கள்.


சரவண குருக்கள்

"திருப்பூந்துருத்திக்கு அப்பர் சுவாமிகள் வந்திருந்ததை அறிந்து, திருஞானசம்பந்தர் அவரைத் தரிசிக்க பல்லக்கில் விரைந்தார். அந்த ஊருக்குள் நுழைந்ததும், 'அப்பர் எங்கே இருக்கிறார்?' என்று ஞானசம்பந்தர் கேட்க, 'நான் இங்கே இருக்கிறேன்' என்று பல்லக்குத் தூக்குவோர் மத்தியிலிருந்து குரல் வந்ததாம்! இதைக் கேட்டு கிடுகிடுத்துப் போன சம்பந்தர், அப்படியே உறைந்து நின்றார். அந்த இடம், 'சம்பந்தர் மேடு' என்றானது. இதனை இன்றைக்கும் காணலாம்! இதை நினைவுபடுத்த 'தோள் கொடுத்த பெருவிழா' திருஆலம்பொழிலில் விமரிசையாக நடைபெறுகிறது. இங்கேயுள்ள சிவனாரையும் அம்பிகையையும் அபிஷேகித்து வழிபட, வழக்கில் வெற்றி உண்டு" என்கிறார் சரவண குருக்கள்.



ஆலம் இலைகளும் கனிகளும்

இந்தத் தலத்திலிருந்து சுமார் 20 கி.மீ. தொலைவில் உள்ளது தென்குடித் திட்டை. வசிஷ்ட முனிவர் வாழ்ந்ததாகச் சொல்லப்படும் இந்தத் தலத்தில், அந்த முனிவர் வழிபட்ட சிவனாருக்கு ஸ்ரீவசிஷ்டேஸ்வரர் என்று திருநாமம் அமைந்தது. காமதேனுவை வசிஷ்டர் வழிபட்டதும் இந்தத் தலத்தில்தான். குரு பரிகாரத் தலம் என்று போற்றப்படுகிற தலமும் இதுதான்.

ஒருமுறை, மேய்ந்தபடியே ஆலம்பொழிலுக்கு வந்துவிட்டதாம் காமதேனு. அங்கு வசித்த அஷ்டவசுக்கள் காமதேனுவைக் கண்டனர். அதன் சிறப்பு அவர்களுக்குத் தெரியுமாதலால், காமதேனுவைச் சிறைப்பிடித்தனர். இதையறிந்த வசிஷ்டர், அஷ்டவசுக்களைச் சபித்தார். இதையடுத்து காமதேனுவை விடுவித்த அஷ்டவசுக்களும், அங்கேயுள்ள புஷ்கரணியில் நீராடி, ஸ்ரீஆத்மநாதேஸ்வரரை வழிபட... சாபவிமோசனம் பெற்றனர்!

இந்த ஆலயத்தின் திருப்பணிகளை உள்ளூர் மற்றும் வெளியூர் அன்பர்களுடன் சேர்ந்து செய்ததுடன், 2004-ஆம் வருடம் கும்பாபிஷேகத்தையும் செய்தவர், ஸ்ரீநிவாச ஐயர். இன்றளவும் கோயில் பராமரிப்புப் பணிகளில் முழு ஈடுபாடு காட்டிவருகிறார். "வடமூலேஸ்வரரையும் ஞானாம்பிகையையும் வழிபட்டால், கேட்கும் வரம் கிடைக்கும். குழந்தைகள், கல்வி - கேள்விகளில் சிறந்து விளங்குவார்கள்!" என்கிறார் ஸ்ரீநிவாசன்.

குளிர்ச்சி தருவதும், பரந்து வளர்ந்து நிழல் தருவதுமான ஆலமரத்துக்கு ஏராளமான மருத்துவ குணங்களும் உண்டு. இதன் வேரின் மீது உள்ள பட்டையை வெட்டி, பவுடராக்கி மருந்தாகப் பயன்படுத்துகின்றனர். சர்க்கரை நோய், காய்ச்சல், வெட்டை, கர்ப்பப்பை வீக்கம், அதிக ரத்தப்போக்கு ஆகியவற்றை குணமாக்கும் வல்லமை கொண்டது. இந்தப் பட்டையை உலர்த்தி, அரைத்து சம அளவு வெண்ணெய் கலந்து, காலையும் மாலையும் சாப்பிட, விரைவில் குணம் பெறலாம். கர்ப்பப்பை வீக்கம் உள்ளவர்கள், பாலுடன் கலந்து சாப்பிடவேண்டும். சர்க்கரை நோயால் அவதிப்படுவோர், வேர்ப்பட்டையை தண்ணீரில் நனைத்துச் சாறாக்கிக் குடித்தால், விரைவில் குணமாகும்.




ஸ்ரீஞானாம்பிகை


ஆலமரத்துக் கனி, அஜீரணம் தரும் என்பர். ஆனாலும் பல நோய்களுக்கு மருந்தாகவும் பயன்படுகிறது, இது! பசுங்கனிகளை நன்றாக உலர்த்தி, அரைத்து, 12 கிராம் அளவு பாலில் கலந்து கொடுக்க, ஞாபக சக்தி அதிகரிக்கும்; தேகக்கட்டு பொலிவுறும். ஆலங் குச்சிகளால் பல் துலக்கினால், ஈறு மற்றும் பற்களில் வலிமையேறும். 'குழந்தை இல்லையே' என ஏங்குவோர், ஆலமரத்தை தினமும் சுற்றி வந்து, வழிபடுவர். இன்னும் சிலர், விரதமிருந்த பிறகு ஆலமரப் பூக்களைச் சாப்பிடுவர். இதனால் பிள்ளை பாக்கியம் உண்டாகும் என்பது நம்பிக்கை. இதை, யுனானி மருத்துவமும் உறுதி செய்கிறது. ஆலமரத்தின் பால், புண்களை ஆற்றும்! வலி உள்ள இடங்களில், பாலைப் பூசினால், நிவாரணம் கிடைக்கும்!



ஸ்ரீஆதமநாதேஸ்வரர்



ஆலயத்தின் கோபுரம்



ஆலமரம்

திருஅன்பிலாந்துறை, திருப்பழுவூர், திருவாலங்காடு மற்றும் திருமெய்யம், திருவில்லிப்புத்தூர் ஆகிய தலங்களின் விருட்சமாகவும் திகழ்கிறது ஆல மரம். *'அன்று ஆலின் கீழ் இருந்து அறமுரைத்தான்'* என்று போற்றுகிறார் மாணிக்கவாசகர்.

'கடவுள் ஆலம்' என்று நற்றிணையில் குறிப்பிடுகிறார் பெரும்பதுமனார் எனும் புலவர். *'மாமரத்தின் கீழும் ஆலமரத்தின் கீழும் உறையும் தெய்வங்களுக்குச் செய்யும் முறைமைகளைப் பரவி, தொழுவிலே பாய்ந்தார்'* என்கிறது கலித்தொகை! அதுமட்டுமா?! *'பல்வீழ் ஆலம் போல'* என அகநானூறும், *'அழல் புரை குழை கொழு நிழல் தரும் பலசினை ஆலமும் கடம்பும்'* என பரிபாடலும் ஆலமரத்தைப் போற்றுகின்றன.

பேரரசர்கள் தனது பெரும்படையுடன் தங்கியிருக்கவும் நிழல் பரப்பித் தரும் மரம் இது! அலெக்சாண்டர் தன்னுடைய ஏழாயிரம் வீரர்களுடன் இளைப்பாறியது ஆலமர நிழலில்தானாம்!

வம்சம் தழைக்க வாழ்த்துபவர்கள், 'ஆல்போல் தழைத்து, அருகுபோல் வேரோடி...' என்று ஆலமரத்தை உதாரணம் காட்டித்தானே வாழ்த்துகிறார்கள்!

எட்டி மரத்தின் மகிமை!

அசுவினி நட்சத்திரத்துக்கான விருட்சம்

22

மேல் விஷாரம்
ஸ்ரீவால்மீகீஸ்வரர் திருக்கோயில்

மரங்களை வழிபடும் வழக்கம், வேத காலத்திலேயே இருந்துள்ளது. சுமார் ஆயிரம் வருடங்களுக்கு முன்பு, மரங்கள் வளர்ந்த அடர்ந்த வனத்தில், ஆலயங்களை எழுப்பினார்கள் முன்னோர்கள். அங்கே எந்த மரம் அதிகமாக வளர்ந்து கிளை பரப்பியிருந்ததோ, அந்த மரத்தை ஆலயத்தின் விருட்சமாக நிர்ணயித்தனர்.

அரிய வகை மருத்துவ குணங்கள் கொண்ட அந்த விருட்சங்கள், உலகெங்கும் அழிந்தாலும், ஆலயத்துக்குள் தெய்வீக மரமாகப் போற்றி வளர்க்கப்படும்; அப்படி வளர்கிற மரத்திலிருந்து பரவும் விதைகள், பல மரங்களாகத் தழைத்துப் பெருகும் எனத் திட்டமிட்டுச் செயல்பட்டனர்.

இதேபோல், கிரகங்கள் ஒவ்வொன்றும் வெளிப்படுத்துகிற நல்ல கதிர்வீச்சுகளை உள்வாங்கி, தனக்கென உள்ள தனித்துவக் குணத்துடன் சேர்த்து, மானிட வர்க்கத்துக்கு நற்பயன்களை அளிக்கவல்லவை விருட்சங்கள். ஒவ்வொரு கிரகத்துக்கும் அதனைச் சார்ந்த விருட்சங்கள் தனித்தனியே உள்ளன.

இதுவரை, நவக்கிரகங்கள் மற்றும் ராசிகளுக்கு உரிய தல விருட்சங்களைப் பார்த்தோம். இனி,



எட்டி



வால்மீகி



வால்மீகீஸ்வரர்

நட்சத்திரங்களுக்கு உரிய தல விருட்சங்களையும் தலங்களையும் பார்ப்போமா?!

ஒரு குழந்தை ஜனிக்கிறபோது, வானில் எந்த நட்சத்திரக் கூட்டம் இருக்கிறதோ, அதுவே அந்தக் குழந்தையின் நட்சத்திரம். அசுவினி நட்சத்திரத்தில் பிறந்தவர்கள், மேஷ ராசியுடனும் செவ்வாய் கிரகத்துடனும் தொடர்பு கொண்டவர்கள்; துணிச்சலும் விடாமுயற்சியும் மிகுந்தவர்கள்; நிதானமானவர்கள்; அறிவுத்திறன் கொண்டவர்கள்; உழைக்கத் துணிந்த



ஸ்ரீவடிவுடையம்மன்

வர்கள்; தன்னம்பிக்கையானவர்கள்; எடுத்த காரி யத்தை விரைந்து முடிப்பதில் வல்லவர்கள். அழகிய கண்கள், அகல நெற்றி, பரந்த மார்பு, கவர்ச்சிகரமான முகம் எனத் திகழ்பவர்கள்.

இவை, அசுவினி நட்சத்திரத்தின் நல்ல கதிர்வீச்சுகளால் விளையும் நன்மைகள். அதேநேரம், தீய கதிர்வீச்சுகள் படும்போது, துர்க்குணங்கள் எட்டிப்பார்ப்பதைத் தவிர்க்கமுடியாது. தீய நண்பர் சகவாசம், மதுப் பழக்கம், சூதாட்டம் போன்ற கெட்ட செயல்களில் ஈடுபடுவார்கள். இதனை, அசுவினி நட்சத்திர தோஷம் என்பர். இந்தத் தோஷத்தில் இருந்து நிவர்த்தி அளிப்பது எட்டி மரம்.

கசப்புத் தன்மையும், விஷ குணமும் கொண்டது எட்டி மரம். அசுவினி நட்சத்திர தோஷமுள்ளவர்கள், எட்டி மர நிழலில் அமர்ந்தால், தோஷமானது இனி எட்டிக்கூடப் பார்க்காது! இந்த மரமானது, அசுவினி நட்சத்திரத்தின் நல்ல கதிர்வீச்சுகளை உறிஞ்சித் தனது உடலில் சேர்த்துக் கொள்கிறது. இதுவே மின்காந்த சக்தியாக மாறி, இந்த மரத்தைத் தொடுபவர்களுக்கு நற்பலன்களை அளிக்கும் என வானவியல் மூலிகை சாஸ்திரம் தெரிவிக்கிறது.


வேலூர் மாவட்டம், ஆற்காட்டை அடுத்த மேல்விஷாரம் எனும் ஊரில், பழைமை வாய்ந்த ஸ்ரீவால்மீகீஸ்வரர் ஆலயம் அமைந்துள்ளது. இந்தத் தலத்தின் ஸ்தலவிருட்சம் எட்டி மரம்.

ஆற்காட்டையொட்டி ஓடுகிறது பாலாறு. 'ஷடா' என்றால் '6'; ஆரண்யம் என்றால் காடு. எனவே, இந்த ஊரை ஷடாரண்யம் என்பர். இந்தத் தலத்தில் ஓடுகிற ஆற்றின் வடகரையிலும் தென்கரையிலும் உள்ள தலங்களை, ஷடாரண்ய க்ஷேத்திரங்கள் என்பர்.

இங்கே, வாலாஜாவில் உள்ள வன்னிக்காடு பகுதியில், அகத்திய முனிவர் பூஜித்த ஸ்ரீபுவனேஸ்வரி சமேத ஸ்ரீஅகத்தீஸ்வரர் திருக்கோயில் உள்ளது. இந்தத் தலத்தின் விருட்சம் - வன்னி மரம்! வாலாஜாவில் உள்ள குடைமல்லிக் காட்டுப் பகுதியில், அத்திரி முனிவர் வழிபட்ட ஸ்ரீதிரிபுரசுந்தரி சமேத ஸ்ரீஅத்திரீஸ்வரர் ஆலயம் உள்ளது. இந்தத் தலத்தின் விருட்சம் - குடை மல்லிகை!

ராணிப்பேட்டை - காரை பகுதியில், கௌதமர் வழிபட்ட ஸ்ரீகிருபாம்பிகை சமேத ஸ்ரீகௌதமேஸ்வரர் கோயிலின் தல விருட்சம் - காரைச் செடி.

ராணிப்பேட்டை- அவரைக்கரை பகுதியில், பலவித பழ மரங்கள் நிறைந்த வனத்தில், காச்யப முனிவர் வழிபட்ட ஸ்ரீபர்வதவர்த்தினி சமேத ஸ்ரீகாச்யபேஸ்வரர் கோயில் உள்ளது. இதன் விருட்சம்- பழ மரங்கள். ஆற்காடு - வேப்பூரின் வேம்பு வனத்தில் வசிஷ்டர் வழிபட்ட ஸ்ரீபாலகுஜாம்பிகை சமேத ஸ்ரீவசிஷ்டேஸ்வரர் கோயில் அமைந்துள்ளது. இதன் விருட்சம் - வேம்பு.



ஆலய முகப்பு

ஆற்காடு - வேலூர் வழியில், புதுப்பாடி எனும் ஊரில் மாமரங்கள் அடர்ந்த வனத்தில், பரத்வாஜ முனிவர் வழிபட்ட, ஸ்ரீதர்மசம்வர்த்தினி சமேத ஸ்ரீபரத்வாஜேஸ்வரர் கோயில் உள்ளது. இதன் தல விருட்சம் - மாமரம்!

ஆற்காட்டை அடுத்த மேல்விஷாரம் எனும் ஊரில், விஷ மரக்காட்டுப் பகுதியில், வால்மீகி முனிவர் வழிபட்ட ஸ்ரீவடிவுடையம்மன் சமேத ஸ்ரீவால்மீகீஸ்வரர் கோயில் உள்ளது. இந்தத் தலத்தின் விருட்சம் - எட்டி மரம்!

ஆக, சப்த ரிஷிகளும் கடும் தவம் புரிந்து, அம்மையையும் அப்பனையும் மணக் கோலத்தில், கண்குளிரத் தரிசித்த இந்தத் தலங்களை, மகாசிவராத்திரி நாளில், வலம் வந்து வணங்கினால், திருக்கயிலாயத்தை வலம் வந்த புண்ணியம் கிடைக்கும்; பாபங்கள் நீங்கி, சாபங்கள் விலகி, நிம்மதியாக வாழலாம் என்பர்.

எட்டிப் பழம், சிவப்பும் மஞ்சளும் கலந்த நிறத்தில் பார்ப்பதற்கு அழகாகவும், உள்ளே வெள்ளையாகவும் விதைகள் நெடுக்காகவும் இருக்கும். எட்டிப் பழங்களை லேசாக வதக்கி, ஓடுகளையும் கொட்டைகளையும் நீக்கி, உள்ளேயுள்ள சதைப்பகுதியைத் துணியில் வைத்துப் பிழிந்து சாறெடுத்து, அதே அளவு எண்ணெய் கலந்து காய்ச்சி வடிகட்டி, வீக்கங்களில் பற்றுப்போட்டால்... பட்டெனக் கேட்குமாம்!

தொழுநோயாளிகளுக்கான மருந்துகள், எட்டிப் பழச்சாறின் துணையுடன் தயாராகின்றன. எட்டிக் கொட்டையில் இருந்து, ஒருவகை உப்பு எடுக்கப்படுகிறது. பக்கவாதம், கண் புகைச்சல், ஜன்னி, வலிப்பு, பாம்புக்கடி, ஆசனக்கட்டி ஆகியவற்றுக்கு, மருத்துவரின் ஆலோசனை பெற்று, இந்த உப்பைப் பயன்படுத்துவது சிறப்பு என்பர். இந்த மரத்தின் தோலைச் சீவி, வெயிலில்

கல்யாணத் தடையை அகற்றும் கபால பூஷண பைரவர்!



கபால பூஷண பைரவர்

"வால்மீகி முனிவர் வழிபட்டதால் ஸ்ரீவால்மீகீஸ்வரர்; அம்பாளின் திருநாமம் - ஸ்ரீஅழகுடைய அம்பாள். பங்குனி உத்திர நன்னாளில், ஸ்வாமிக்கும் அம்பாளுக்கும் திருக்கல்யாண உற்ஸவம் சிறப்புற நடைபெறும். அதேபோல் ஆடி வளர்பிறை திருதியை திதியில், சொர்ண கௌரி பூஜை, நவராத்திரியில் சூலினி துர்கை பூஜை, ஐப்பசி அன்னாபிஷேகம் ஆகியன இங்கே விசேஷம்!" என்கிறார் இந்தக் கோயிலின் சுரேஷ் குருக்கள்.



சுரேஷ் குருக்கள்

"கோயிலின் வாயு மூலையில் உள்ள ஸ்ரீநாகவல்லியை வணங்கினால், ராகு-கேது தோஷம் நீங்கும். அதுமட்டுமா?! இரட்டை விநாயகர், அம்மை நோய் தீர்க்கும் ஸ்ரீமுத்துமாரி, இடது கரத்தில் மண்டை ஓடு ஏந்தியபடி காட்சி தரும் கபால பூஷண பைரவர் ஆகியோரும் அருள்பாலிக்கின்றனர். தேய்பிறை அஷ்டமியில், கபால பூஷண பைரவருக்கு அபிஷேகம் செய்து வழிபட்டால், சகல வியாதிகளும் நீங்கும்; திருமணத் தடை அகலும்; வியாபாரம் செழிக்கும்!" எனச் சொல்லிச் சிலிர்க்கிறார், சுரேஷ் குருக்கள்.

காயவைத்து, சூரணமாக்கி, ஒன்று அல்லது இரண்டு குன்றிமணி அளவு ஜுரம், வலி ஆகியவற்றுக்குத் தரப்படுகிறது.

இதே அளவுடன், கல் உப்பைச் சேர்த்து மென்றால், தேள் கடியில் இருந்து நிவாரணம் பெறலாம். இதன் பட்டையைச் சேர்த்துத் தயாரிக்கப்படும் தைலங்கள், தோல் நோய்களுக்கு நிவாரணமாகத் திகழ்கின்றன.

நரம்புப் பிரச்னை மற்றும் தளர்ச்சி, பக்கவாதம், மூட்டுவலி மற்றும் வீக்கம், இளம்பிள்ளை வாதம் முதலானவற்றில் இருந்து விடுபடுவதற்கு, எட்டியைப் பயன்படுத்துகின்றனர். எட்டி மர விதைகளை முறையாகப் பக்குவப்படுத்தி, அதிலுள்ள விஷத் தன்மையை முறித்த பிறகே, மருந்தாகப் பயன்படுத்தவேண்டும்.

ஊத்தங்கரை ஸ்ரீஅங்காளபரமேஸ்வரி கோயிலிலும், திருக்காளத்தி சிவ ஸ்தலத்திலும், எட்டி மரம் தல விருட்சமாகப் போற்றி வணங்கப்படுகிறது!

நெல்லி மரத்தின் மகிமை!

பரணி நட்சத்திரத்துக்கான விருட்சம்

23

திருநெல்லிக்காவல்
ஸ்ரீநெல்லிவனநாதர் திருக்கோயில்

பரணி நட்சத்திரத்தில் பிறந்தவர்கள், ஒருவரையொருவர் புரிந்து வாழ்கிற ஒப்பற்ற தம்பதியாகத் திகழ்வார்கள். பகைவர்களைத் தங்களது சாந்த குணத்தால் எளிதில் சமாளிப்பார்கள். தூக்கமும் ஓய்வும் இவர்களுக்கு ரொம்பவே பிடிக்கும்!

மேஷ ராசி மற்றும் செவ்வாய் கிரகத்துடன் தொடர்பு கொண்டது, பரணி நட்சத்திரம். சொத்து-சுகத்துக்கு ஆசைப்படுவார்கள்; மாந்திரீக ஆர்வம் உண்டு; அழகிய தேக அமைப்புடன் திகழ்வார்கள்; நடையில் கம்பீரம் மிளிரும். செவ்வாய்க்கிழமை. தவிர, வருடத்தில் மார்ச் 21-ஆம் தேதி முதல் ஏப்ரல் 20-ஆம் தேதி வரையிலான நாட்கள், இவர்களுக்கு உகந்த அருமையான நாட்கள்!

இந்தக் காலகட்டத்தில், பரணி நட்சத்திரம் பூமிக்கு அனுப்புகிற மின்காந்தக் கதிர்வீச்சுகள், இவர்களுக்கு நலம் தருவதாக அமையும். நெல்லி மரமானது, பரணி நட்சத்திரத்தின் நல்ல கதிர்வீச்சுகளை ஈர்த்து, தனக்குள் சேகரித்து வைக்கும். நெல்லிக்காய் ஊறுகாய், நெல்லி லேகியம் மற்றும் வற்றல் என பயன்படுத்துவது உத்தமம். மனத் தளர்வு, உடல் சோர்வு, முரட்டுக்



முழு நெல்லிக்காய்



நெல்லி மரம்

குணம், ஆர்வமற்ற நிலை ஆகியவை இருப்பின் அவற்றை பரணி தோஷம் என்பர். இந்தத் தோஷத்தில் இருந்து விடுபட, தினமும் அரை மணி நேரம் நெல்லி மர நிழலில் இளைப்பாறுவது, மனதுக்கு இதம் தரும்; தோஷமும் நீங்கும்!

திருவாரூர்-திருத்துறைப்பூண்டி சாலையில், சுமார் 15 கி.மீ. தொலைவில் உள்ளது திரு நெல்லிக்காவல். இங்கே, ஸ்ரீமங்களாம்பிகை சமேத ஸ்ரீநெல்லிவனநாதர் குடிகொண்டிருக்கும் கோயிலின், விருட்சம்... நெல்லிமரம்!

ஐந்து நிலைக் கோபுரம்; உட்பிராகாரத்தின் மேற்கில் ஸ்ரீவிநாயகர், ஸ்ரீமுருகப்பெருமான், ஸ்ரீசனீஸ்வரர் ஆகியோருக்கான சந்நிதிகள்; வடப்புறத்தில், நெல்லிமரத்தடியில் ஸ்ரீநெல்லிவனநாதர். கிழக்குச் சுற்றில், யாகசாலை; ஸ்ரீபைரவர், சூரிய பகவான் சந்நிதிகள். தெற்கில், பன்னிரண்டுகால் மண்டபமும், எதிரில் பிரம்ம தீர்த்தக்குளமும் அமைந்துள்ளன. உள்மண்டபத்தில், மூலவர் ஸ்ரீநெல்லிவனநாதர் மேற்கு நோக்கியபடி காட்சி தருகிறார். அம்பாள், தெற்குமுகமாக அருள்கிறாள்.

ஸ்ரீவிஷ்ணு, ஸ்ரீபிரம்மா, ஸ்ரீசூரிய-சந்திரர்கள், ஸ்ரீசனி பகவான் ஆகியோர் இங்கே ஈசனை வழிபட்டு, சாப விமோசனம் பெற்றனர் என்கிறது ஸ்தல புராணம். தவிர, கலிங்க தேசத்து சுசன்மாவுக்கு பிரம்மஹத்தி தோஷம் நீங்கப்பெற்றதும், திவ்ய

ரூபன் எனும் கந்தர்வன் இங்கேயுள்ள பிரம்ம தீர்த்தத்தில் நீராடி, இறைவனை வழிபட்டு, குஷ்ட நோய் நீங்கப்பெற்றதும், பிரதோஷ காலத்தில் வணங்கி, அம்பிகையையே குழந்தையாகப் பெற்றார் உத்தமசோழன் எனவும் சிறப்புகள் பல கொண்ட தலம் இது! இங்கு பிரம்ம தீர்த்தம், சூரிய தீர்த்தம், சந்திர தீர்த்தம், சக்கர தீர்த்தம், ரோஹ நிவாரண தீர்த்தம் என தீர்த்தங்கள் உள்ளன.

ஆம்லகேசன், ஆனந்தமோகன், சதுர்வேதபுரீசன், சோமப்பிரகாசி, சமஷ்டிலிங்கன் என ஸ்ரீநெல்லிவனநாதர் பல திருநாமங்களுடன் அருளாட்சி புரிகிறார். ஐப்பசி மாதம் கிருஷ்ணபட்ச சதுர்த்தசியின் முதல் ஏழு நாட்களும், மாசி மாதம் 18 முதல் 24-ஆம் தேதி வரையிலான ஏழு நாட்களும், அஸ்தமனத்துக்கு முன்னதாக சூரியக் கதிர்கள் மூலவரின் லிங்கத் திருமேனியில் விழும் அற்புதத் தலம் இது!

புராண-புராதனப் பெருமைகள் கொண்ட ஆலயத்தில், வீர ராஜேந்திரன் மற்றும் 2-ஆம் ராஜராஜன் காலத்துக் கல்வெட்டுகளும் உள்ளன. நிலம், மற்றும் ரொக்கம் ஆகியவற்றைத் தானமாக அளித்த விவரங்கள், அவற்றில் உள்ளன.

மழை, பனி, வெயில் ஆகியவற்றைப் பொருட்படுத்தாமல் தவத்தில் ஈடுபட்ட முனிவர்களும் துறவிகளும், நூறு வருடங்கள் கடந்தும் வாழ்ந்ததற்கு அவர்கள் சாப்பிட்ட நெல்லிக்கனிகளே காரணம் என்கிறது மருத்துவக் களஞ்சியங்கள். நெல்லிக்காய் லேகியம் சாப்பிட, இளமையுடன் திகழ்வார்கள் என்கின்றன மருத்துவ நூல்கள். தற்கால மருத்துவர்கள் குறிப்பிடுகிற வைட்டமின் 'சி', நெல்லிக்கனியில் அதிகம் உள்ளது. உலர்த்தினாலும் உப்பிலிட்டாலும் கெடாமல் இருக்கும் திறன் கொண்டது, நெல்லி. பிப்ரவரி மற்றும் ஜூலை என இரண்டு முறை பூக்கும்; நவம்பர், டிசம்பரில் கனிகள் தரும், இந்த மரம்!


நெல்லி மரத்தின் இலைக் கொழுந்தை அரைத்து, மோரில் கலந்து சாப்பிட, சீதபேதி நிற்கும். நெல்லிப் பூவானது, மிகச் சிறந்த மலமிளக்கி. நெல்லியின் வேர், பத்தியக் கேட்டினால் விளையும் துன்பங்களை நீக்கும். குளிர்ச்சித் தன்மை கொண்ட நெல்லிக்கனியைத் துவையல் செய்து சாப்பிட்டால், வாந்தி நிற்கும்; உணவின் சுவையை அறியும் தன்மை அதிகரிக்கும். நெல்லிக்கனியானது உமிழ்நீரைப் பெருக்கி, தாகம் தணிக்கும். அரைத்துத் தலையில் தேய்த்துக் குளித்தால், கண்களும் தேகமும் குளிர்ந்துபோகும்; உஷ்ணம் தணியும். நெல்லிக்கனியை வெயிலில் உலர்த்தி, கொட்டையை நீக்கிக் காய வைத்தால் கிடைப்பதே 'நெல்லி முள்ளி'! இதனைத் சொம்பு தண்ணீரில் ஊறவைத்து, தினமும் வெறும் வயிற்றில் குடித்து வந்தால் உள்சூடு, எலும்புருக்கி நோய், வாந்தி மற்றும் வெள்ளைப்படுதல் ஆகியவை நீங்கும்.

சிதம்பரம் தாலுகாவில் உள்ள திருநெல்வாயில், கும்பகோணம்-பட்டீஸ்வரத்துக்குக் கிழக்கில், வடதளிக்குத் தெற்கில் உள்ள திருப்பழையாறை ஆகிய தலங்களின் விருட்சமும் நெல்லி மரம்தான்.

ஔவைக் கிழவிக்கு மிக அரிதான நெல்லிக்கனியைப் பரிசளித்தான், மன்னன் அதியமான். *'நஞ்சுண்டும் நிலைபெற்றுள்ள நீலமணி மிடற்று ஒருவன்போல நீ என்றும் நீடினிது வாழ்க!'* என ஔவைப்



ஸ்ரீமங்களாம்பிகை



நெல்லிவனநாதர்

கல்யாண வரம் தருவார் ஸ்ரீநெல்லிவன நாதர்!

"தினமும் ஆறு கால பூஜை; சித்திரையில் 15 நாட்கள் பிரம்மோத்ஸவம்-தெப்போத்ஸவம்; ஆவணியின் முதல் வெள்ளிக்கிழமையன்று திருக்கல்யாண உத்ஸவம் என சிறப்பு வாய்ந்த தலம் இது" என்கிறார் இந்தக் கோயிலின் தண்டபாணி குருக்கள்.



தண்டபாணி குருக்கள்

"சைவ சமயக் குரவர்கள் நால்வர்; அவர்களில் மூன்று பேரால் பாடப்பெற்ற தலம் இது. 40 ஏக்கர் நஞ்சையும், 20 ஏக்கர் புஞ்சையும் கொண்ட கோயில் இது. கோயில் நிலங்களை வேறு எவருக்கும் பட்டா எழுத முடியாதபடி கோயிலுக்கு எழுதி வைத்திருக்கிறான் மன்னன்.

இந்தத் தலத்து ஸ்ரீமங்களநாயகியையும் ஸ்ரீநெல்லிவனநாதரையும் வணங்கி வழிபட்டால், திருமணம் மற்றும் புத்திர பாக்கியமும் கைகூடும்!" என்று பெருமிதத்துடன் தெரிவித்தார் தண்டபாணி குருக்கள்.



கொடிமரமும் கோபுரமும்



திருக்குளம்



ஆலயத்தின் பிராகாரம்...

பிராட்டி வாழ்த்தியதைச் சங்க இலக்கியத்தில் காணலாம்! சிறுபாணாற்றுப்படை, அகநானூறு ஆகியவையும் நெல்லியைச் சிறப்பித்துள்ளன.

அத்தி மரத்தின் மகிமை!

கார்த்திகை நட்சத்திரத்துக்கான விருட்சம்

24

திருவொற்றியூர்
ஸ்ரீதியாகராஜஸ்வாமி திருக்கோயில்

கார்த்திகை - முருகக்கடவுளுக்கு உகந்த நட்சத்திரம். சரவணப் பொய்கையில் தனக்குப் பாலமுதூட்டி வளர்த்த கார்த்திகைப் பெண்களைச் சிறப்பிக்கும் விதமாக, கந்தக்கடவுள் இந்த நட்சத்திரத்தை தனக்குரியதாக்கிக் கொண்டதாக விவரிக்கின்றன புராணங்கள்.

இந்த நட்சத்திரத்தில் பிறந்தவர்களில் பெரும்பாலானோர், பேச்சுத்திறன் மிகுந்தவர்கள். குறைவாகத் தூங்கும் இயல்புடையவர். இவர்களது அறிவாற்றலும் சாமர்த்தியமும் மற்றவர்களை வியக்கவைக்கும். நல்ல பதவிகளும் அந்தஸ்தும் இவர்களைத் தேடி வரும். இவர்களில் சிலர், அரசியல்வாதிகளாகத் திகழ்வர்.

கார்த்திகை நட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்கு, வெள்ளிக்கிழமை மற்றும் ஏப்ரல் 21 முதல் மே 20-வரையிலான நாட்கள், அதிகம் நன்மை தருபவையாக அமையும். இந்த நாட்களில், கார்த்திகை நட்சத்திரத்தின் நல்ல மின்காந்தக் கதிர்வீச்சுகள் பூமியில் படரும். இந்த நட்சத்திரத்துக்கு உகந்த மரம்-அத்தி. இதன் உடலில் நிரம்பியுள்ள பால்,



அத்தி மரம்



ஸ்ரீவடிவுடையம்மன்


கார்மேகங்களைத் தன் வசம் ஈர்க்கும் சக்தி கொண்டது. இதன் குச்சிகளை எரித்தால் வெளிவரும் புகைக்கு, கார்மேகங்களைக் கவரும் ஆற்றல் உண்டு என்கிறது வானவியல் மூலிகை சாஸ்திரம்.

கார்த்திகை நட்சத்திரம், ரிஷப ராசி மற்றும் சுக்கிரன் கிரகத்துடன் தொடர்புகொண்டது. கார்த்திகை நட்சத்திரத்தின் கெட்ட கதிர்வீச்சுகள் மனித உடலில் படும்போது, உடல் மற்றும் மன ரீதியாக மாற்றங்கள், நோய்கள் உண்டாகின்றன. இதை 'கிருத்திகை தோஷம்' என்பார்கள். இந்த நோய்கள் மற்றும் தோஷத்தைப் போக்கும் பரிகார மரம் அத்தி என்கிறது மூலிகை சாஸ்திரம்.

சென்னை திருவொற்றியூர்-அருள்மிகு வடிவுடையம்மன் உடனுறை அருள்மிகு தியாகராஜஸ்வாமி ஆலயத்தின் (ஸ்ரீஆதிபுரீஸ்வரர் திருக்கோயில்) ஸ்தல விருட்சமும் அத்தி மரமே!

திருவொற்றியூர்-சுந்தரர், திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர் ஆகிய மூவரும் பாடிப்போற்றிய தலம்; பட்டினத்தடிகள் முக்தி பெற்றதும் இங்குதான். இந்தக் கோயிலில் ஸ்ரீவடிவுடையம்மனுக்கு முக்கியத்துவம் அதிகம். வள்ளலார், கவிச் சக்ரவர்த்தி கம்பர் ஆகியோர் இங்கு தங்கி, ஸ்ரீவடிவுடையாளை அனுதினமும் வழிபட்டதற்கான சான்றுகள் உள்ளன.

கோயிலுள் நுழைந்தால் சூரியன், அடுத்து சைவ சமயக் குரவர்



கோபுரமும் கொடிமரமும்

நால்வர், பிறகு ஜெகந்நாதர், அமிர்தகடேஸ்வரர், சகஸ்ரலிங்கம், தொடர்ந்து 27 நட்சத்திர லிங்கங்கள், பஞ்சபூத லிங்கம், ஸ்தல விருட்சம், மற்றும் திருவொற்றீஸ்வரர், ஸ்ரீபைரவர், ஸ்ரீகுழந்தீஸ்வரர் (கொழுந்து தீ ஈஸ்வரர்), ஸ்ரீவிநாயகர், ஸ்ரீமுருகன், ஸ்ரீதியாகராஜர், அறுபத்துமூவர் ஆகியோரையும், அடுத்ததாக விநாயகர், ஸ்ரீதுர்கை, ஏகாதச ருத்திரர், முருகன், வட்டப்பாறை அம்மன், சண்டிகேஸ்வரர், வடிவுடை அம்மன் என இறை மூர்த்தங்களும் அடியார்களும் விரவிக் காட்சி தருகிறார்கள்!

வைகுண்டத்தில், பெருமாளின் நாபிக் கமலத்தில் உதித்த பிரம்மன், உலகைப் படைக்கத் தொடங்கினார். ஆனால், அதற்கும் முன்னதாக பூமியில் ஒரு நகர் இருப்பதை அவர் கண்டார்.

“நான் பூவுலகைப் படைக்குமுன் அங்கு ஒரு நகர் காட்சி அளிக்கிறதே, அதைப் படைத்தது யார்?” என்று பரந்தாமனிடம் கேட்டார்.

“அதுதான் ஆதிபுரி எனப்படும் திருவொற்றியூர். அதைப் படைத்தவர் ஆதிபகவானான சிவன். அவருக்கு ஆதிபுரீஸ்வரர் என்றும் ஒரு பெயர் உண்டு. அவரைப் பிரார்த்தித்து, மீதி உலகைப் படைப்பாயாக!” என்று பெருமாள் எடுத்துரைத்தார்.

அதன்படி சிவனாரை வழிபட ஆதிபுரியான திருவொற்றியூருக்கு வந்தார் பிரம்மன். யாகம் வளர்த்துக் கடும் தவம் புரிந்து சிவனை வழிபட்டார். ஏழை - பணக்காரன் என்ற பாகுபாடின்றி, கூப்பிட்ட குரலுக்கு ஓடோடி வரும் சிவபெருமான், யாகத்திலிருந்து

தீப்பிழம்பாகத் (கொழுந்து தீயாக) தோன்றினார். பிரம்மாவுக்கு அருள்பாலித்தார். பிரம்மன் உலகைப் படைக்க ஏதுவாக, ஆழி சூழ்ந்த கடல் நீரை 'ஒத்தி' இருக்கும்படி, அதாவது தள்ளி இருக்கும்படி ஆணையிட்டார் சிவன். இதனால் இந்தப் பகுதி திருஒத்தியூர் என அழைக்கப்பட்டு, காலப்போக்கில் திருவொற்றியூர் ஆனதாகக் குறிப்பொன்று தெரிவிக்கிறது.

ஸ்ரீராமனின் மகன் லவன் இங்கு வந்து, பிரதோஷ காலத்தில் ராஜசூய யாகம் நடத்தி, வரங்கள் பல பெற்றதாகப் புராணங்கள் கூறுகின்றன. மேலும், அஸ்வினி முதலான 27 நட்சத்திரங்களும் இங்கு வந்து, இறைவனை வழிபட்டு, ஒவ்வொன்றும் ஒரு

திருப்பெயரை உச்சரித்தால்... எம பயம் இல்லை!

"**மூ**லவர், லிங்க வடிவில் சுயம்புவாக இருக்கிறார். இவருக்கு அபிஷேகம் கிடையாது. திருவொற்றீஸ்வரருக்கு 4 கால பூஜை, அபிஷேகம், ஆராதனை உண்டு. வடிவுடை அம்மனுக்கு 3 கால பூஜை. பரிவார சந்நிதிகளுக்கு தினமும் 2 கால பூஜைகள்.



சப்த மாதர்கள் நடுவில், காளி உருவில் இருக்கிறாள் சாமுண்டீஸ்வரி. ஸ்ரீவட்டப் பாறை அம்மன் என்று போற்றப்படுகிறாள். மாசி மகம் 10 நாள் திருவிழாவை சிறப்பாக நடத்துகிறோம். ஆரம்ப காலத்தில் அத்தி வனமாக இருந்ததால், அவுதம்ப க்ஷேத்திரம் என்ற பெயரும் இந்தத் தலத்துக்கு உண்டு" என்று கோயிலின் சிறப்புகளை விவரித்தார் திருவொற்றியூர் ஆலய அர்ச்சகர் சுந்தரராம சிவாச்சாரியர்.



சுந்தரராம சிவாச்சாரியர்

அவரே தொடர்ந்து, "திருவொற்றியூர் என்று சொன்னாலே போதும்; எம பயம் இல்லை. இந்த முக்தித் தலத்தில், எள்ளும் தண்ணீரும் இறைத்து முன்னோரை வழிபட, சிவகதி கிடைக்கும். ஸ்ரீதியாகராஜரைத் தரிசிப்பவருக்கு மறுபிறவி இல்லை. சிவப் பரம்பொருள் அமர்ந்த நிலையில் இங்கு நடனம் ஆடுவது விசேஷம்!" எனச் சிலிர்ப்புடன் விவரிக்கிறார் சுந்தரராம சிவாச்சாரியர்.



அத்திப் பழங்கள்

சிவலிங்கமாக மாறி முக்தி பெற்று, பக்தர்களுக்கு அருள் வழங்குகின்றனர்.

ஸ்ரீஆதிசங்கரர் இங்கு வந்து ஸ்ரீசக்ரம் நிறுவினார். ஸ்ரீவட்டப் பாறை அம்மன் கோயிலில் அப்போது நடந்து வந்த எருமைப் பலியை நிறுத்தினார். நம்பூதிரி எனும் கேரள அர்ச்சகர்களுக்கு, அருள்மிகு வடிவுடை அம்மன் கோயில் பூஜை முறைகளை ஏற்படுத்தித் தந்தார். இந்த ஆலயத்தில், பிரதோஷ வழிபாடும் தரிசனமும் வெகு விசேஷமான ஒன்று என்கிறார்கள்.

இந்த ஆலயத்தின் ஸ்தல விருட்சம் அத்தி என்பது கூடுதல் சிறப்பம்சம். அத்தி மரம், அனைத்து மதத்தினருக்கும் தெய்வீக மரமாக அமைந்துள்ளது. இறைத் தூதர் நபிகள் நாயகம் (ஸல்), அத்திப் பழத்தைச் சொர்க்கத்தின் பழம் என்றும், இது மூல நோய், மூட்டு வலி ஆகியவற்றுக்கு நல்ல மருந்து என்றும் அறிவித்திருக்கிறார். பைபிளிலும் இஸ்லாமிய நூல்களிலும்... ஆதிமனிதன் ஹஸரத் ஆதம், ஹஸரத் ஹவ்வா (ஏவாள்) ஆகியோர், சொர்க்கத்தில் அத்திப் பழத்தைப் பறித்துச் சாப்பிட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்து மதத்தில் அத்தி மரத்தைக் கடவுளுடன் சேர்த்து பூஜை செய்யப்படுவதை இன்றும் காணலாம்.

தத்தாத்ரேய மகரிஷி அத்தி மரத்தில் அமர்ந்திருப்பதாக குரு சரித்திரம் கூறுகிறது. 'அசுர குரு சுக்கிராச்சார்யரின் மறுபிறவியே அத்தி மரம்' என்கிறது சாதுர் மாஸ்ய மஹாத்மியம். நரசிம்ம அவதாரம் எடுத்த மஹாவிஷ்ணு ஹிரண்யகசிபுவை அழித்தபிறகு, அத்தி

மரப் பட்டையில் நகங்களைப் பதித்துச் சுத்தப்படுத்திக்கொண்டதாக புராணத்தில் ஒரு குறிப்பு உண்டு.

அத்தி மர இலைகளை உலர வைத்துப் பவுடராக்கி, தேனில் கலந்து சாப்பிட, பித்தம், பித்தத்தால் வரும் நோய்கள் குணமாகும். உடலின் எந்தத் துவாரத்திலிருந்து ரத்தம் வெளியேறினாலும், இது கட்டுப்படுத்தும். வாய்ப் புண், ஈறுகளில் சீழ் பிடித்தல் போன்ற நோய்களைக் குணப்படுத்த, அத்தி இலைகளைத் தண்ணீரில் கொதிக்க வைத்து, வாய் கொப்பளிக்கலாம்.

மரத்தின் பட்டையை இடித்து, பசு மோரில் ஊறவைத்து அதைக் குடித்தால், பெண்களில் சிலருக்கு அடிக்கடி உண்டாகும் பெரும்பாடு, மாதவிடாய் ஆகியன கட்டுப்படும். அத்திப்பழம், அத்திப்பிஞ்சு, அத்திக்காய் மூன்றையும் சமைத்துச் சாப்பிடலாம்.

மூலம், ரத்த மூலம், வயிற்றுக் கடுப்பு, சீதபேதி, வெள்ளைப்பாடு, வாத நோய்கள், மூட்டு வலி, சர்க்கரை நோய், தொண்டைப் புண், வாய்ப் புண் ஆகியவற்றுக்கு இது நல்ல மருந்தாகும். பழங்களை இடித்து அதன் சாற்றைப் பருகுவதால் சிறுநீரக நோய்கள் குணம் அடையும். அத்திப்பழம், உணவை விரைவில் ஜீரணிக்கச் செய்துவதுடன், தேகத்துக்குச் சுறுசுறுப்பைத் தந்து, கடும் பித்தத்தை வியர்வை மூலம் வெளியேற்றி, ஈரல், நுரையீரலில் ஏற்படும் தடைகளையும் நீக்குகிறது. அத்திப்பழம் சாப்பிடுவதால் வாய் துர்நாற்றம் நீங்கும். தலைமுடி நீளமாக வளரும். கை-கால் மூட்டுகளில் வலி வராமல் தடுக்கலாம் என்கின்றனர் மருத்துவர்கள்.

சங்க இலக்கியத்தில் 'அதவம்' என்று குறிப்பிடப் படும் அத்திமரம் பூத்து, அதன் பின் காய்க்கும். 'அத்தி பூத்தாற் போல' எனும் பழமொழி 'அத்தி அரிதாகப் பூக்கும்' என்று தெரிவிக்கிறது. எனினும், பிற்கால இலக்கியங்கள் சிலவற்றில், 'பூவாதே காய்க்கும் மரங்களும் உளவே' என்பதற்கு எடுத்துக்காட்டு அத்தி, ஆல் என்பர்.

'அதவத் தீங்கனி அன்ன செம்முகத்
துய்த்தலை மந்தி வன்பழற் தூங்கி

- என்கிறது நற்றிணை.

அத்தி மரம் ஆற்றங்கரையில் வளரும். இதன் கிளைகள் வெண்ணிறமானவை. இதன் கனி மிக மென்மையானது என்பதை, 'நண்டு மிதிக்க இதன் கனி குழையும்' என்ற குறுந்தொகையின் வரிகள் உணர்த்துகின்றன.

இலந்தை மரத்தின் மகிமை!

ரோகிணி நட்சத்திரத்துக்கான விருட்சம்

25


திரு ஓமாம்புலியூர்
ஸ்ரீதுயர்தீர்த்தநாதர் திருக்கோயில்

எவர் சொல்லுக்கும் கட்டுப்படாதவர்கள், ரோகிணி நட்சத்திரக்காரர்கள். குடும்பப் பிரச்னையை பெரியவர்கள் தீர்த்து வைக்க முற்பட்டால்கூட, ஏற்கமாட்டார்கள். அதே நேரம், 'நல்ல அறிவாளி; பொய் பேச மாட்டார்; கருணையுள்ளம் கொண்டவர்' என நற்குணங்கள் பல உண்டு.

ரோகிணி நட்சத்திரக்காரர்கள், புதிய நோய்களுக்கும் மனச் சங்கடங்களுக்கும் ஆளாகும்போது, அதை கிரக தோஷம் என்பர். இந்த நட்சத்திரத்திலிருந்து வெளியேறும் கெட்ட கதிர்வீச்சுகள்தான் அவர்களது கிரக தோஷத்துக்குக் காரணம் என்கிறது வானவியல் - மூலிகை சாஸ்திரம்.

ரோகிணி நட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்கு, வெள்ளிக்கிழமை மற்றும் ஏப்ரல் 21 முதல் மே 20-ஆம் தேதி வரையிலான நாட்கள், அதிக பலன்களைத் தருபவை. இந்த நட்சத்திரம், ரிஷப ராசி மற்றும் சுக்கிரன் கிரகத்துடன் தொடர்பு கொண்டது.

ரோகிணியுடன் நெருக்கமாக இருப்பது, இலந்தை மரம் (நாவல், களாக்காய், புளி ஆகியவையும் இலந்தை வகை மரங்களே!). இது, ரோகிணி



இலந்தை

நட்சத்திரத்தின் நல்ல கதிர்வீச்சுகளை தன்னுள் ஈர்த்துக்கொள்ளும். தினமும் அரை மணிநேரம் இந்த மரத்தடியில் அமர்வதும், இந்த மரத்தை தொடுவதும், அதன் காற்றை சுவாசிப்பதும் ரோகிணி நட்சத்திரக்காரர்களுக்கு மிகுந்த பலன்களைத் தரும்; உடல் மற்றும் மனப் பிரச்னைகள் தீரும்; கிரக தோஷம் நீங்கும்.

திருஓமாம்புலியூர் திருக்கோயிலின் ஸ்தல விருட்சம் - இலந்தை மரம். ஒருகாலத்தில், இலந்தை வனமாக திகழ்ந்த இந்தத் தலம், சிதம்பரத்தில் இருந்து சுமார் 35 கி.மீ. தொலைவிலும், காட்டுமன்னார்குடியில் இருந்து சுமார் 7 கி.மீ. தொலைவிலும் உள்ளது. இங்கு ஸ்ரீபூங்கொடியம்மை சமேத ஸ்ரீதுயர் தீர்த்தநாதர் கோயிலில், 2011 பிப்ரவரி மாதம் 7-ஆம் தேதி கும்பாபிஷேகம் நடை பெற்றது. சதுர வடிவ ஆவுடையாருடன் சுயம்பு மூர்த்தியாகத் திகழும் ஸ்வாமியை வடமொழியில் ஸ்ரீபிரணவ வியாக்ர புரீஸ்வரர் எனவும், அம்பிகையை ஸ்ரீபுஷ்ப லதாம்பிகை என்றும் அழைப்பர்.

பஞ்சபுலியூர் தலங்களில் ஒன்றான திருஓமாம்புலியூர், தேவாரப் பாடல் பெற்ற தலமாகும். இங்கே கோஷ்டத்தில் மட்டுமின்றி, ஸ்வாமி மற்றும் அம்பாள் சந்நிதிக்கு நடுவே, ஸ்ரீதட்சிணாமூர்த்தி சந்நிதிகொண்டிருப்பது விசேஷம்! அம்பாளுக்கு பஞ்சாட்சர மந்திரத்தை அருளியவர் இவர் என்கிறது ஸ்தல புராணம்.

இவர் அம்பாளுக்கு பிரணவ மந்திரத்தை உபதேசிக்கும்போது முருகப்பெருமான் அங்கு வந்தார். அவரை உள்ளே அனுமதிக்க மறுத்தார் நந்தி. உடனே வண்டாக உருவெடுத்த முருகன், அபிஷேக நீர் வெளியே வரும் பாதை வழியே உள்ளே சென்று, உமையவளின் கூந்தலில் உள்ள மலரில் அமர்ந்து, உபதேசத்தைக் கேட்டார்! பிறகு, கோபத்துடன் சுவாமிமலைக்குச் சென்று, தங்கினார். இதையறிந்த சிவனார், அங்கே சென்று அவரை அழைக்க... தந்தைக்கு 'ஓம்' எனும் பிரணவ மந்திரத்தை உபதேசித்து அருளினார், கந்தக் கடவுள். 'இது உனக்கு எப்படித் தெரியும்?' என சிவனார் வியப்புடன் கேட்க, நடந்தவற்றை விளக்கினார் கந்தக்கடவுள் என்கிறது சுவாமிமலை தலத்தின் புராணம்.



ஸ்ரீதட்சிணாமூர்த்தி

அம்பாளுக்கு, ஓம் எனும் பிரணவ மந்திரம் உபதேசிக்கப்பட்ட தலம், 'ஓமாம்' என்று பெயர் பெற்றதாகச் சொல்வர். அதேபோல், வேடனைத் துரத்திய புலிக்கும் முக்தி கொடுத்த ஊர் என்பதால், ஓமாம்புலியூர் என அழைக்கப்படுகிறது.



ஸ்ரீபூங்கொடியம்மை

இரண்டு தட்சிணாமூர்த்திகள் அருளும் தலம் என்பதால் சூரியன், சனீஸ்வரர் தவிர நவக்கிரக சந்நிதிகள் இல்லை. 3-ஆம் குலோத்துங்கச் சோழன் மற்றும் பல்லவ மன்னன் சகல புவன சக்கரவர்த்தி கோப்பெருஞ்சிங்க தேவர் ஆகியோர் கோயிலுக்குத் திருப்பணி செய்துள்ளதைத் தெரிவிக்கும் கல்வெட்டுகள் உள்ளன.

அம்பிகை, இலந்தை மரத்தடியில் அமர்ந்து தவமிருந்தாளாம். ஆகவே, வெளிப் பிராகாரத்தில் இலந்தை மரமும், மரத்தடியில் தவ நிலையில் அம்பிகையின் திருவிக்கிரகமும் அமைந்துள்ளது. தவக் கோலத்தில் உமையவள் இருப்பதால், இங்கே பத்து நாள் உத்ஸவம், கொடிமரம், பள்ளியறை ஆகியவை இல்லை. மாசி மகம் சிறப்புறக் கொண்டாடப்படுகிறது. அன்றைய நாளில், பஞ்சமூர்த்திகள்



ஸ்ரீதுயர்தீர்த்தநாதர்

திருவீதியுலா, அருகில் உள்ள கொள்ளிடம் ஆற்றில் தீர்த்தவாரி என அமர்க்களப்படும்.

இலந்தை மரத்தில் வைட்டமின் சி அதிகம் உள்ளது. மேலும் கால்ஷியம், காப்பர், இரும்பு முதலான சத்துக்களும், மாங்கனீசு, ஈயம், மக்னீஷியம், ஸிங்க் ஆகிய உலோகச் சத்துக்களும் உள்ளன என்கிறது ஓர் ஆய்வு! இலந்தைப் பழம் நச்சுக் கிருமிகளைக் கொல்லும் தன்மை வாய்ந்தது. தோல் நோய், மேக நோய் மற்றும் நுரையீரலைப் பாதிக்கச் செய்யும் கிருமிகள் ஆகிய வற்றையும் வேரோடு சாய்க்கும் வல்லமை இலந்தைக்கு உண்டு என்கின்றனர் விஞ்ஞானிகள்!

பத்து முதல் முப்பது இலந்தைப் பழங்களைச் சாப்பிட்டால், மிகச் சிறந்த ஊட்டச்சத்தாக அமையும்; ரத்த ஓட்டம் சீராகும்; உஷ்ணம் தணியும். கல்லீரல், மண்ணீரல் வலியைக் குணமாக்கும். மேலும், கண்ணில் உஷ்ணத்தால் ஏற்படும் வலி மற்றும் எரிச்சலில் இருந்து நிவாரணம் பெறவும் இதனைப் பயன்படுத்தலாம்.

ரோகிணி, ரேவதி நட்சத்திரமா நீங்கள்?!

"பாப்பாக்குடிங்கற ஊரை, சதானந்தன் எனும் மன்னன் ஆட்சி செய்தான். தொழுநோயால அவதிப்பட்டவன், இங்கே வந்து சிவனாரை மனமுருகிப் பிரார்த்தனை பண்ணினான். அப்ப, 'வரம் தரும் குட்டையில் குளிச்சா, நோய் குணமாகும்'னு அசரீரி கேட்டுச்சு. அதன்படி மன்னன் அந்தக் குட்டையில குளிக்க, நோய் நீங்கி குணமானான். ஸ்வாமிக்கு ஸ்ரீதுயரம்தீர்த்தநாதர்னு திருநாமம் உண்டாச்சு. அந்தக் குட்டை இன்னிக்கும் இருக்கு" என்று சிலிர்ப்புடன் விவரிக்கிறார் ஆலயத்தின் ஜெகதீச குருக்கள்.


ஜெகதீச குருக்கள்

"இங்கே, ஸ்ரீதட்சிணாமூர்த்தியை வணங்கினால், குரு தோஷம் நிவர்த்தியாகும். அம்பிகை, தவக் கோலத்துல காட்சி தர்ற தலங்கள்ல இதுவும் ஒண்ணு. அதனால, இங்கே மனமுருகிப் பிரார்த்தனை பண்ணினா, திருமண தோஷம் விலகும்; குழந்தை வரம் கிடைக்குங்கறது நம்பிக்கை. ரோகிணி நட்சத்திரத்துக்கு உகந்த இலந்தை மரத்தை ஸ்தல விருட்சமாகக் கொண்ட இந்தக் கோயில்ல இன்னொரு விசேஷம்... ரேவதி நட்சத்திர நாள்லதான், ஸ்ரீதட்சிணாமூர்த்தி உமையவளுக்கு மந்திரோபதேசம் செஞ்சார். அதனால, ரேவதி நட்சத்திரக்காரங்க இங்கே வந்து பிரார்த்தனை செஞ்சுக்கிட்டா உடனே அதை நிறைவேத்திக் கொடுத்துடுவா, அம்பிகை!" என நெக்குருகச் சொல்கிறார் ஜெகதீச குருக்கள்.





இலந்தைக் கொட்டையை இடித்துப் பௌடராக்கிச் சாப்பிட்டால், வறட்டு இருமல், பேதி ஆகியவை குணமாகும். நாட்டு இலந்தைப் பழம், குடல் மற்றும் வயிற்றுப் பூச்சிகளைச் சாகடிக்கும் குணம் கொண்டது; சீதபேதியைச் சரியாக்கும். இதன் விதைகளைக் கட்டிகளில் அரைத்துப் பூசினால், கட்டிகள் உடையும்; குணமாகும். இந்த இலைகளைக் கஷாயமாக்கிக் குடித்தால், வலி குறையும்.

கீழ்வேளூர் ஸ்ரீகேடிலியப்பர், பவானி ஸ்ரீசங்கமேஸ்வரர், திருவெண்பாக்கம் மற்றும் காஞ்சிபுரம்-வந்தவாசி சாலையில் உள்ள திருக்குரங்கனில் முட்டம் ஆலயங்களிலும், இலந்தை மரமே ஸ்தல விருட்சம்.

அரளி க்ஷேத்திர அமாவாசை வழிபாடு!

மிருகசீரிடம் நட்சத்திரத்துக்கான விருட்சம்

26

கரையபுரம்
ஸ்ரீகரைவீரநாதர் திருக்கோயில்

படிப்பில் முதலிடம், எதையும் எளிதில் கிரகித்துக் கொள்ளும் பேராற்றல், போதுமென்ற மனப்பான்மை, மகிழ்ச்சியாகவும் எளிமையாகவும் வாழும் தன்மை, பொறாமை கொள்ளாமை, அளவோடு பேசுதல், ரகசியம் காப்பாற்றுதல், எடுத்த காரியத்தை எப்படியேனும் செய்து முடிக்கும் தன்மை, தாயின் மீது அதித பாசம்... மிருகசீரிடம் நட்சத்திரக்காரர்களின் பொதுவான குணங்கள் இவை.

மிதுன ராசி மற்றும் புதன் கிரகத்துடன் தொடர்பு கொண்ட இந்த நட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்கு, மே 21 முதல் ஜூன் 20 வரையிலான நாட்கள், பலன் மிகுந்த காலகட்டமாகும். சில நேரங்களில், இந்த நட்சத்திரத்தின் கெட்ட கதிர்வீச்சுகளும் வெளிப்படும். இதனால் விளையும் நட்சத்திர தோஷத்தை நீக்கி, உடல் - உள்ளத்துக்கு ஆரோக் கியத்தைத் தரும் நற்குணங்களை அரளிச் செடியில் வைத்திருக்கிறான் இறைவன்.

மிருகசீரிட நட்சத்திரத்தின் நல்ல கதிர்வீச்சுகளை ஈர்த்து வைத்திருக்கும் இந்தச் செடியை ஸ்பரி சிப்பதும், தினமும் அரை மணி நேரம் அருகில்



அரளிப் பூ

அமர்ந்திருப்பதும், இந்தச் செடியினால் தயாரிக்கப்பட்ட மருந்துகளைப் பயன்படுத்துவதும் சிறப்பு. இதனால், இந்த நட்சத்திரத்தால் ஏற்படும் தோஷங்கள் நீங்குவதுடன், இந்த நட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்கு புத்துணர்வும் மனமகிழ்ச்சியும் கிடைக்கும். திருவாரூர்-குடந்தை சாலையில், சுமார் 10 கி.மீ. தொலைவில் (குடவாசல் தாலுகாவில்) உள்ளது கரையபுரம். இங்கே ஸ்ரீகரைவீரநாதர் கோயிலின் ஸ்தல விருட்சம் - அரளிச் செடி!

பிரம்மன் வழிபட்டதால், மூலவருக்கு ஸ்ரீபிரம்மபுரீஸ்வரர் என்றும் திருநாமம் உண்டு. அம்மையின் திருப்பெயர்- ஸ்ரீபிரத்யட்சமின்னம்மை. இந்தத் தலம் குறித்த தனது பதிகம் ஒவ்வொன்றிலும், 'இந்தத் தலத்தை வழிபட வினை நீங்கும், பாவம் அகலும்' எனக் குறிப்பிடுகிறார் திருஞானசம்பந்தர். அமாவாசை தினங்களில் இந்தத் தலத்துக்கு வந்து இறைவனை வழிபட, இன்னல்கள் நீங்கும்; சகல சம்பத்துகளும் கிடைக்கும்.

மூலவருக்கு வலப்புறம் காட்சி தருகிறாள் அம்பாள். அர்த்த மண்டபத்தில், திருவுலாவுக்காகச் சென்ற ஸ்வாமியின் வரவை எதிர்நோக்கி காத்திருந்த இந்த அம்பிகையிடம், “வெளியே போன புருஷன் வரலையேனு நீ கவலைப்படுறே! எங்களுக்குக் கல்யாணமே ஆகலையே... நாங்கள் யாருக்காகக் கவலைப்படுவது?” என்று கேட்டார்களாம் ஊரிலுள்ள கன்னிப் பெண்கள்!

உடனே, 'இந்த ஆலயம் வந்து தொழும் கன்னிகளுக்கு விரைவில் திருமணம் நடக்கும்' என்று அசரீரி ஒலித்ததாம்! இன்றும் இங்கு வந்து பிரார்த்திக்கும் கன்னிப் பெண்கள், வெகு விரைவில் திருமாங்கல்ய பலன் பெறுகிறார்கள் என்பது நம்பிக்கை. அம்பாள்-ஸ்வாமிக்கு நடுவே, திருமணக் கோலத்துக்கு சாட்சியாக நிற்கிறார் சூரியதேவன்.

ஆதியில் செவ்வரளிக் காடாகத் திகழ்ந்தது இந்தத் தலம். இங்கிருந்த லிங்கத்தை கௌதம முனிவர் பலகாலம் வழிபட்டதாகவும், பின்னர் அவர் கடும் தவம் செய்து, சிவ தரிசனம் பெற்றதாகவும் தல புராணம் கூறுகிறது. அந்த முனிவர், "இறைவா, எப்போதும் உம்மையே பூஜித்திருக்க வேண்டும். பிறகு உம்முடனேயே ஐக்கியமாகிவிட வேண்டும்" என இறைவனிடம் வேண்டினாராம். அதன்படி, இங்குள்ள சிவலிங்கத்துக்குள் கௌதமர், உறைந்திருப்பதாக ஐதீகம்.

மூலவருக்கு முன்னால் ஸ்ரீவிநாயகரும் ஸ்ரீமுருகனும் காட்சி தருகின்றனர். மேலும் நாகர், சைவக் குரவர் நால்வர்,

முத்து முத்தாக நீரூறும் அதிசயம்!

"செவ்வரளிக் காட்டில் தோன்றிய ஸ்ரீகரைவீரநாதர் சக்தி வாய்ந்தவர். அமாவாசை நாட்களில், மூலவரின் கருவறைச் சுவரில் முத்து முத்தாக நீர் சுரக்கும் அதிசயத்தைக் காணலாம்" எனச் சிலிர்ப்புடன் விவரிக்கிறார் ஸ்ரீகரைவீரநாதர் கோயிலின் அர்ச்சகர் சரவணபவா குருக்கள்.


"இங்கு, நந்திக்கு தனிச் சந்நிதி இருக்கிறது. அமாவாசை நாட்களில் ஆயிரம் பேருக்கு அன்னதானம் நடக்கும்; அன்று அபிஷேக - ஆராதனைகளும் ஹோமமும் சிறப்புற நடைபெறும். தவிர, மாதம் இருமுறை பிரதோஷ வழிபாடும் விசேஷம். தேவாரத்தில் புகழ்பெற்ற திருத்தலங்கள் பலவற்றைக் குறிப்பிடும் திருநாவுக்கரசர், அந்த ஆலயங்களுக்குச் சென்று வழிபட்டால் கிடைக்கும் பலன்கள், இந்தத் தலத்திலேயே கிடைக்கும் என்று பாடியுள்ளார். குறிப்பாக, இங்கு வந்து வழிபடுவோருக்குப் பாவ - தோஷ நிவர்த்தியும், கன்னிப் பெண்களுக்கு மாங்கல்ய பாக்கியமும் கைகூடுவதும் திண்ணம்" என்கிறார் குருக்கள்.




சரவணபவா குருக்கள்

இங்கு, காலை 9:00, பகல் 11:00, மாலை 7:00, இரவு 8:30 மணி என தினமும் நான்கு கால பூஜைகள் நடைபெறுகின்றன.








அம்பிகைக்கு முன்னால் இடப்புறம் சப்த கன்னியர், பிராகாரத்தில் ஸ்ரீராஜகணபதி, ஸ்ரீதட்சிணாமூர்த்தி, கருவறைக்குப் பின்புறம் லிங்கோத்பவருக்கு பதில் ஸ்ரீமகா விஷ்ணு, வள்ளி - தெய்வானை சமேத ஸ்ரீசுப்ரமணியர், ஸ்ரீபிரம்மன், ஸ்ரீசண்டிகேஸ்வரர், துர்கை ஆகியோரையும் இங்கு தரிசிக்கலாம். மேலும், இந்தக் கோயிலில் சுமார் ஐந்தரை அடி உயரத்தில் ஒரு நடராஜர் விக்கிரகம், தூசு படிந்த நிலையில் இருந்ததாம். பிற்பாடுதான், அது முழுக்க முழுக்கத் தங்கத்தாலான சிலை என்பது தெரியவந்ததாம். தற்போது, அரசாங்கப் பாதுகாப்பில் உள்ளது அந்த விக்கிரகம். இங்கு வந்து வழிபட... சிவனாரின் அட்டவீரட்டான தலங்களைத் தரிசித்த பலன் கிடைக்கும் என்கிறார்கள்.

கழுதை ஒன்று இந்தத் தலத்தின் இறைவனைப் பிரார்த்தித்து தவம் இருந்ததாம். அது இறக்கும் நிலையில் ஈசனின் திருக்காட்சி கிடைத்தது. ஸ்வாமியைக் கண்ட மகிழ்ச்சியில், எழுந்து வெகு தூரம் ஓடிய கழுதை, கடற்கரையை அடைந்து, அங்கிருந்தபடி ஸ்வாமியை வணங்கியது. ஸ்வாமியும் ஆலயம் இருக்கும் இடத்தில் இருந்தே கழுதைக்குக் காட்சி தந்தாராம். இன்றும் கோயிலிலிருந்து பல கி.மீ. தூரமுள்ள கடற்கரை வரை... ஒரே நேர்க்கோடாக



ஸ்தல விருட்சம்

உள்ள பகுதியில் வீடுகள் இல்லை! ஸ்வாமி, அக்னிப் பார்வையில் கரைகண்டநாதராகக் காட்சி தருவதால், அவருக்கு ஸ்ரீகரைவீரநாத ஸ்வாமி என்று பெயர் ஏற்பட்டதாக ஒரு குறிப்பு உண்டு. இங்குள்ள ஸ்தல விருட்சமான செவ்வரளிக்கு, பக்தர்கள் மூன்று முறை நீருற்றி வழிபடும் முறை காலகாலமாக இருந்து வருகிறது. அப்படி.... வழிபாட்டின் பொருட்டு, எவ்வளவு நீர் ஊற்றினாலும், அந்தத் தண்ணீர் அப்படியே பூமிக்குள் உறிஞ்சப்பட்டுவிடுகிறது!

செவ்வரளியின் பூ, இலை, பட்டை, மரப்பால், மரத் தண்டு ஆகியன மருத்துவத்துக்குப் பயன்படுகின்றன. இலைகளைச் சூடுபடுத்தி வீக்கங்களின் மீது கட்டினால் வீக்கம் வற்றும். பூ மொட்டுகளை



ஸ்ரீபிரத்யட்சமின்னம்மை



ஸ்ரீகரைவீரநாதர்

வெற்றிலையுடன் கலந்து (மருத்துவர் ஆலோசனையுடன்) மென்றால், காய்ச்சல் தணியும் இதன் பட்டைக்கு ஆஸ்துமா கிருமிகளைக் கட்டுப்படுத்தும் சக்தி உள்ளது. வேரின் பட்டை, வெள்ளை வெட்டை எனும் நோய்க்கு மருந்தாகப் பயன்படுகிறது. விருட்சத்தின் பாலுக்கு வயிறு மற்றும் குடலை இயக்கக்கூடிய சக்தி உண்டு. கீல்வாதத்துக்கு இந்தப் பாலைப் பூசினால், குணம் அடையலாம்.

சந்தனம், கற்பூரம் ஆகியவற்றைச் சேர்த்து நமைச்சல் குணமாகப் பூசலாம். மிருதுவான செவ்வரளியைக் கரையான் அரிப்பது இல்லை. அரளி விதை விஷத்தன்மை வாய்ந்தது. ஆகவே, அரளியை மருத்துவத்துக்குப் பயன்படுத்துமுன், மருத்துவரின் ஆலோசனையைப் பெறுவது மிக அவசியம். சுயமாக முயற்சி செய்வது விபரீதத்தில் முடியலாம். ஜாக்கிரதை!

பன்னீர் மரத்தின் மகிமை!

திருவாதிரை நட்சத்திரத்துக்கான விருட்சம்

27

திரு இந்தளூர்
ஸ்ரீபரிமள ரங்கநாதர் திருக்கோயில்

வலிமை மிக்கவர்கள்; கோபக்காரர்கள்; ஏழைகளாக இருந்தாலும், பிறருக்கு உதவும் கருணைக் குணம் கொண்டவர்கள் என்று திருவாதிரை நட்சத்திரக்காரர்களைச் சொல்வார்கள். அடிக்கடி நோயில் சிக்கித் தவிப்பார்கள்; ஆனால், விரைவிலேயே குணமடைந்துவிடுவார்கள்!

முன்கோபம், நன்றி மறத்தல், உறவுப் பகை ஆகிய குணங்கள் இருப்பினும் கவர்ச்சியான தேகம், அழகிய கண்கள், நீண்ட புருவங்கள் எனத் திகழ்வார்கள். அதுமட்டுமா?! நினைத்த காரியத்தை எப்பாடு பட்டேனும் முடித்தே தீருவது எனும் நெஞ்சுறுதி படைத்தவர்கள், இவர்கள்!

மிதுன ராசி மற்றும் புதன் கிரகத்துடன் தொடர்பு கொண்டது திருவாதிரை. இந்த நட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்கு, புதன்கிழமை மற்றும் மே 21 முதல் ஜூன் 20-ஆம் தேதி வரை நல்ல நாட்கள் என்கிறது வானசாஸ்திரம். இந்த நாட்களில், நல்ல கதிர்வீச்சுகள், பூமியின் மீது அதிக அளவில் வெளிப்படுகின்றன. இதனால் மக்கள் பலருக்கு நன்மைகள் விளைகின்றன.

இதன் நச்சுத்தன்மை கொண்ட கதிர்வீச்சுகளால், முழங்கால் மூட்டு வலி, எலும்பு மூட்டுகளின் தேய்மானம் ஆகியவை உண்டாகின்றன. கண் அழற்சி, ரத்த வாந்தி, பசியின்மை, தொழுநோய், வெண்குஷ்டம், மூலம், சர்க்கரை நோய், தேக பலவீனம் ஆகிய பிரச்னைகள், திருவாதிரை நட்சத்திரத்துடன் தொடர்பு கொண்டவையாக இருக்கும். இந்த நட்சத்திரத்தின் நல்ல கதிர் வீச்சுகளைத் தனக்குள் வாங்கிச் சேமித்துக்கொள்கிற சக்தி, பன்னீர் மரத்துக்கு உண்டு. அதுமட்டுமா?! நச்சுத்தன்மை கொண்ட கதிர்வீச்சுகளை அழிக்கவும் செய்யுமாம், இந்த மரம். திருவாதிரை நட்சத்திர அன்பர்கள், தினமும் அரை மணி நேரம், பன்னீர் மர நிழலில் இளைப்பாறுவதும், இந்த மரத்திலிருந்து தயாரிக்கப்பட்ட மருந்துகளைச் சாப்பிடுவதும் நலம் தரும்.

மயிலாடுதுறையில் இருந்து நீடூர் செல்லும் வழியில் சுமார் 2 கி.மீ. தொலைவில் உள்ளது திருஇந்தளூர். பஞ்ச அரங்க க்ஷேத்திரங்களில் இதுவும் ஒன்று (ஸ்ரீரங்கப்பட்டினம் - யோக சயனம்; திருப்பேர் நகர் - கோவிலடி - புஜங்க சயனம்; ஸ்ரீரங்கம் - போக சயனம்;

'தோஷ நிவர்த்தி ஸ்தலம்!'

"தசரத சக்ரவர்த்தியின் தாத்தா அம்பரீஷன் கட்டிய கோயில் இது. அம்பரீஷன், வசிஷ்டர், விஸ்வாமித்திரர் ஆகியோர் வணங்கிய பெருமாள், இவர். இவரைத் தரிசிக்க, மிருத்யு தோஷ நிவர்த்தி கிட்டும். திங்கட்கிழமையில் சகஸ்ரநாம அஷ்டோத்திர பூஜை செய்தால், சந்திர தோஷம் நீங்கும்; புதனன்று வணங்கினால், பிரம்மஹத்தி தோஷம் விலகும்!" என ஆலயத்தின் தலைமை அர்ச்சகரான ஸ்ரீநிவாச ரங்க பட்டாச்சார்யர் தெரிவிக்கிறார்.

சித்திரை மாதப் பிறப்பு, ஆடிப்பூரம், ஆவணியில் பவித்திரோத்ஸவம், புரட்டாசியில் நவராத்திரி, ஐப்பசியில் கருட சேவை, காவிரி தீர்த்தவாரி என விழாக்களுக்குப் பஞ்சமில்லாத ஆலயம் இது! ஐப்பசியில் துவங்கி கார்த்திகை மாதம் 1-ஆம் தேதி வரை, துலா காவிரி எனப்படும் காவிரித்தாய் உத்ஸவ விழா விமரிசையாக நடந்தேறும். அப்போது, காவிரி ஆற்றில், பெருமாள் எழுந்தருளி, தீர்த்தவாரி வைபவம் நடைபெறும். இதில் கலந்து கொண்டு ஸ்வாமியைத் தரிசிப்பது, கங்கையில் நீராடிய புண்ணியத்தைத் தரும் என்பது ஐதீகம்!" என்கிறார் ஸ்ரீநிவாச ரங்க பட்டாச்சார்யர்.


ஸ்ரீநிவாச ரங்க பட்டாச்சார்யர்





பன்னீர் மரம் மற்றும் பூக்கள்

கும்பகோணம் ஸ்ரீசாரங்கபாணி கோயில் - உத்தான சயனம்). இங்கே, வீர சயனத்தில் அருள்கிறார் ஸ்ரீபரிமள ரங்கநாதர். இந்தத் தலத்தின் விருட்சம் - பன்னீர் மரம்!

108 வைணவத் தலங்களுள் ஒன்று; திருமங்கை ஆழ்வாரால் மங்களாசாசனம் செய்யப்பட்ட ஆலயம்; திருமால், வேதங்களை உபதேசித்ததால், வேதா மோத விமானத்துடன் காட்சி தரும் தலம் எனப் பெருமைகள் பல உண்டு, இந்தத் தலத்துக்கு. வலது கரத்தைத் தலைக்கு வைத்துக்கொண்டு, இடது கரத்தை நீட்டியபடி, மற்ற கரங்களில் சங்கு - சக்கரம் ஏந்தியபடி, சயனக் கோலத்தில் அற்புதக் காட்சி தருகிறார், பெருமாள். இவரின் சிரசுக்கு அருகில் காவிரித்தாய்; திருவடிக்குக் கீழே கங்காதேவி மற்றும் சந்திரன், சூரியன்; நாபியில் பிரம்மனும், திருவடிகளில் எமனும், அம்பரீஷனும் வழிபடுகின்றனர். இந்தளம் என்றால் தூபக்கால் என்று அர்த்தம். உலகுக்கே வேதங்களின் நறுமணத்தை வெளிப்படுத்துகிற தூபக்காலாகத் திகழ்கிறது இந்தத் தலம். ‘பச்சை மாமலைபோல் மேனி’ என தொண்டரடிப் பொடியாழ்வார் பாடியதுபோல், இங்கே பெருமாள், மரகதக் கல்லில் (பச்சை நிறம்) அருள் பாலிக்கும் அழகே அழகு!

ஒருமுறை த்வஜபதி, தட்சன் ஆகியோர் விடுத்த சாபத்தால், தொழுநோய்க்கு ஆளானான் சந்திரன். பிறகு இந்தத் தலத்தின் புஷ்கரணியில் நீராடி தவம் புரிந்து, திருமாலின் அருளால் நோய் தீரப்பெற்றான். இதனால் இந்தத் தலம், இந்துபுரி எனப்படுகிறது (இந்து = சந்திரன்).

மது, கைடபாலன் என இரண்டு அரக்கர்கள், நான்கு வேதங்களையும் திருடியது மட்டுமின்றி, தேவர்களையும்



ஸ்ரீபரிமள ரங்கநாதர் திருக்கோயில்



உற்ஸவ தெய்வங்கள்

துன்புறுத்தினர். பிறகு, கடலுக்கு அடியில் வேதங்களுடன் ஒளிந்துகொண்டனர். அப்போது, தேவர்களின் பிரார்த்தனைக்கு இணங்க, மத்ஸ அவதாரம் எடுத்த திருமால், அரக்கர்களை அழித்து, தனது சதுர்க் கரங்களால், சதுர் வேதங்களையும் மீட்டார். அதுமட்டுமா?! வேதப் பக்கங்கள், கலைந்தும் நனைந்தும் கிடக்க... அவற்றை அடுக்கி, சுத்தம் செய்து, சுகந்தம் கமழச் செய்தாராம். இதனால், திருமாலுக்குப் பரிமள ரங்கநாதர், சுகந்தவனநாதர் எனத் திருநாமங்கள் உண்டானது என்கிறது ஸ்தல புராணம். தாயாருக்கு, ஸ்ரீபரிமள ரங்கநாயகி, சுகந்தவனநாயகி, ஸ்ரீபுண்டரீகவல்லி எனப் பலத் திருநாமங்கள் உண்டு.

தல விருட்சமான பன்னீர் மரம், அகலமான, கொத்துக் கொத்தான இலைகளையும், வெள்ளை நிற, வாசனை மலர்களையும் கொண்டது. இந்தப் பூக்கள் மூலம் பித்தத்தைக் குறைக்கிற மருந்துகள் தயாரிக்கலாம். பன்னீர் மரப்பூவினால் வாந்தி, ருசியற்ற தன்மையைப் போக்குதல், தாகம், அதிகப் பித்தம் ஆகியவை குணமாகும் என்கின்றன மருத்துவ நூல்கள். பித்த ஜுரத்துக்கும், இந்தப் பூக்களை மருந்தாகப் பயன்படுத்துகின்றனர்.

திருச்சோற்றுத்துறை ஸ்ரீதொலையாச் செல்வேஸ்வரர், கீழைத் திருக்காட்டுப்பள்ளி ஸ்ரீஆரண்ய சுந்தரேஸ்வரர் ஆகிய ஆலயங்களின் தலவிருட்சமாகவும் திகழ்கிறது, பன்னீர் மரம்.

மூங்கில் மகிமை!

புனர்பூசம் நட்சத்திரத்துக்கான விருட்சம்

28

திருவேட்களம்
ஸ்ரீபாசுபதேஸ்வரர் திருக்கோயில்

ஸ்ரீராமபிரானின் திருநட்சத்திரம் புனர்பூசம். புதன் கிரகம், மிதுன ராசி ஆகியவற்றுடன் தொடர்பு கொண்டது இது! புதன்கிழமை மற்றும் மே 21 முதல் ஜூன் 20-ஆம் தேதி வரை பிறந்தவர்களுக்கான கிரகம் - புதன்; இந்த நட்சத்திரத்துக்கு உரிய விருட்சம் - மூங்கில்!

மேற்குறிப்பிட்ட நாட்களில், புனர்பூச நட்சத்திரத்தின் நல்ல கதிர்வீச்சுகள், பூமிக்கு வரும். அதை மூங்கில் தனக்குள் வாங்கிக்கொண்டு பலனைத் தரும். அதேபோல், கெட்ட கதிர்வீச்சுகளால் ஏற்படும் உடல் மற்றும் மன ரீதியான பிரச்னைகளையும் தீர்க்கும்.

வீண் செலவைத் தவிர்ப்பவர்கள்; உழைப்பால் சாதிப்பவர்கள்; கருணை குணம் கொண்டவர்கள், புனர்பூசக்காரர்கள். இவர்களில் ஒருசிலர் மூட்டு வலி, தோல் நோய், வாயுத் தொல்லை, தேக பலவீனம், காய்ச்சல், வலியுடன்கூடிய மாதவிலக்கு ஆகியவற்றால் அவதிப்படுவார்கள். இதுபோன்ற பிரச்னைகளில் இருந்து தற்காத்துக் கொள்ளவும், புனர்பூச நட்சத்திர தோஷம் விலகவும், இந்த நட்சத்திரக்காரர்கள்



ஸ்ரீபாசுபதேஸ்வரர் திருக்கோயில்

தினமும் அரை மணி நேரம் மூங்கில் மரத்துக்கு அருகில் இருப்பது சிறப்பு. இதனால், தேக வலிமை மற்றும் மன அமைதி கிட்டும்.

சிதம்பரம் அண்ணாமலைநகரில் உள்ள திருவேட்களம் திருத்தலத்தில், ஸ்ரீசற்குணாம்பாள் சமேத ஸ்ரீபாசுபதேஸ்வரர்

'மனோ பலம் கூடும்!'

"ஸ்ரீசற்குணாம்பாளின் சந்நிதிக்கு எதிரில், நந்தி இருப்பது விசேஷம். ஒரு கையில் தாமரை, இன்னொரு கையில் நீலோத்பலம் (செங்கழுநீர் மலர்) கொண்டு காட்சி தரும் அம்பிகையை, ஸ்ரீமனோன்மணி என்றும் அழைப்பார்கள். அம்பாளுக்குச் சந்தனக்காப்பு சார்த்தி வணங்கினால், நினைத்தது யாவும் நடந்தேறும்" என்கிறார் கோயிலின் செந்தில் குருக்கள்.



செந்தில் குருக்கள்

இங்கு, ஸ்ரீதட்சிணாமூர்த்தி சந்நிதிக்கு முன் அமர்ந்து, காயத்ரி ஜபம் செய்தால், மாணவர்கள் கல்வி- கேள்வியில் சிறந்து விளங்குவார்கள்; தல விருட்சமான மூங்கில் மரத்தின் கீழேயுள்ள மண்ணை எடுத்து, வாய் பேச இயலாதவர்களின் நாக்கில் தடவினால், பேசும் ஆற்றலைப் பெறுவார்கள் என்பது நம்பிக்கை!


"சோமவாரத்தன்று (திங்கட் கிழமை) 108 முறை வலம் வந்து, பிரார்த்தித்தால் மனோபலம் கூடும்; திறமை வெளிப்படும் என்பது ஐதீகம்!" என்கிறார் செந்தில் குருக்கள்.



மூங்கில் மரம்

கோயில் அமைந்துள்ளது. இந்தத் தலத்தின் விருட்சம் - மூங்கில் மரம். திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர் ஆகியோரால் பாடப்பெற்ற தலம் இது. அருணகிரிநாதரும் இங்கேயுள்ள முருகப்பெருமானை உள்ளமுருகிப் பாடியுள்ளார். ஒருகாலத்தில் மூங்கில் மரங்கள் சூழ இருந்ததால், ஸ்ரீவேணுபுரம் என்றும் இந்தத் தலத்துக்குப் பெயர் அமைந்ததாம். வேடர்கள் அதிகம் வசித்ததால், திருவேட்களம் எனப் பெயர் பெற்றதாகவும் சொல்வர்.

வனவாசத்தின்போது, இந்தத் தலத்தைச் சொல்லி, ‘புனிதமான இந்த இடத்தில் இங்கேயே தவம் செய்க!' என அர்ஜுனனுக்கு அருளினார் ஸ்ரீகிருஷ்ணர். அதன்படி மூங்கில் வனத்தில், மூங்கில் மரத்தடியில், கடும் தவம் புரிந்தான் அர்ஜுனன். அவனுடைய தவத்தைக் கலைக்கும்படி, முகாசுரன் என்பவனை ஏவிவிட்டான் துரியோதனன். பன்றியின் உருவில் வந்த முகாசுரன், அர்ஜுனனின் தவத்தைக் கலைக்க முயன்றான். இதில் கோபமுற்ற அர்ஜுனன், பன்றியின்மீது அம்பெய்தினான். அதேநேரம், அர்ஜுனனின் தவத்தில் மகிழ்ந்த சிவனார், வேடனைப்போல் உருவெடுத்து வந்தார்; அந்தப் பன்றி மீது தானும் அம்பெய்தினார். இரண்டு அம்புகளும் ஒரே நேரத்தில் பன்றியின் மீது பாய்ந்தன. அந்தப் பன்றி சுருண்டு விழுந்து, செத்தது. இப்போது பன்றியைக் கொன்றது யார் என இரண்டு பேருக்கும் தகராறு! இருவரும் சண்டையிட்டுக் கொண்டனர். இதில், தன்னிடம் இருந்த அனைத்து ஆயுதங்களையும் பறிகொடுத்தான் அர்ஜுனன். பிறகு, அக்னி பகவானிடம் பிரார்த்தித்துப் பெற்ற காண்டீபம் எனும் சக்தி



ஸ்ரீபாசுபதேஸ்வரர்




ஸ்ரீசற்குணாம்பாள்

வாய்ந்த வில்லால் சிவனாரின் தலையில் அடித்தான். அதனால் ஏற்பட்ட காயத்தை, இந்தத் தலத்தின் சிவலிங்கத் திருமேனியில் இன்றைக்கும் காணலாம்!

இதையடுத்து, ஆயுதமின்றி வெறும் கையால் சிவனாரிடம் மோதினான். இறுதியில், ஈசன் தனது உருவைக் காட்டி அருளினார். அதில் நெகிழ்ந்து நமஸ்கரித்தான் அர்ஜுனன். அவனுக்குப் பாசுபதம் எனும் சக்தி வாய்ந்த, அரிதான அஸ்திரத்தைப் பரிசாக அளித்தார் சிவனார். அவருடனான சண்டையில் உடைந்த காண்டீபம் மற்றும் அம்புகள் அனைத்தையும் திரும்பவும் பெற்றுக்கொண்டான் அர்ஜுனன். இங்கே, வேடனாக (கிராத மூர்த்தி என்பர்) அருள்பாலிக்கிறார் சிவனார்.

16-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த நாயக்கர் கால கல்வெட்டுகளை ஆலயத்தில் காணலாம். கிழக்குப் பார்த்த கோபுரம்; முன்னே நாகலிங்க மரமும் தீர்த்தக் குளமும் உள்ளது. ஸ்ரீஸித்தி விநாயகர், ஸ்ரீசோமாஸ்கந்தர், ஸ்ரீசுந்தரேஸ்வரர், ஸ்ரீமுருகப் பெருமான், ஸ்ரீமகாலட்சுமி, சமயக்குரவர் நால்வர் ஆகியோர் அருள்பாலிக்கின்றனர்.

முன்மண்டபத்தில் சிவ-பார்வதி, வேடன் மற்றும் வேடுவச்சியாக, வேட்டை நாய்களுடன் காட்சி தரும் சிற்பம் வெகு அழகு! சிவனாரும் அர்ஜுனனும் சண்டையிடும் சிற்பக் காட்சியும் நுட்பங்கள் கொண்டது. இங்கே, சந்திர- சூரியர்களை வழிபட்டால், கிரகண தோஷங்கள் யாவும் நிவர்த்தியாகுமாம்.



திருக்குளம்

1909-ஆம் வருடம், கானாடுகாத்தானைச் சேர்ந்த கா.பெ.அ.பெத்தபெருமாள் செட்டியார், கோயிலைப் புதுப்பித்துக் கட்டினார். அவரது பரம்பரையினர், தற்போதும் கோயிலைப் பராமரித்து வருகின்றனர்.

மூங்கில் மரத்தைப் பிளந்தால், அதன் வயிற்றுக்குள் வெள்ளை நிறக் கட்டிகள் கிடைக்கும். இதையே மூங்கிலுப்பு என்பர். நாட்டு மருந்துக் கடைகளில் கிடைக்கும் இதனைப் பயன்படுத்தினால், மலச்சிக்கல் அறவே தீருமாம். காயங்களை ஆற்றும்; உடலுக்குக் குளிர்ச்சியைத் தரும்; இதயப் படபடப்பு, தலைச்சுற்றல் ஆகியவற்றுக்குச் சரியான நிவாரணி; வாந்தி மற்றும் பித்த வியாதிகளைத் தீர்க்கவல்லது என்கின்றன மருத்துவ நூல்கள். ரத்த மூலம், ஆஸ்துமா, பக்கவாதம், கண் நோய் ஆகியவற்றைக் குணப்படுத்தும் வல்லமை உண்டு. கழை, வெதிர், வெதிரம், உந்தூழ் என சங்க இலக்கியங்கள் மூங்கிலைக் குறிப்பிடுகின்றன. குறிஞ்சிப்பாட்டு, மலைபடுகடாம், குறுந்தொகை, அகநானூறு, பெரும்பாணாற்றுப்படை ஆகிய நூல்களிலும் மூங்கில் சிறப்பிக்கப்பட்டுள்ளது.

திருப்பாசூர், திருநெல்வேலி, திருவெண்ணெய்நல்லூர் ஆகிய தலங்களிலும் மூங்கில்தான் ஸ்தல விருட்சம்!

எல்லா நலன்களும் தரும் எலுமிச்சை!

பூசம் நட்சத்திரத்துக்கான விருட்சம்

29

திரு அன்னியூர்
ஸ்ரீஆபத்சகாயேஸ்வரர் திருக்கோயில்


வானத்தில் அம்பு வடிவில் காணப்படுவது பூச நட்சத்திரம். ஸ்ரீராமனின் இளவல் பரதன், பூச நட்சத்திரத்தில் பிறந்தவனே! வீடு கட்டத் துவங்குவது, கல்வி, செடி-கொடி நடுவது, மருந்து தயாரித்தல் ஆகியவற்றை இந்த நட்சத்திரத் தினத்தில் செய்வது விசேஷம் என்பார்கள்.

வழக்கறிஞர்கள், ஆடிட்டர்கள், அரசியல் வாதிகள், வியாபாரிகள், புரோக்கர்கள் ஆகியோரில் பலர், பூச நட்சத்திரத்துக்காரராக இருப்பார்கள். சாமர்த்தியப் பேச்சால் காரியம் சாதிக்கும் இந்த நட்சத்திரக்காரர்கள், பிறருக்கு உதவுபவர்கள்; தெய்வ பக்தி நிறைந்தவர்கள். இந்த நட்சத்திரத்துக்கு அரச மரம், எலுமிச்சை மரம் ஆகியவற்றுடன் தொடர்பு உண்டு.

பூச நட்சத்திரம் - கடக ராசி, சந்திரன் கிரகத்தில் அல்லது திங்கட்கிழமைகளிலும், ஜூன் 21 முதல் ஜூலை 22 வரையிலான நாட்களிலும் பிறந்தவர்களுக்கு உகந்த விருட்சம் எலுமிச்சை மரம். பூச நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் தினமும் அரை மணி நேரம் எலுமிச்சை மரத்தின் அருகில் இருந்தாலோ,



எலுமிச்சை




எலுமிச்சையினால் செய்யப்பட்ட மருந்துகளை உட்கொண்டாலோ நற்பலனைப் பெறலாம்!

பொன்னூர் எனப்படும் திருஅன்னியூர் ஸ்ரீபிரஹன்நாயகி சமேத ஸ்ரீஆபத்சகாயேஸ்வரர் ஆலயத்தின் ஸ்தல விருட்சம் எலுமிச்சை மரம். மயிலாடு துறையில் இருந்து சுமார் 8 கி.மீ. தொலைவில் உள்ளது திருஅன்னியூர். ஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் ஆகியோர் பாடிப்பரவிய திருத்தலம் இது. காவிரியின் வடகரை திருத்தலங்களுள் 22-வது தலம்! இந்தத் திருக்கோயிலின் மூலவர் மற்றும் உற்சவ மூர்த்திகள் உருவில் சிறியதாயினும் கீர்த்தி மிக்கவை. கோயிலின் தெற்குப் பிராகாரத்தில் அருள்பாலிக்கும் ஸ்ரீஆதிலிங்கேஸ்வரர் சிற்பம் மிகப் பழைமையானதாம்.

ஸ்ரீஆபத்சகாயேஸ்வரருக்கு பல்வேறு திருநாமங்கள் உண்டு. எலுமிச் சையே ஸ்தல விருட்சம் என்பதால் - ஸ்ரீலிகுசாரண்யேஸ்வரர்; அக்னிக்கு அருளியதால் - ஸ்ரீஅக்னீஸ்வரர்; பாண்டவருக்குக் காட்சி



ஸ்ரீபெரியநாயகி



ஆபத்சகாயேஸ்வரர்

கொடுத்ததால் - ஸ்ரீபாண்டவேஸ்வரர்; ரதிதேவிக்கு அருளியதால்- ஸ்ரீரதீஸ்வரர். அம்பிகைக்கு ஸ்ரீபெரியநாயகி, ஸ்ரீபிரஹன்நாயகி என்று திருநாமங்கள். இங்கே அருளும் ஸ்ரீசூரியமூர்த்தியும் மகிமை வாய்ந்தவர். ஸ்ரீவிநாயகர், வள்ளி - தெய்வானையுடன் ஸ்ரீமுருகன், சந்திரசேகரர், ஸ்ரீநடராஜர்- ஸ்ரீசிவகாமியம்மை, ஆடிப்பூர அம்மன், ஸ்ரீதுர்கை, அஸ்திரதேவர் ஆகியோரின் உற்ஸவ மூர்த்தங்களையும் தரிசிக்கலாம்.

வடமொழியில் பவிஷ்யோத்ர புராணம் - லிகுசாரண்ய மகாத்மியத்தில், எட்டு அத்தியாயங்களில் திருஅன்னியூரின் பெருமைகள் விவரிக்கப்பட்டுள்ளன. பிரம்மதேவன் பல யாகங்கள் செய்தார். இந்திரனும் யாகங்கள் செய்தான். யாக குண்டங்களில் சொரிந்த நெய்யை அளவுக்கு அதிகமாக உட்கொண்டதால், அக்னியை நோய் பற்றியது; உடல் மெலிந்தான். இதனால் வருந்திய அவனுடைய மனைவி ஸ்வாகாதேவி, கணவனின் நோய் தீர வழிகாட்டும்படி, தேவகுருவிடம் முறையிட்டாள். அவர் தந்த ஆலோசனையின்படி, திருஅன்னியூருக்கு கணவனுடன் வந்து, அங்கே தடாகம் ஒன்றை ஏற்படுத்தி நீராடி, அதன் கரையிலேயே தவத்தில் ஆழ்ந்தனர். இதனால் மகிழ்ந்த இறைவனார், ஓர் எலுமிச்சை மரத்தின் அடியில் தோன்றி, அக்னிக்கு அருளினார்;

அவனும் நோய் நீங்கப்பெற்றான். அதுமுதல், அந்தத் தடாகம் அக்னி தீர்த்தம் என்றே வழங்கப்படுகிறது.

அரிச்சந்திர மகாராஜா, தன் குலகுருவான வசிஷ்டரிடம்... கௌசிக முனிவரால் தனக்கு ஏற்பட்ட இடையூறுகள் நீங்கியது எப்படி என்று கேட்டான். அதற்கு அவர், "நீ தண்டகவனம் முதலான இடங்களுக்குச் சென்றபோது, தற்செயலாக லிகுசாரண்யத்துக்கும் (அன்னியூர்) சென்று தீர்த்தமாடி, பரமேஸ்வரனை வணங்கியதால், எல்லாத் துன்பங்களில் இருந்தும் விடுபட்டாய்" என்றாராம். இதனால் திருஅன்னியூர் இறைவனுக்கு ஸ்ரீஆபத்சகாயர் என்று திருப்பெயர்.

இந்த ஆலயத்தின் ஸ்தல விருட்சம் எலுமிச்சை மரம். எலுமிச்சம்பழம் வைட்டமின் 'சி' நிறைந்த பழம் ஆகும். கொசுக்களிடம் இருந்து எலுமிச்சைச் செடி பாதுகாப்பு அளிக்கிறது. எலுமிச்சையில் மொத்தம் 60 வகை உள்ளன. இவற்றில் நாம், நாட்டு எலுமிச்சை, கொடி எலுமிச்சை ஆகிய இரண்டை மட்டுமே உபயோகிக்கிறோம்.

முக்தி தரும் முக்கண்ணன்!

"பங்குனி மாதக் கடைசியில் 25 முதல் 29-ஆம் தேதி வரை ஐந்து நாட்களுக்கு சூரியக் கதிர்கள், மூலவர் லிங்கத்தின்மீது விழுந்து வழிபடுவது கண்கொள்ளாக் காட்சி. இந்தத் தலத்தின் பொய்கையில் நீராடி, ஸ்ரீஆபத்சகாயரை வழிபட்டால், சகல பாவங்களும் நீங்கும்; அனைத்து நலன்களும் கைகூடும். அரிச்சந்திரன், பாண்டவர், பானு என்ற அந்தணர் ஆகியோர் இங்கு நீராடி, வழிபட்டுப் பலன்பெற்றதாக புராணங்கள் சொல்கின்றன. இங்குள்ள இறைவனை வழிபட்ட திருஞானசம்பந்தர், 'இவரின் திருநாமத்தை ஓதுங்கள். அப்படிச் செய்தால், பந்த - பாசம் நீங்கும்; தீவினைகள் ஒழியும்; பேரின்பம் பெறலாம்; முக்தி எய்தலாம்' என்று அருளியிருக்கிறார். திருநாவுக்கரசரோ, 'இந்த இறைவன் தனது திருவடிகளை நாளும் பரவிப் பணிந்தவர்களுடைய துன்பத்தைத் துடைப்பார்' என்று பாடியுள்ளார்" என சிலிர்ப்புடன் விவரிக்கிறார் இந்த ஆலயத்தின் சிவா குருக்கள்.


சிவா குருக்கள்

அவரே தொடர்ந்து, "தங்களுக்கு நல்வழி காட்டி, எந்தவித ஆபத்தும் நேராமல் காப்பார் என்ற நம்பிக்கையுடன் ஏராளமான பக்தர்கள், இங்கு பெரியநாயகி சமேத ஆபத்சகாயேஸ்வரரை வழிபட்டுச் செல்கிறார்கள்!" என்கிறார் நெகிழ்ச்சியுடன்.

எலுமிச்சை இலையை அரைத்துப் பற்றுப்போட்டால் மூட்டு வலி, கெண்டைக்கால் வலி, தலைவலி ஆகியன குணம் பெறும். எலுமிச்சம் பூவை மை போல் அரைத்து, சிறிதளவு எலுமிச்சைச் சாறு, உப்பு சேர்த்து, காலை, மாலை இரு வேளை சாப்பிட்டு வர, ஈறு சார்ந்த நோய்கள் குணமாகும். விதை முற்றாத எலுமிச்சை பிஞ்சு - மலச்சிக்கல், பித்தம் ஆகியவற்றை நீக்கும்; ரத்த மூலத்தைக் கட்டுப்படுத்தும். எலுமிச்சை ஊறுகாயை உணவோடு சேர்த்துச் சாப்பிட, பித்தம் நீங்கும்; அஜீரணம் மற்றும் வயிற்றுக் கோளாறுகள் அகலும்.

காலரா நோய் பாதிப்புள்ள இடங்களுக்குச் செல்ல நேரும்போது, இரண்டு எலுமிச்சை பழங்களைச் சாறு பிழிந்துவிட்டுச் சிறிது மென்று தின்றால், காலரா நோய் நம்மை தாக்காது. ஒருவேளை, காலரா நோயின் தாக்கம் தெரிந்தால், சிறிய வெங்காயம் ஒன்றின் சாறுடன் எலுமிச்சைச் சாற்றையும் சம அளவு கலந்து குடித்தால், வாந்தி - பேதி நின்று உடல் குணமடையும். எலுமிச்சை பழச்சாறு, குடல் புழுக்கள், மலச்சிக்கல், வாய்ப் புண், சீதபேதி, பித்த வாந்தி, குமட்டல், சிறுநீர் கழிக்கும்போது எரிச்சல், மூலக் கடுப்பு, சாப்பிட்டதும் ஏற்படும் வயிற்று வலி, பல் ஆடுதல், வாய் துர்நாற்றம் ஆகிய குறைபாடுகளைப் போக்கும்.

ஆலமரத்தின் விழுதை அறுத்தெடுத்து, அம்மியில் நன்றாக அரைத்து மாவாக்கி, அதனுடன் எலுமிச்சம்பழச் சாற்றைக் கலந்து தலையில் தேய்த்து, அரைமணி நேரம் கழித்துக் குளித்தால், தலைமுடி நன்கு வளரும். அரைத்த வெள்ளைப் பூண்டு விழுதை, எலுமிச்சைச் சாற்றுடன் கலந்து தலையில் தேய்த்துக் குளித்தால், பேன் தொல்லை நீங்கும். எலுமிச்சை பழத் துண்டை இரண்டாக வெட்டி, தேள் கொட்டிய இடத்தில் அழுத்தித் தேய்த்தால், விஷம் நீங்கும். அஜீரண வாந்தி, கருவுற்ற தாய்மார்களின் வாந்தியை எலுமிச்சை தடுக்கும். கர்ப்பிணிகள் காலையும் மாலையும் எலுமிச்சைப் பழ ரசத்தை, ஒரு தேக்கரண்டி தேன் கலந்து சாப்பிட்டு வந்தால், சுகப்பிரசவம் நிச்சயம்.

உத்திரமேரூர் ஓரிக்கை சாலையில் உள்ள திருமாகறல் ஸ்ரீஅடைக்கலங்காத்தநாதர் - ஸ்ரீதிரிபுவனநாயகி ஆலயத்திலும் எலுமிச்சை மரமே ஸ்தல விருட்சம்!

செங்கல்லை பொன்னாக்கிய புன்னைவனம்!

ஆயில்யம் நட்சத்திரத்துக்கான விருட்சம்

30

திருப்புகலூர்
ஸ்ரீபுன்னாகவனநாதர் திருக்கோயில்

ஆயில்ய நட்சத்திரக்காரர்கள் நல்லவர்கள்; செய்யும் தொழிலை தெய்வமாகக் கருதுபவர்கள். இவர்களிடம் முதலாளி விசுவாசம் அதிகம் இருக்கும். அறிவு, தைரியம், நேர்மை, கடவுள் பக்தி, குடும்பத்தாரிடம் அன்பு, எவரையும் பகைக்காத குணம்... இவற்றோடு, எதிரிகளையும் நண்பராகக் கருதிப் பழகும் தன்மை கொண்டவர்கள்.

திங்கட்கிழமைகள், ஜூன் 21 முதல் ஜூலை 22 வரையிலான நாட்களில் பிறந்தவர்கள் ஆயில்ய நட்சத்திரத்தின் ஆளுகைக்கு உட்பட்டவர்கள். ஆயில்ய நட்சத்திரம், கடக ராசி மற்றும் சந்திர கிரகத்தின் ஆட்சிக்கு உட்பட்டது. இந்த ராசி, நட்சத்திரம், தினங்களில் பிறந்தவர்களுக்கு உகந்தது புன்னை மரம். இவர்கள், தினமும் அரை மணி நேரம் இந்த மரத்தின் அருகில் இருப்பதும், நிழலில் அமர்வதும் சிறப்பு. இதனால், ஆயில்ய நட்சத்திர தோஷங்களால் உண்டாகும் - இந்த நட்சத்திரத்தின் கெட்ட கதிர்வீச்சுகளால் ஏற்படும் - இதயம் மற்றும் மார்பக நோய்கள் உள்ளிட்ட பல பாதிப்புகளில் இருந்து விடுபடலாம். ஆயில்ய நட்சத்திரத்தின் நல்ல கதிர்வீச்சுகளையும் பெறலாம்.





புன்னை மரத்தை ஸ்தல விருட்சமாகக் கொண்ட தலங்கள் தமிழகத்தில் பல உண்டு. அவற்றில் குறிப்பிடத்தக்கவை- கும்பகோணம் அருகிலுள்ள திருப்புறம்பயம், திருப்புள்ள பூதங்குடி, திருவாரூருக்கு அருகிலுள்ள திருப்புகலூர், திருநெல்வேலிக்கு அருகில் உள்ள சங்கரன்கோவில், அறந்தாங்கி அருகில் உள்ள திருவிடந்தை ஆகிய ஊர்கள், ஆயில்ய நட்சத்திரத்தின் அதிகமான கதிர்வீச்சுகள் விழும் இடங்களாக அமைந்துள்ளன.

இந்த ஊர்களில் திருப்புகலூர், பஞ்ச க்ஷேத்திரங்களில் ஒன்று எனும் சிறப்புடையது (பஞ்ச க்ஷேத்திரங்கள்: திருஅம்பல், திருப்புகலூர், திருராம நந்தீச்சரம், திருச்செங்கட்டாங்குடி, திருமருகல்). நன்னிலத்தில் இருந்து நாகப்பட்டினம் செல்லும் சாலையில், சுமார் 10 கி.மீ. தொலைவில் உள்ளது திருப்புகலூர்.

இங்கே, சுமார் 90 அடி உயரமும், ஐந்து நிலைகளும் கொண்ட பிரமாண்ட ராஜகோபுரத்துடன் திகழும் பெருங்கோயிலில், ஸ்ரீகருந்தார்குழலியுடன் அருளாட்சி செய்கிறார் ஸ்ரீஅக்னீஸ்வரர். இவருக்கு ஸ்ரீசரண்யபுரீஸ்வரர், ஸ்ரீபுன்னாகவனநாதர் எனும் வேறு பெயர்களும், அம்பாளுக்கு ஸ்ரீசூளிகாம்பாள் எனும் திருநாமமும் உண்டு.



ஸ்ரீகுளிகாம்பாள்

ஸ்ரீவிநாயகர், ஸ்ரீசுப்ரமணியர் ஆகியோரையும், ததீசி, பராசரர், பிருகு, புலஸ்தியர், ஜாபாலி, பரத்வாஜர், வாமதேவர் ஆகிய முனிவர்கள் தனித்தனியே பிரதிஷ்டை செய்து வழிபட்ட சிவலிங்கங்களையும் இங்கே தரிசிக்கலாம். இந்த ஆலயத்தின் மற்றொரு சிறப்பம்சம்... கடந்த காலத்தைக் குறிப்பிடும் ஸ்ரீபூதேஸ்வரர்; நிகழ்காலத்தைக் குறிப்பிடும் ஸ்ரீவர்த்தமானீஸ்வரர்; எதிர்காலத்தைக் குறிப்பிடும் ஸ்ரீபவிஷ்யேஸ்வரர் ஆகியோரின் தரிசனம்! திரிமுகாசுரனையும் தரிசிக்க முடிகிறது.

உள் பிராகாரத்தின் ஈசான்யமூலையில் அருளும் ஸ்ரீநடராஜர் சாந்நித்தியமானவர். 25 சுடர்களுடன் கூடிய நீள் வட்ட பிரபையும், பக்கத்துக்கு 16 விதம் இருபுறமும் 32 சடைகளும் விரிந்து பறக்க, ஆடல் கோலம் காட்டுகிறார். கி.பி. 11 அல்லது 12-ஆம் நூற்றாண்டுச் சிற்பம் என்பது வல்லுநர்களின் கணிப்பு. அருகிலேயே அழகோவியமாய் ஸ்ரீசிவகாமசுந்தரி!


நாற்புறமும் அகழி சூழ்ந்த அழகான கோயில் இது. ஆனால், காலப்போக்கில் அகழி தூர்க்கப்பட்டுவிட்டதாம். திருஞானசம்பந்தர், அப்பர், சுந்தரர் ஆகியோர் இங்கு வந்து பாடியிருப்பதிலிருந்து இந்தக் கோயிலின் பழைமையை அறியலாம். அப்பர் சுவாமிகள் தமது 81-வது வயதில் இந்தத் தலத்தில் உழவாரப்பணி செய்தார்; இதே தலத்தில்தான் அவர் முக்தியும் எய்தினார்.

திருவாரூரில், பங்குனி உத்திரத் திருவிழாவில் மகேஸ்வர பூஜை செய்யவும், அடியவருக்கு அமுது படைக்கவும் பெரும் தொகை தேவைப்பட்டதாம் சுந்தரருக்கு. இந்தக் கவலையுடன் திருப்புகலூர் வந்தவர், அன்றிரவு ஆலயத் திருப்பணிக்காக வைக்கப்பட்டிருந்த சில செங்கற்களைத் தலைக்கு வைத்துப் படுத்திருந்தார். காலை எழுந்தபோது, அவை தங்கக் கட்டிகளாக மாறியிருந்தனவாம்!

புகல் என்றால் அடைக்கலம் புகுதல் என்று பொருள். திருப்புகலூர் என்ற பெயர் கொண்ட இத்தலத்தை வட மொழியில் சரண்யபுரம் என்பர். வாதாபி, வில்வலன் ஆகிய அசுரர்களுக்கு




கோபுரமும் கொடிமரமும்



புன்னை மரம்

பயந்து ஓடிவந்த தேவர்கள் அடைக்கலம் புகுந்த ஊர் என்பதால், 'புகலூர்' எனும் பெயர் வந்ததாகப் புராணங்கள் சொல்கின்றன. ஆதிகாலத்தில் அக்னி வழிபட்டபோது, புன்னைவனமாகத் திகழ்ந்ததால் 'புன்னாகவனம்' என்றும் ஒரு பெயர் உண்டு. ஆமாம்... இந்த ஆலயத்தின் ஸ்தல விருட்சம் புன்னை மரம் என்பது கூடுதல் விசேஷம்!

பெரிய மரமாக வளரக்கூடியது புன்னை. இதன் இலைகள், கொய்யா மர இலைகளின் அளவில் இருக்கும். இதன் பூக்கள் பதப்படுத்தப்பட்டு, 'நாக் கைஸர்' எனும் பெயரில் விற்கப்படுகிறது. இதன் காய்களிலிருந்துதான் வாசனைத் திரவியமான 'அத்தர்' தயாரிக்கப்படுகிறது. இதன் விதைகளில் இருந்து எடுக்கப்படும் எண்ணெய் மூட்டு வலி, சொறி, சிரங்கு, தொழுநோய், மேகநோய்ப் புண்கள் ஆகியவற்றைக் குணமாக்கும். பல் வலிக்கும் இது நல்ல மருந்து. புன்னை மர இலைகளைப் பவுடராக்கி, மூக்குப் பொடி போல் முகர்ந்தால், மண்டைச் சளி வெளியேறுவதுடன், அடிக்கடி ஏற்படும் தலைவலி, கிறுகிறுப்பு நீங்கும். புன்னை இலைகளைக் கொதிக்க வைத்து, வெதுவெதுப்பான அந்த நீரில் கண்களைக் கழுவினால் கண் எரிச்சல், கண் வீக்கம் குணமாகும். வெட்டை, மேகநோய் புண்களைக் குணப்படுத்த புன்னை மரப் பூக்களை அரைத்துப் பூசுவர். சோப்புகளின் நறுமணத்துக்காகவும் புன்னை எண்ணெயைச் சேர்ப்பர்.



திருக்குளம்



ஸ்ரீஅக்னீஸ்வரர்

வெண்பட்டு அலங்காரம்... விசேஷம்!

"திருப்பள்ளி எழுச்சி முதல் அர்த்தஜாமம் வரை தினமும் 6 கால பூஜை நடைபெறும் இந்தத் தலத்தில், தினமும் மாலையில் அம்பாளுக்கு வெண்பட்டு அலங்காரம் விசேஷம்!" என்று ஆரம்பித்து, இந்தக் கோயிலின் சிறப்பைச் சிலிர்ப்புடன் விவரிக்கிறார், ஆலய அர்ச்சகர் கந்தசாமி குருக்கள்.



கந்தசாமி குருக்கள்

"வேளாக்குறிச்சி ஆதீனத்தின் கட்டுப்பாட்டிலும், தமிழக அரசின் இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் கண்காணிப்பிலும் பராமரிக்கப்பட்டு வருகிறது இந்த ஆலயம்.

சுந்தரருக்கு அருளும் வகையில் செங்கல் பொன் கல்லாக மாறிய இடம் என்பதால், இதை வாஸ்து கோயில் என்று போற்றுகின்றனர் பக்தர்கள். புதிதாக வீடு கட்டுவோர், மூன்று செங்கற்களை எடுத்து வந்து இங்கே வைத்து வழிபட்டுச் செல்கிறார்கள். அந்தக் கற்களைப் புதிய கட்டடத்துக்கான ஆரம்பக் கற்களாக உபயோகிக்கிறார்கள். இதனால், அந்தக் கட்டடப் பணி எந்தத் தடங்கலும் இல்லாமல் பூர்த்தியாகும் என்பது நம்பிக்கை!"

நூற்றுக்கணக்கான சங்க இலக்கியப் பாடல்களில் புன்னையைப் பற்றிய குறிப்புகள் உண்டு. குறிஞ்சிப் பாட்டு, 'கடியிரும் புன்னை' எனக் குறிப்பிடுகிறது. ஐந்திணைக் கருப்பொருளைக் கூற வந்த இறையனாரின் அகப் பொருள் நூல், 'நெய்தல் திணைக்கு மரம் புன்னையும், ஞாழலும், கண்டலும்' என்று குறிப்பிடுகிறது. புன்னை மரம் பற்றி பத்துப்பாட்டு, பிங்கல நிகண்டு, குறிஞ்சிப்பாட்டு, பரிபாடல், சூடாமணி நிகண்டு, ஐங்குறுநூறு, அகநானூறு, குறுந்தொகை, நற்றிணை, கலித்தொகை ஆகியவற்றிலும் சிறப்பித்துப் பாடப்பட்டுள்ளது.

நாரத்தை மரத்தின் மகிமை!

மகம் நட்சத்திரத்துக்கான விருட்சம்

31

ஓகைப்பேரையூர்
ஸ்ரீஜெகதீஸ்வர ஸ்வாமி திருக்கோயில்

இடத்துக்கு ஏற்றபடி, காலச் சூழலுக்குத் தக்கபடி பேச்சையும் செயலையும் மாற்றிக் கொள்பவர்கள்; பேச்சால் பிறரைக் கவர்பவர்கள்; முன்கோபக்காரர்கள்; நிர்வாகத்திறன் மிக்கவர்கள் மகம் நட்சத்திரக்காரர்கள்! இவர்கள், அழகாக உடுத்திக் கொள்வார்கள்; வாசனைத் திரவியங்கள் பூசிக் கொள்வார்கள்; கடவுளுக்குப் பயப்படுவார்கள்.

ஞாயிற்றுக்கிழமை மற்றும் ஜூலை 23 முதல் ஆகஸ்ட் 22-ஆம் தேதி வரை பிறந்தவர்களை, மகம் நட்சத்திரம் ஆட்சி செய்கிறது. சிம்ம ராசியும் சூரிய கிரகமும் இந்த நட்சத்திரத்தைக் கட்டுப்படுத்துகின்றன.

நாரத்தை மரம், மகம் நட்சத்திரத்தின் நண்பன். இந்த நட்சத்திரத்தின் நல்ல கதிர்வீச்சுகளைச் சேகரித்து, மனிதர்களுக்கு வழங்குகிறது. கெட்ட கதிர்வீச்சுகளால் உண்டாகிற நோய்களையும் தோஷத்தையும், நாரத்தை மரம் குணப்படுத்துகிறது (ஆலமரமும், மகம் நட்சத்திர தோஷத்தைப் போக்கவல்லது).


மகம் நட்சத்திரத்தின் கெட்ட கதிர்வீச்சுகள், உடலில் கொழுப்பை அதிகரிக்கச் செய்யும்; இதயத்துக்குச் செல்லும் ரத்தக் குழாய்களில்



திருக்கோயில் முகப்பு

அடைப்பை உண்டாக்கும்; ஆண்மை பாதிப்பு, சர்க்கரை நோய், சிறுநீரக நோய்கள், மூலம், மலச்சிக்கல் மற்றும் கண் கருவளையம், மனதில் படபடப்பு ஆகியவற்றை உண்டாக்கும். இந்த நட்சத்திரக்காரர்கள், நாரத்தை மர நிழலில் தினமும் அரைமணி நேரம் இளைப்பாறுவது நல்லது. இந்த மரத்தில் இருந்து தயாரிக்கப்படும் மருந்துகளை உட்கொள்ளலாம். இதனால் மகம் நட்சத்திர தோஷம் விலகும்; நோய்கள் நீங்கும் என்கிறது வானவியல் மூலிகை சாஸ்திரம்.

திருவாரூர் மாவட்டம், நீடாமங்கலம் வட்டத்தில் உள்ளது ஓகைப்பேரையூர். இங்குள்ள ஸ்ரீஜெகந்நாயகி சமேத ஸ்ரீஜெகதீஸ்வர ஸ்வாமி கோயிலின் ஸ்தல விருட்சம், நாரத்தை. திருவாரூர்-மன்னார்குடி சாலையில், கமலாபுரத்தை அடுத்து உள்ளது மூலங்குடி. இங்கிருந்து ஓகைப்பேரையூரை அடைவது சுலபம். மாலூர் ரோடு மற்றும் வடபாதிமங்கலம் சாலை வழியாகவும் இந்தத் தலத்தை அடையலாம். வங்காரப் பேரையூர் என்றும் இந்தத் தலம் அழைக்கப் பட்டதாம். சோழர்கள் காலத்தில், திருவாரூருக்கு அருகே கோட்டை ஒன்று இருந்ததாம். அந்தக் கோட்டைக்கு அருகில் இருந்ததால், இது பேரெயிலூர் எனப்பட்டது. அதுவே மருவி, பேரையூர் என்றானதாம். பெண்பாற் புலவரான பேரெயில் முறுவலார் பாடிய பாடல்கள் குறுந்தொகை மற்றும் புறநானூறில் உள்ளன.




திருக்குளம்

கிழக்குப் பார்த்த மூன்று நிலை ராஜகோபுரம்; எதிரில் திருக்குளமும் உள்ளது. உள்ளே, ஸ்ரீகற்பகவிநாயகர், ஸ்ரீமுருகன், ஸ்ரீமகாலட்சுமி, ஸ்ரீதட்சிணாமூர்த்தி, ஸ்ரீதுர்கை, ஸ்ரீஐயனார் மற்றும் சூரிய - சந்திரர்கள் சந்நிதிகள் உள்ளன. மேலும், பஞ்ச மூர்த்திகளும் ஸ்ரீநடராஜ சபையும் கொள்ளை அழகு! திருநாவுக்கரசரும் வள்ளலாரும் போற்றிப் பாடிய தலம் இது.

'தீர்த்தக் குளத்தில் நீராடினால்... தீராத நோயும் தீரும்!'

"வைகாசி விசாகம், மாசி மகா சிவராத்திரி, புரட்டாசி நவராத்திரி, மார்கழி திருவாதிரை மற்றும் ஆருத்ரா தரிசனம் என விசேஷங்கள் கொண்ட தலம் இது" என்கிறார் கோயிலின் சுப்பையா குருக்கள்.



சுப்பையா குருக்கள்

"ஆடி வெள்ளிக்கிழமையில் திருவிளக்கு பூஜையை கடந்த 18 வருடங்களாக நடத்தி வருகிறோம். கல்வி, கல்யாணம், இல்லறத்தில் பிரச்னை, பிள்ளைப் பேறின்மை என எதுவாக இருந்தாலும், இங்கே வந்து குறைகளைச் சொன்னால் போதும்... உடனே நிவர்த்தி ஆகிவிடும். கோயிலுக்கு எதிரேயுள்ள தீர்த்தக் குளத்தில் நீராடி, இறைவனைத் தொழுதால், தீராத நோயும் தீரும்" எனப் பெருமிதத்துடன் தெரிவிக்கிறார் சுப்பையா குருக்கள்.




நாரத்தை மரம்



நாரத்தை பூவும் காய்களும்

நாரத்தை, எலுமிச்சை இனத்தைச் சேர்ந்தது; புளிப்புச் சுவையுடைய பழங்களைத் தரவல்லது. நாரத்தைப் பிஞ்சு, பசியைத் தூண்டும்; வயிற்றில் உள்ள நுண்புழுக்களைக் கொல்லும். நாரத்தைக் காய்களை அரிந்து, உப்புப் போட்டு, நீர் சுண்டும்



ஸ்ரீஜெகதீஸ்வர ஸ்வாமி



ஸ்ரீஜெகந்நாயகி

அளவுக்கு வெயிலில் வைத்துப் பதமாக்கி, சாப்பாட்டுடன் சேர்த்து உட்கொள்வது நல்லது. இதனால் வயிற்றுப் பொருமல் நீங்கும்; தாது சக்தி பெருகும்; தேகம் குளிர்ச்சியாகும். நாரத்தைப் பழம் பித்தத்தைப் போக்கி, தாகத்தைத் தணிக்கும். உடலுக்கு வலுவூட்டும்; வாந்தியை நிறுத்தும்; வெப்பக் காய்ச்சலை குணமாக்கும். நாரத்தைப் பழச்சாறுடன் போதிய அளவு தண்ணீரும் சர்க்கரையும் கலந்து பருகினால், வயிற்றுப் பிரச்னை வராது; வாயுத் தொல்லை நீங்கும்; ஜீரண சக்தி அதிகமாகும். நாரத்தை விதை, விஷ முறிவுக்கு உகந்த மருந்து. மொத்தத்தில், தேன் கலந்து பயன்படுத்தினால் பக்க விளைவுகள் ஏற்படாது.

அந்தக் காலத்தில், யாழ் எனும் இசைக்கருவிக்கு, நார்த்தம் மாலை சூட்டப்பட்டதாக இலக்கியக் குறிப்புகள் தெரிவிக்கின்றன. நாரத்தைப் பூக்களை, கவரிமான்கள் விரும்பித் தின்னுமாம்! *'நரந்தம் நாகம் நள்ளிருள் நாறி'* என்று குறிஞ்சிப் பாட்டில் தெரிவிக்கிறார் கபிலர். 'நரந்தம்' என்பது, 'நாரத்தம் பூ' என்கிறார் நச்சினார்க்கினியர். கலித்தொகையில் காணப்படும் 'நரந்தம்' என்ற சொல்லும் 'நாரத்தம் பூ' என்றே குறிப்பிடப்பட்டுள்ளது.

சூரியன் பூஜிக்கும் சிவலிங்கம்!

பூரம் நட்சத்திரத்துக்கான விருட்சம்

32

திருமயேந்திரப்பள்ளி ஸ்ரீதிருமேனியழகர் திருக்கோயில்

பூர நட்சத்திரத்தில் பிறந்தவர்களின் கண்கள் சிவப்பாக இருக்கும். முத்துப் போன்ற பற்களும், இனிய சொற்களும் இவர்களின் சொத்து! தங்களது பேச்சு மற்றும் பாவனையால் பெண்களை எளிதில் கவரக்கூடியவர்கள். இளமையில் ஈட்டிய செல்வத்தை அப்போதே செலவழித்துவிட்டு, முதுமையில் வாடுவார்கள். ஒரே நேரத்தில் பல வேலைகளைச் செய்யும் ஆற்றல் பெற்ற இவர்கள், உழைக்கச் சலிக்காதவர்கள். தான - தர்மம் செய்வதில் விருப்பமும், செயல்களின் பின்விளைவுகளை முன்னரே அறியும் திறமையும் இவர்களுக்கு உண்டு.

வானில், இரட்டை நட்சத்திரத் தொகுப்பு போன்று காணப்படும் பூரம் நட்சத்திரம், சிம்ம ராசி மற்றும் சூரிய கிரகத்துக்கு உட்பட்டது. ஞாயிற்றுக்கிழமைகள் மற்றும் ஜூலை 23 முதல் ஆகஸ்ட் 22 வரை பிறந்தவர்களை, பூர நட்சத்திரம் கட்டுப்படுத்தும்.

இந்த நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் மாரடைப்பு பாதிப்புக்கு ஆளாகும் வாய்ப்பு உண்டு; மேலும், இந்த நட்சத்திர தோஷத்தால் உடல் சூடு, அம்மை நோய், வாந்தி, தலை சுற்றல், நீர்க்கட்டி, சிறுநீர்ப்

பெருக்கு, இதய படபடப்பு, இடுப்பு - மூட்டு - மற்றும் காது வலி, ஆகியன ஏற்படலாம் என்கிறது வானவியல் மூலிகை சாஸ்திரம்.

பூர நட்சத்திரக்காரர்கள் இந்தப் பாதிப்புகளைத் தவிர்க்க, கண்டல் எனப்படும் தாழை மர நிழலில் தினமும் அரை மணி நேரம் அமர்வது நல்லது. மேலும், தாழை விருட்சத்தின் பாகங்களில் இருந்து தயாரிக்கப்பட்ட மருந்துகளைச் சாப்பிட்டும் பலனடையலாம் (பலாசு என்ற முருக்கன் மரமும் இதே பலன்களைத் தரக்கூடியதுதான்).


நந்தி

நாகை மாவட்டம், சீர்காழி வட்டத்தில் அமைந்துள்ள திருத்தலம் திருமயேந்திரப்பள்ளி. இங்கே, ஸ்ரீவடிவாம்பிகையுடன்

ஸ்ரீகிருஷ்ணன் செய்த பித்ரு தர்ப்பணம்!

"திருமயேந்திரப்பள்ளி - பல்லவர் ஆட்சிக்கு உட்பட்டிருந்த ஊர் என்பதால், இந்தப் பெயர் வந்ததா, அல்லது இந்திரனின் வேறு பெயரான மகேந்திரன் என்பதிலிருந்து உருவான பெயரா என்பது தெரியவில்லை. ஆனால், மிக மிகப் பழைமையான ஆலயம் இது என்பது மட்டும் உறுதி" என்று பரவசத்துடன் திருத்தலப் பெருமை பேசுகிறார், திருமேனியழகர் கோயிலின் அர்ச்சகர் குருசாமி குருக்கள்.


குருசாமி குருக்கள்

"இங்கிருந்து சுமார் 1 கிலோ மீட்டர் தூரத்தில் கோட்டைமேடு என்றொரு பகுதி இருக்கிறது. அங்கு 'தேவி கோட்டை' எனும் சரித்திரப் புகழ்மிக்க கோட்டை இருந்ததாகச் சொல்கிறார்கள். விசேஷமான சூரிய பூஜை வைபவம் மட்டுமின்றி, சிவராத்திரி, பிரதோஷம், கிருத்திகை போன்றவையும் வெகு சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றன. வைகாசி அமாவாசைக்கு முதல் நாளை 'போதாயன அமாவாசை' என்பார்கள். இந்தத் திருநாளில், ஸ்ரீகிருஷ்ண பகவான் இந்தக் கோயிலுக்கு வந்து பித்ருக்களுக்குத் தர்ப்பணம் செய்ததாகக் கூறுவர். ஆக... பித்ரு தோஷம், முன்வினை தோஷங்கள் நீங்க, இந்த ஆலயத்துக்கு வந்து அர்ச்சனை செய்து வழிபடுவது சிறந்த பலன்களைப் பெற்றுத் தரும்" என்கிறார் குருசாமி குருக்கள்.





தாழை மரம்



கோயிலும் திருக்குளமும்

ஸ்ரீதிருமேனியழகர் அருள்பாலிக்கும் கோயிலின் ஸ்தல விருட்சமும் தாழை (கண்டல்) மரமே! சிதம்பரம் - சீர்காழி மார்க்கத்தில், கொள்ளிடத்துக்குக் கிழக்கே சுமார் 12 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது இந்தத் தலம்; திருஞானசம்பந்தரால் பாடல் பெற்ற தலமும்கூட!

மூன்று நிலை ராஜகோபுரத்துடன், கிழக்கு நோக்கி அமைந்து இருக்கிறது ஆலயம். வெளிப் பிராகாரத்தில் ஸ்ரீவேத கணபதி, ஸ்ரீகாசிவிஸ்வநாதர், ஸ்ரீவிசாலாட்சி, தேவியருடன் திருமால், சிவலிங்கம், சூரிய - சந்திரர், ஸ்ரீகாலபைரவர், ஸ்ரீசண்டிகேஸ்வரி - ஸ்ரீசண்டிகேஸ்வரர், ஸ்ரீசனீஸ்வரர் சந்நிதிகள் உள்ளன. தரிசனம் முடித்து, வௌவால் நெத்தி மண்டபத்தின் வலப்புறம் உள்ள அம்பாள் சந்நிதியை அடையலாம். தெற்கு நோக்கிச் சந்நிதி கொண்டிருக்கும் ஸ்ரீவடிவாம்பிகை, சிறந்த வரப்பிரசாதி. உள்ளே வலப்புறம், ஸ்ரீநடராஜர் - ஸ்ரீசிவகாமியம்மை. அருகில் மாணிக்கவாசகரும் திருஞானசம்பந்தரும் காட்சி தருகின்றனர். நேரே நோக்கினால், சிவலிங்கத் திருமேனியராய் அழகுக் கோலம் காட்டுகிறார் அருள்மிகு திருமேனியழகர்!



ஸ்ரீதிருமேனியழகர்



ஸ்ரீவடிவாம்பிகை

பங்குனி மாதத்தில் ஒரு வாரம்... 7 முதல் 13-ஆம் தேதி வரை, தனது கிரணங்களால் இந்த ஸ்வாமியை வழிபடுகிறான் ஆதவன். அவன் வழிபட ஏதுவாக, நந்தியெம்பெருமான் தன் தலையை சற்றே இடப்பக்கம் திருப்பியபடி காட்சி தருவது அபூர்வ தரிசனம்!

கோயிலின் ஸ்தல விருட்சம் கண்டல் என்பது கூடுதல் விசேஷம்! கண்டல் மரத்துக்கு கேதகை, கைதை, பட்டிகை, மடி, முகலி, முடங்கல், முண்டகம், முகடக்கண் மற்றும் தாழை என்று வேறு பெயர்களும் விளங்குகின்றன. ஆங்கிலத்தில் ‘ஸ்க்ரூ பைன்’ என்கிறார்கள். ‘குடை மரம்’ என்றும் இதைக் குறிப்பிடுகிறார்கள். இந்த மரத்தின் வேர் சிறுநீரக நோய், சரும நோய்கள், வயிற்று உபாதைகளுக்கு சிறந்த மருந்து. தொழுநோய், பால்வினை நோய்கள், காயங்கள், அல்சர் புண்கள், ஜுரம், சர்க்கரை நோய், அடிக்கடி ஏற்படும் கருச் சிதைவு, உடல் பலவீனம் ஆகியவற்றுக்கும் சிறந்த நிவாரணியாகத் திகழ்கிறது.

கண்டல் மரத்தின் இலைகள், கசப்புத்தன்மை வாய்ந்தவை. கட்டிகள், அம்மைநோய், வெட்டை, சொறி சிரங்கு, வெண்குஷ்டம், இதயம் சம்பந்தமான நோய்கள், தூக்கமின்மை மற்றும் முதுகுத் தண்டுவடத்தில் தீராத வலி ஆகியவற்றைப் போக்கும் அருமருந்தாகப் பயன்படுகிறது. கண்டல் மரப் பூக்களிலிருந்து பெறப்படும் எண்ணெயை மூட்டு வலி, சரும நோய்கள் ஆகியவற்றுக்கு மேற்புறம் தடவ, விரைவில் குணம் பெறலாம்.

ஆத்தி (மந்தாரை) மரத்தின் மகிமை!


உத்திர நட்சத்திரத்துக்கான விருட்சம்

33

திருச்செங்கட்டாங்குடி
ஸ்ரீஉத்தராபதீஸ்வரர் திருக்கோயில்

கோபம் உள்ள இடத்தில்தான் குணம் இருக்கும் என்பர். இது உத்திரம் நட்சத்திரக்காரர்களுக்குப் பொருந்தும். நேர்மையும் பக்தியும் மிகுந்தவராகத் திகழும் இவர்கள், சின்னச் சின்ன விஷயங்களுக்கெல்லாம் ஆத்திரப்படுபவர்களாகவும் இருப்பார்கள்; இவர்களின் நடையில் கம்பீரம் இருக்கும்.

ஞாயிற்றுக்கிழமை மற்றும் ஜுலை 23 முதல் ஆகஸ்ட் 21 வரை பிறந்தவர்கள், உத்திர நட்சத்திரத்தின் ஆட்சியில் இருப்பவர்கள். இந்த நட்சத்திரத்தின் நல்ல கதிர்வீச்சுகள்-ஆரோக்கியத்தையும்; கெட்ட கதிர்வீச்சுகள்-தைராய்டு கட்டிகள், மூலக் கட்டிகள், தொழுநோய், வெரிகோஸ்வெயின் எனும் நரம்புச் சிலந்தி நோய் மற்றும் ரத்தம் சம்பந்தப்பட்ட நோய்களை உண்டாக்குகின்றன. இதை, உத்திர நட்சத்திர தோஷம் என்பார்கள். இந்த தோஷக்காரர்கள் ஆத்தி (மந்தாரை) மரம் மற்றும் அலரிச் செடிகளுக்கு அருகில் அமர்ந்தால், இவற்றில் இருந்து தயாரிக்கப்படும் மருந்துகளை உட்கொண்டால், நோய்களும் தோஷங்களும் நீங்கப் பெறுவர் என்கிறது வானவியல் சாஸ்திரம்!



திருச்செங்காட்டங்குடியில் உள்ள ஸ்ரீதிருகுகுழல் உமைநாயகி சமேத ஸ்ரீஉத்தராபதீஸ்வரர் ஆலயத்தின் ஸ்தல விருட்சம் ஆத்தி (மந்தாரை) மரம்! திருவாரூர் மாவட்டம் நன்னிலத்தில் இருந்து சுமார் 13 கி.மீ. தொலைவில் உள்ளது இந்தத் தலம். நரசிம்ம பல்லவனிடம் படைத்

'தோஷம் விலகும்!'


"மகத நாட்டு மன்னரின் மனைவி விபுதை, அசுர குலத்தைச் சேர்ந்தவள். இவளுக்கு யானைத் தலையும், அசுர உடலும் கொண்ட மகன் பிறக்க, அவனுக்கு கஜமுகாசுரன் என்று பெயர் சூட்டினர். இறைவனை நோக்கித் தவமிருந்து, எந்த மனிதராலும் எந்த ஆயுதத்தாலும் தன்னை அழிக்க முடியாதபடி வரம் பெற்றான் கஜமுகாசுரன். தேவர்களும் மக்களும் அவனால் அவதிப்பட்டனர். அவனைத் தனது தந்தத்தால் குத்திக் கொன்றார், ஸ்ரீவிநாயகர். கஜமுகாசுரன் உடலிலிருந்து வெளியேறிய ரத்தம் எங்கும் பரவி, செங்காடு போல் காட்சியளித்தது. அதனால், திருச்செங்காட்டங்குடி என்றும், கணபதீச்சுரம் என்றும் இந்தத் தலம் போற்றப்படுகிறது. அரக்கனைக் கொன்ற பாவம் தீர, கணபதி பகவான் இங்கே வழிபட்டார்.



முத்துசாமி சிவாச்சார்யர்

இங்கே, வருடந்தோறும் பிள்ளைக்கறி அமுது படையல் விழா சிறப்புற நடைபெறும். அப்போது தரும் பிரசாதத்தைச் சாப்பிட்டால், பிள்ளை பாக்கியம் உண்டாகும். இங்கே காட்சி தரும் ஸ்ரீவாதாபி கணபதியை வணங்கினால், தோஷம் அனைத்தும் விலகும் என்பது நம்பிக்கை" என்கிறார் இந்த ஆலயத்தின் குருக்கள், முத்துசாமி சிவாச்சார்யர்.



ஆத்தி மரம்

தளபதியாக இருந்தவர் பரஞ்சோதி. மன்னனின் ஆணையை ஏற்று, வாதாபிக்குப் படையெடுத்துச் சென்று, புலிகேசி மன்னனை வெற்றி கொண்டு திரும்பினார். அப்போது, வாதாபியிலிருந்து ஸ்ரீவாதாபி கணபதியின் விக்கிரகத்தை கொண்டுவந்து, தனது சொந்த ஊரான திருச்செங்காட்டங்குடி கோயிலில் பிரதிஷ்டை செய்தார். பிறகு, தன் மனைவி திருவெண்காட்டு நங்கையுடன் சிவத்தொண்டில் ஈடுபட்டார்; பின்னர், சிறுத்தொண்டர் எனப் பெயர் பெற்று, நாயன்மார்களில் ஒருவராகத் திகழ்ந்தார்.

தினமும் சிவனடியார் ஒருவருக்கு உணவளித்த பிறகே, சிறுத்தொண்டரும் அவரது மனைவியும் உண்பார்கள். ஒருநாள்,

அவர்களின் பக்தியைச் சோதிக்க, அடியவர் போல் வந்தார் சிவபெருமான். அவரை அன்புடன் வரவேற்றாள், திருவெண்காட்டு நங்கை. "ஆடவர் இல்லாத வீட்டுக்குள் நான் நுழைவதில்லை. ஆலயத்தின் அருகில் உள்ள ஆத்தி மரத்து அடியில் காத்திருப்பதாக உன் கணவர் வந்ததும் தெரிவி!" என்று கூறிச் சென்றார் ஈசன்.

இதனிடையில், உணவளித்து உபசரிக்க சிவனடியார் யாரேனும் கண்ணில் தென்பட மாட்டார்களா எனத் தேடிச் சென்ற சிறுத்தொண்டர், யாரையும் காணாமல், வாடிய முகத்துடன் வீடு திரும்பினார். அவரிடம் அவரது மனைவி நடந்ததைக் கூற, முகம் மலர்ந்தார். விறுவிறுவெனச் சென்று, அந்த அடியவரை வீட்டுக்கு அழைத்து வந்தார். அவரோ, சாப்பிடுவதற்கு முன்பு நிபந்தனை ஒன்று விதித்தார். அதைக் கேட்டு, அதிர்ந்து போனார்கள் சிறுத்தொண்டரும் அவருடைய மனைவியும்.

"பெற்றோர் விருப்பத்துடன், ஊனமில்லாத தலைமகனைக் கறி சமைத்துப் பரிமாறினால், விருந்தை ஏற்கிறேன். உன்னால் முடியுமா?" - இதுதான் அந்த அடியவர் விதித்த நிபந்தனை. இதற்கு மறுத்தால் தன் சிவத் தொண்டுக்குக் குறைவு ஏற்படுமே என்று கலங்கிய சிறுத்தொண்டர், சம்மதித்தார். பள்ளிக்குச் சென்றிருந்த தன் மகன் சீராளனை அழைத்து வந்து, அவனைப் பலியிட்டு சமைக்கத் தந்தார்.



ஸ்ரீஉத்தராபதீஸ்வரர்



ஸ்ரீதிருகுகுழல் உமைநாயகி



திருக்கோயில் கோபுரம்




ஸ்ரீவாதாபி கணபதி

உணவு சமைத்து, சிவனடியாருக்குப் பரிமாறப்பட்டது. "உங்கள் மகனைக் கூப்பிடுங்கள்; என் பக்கத்தில் உட்காரச் சொல்லுங்கள்; இருவரும் ஒன்றாக உணவருந்துகிறோம்!" என்றார் சிவனடியார். "என்ன சுவாமி, என் மகன் எப்படி வருவான்? வரமாட்டானே!" என்றார் சிறுத்தொண்டர், பொங்கி வரும் கண்ணீரை அடக்கியபடி. உடனே சிவனடியார், "இல்லை. வருவான். வெளியே போய், அவனைக் கூப்பிடுங்கள். வருவான்!" என்றார்.

தயங்கியபடியே, மனைவியுடன் வெளியே வந்த சிறுத்தொண்டர், "மகனே சீராளா!" என்று கண்ணீர் பெருக்கெடுக்கக் கதறிக் கூப்பிட... என்ன அதிசயம்! சிரித்த முகத்துடன் ஓடி வந்தான், சீராளன். அவனை அள்ளியணைத்துக் கொஞ்சினர் அவனது பெற்றோர். அப்போது, சிவபெருமான் அங்கே திருக்காட்சி தந்து, அனைவரையும் ஆசீர்வதித்தார். அப்படி ஈசன் சிறுத்தொண்டருக்குக் காட்சி தந்த தலம், திருசெங்காட்டங்குடி! நாள் - சித்திரை மாதம், பரணி நட்சத்திர தினம். வருடந்தோறும் இந்த நாளில், பக்தர்களுக்கு அமுது படைக்கும் திருவிழா இங்கே பிரசித்தம்!

ஐந்து நிலை கோபுரம்; கிழக்குப் பார்த்த ஆலயம். தெற்கு நோக்கிய சந்நிதியில் 'வாய்த்த திருகுகுழலி அம்மை' என்ற பெயரில் அம்பிகை காட்சி தருகிறாள். உட்பிராகாரத்தில் சிறுத்தொண்டர்,



ஆலயத்தின் உட்பிராகாரம்...

திருவெண்காட்டு நங்கை, சீராளன் ஆகியோரின் விக்கிரகங்களும் உள்ளன. கோயிலுக்கு அருகில், நம் பாவங்களைப் போக்கும் ஒன்பது தீர்த்தங்கள் உள்ளன. திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், காள மேகப் புலவர், அருணகிரிநாதர் ஆகியோர் போற்றிய அற்புதமான இந்தத் தலம், வேளாக்குறிச்சி ஆதீனத்தின் நிர்வாகத்தில் உள்ளது. இந்தக் கோயிலின் ஸ்தல விருட்சம் ஆத்தி.

ஆத்தி மர மொட்டுகள், அதிக ரத்தப்போக்கைக் கட்டுப்படுத்தும். மரத்தின் தண்டுப் பகுதியிலிருந்து வெளிப்படும் பிசினை, மாதுளை மலருடன் சேர்த்துக் கஷாயம் தயாரித்துக் குடித்தால், தொண்டை வறட்சி நீங்கி, அதிக அளவில் உமிழ் நீர் சுரக்கும். தொண்டை வீக்கம், தொண்டைக் கட்டி, ஆஸ்துமா, அல்சர் ஆகிய நோய்களையும் குணப்படுத்தும்.

ஆத்தி மரத்தின் வேர், பாம்பின் விஷத்தை முறிக்கவல்லது. ஆத்தி மரத்தின் தழையைக் கஷாயமாக்கி, மலேரியா காய்ச்சலால் உண்டாகும் தலைவலிக்கு மருந்தாகப் பயன்படுத்தலாம். இதன் பட்டை துவர்ப்பாக இருக்கும். சீதபேதிக்கு மருந்தாகும். உடல் வீக்கங்கள் குறைய, ஆத்தி மரப் பட்டையை அரைத்துப் பற்றுப் போடலாம்.

ஔவையின் ஆத்திசூடி, புறநானூறு, அகநானூறு, நற்றிணை, குறுந்தொகை ஆகியவற்றில் ஆத்தி மரம் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

பாவம் போக்கும் பன்னீர் மரம்!

ஹஸ்த நட்சத்திரத்துக்கான விருட்சம்

34

கீழைத் திருக்காட்டுப்பள்ளி
ஸ்ரீஆரண்ய சுந்தரேஸ்வரர் திருக்கோயில்

வானில் ஈஸ்வரனின் திருக்கரம் (ஹஸ்தம்) போன்ற அமைப்பில், நட்சத்திரக் கூட்டம் ஒன்று இருக்கிறது. இதை ஹஸ்த நட்சத்திரம் என்பார்கள். இதன் கதிர்வீச்சு அதிகம் வெளிப்படும் திருநாளிலேயே விநாயக சதுர்த்தியைக் கொண்டாடுகிறோம்!

இந்த நட்சத்திரம் - கன்னி ராசி மற்றும் புதன் கிரகத்தின் ஆளுகைக்கு உட்பட்டது. புதன்கிழமை மற்றும் ஆகஸ்ட் 23 முதல் செப்டம்பர் 22 வரையிலான நாட்களிலும் பிறந்தவர்கள், ஹஸ்த நட்சத்திரத்துக்குக் கட்டுப்பட்டவர்கள். இந்த நட்சத்திரத்தின் நல்ல கதிர்வீச்சு, அநேக நன்மைகளைத் தரவல்லது. அதேநேரம், இதன் திய கதிர்வீச்சு தோல் நோய்கள், சர்க்கரை நோய், ரத்த மூலம், கர்ப்பப் பையில் கட்டிகள், குடல் புண், குடல் சம்பந்தமான நோய்கள், அதிக ரத்தப்போக்கு, மலச்சிக்கல் ஆகிய உபாதைகளுக்குக் காரணமாகும். இதுபோன்ற ஹஸ்த நட்சத்திர தோஷத்தால் ஏற்படும் பாதிப்புகளுக்குச் சிறந்த நிவாரணியாகத் திகழும் விருட்சம் - பன்னீர் மரம்.

ஹஸ்த நட்சத்திரத்துக்கு உகந்த பன்னீர் மரம், கீழை திருக்காட்டுப்பள்ளி ஸ்ரீஆரண்ய சுந்தரேஸ்வரர்





பன்னீர் மரம்

ஆலயத்தின் ஸ்தல விருட்சமாகத் திகழ்கிறது. சீர்காழியில் இருந்து தென் கிழக்கில், காவிரிப்பூம்பட்டினம் செல்லும் வழியில், சுமார் 7 கி.மீ. தொலைவிலும்; திருவெண் காட்டில் இருந்து சுமார் 1 கி.மீ. தொலைவிலும் உள்ளது இந்தத் தலம். சோழநாட்டில், காவிரி வடகரைத் தலமாகவும் திகழ்கிறது.

வழக்கத்துக்கு மாறாக ராஜ கோபுரம் இன்றி, சிறு மண்டபம் போன்ற அமைப்புடனான ஆலய முகப்பும், சுற்றிலும் அமைந்த மரங்களும், அமிர்த தீர்த்தமுமாக... மிக அற்புதமாக அமைந்துள்ளது திருக்கோயில். இறைவன் ஸ்ரீஆரண்ய சுந்தரேஸ்வரர், சதுரபீட ஆவுடையாருடன் மேற்கு நோக்கி சந்நிதி கொண்டிருக்க, தெற்கு நோக்கியவளாக அம்பாள் ஸ்ரீஅகிலாண்டநாயகியும் அருளாட்சி நடத்தும் ஆலயம் இது!

அசுர குருவாகிய துவட்டாவின் மகனான விசுவ ரூபன், தேவர்கள் அழிய வேண்டித் தவம் இருந்தானாம். இதனால் வெகுண்ட இந்திரன், விசுவரூபனைக் கொன்றான். மகனை இழந்த துவட்டா, இந்திரனை அழிப்பதற்காக வேள்வி செய்தார்.



ஸ்ரீஆரண்ய சுந்தரேஸ்வரர்

அதில் தோன்றியவனே விருத்திராசுரன். இவனை அழிக்க நினைத்த இந்திரன், ததீசி முனிவரின் முதுகுத் தண்டை ஆயுதமாகப் பெற்று, இந்த அசுரனை அழித்தானாம். இந்தப் பழியும் பாவமும் நீங்க, தேவேந்திரன் இந்தத் தலத்துக்கு வந்து வழிபட்டதாகப் புராணம் சொல்கிறது.

படைப்புக் கடவுளாம் பிரம்ம தேவன் இந்தத் தலத்தில் வியாக்ரபாதேஸ்வரர், கபாலீசர், அகத்தியீசர், முனீசர், சக்ரேஸ்வரர், பிரம்மேஸ்வரர் ஆகிய லிங்கமூர்த்தங்களை ஸ்தாபித்து வழிபட்டதாகவும் புராணங்கள் குறிப்பிடுகின்றன. இந்தக் கோயிலில் உள்ள ஸ்ரீபிரம்மேஸ்வர லிங்கத்தை வழிபடுவோர், 100 அஸ்வமேத யாகங்கள் செய்த பலனைப் பெறுவார்களாம்.

நீங்கள் கடக ராசிக்காரரா?

"திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர் ஆகியோரின் பாடல் பெற்ற அற்புதத் தலம் இது. இந்தக் கோயிலில் பத்து சிவலிங்கங்கள் அமைக்கப்பட்டிருந்தன. முனிசிரேஷ்டர்கள் பலரும் இந்தச் சிவலிங்கங்களை வழிபட்டுப் பலன் அடைந்திருக்கிறார்கள்" என்று சிலிர்ப்புடன் விவரிக்கிறார் ஸ்ரீஆரண்ய சுந்தரேஸ்வரர் ஆலயத்தின் அர்ச்சகர் நடராஜ சுந்தர குருக்கள். அவரே தொடர்ந்து கூறினார்:



நடராஜ சுந்தர குருக்கள்

"இந்தத் தலத்தில் விநாயகரை நண்டு ஒன்று பூஜித்து முக்தி அடைந்ததாக புராணக் குறிப்பு உள்ளது. இதனால், கடக ராசிக்கு உரிய பரிகாரத் தலமாகவும் திகழ்கிறது. அதேபோல், ஸ்தல விருட்சமாக பன்னீர் மரம் இருப்பதால், புதன் கிரகம் மற்றும் ஹஸ்த நட்சத்திர தோஷ நிவர்த்தித் தலமாகவும் திகழ்கிறது இந்தக் கோயில். மிகப் பழைமையான ஆலயமான இது ஒதுக்குப்புறமாக இருந்தாலும், இதன் சாந்நித்யமும் சிறப்பும் அறிந்து பலரும் தேடி வந்து, இங்குள்ள இறைவனை மனமுருகி வழிபட்டுச் செல்கிறார்கள். மன நிம்மதி பெறவும், இறைவனுடன் ஒன்றவும் ஏற்ற தலம் இது!"





ஸ்ரீநண்டு பூஜித்த விநாயகர்

நண்டு பூஜித்த விநாயகர், இந்தக் கோயிலின் சிறப்பம்சம். இந்தப் பிள்ளையார் அமர்ந்திருக்கும் பீடத்திலும் நண்டு உருவம் அமைந்துள்ளதை தரிசிக்கலாம்.

கோயிலின் தெற்குப் பிராகாரத்தில், சுவர் சிற்பம் ஒன்று நம் கவனத்தை ஈர்க்கிறது. உற்று நோக்கினால், இந்தத் தலத்தின் திருப்பெயருக்குக் காரணமான ஆரண்ய முனிவரையும், அருகிலேயே மகாகாளரின் திருவுருவையும் காண முடிகிறது. இந்தத் தலத்தில் தனது வழிபாடு முடியும் வரை, தமக்குத் துணையாக அருகிலேயே இருந்து உதவுமாறு மகாகாளரை வேண்டிக்கொண்டாராம் முனிவர். அதற்கேற்ப, அரக்கர்கள் மற்றும் விலங்குகளால் எந்தவித ஆபத்தும் நேராமல், மகாகாளர் காவல் புரிந்ததாகவும் சொல்வர்.

கோயிலுக்குள் நுழைந்ததும் இடப்பக்கம் ஸ்ரீபிரம்மேசர், முனி ஈசர் என இரண்டு சிவலிங்கங்கள். அடுத்து ஸ்ரீசுப்ரமணியர், ஸ்ரீபைரவர், சூரியன் சந்நிதிகள். கருவறைச் சுவரின் வெளிப்புறத்தில், மன்னவன் ஒருவன் சிவலிங்கத்தை வழிபடும் சிற்பம் உள்ளது. இந்த மன்னர் யாரென்ற தகவல் இல்லை. அதேபோல், ஸ்ரீதட்சிணா மூர்த்தி சந்நிதிக்கு அருகில் சுவரில் காது வைத்துக் கேட்டால், கடலோசை போலச் சத்தம் கேட்பது விசேஷ அம்சம்!

அதுமட்டுமா? பராசவன புராணம் சிறப்பாக விவரிக்கும் 12 சிவாலயங்களுள் (சிவபீடங்கள் என்கிறார்கள்) ஒன்றாகவும் கூறப்படுகிறது இந்த சிவாலயம்.



ஸ்ரீஅகிலாண்டநாயகி





ஆலய நுழைவாயில்

இந்தத் தலத்தின் விருட்சம், பன்னீர் மரம். பண்டைய காலத்தில் கோயில்கள், அரண்மனைகள் மற்றும் மாளிகைகள் கட்ட இந்த மரத்தைப் பயன்படுத்துவார்களாம். கூரைத் தளத்தில் சிறிய தராய்களைக் கொடுத்து, அந்த பாரத்தைச் சுமப்பதற்கு நடுவில் கெட்டியான சரம் கொடுப்பார்கள். அந்த சரம் அமைப்பதற்கு, உறுதிமிக்க பன்னீர் மரத்தைப் பயன்படுத்துவார்கள்.

ரோஜாப் பூக்களைக் கொண்டு பன்னீர் தயாரிப்பதை (ரோஸ் வாட்டர்) நாம் அறிவோம். இதேபோல், பன்னீர் மரத்தின் பூக்களைக் கொண்டு 'நீராவி' தயாரிப்பார்கள். இதில் உள்ள நறுமணமும் மருத்துவ குணங்களும் ரோஜா மலர்களின் பன்னீர் போலவே இருப்பதால், இதற்கு 'பன்னீர் மரம்' என்று பெயர் வந்தது. ஒருகாலத்தில் கோயில்களிலும் அரண்மனைகளிலும் வளர்க்கப்பட்ட பன்னீர் மரங்களை, தற்போது வெகுசில இடங்களில் மட்டுமே காணமுடிகிறது.

இந்த மரத்தின் பட்டை, மருந்தாகப் பயன்படுகிறது. நாள்பட்ட சீதபேதியை இது குணப்படுத்தும். குறிப்பாக, அமீபியாசிஸ் எனும் கிருமிகளால் அடிக்கடி உண்டாகும் சீதபேதியை இது குணப்படுத்தும். இது, நச்சுக்கிருமிகளைக் கொல்லும் தன்மை கொண்டது. வெட்டுக்காயம், சீழ் பிடித்த கட்டிகள் ஆகியவற்றைக் குணப்படுத்த, பாதிக்கப்பட்ட இடத்தின் மீது பன்னீர் மரப் பட்டையின் தூளை வைத்துக் கட்டுவார்கள். இது, அழுகிய புண்களை விரைவில் குணப்படுத்தும்.

களா மரத்தின் மகிமை!


சித்திரை நட்சத்திரத்துக்கான விருட்சம்

35

பாபநாசம்
ஸ்ரீபாபநாச ஸ்வாமி திருக்கோயில்

சாமர்த்தியப் பேச்சால் காரியத்தை முடிக்கும் திறன், தேசப்பற்று, அறிவாற்றல், புலமை, ராஜதந்திரம் ஆகிய குணங்களுக்குச் சொந்தக்காரர்கள் சித்திரை நட்சத்திரக்காரர்கள்! எனினும், இருப்பதைக் கொண்டு மகிழாமல், கிட்டாதது குறித்தே கவலைப்படுவது இவர்களின் குணம். வலிமையான தேகம், கவர்ந்திழுக்கிற கண்கள், முகத்தில் மரு ஆகியவை சித்திரை நட்சத்திரக்காரர்களுக்கு இருக்குமாம்.

வானில், வெண்முத்து வடிவில் ஒற்றை நட்சத்திரக் கூட்டம் காணப்படும். அதை சித்திரை நட்சத்திரம் என்பர். இதனுடன் கன்னி ராசி மண்டலமும், புதன் கிரகமும் தொடர்பு கொண்டது. புதன்கிழமைகளில் மற்றும் ஆகஸ்ட் 23 முதல் செப்டம்பர் 22-ஆம் தேதி வரை பிறந்தவர்கள் சித்திரை நட்சத்திர ஆளுகைக்கு உட்பட்டவர்கள்! இந்த நட்சத்திரத்தின் நல்ல கதிர்வீச்சுகள் நன்மைகளையும், கெட்ட கதிர் வீச்சுகள் நோய் மற்றும் மன உளைச்சல்களையும் உண்டுபண்ணும்; இதைச் சித்திரை நட்சத்திர தோஷம் என்பார்கள். இந்த தோஷத்துக்கான பரிகார விருட்சம், களா மரம் என்கிறது வானவியல் மூலிகை சாஸ்திரம்.



தாமிரபரணி...

திருநெல்வேலி மாவட்டம், பாபநாசத்தில் உள்ளது ஸ்ரீஉலகம்மை உடனுறை ஸ்ரீபாபநாச ஸ்வாமி கோயில். அம்பாசமுத்திரத்தில் இருந்து சுமார் 8 கி.மீ. தொலைவு. தாமிரபரணி நதி உற்பத்தியாகிற

பாவங்கள் தொலையும்!

"வருடந்தோறும் பங்குனி மாதத்தில் தேர் மற்றும் தெப்பத் திருவிழாக்கள் விமரிசையாக நடைபெறும். சித்திரை முதல் தேதி, உமையவளுடன் ஸ்ரீசிவபெருமான், அகத்திய முனிவருக்குத் திருமணக் காட்சி தந்தருளியதால், அந்த நாளில் எண்ணற்ற பக்தர்கள் வந்து தரிசித்துச் செல்வர்" என்கிறார் ஆலயத்தின் தலைமை அர்ச்சகர் சதாசிவ பட்டர்.

"மார்கழி, நவராத்திரி உற்ஸவங்கள், கந்த சஷ்டி, ஐப்பசி விஷு, சிவராத்திரி, பௌத்திரோத்ஸவம் ஆகியவையும் இங்கே சிறப்புறக் கொண்டாடப்படுகின்றன. கோயில் படித்துறை தீர்த்தக் குளத்தில், உச்சிகால பூஜையில், மீன்களுக்கு நைவேத்தியம் செய்து, பூஜை செய்வது வழக்கம்! அதேபோல், மாதத்தின் கடைசி வெள்ளிக் கிழமைகளில் இங்கு வந்து நீராடி, சிவனாரைத் தொழுதால், பாவமெல்லாம் பறந்தோடும் என்பது ஐதீகம்!



சதாசிவ பட்டர்

சூரிய தலமாக இருப்பதால், இங்கே பிரார்த்தித்தால், கண்பார்வைக் கோளாறுகள் குணமாகும். திருமணத் தடை, வேலைவாய்ப்புத் தடங்கல் ஆகியவை நீங்கும்; அனைத்துப் பாவங்களும் தொலையும்" என்கிறார் சதாசிவ பட்டர்.



ஸ்ரீபாபநாச ஸ்வாமி திருக்கோயில்

பொதிகை மலையின் கீழ் உள்ள அற்புத ஊர் இது! நம் பாவங்களையெல்லாம் நாசம் செய்பவர் என்பதால், சிவனாருக்கு இந்தத் திருநாமம். இந்தத் தலத்தின் விருட்சம் - களா மரம்!

பாபநாசம் தலத்தில், தெற்கு வடக்காக ஓடுகிற தாமிரபரணி கொள்ளை அழகு. ஏழு நிலை ராஜகோபுரத்துடன் கூடிய ஆலயத்தைக் கண்டாலே, நம் பாவமெல்லாம் பறந்தோடிவிடும். விக்கிரமசிங்க பாண்டிய மன்னன் கட்டிய ஆலயம் இது!


மூலவரின் திருநாமம் - ஸ்ரீபாவநாசர். அம்பிகைக்கு உலகம்மை; லோகாம்பிகை எனும் திருநாமமும் உண்டு. விராடபுருடன் பூஜித்ததால், ஸ்வாமிக்கு ஸ்ரீவயிராச லிங்கர்; ரிக், யஜுர், சாம வேதங்கள் ஆகியவை மூன்று களா மரங்களாகவும் (முக்களா லிங்கம் இங்கே உள்ளது), அதர்வண வேதம் ஆகாய வடிவமாகவும் இருந்து வழிபட்ட தலம் இது! தலத்தில் உள்ள விநாயகருக்கு ஸ்ரீபூதல விநாயகர் என்றும், ஸ்ரீநடராஜருக்கு புனுகு சபாபதி என்றும் திருநாமங்கள்!

அறிந்தும் அறியாமலும் செய்கிற நம் சகல பாவங்களையும் சிவனார் அகற்றி அருளும் தலம்; அகத்திய முனிவருக்கும், அவருடைய மனைவி லோபாமுத்திரைக்கும் திருமணக் கோலம் காட்டியருளிய தலம் எனப் பெருமைக்கு உரிய தலம் இது! ஸ்ரீகல்யாணசுந்தரரின் சந்நிதியில், இந்தக் காட்சியைத் தரிசிக்கலாம். தல விருட்சமான களா மரத்தின் கீழ், முக்களா லிங்கர் தரிசனம் தருகிறார்.


தல விருட்சமாம் களாவுக்கு, ஏராளமான மருத்துவ குணங்கள் உண்டு. இதன் காய் மற்றும் பழம், மலச்சிக்கலை நீக்கவல்லது; தாகத்தைத் தணிக்கவும் செய்யும். வயிற்று உஷ்ணத்தைத் தணித்து, சக்தியைத் தரவல்லது. களாக்காயுடன் உப்பு சேர்த்துச்



உற்சவ மூர்த்திகள்...



ரிஷப வாகனத்தில்...



ஸ்தல விருட்சம்...

சாப்பிடலாம்; ஊறுகாயாகவும் பயன்படுத்தலாம். இதனால் பித்தம் மற்றும் ரத்தம் தொடர்பான நோய்கள் நீங்கிவிடும். வாயுத் தொல்லையை நீக்கி, பசியைத் தூண்டிவிடும்.

உலர்ந்த களாவைத் தண்ணீரில் ஊற வைத்துச் சாப்பிட்டால், உஷ்ணத்தால் சொட்டுச் சொட்டாகச் சிறுநீர் பிரிவதில் உள்ள சிரமம் நீங்கிவிடும். இலைகளைச் சாறாக்கி தேனில் கலந்து சாப்பிட, வறட்டு இருமல் உடனே நின்றுவிடும். கண் தொடர்பான பிரச்னைகளுக்கு களாப் பூவைப் பயன்படுத்துகின்றனர்.

களா மரத்தின் வேரை தண்ணீரில் கலந்து, சுண்டக் காய்ச்சிப் பயன்படுத்தினால், பிள்ளைப் பேற்றின்போது ஏற்படும் கருப்பை அழுக்குகள் வெளியேறிவிடும்.

மகிமைமிக்க மருத மரம்!

சுவாதி நட்சத்திரத்துக்கான விருட்சம்

36

திருவிடைமருதூர்
ஸ்ரீமகாலிங்கேஸ்வரர் திருக்கோயில்

நட்சத்திர மண்டலங்களில், சுவாதி நட்சத்திரக் கூட்டத்துக்கும் மனிதனின் சிறுநீரகம் மற்றும் இதயத்துக்கும் தொடர்பு உண்டு. எனவே இதயம், சிறுநீரகம் மற்றும் சர்க்கரை நோய் ஆகியவற்றில் இருந்து அவர்கள் தங்களைத் தற்காத்துக் கொள்வது அவசியம்.

வெள்ளிக்கிழமை மற்றும் செப்டம்பர் 23 முதல் அக்டோபர் 21-ஆம் தேதி வரை பிறந்தவர்களை சுவாதி நட்சத்திரம் ஆட்சி செய்கிறது. இந்த நட்சத்திரத்தின் நல்ல கதிர்வீச்சுகள் ஆரோக்கியத்தையும், கெட்ட கதிர்வீச்சுகள் வியாதிகளையும் உண்டுபண்ணுகின்றன. இதை சுவாதி நட்சத்திர தோஷம் என்பார்கள். இந்த தோஷத்தைப் போக்கும் சக்தி மருத மரத்துக்கு உண்டு!

மருத மரம், சுவாதி நட்சத்திரத்தின் நல்ல கதிர் வீச்சுகளைத் தனக்குள் சேமித்து வைத்துக்கொள்ளும் தன்மை கொண்டது. சுவாதி நட்சத்திரக்காரர்கள், தினமும் அரை மணி நேரம் மருத மர நிழலில் அமர்வது மிகுந்த பலனைத் தரும். இதனால், சுவாதி நட்சத்திர தோஷம் விலகும்.

திருவிடைமருதூர் ஸ்ரீமகாலிங்கேஸ்வரர் கோயிலின் ஸ்தல விருட்சம் - மருத மரம்! கும்பகோணம் - மயிலாடுதுறை செல்லும் வழியில், சுமார் 10 கி.மீ. தொலைவில் உள்ளது இந்தக் கோயில். திருவாவடுதுறை ஆதின நிர்வாகத்தின் கீழ் உள்ள ஆலயம் இது. திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகிய நால்வரும் பாடிப் பரவிய தலம் இது. அதுமட்டுமா? கருவூர்த் தேவர்,

'தோஷ நிவர்த்தி திருத்தலம்!'



ஸ்ரீமூகாம்பிகை

"இந்தத் தலத்தில் ஸ்ரீருத்ர பூர்ண மகா மேரு, 27 நட்சத்திரங்கள் பூஜித்த சிவலிங்கங்கள், ஸ்ரீமூகாம்பிகை என பல சிறப்புகள் உண்டு. தைப்பூச விழா, வைகாசி விசாகம் திருக்கல்யாண வைபவம், மார்கழி திருவாதிரை என விமரிசையான விழாக்களுக்குக் குறைவே இல்லாத கோயில் இது!" என்கிறார் ஸ்ரீமகாலிங்க ஸ்வாமி கோயில் ஆலயத்தின் அர்ச்சகர் தண்டபாணி சிவாச்சார்யார்.

"இது, தோஷ நிவர்த்தி ஸ்தலம். நட்சத்திர தோஷம், சந்திர திசை, சந்திர புத்தி ஆகியவற்றால் ஏற்படும் நோயும், சனி திசை, ஏழரை நாட்டுச் சனி, அஷ்டமத்துச் சனி ஆகியவற்றால் ஏற்படும் துன்பங்களும் இந்தத் தலத்துக்கு வந்து வழிபட்டால் நீங்கும். நட்சத்திர தோஷத்தால் பாதிக்கப்பட்டவர்கள், ஆடல்வல்லான் மண்டபத்தில் சாந்தி செய்துகொள்ள, தோஷம் நீங்கும்.



தண்டபாணி சிவாச்சார்யர்

இந்தத் தலம், பூர்வஜென்ம பாப நிவர்த்தித் தலமும்கூட! மாங்கல்ய தோஷம், களத்திர தோஷம் ஆகியவற்றுக்கு இந்தக் கோயிலில் உள்ள ஸ்ரீமூகாம்பிகைக்கு அபிஷேகம் செய்தால் விரைவில் நல்லது நடக்கும். மனநிலை பாதித்தவர்கள் இங்கு வந்து வணங்கினால், குணம் அடைவர்" என்கிறார் சிவாச்சார்யார்.

பட்டினத்தார், அருணகிரிநாதர், கவிகாளமேகம் ஆகியோர் இந்தத் தலத்துக்கு வந்து, பாடிப் போற்றியுள்ளனர்.

இந்தத் தலத்தின் தேரோடும் நான்கு வீதிகளிலும் தனித் தனியே சிவாலயங்கள் இருக்க... நடுநாயகமாக ஸ்ரீமகாலிங்கேஸ்வரர் கோயில் கொண்டு இருக்கிறார். இதனால் இந்தத் தலம் பஞ்சலிங்கத் தலம் எனப் போற்றப்படுகிறது. மேலும், மத்யார்ஜுனத் தலம் என்றும் போற்றப்படுகிறது. வடக்கில் மல்லிகார்ஜுனம் (ஸ்ரீசைலம்), தெற்கில் ஸ்புடார்ஜுனம் (திருநெல்வேலி) ஆகிய தலங்களுக்கு நடுவில், அமைந்து இருப்பதால் இந்தத் திருப்பெயர்! அர்ஜுனம் என்றால் மருத மரம் என்று அர்த்தம்.



ஸ்ரீமகாலிங்கம்

இன்னொரு தகவல்... காசிக்கு நிகரான பதினொரு சிவத்தலங்களில் இந்தத் தலமும் ஒன்று. இங்கு இறைவனின் திருநாமம் - ஸ்ரீமகாலிங்கம்; அம்பாள் - ஸ்ரீபிரகத் சுந்தர குஜாம்பிகை; பெருநல மாமுலையம்மை எனத் தமிழில் அழைக்கின்றனர். இங்கே, ஸ்ரீமூகாம்பிகை தவக்கோலத்தில் காட்சி தருகிறாள். இங்கேயுள்ள கணபதிக்கு, ஸ்ரீ ஆண்ட விநாயகர் எனத் திருநாமம். ஸ்ரீமகாலிங்கத்துக்கு அபிஷேக ஆராதனைகள் முடிந்ததும், ஸ்ரீ ஆண்ட விநாயகருக்கு பூஜைகள் நடைபெறுவது, இந்தத் தலத்தின் சிறப்பு!



ஸ்ரீபிரகத் சுந்தர குஜாம்பிகை

ஏழு கோபுரங்கள், ஏழு பிராகாரங்கள், ஏழு கிணறுகள்



மருத மரம்



கொண்ட அற்புதத் தலம் இது. 27 நட்சத்திரங்களும் பூஜித்த சிவலிங்கங்கள் இங்கே உள்ளன. அற்புதமாக வடிக்கப்பட்ட பாவை விளக்கு, அர்த்த மண்டபத்தில் போக சக்தி அம்மன், மகா மண்டபத்தில் 12 ராசிகளைக் குறிக்கும் 12 தூண்கள்... எனச் சிறப்புகளுடன் திகழும் இந்த ஆலயத்தில் ஸ்ரீதட்சிணாமூர்த்தி, அகத்தியர், சப்த கன்னியர், வள்ளி - தெய்வானை சமேத ஸ்ரீதேவசேனாபதி, ஸ்ரீநடராஜர், ஸ்ரீபிரம்மா, ஸ்ரீதுர்கை எனப் பலரும் சந்நிதி கொண்டு அருள்பாலிக்கின்றனர்.

மருத மரத்தின் இலைகளை அரைத்து, பாலில் கலந்து சாப்பிட்டால், பித்தம் குறையும்; பாதங்கள் மற்றும் உள்ளங் கைகளில் ஏற்படும் வெடிப்புகள் குணமாகும். பச்சிலையை இடித்து, அதன் சாற்றைக் காது வலிக்குச் சொட்டு மருந்தாகப் பயன்படுத்தலாம். இதன் துளிர் இலைகளை அரைத்து, வேக வைத்து, புண்கள் மீது களிம்பு போல் பூசினால், விரைவில் புண்கள் ஆறிவிடும். மருத மரப்பட்டையைப் பொடியாக்கி, காய்ச்சிக் குடித்தால் அல்லது சாப்பிட்டால், இதய நோய்கள் யாவும் குணமாகிவிடும்.

எலும்பு முறிவு ஏற்பட்டால், இதன் பட்டையின் பொடியைத் தேனுடன் கலந்து சாப்பிட, பூரண குணம் கிடைக்கும். இதய



அடைப்புக்குக் காரணமான கொழுப்பை நீக்கவும் கரைக்கவும் அர்ஜுன் (மருது) மரப்பட்டை உதவுகிறது. மூன்று கிராம் மருத மரப் பட்டையைப் பசும்பால் அல்லது தேனில் கலந்து கஷாயம் போல் அருந்தினால், இதய வால்வு அடைப்புகள் சரியாகிவிடும்.

வயலும் வயல் சார்ந்த இடத்தை மருதம் என்பார்கள். இங்கு வளரும் மருத மரத்தைக் கொண்டே இந்தப் பெயர் அமைந்ததாகவும் சொல்வார்கள். 'வேந்தன் மேய தீம்புனல் உலகம்' எனத் தொல்காப்பியம் கூறுகிறது. அகநானூறு, கலித்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, புறநானூறு, பெரும்பாணாற்றுப்படை, குறுந்தொகை, பரிபாடல், திருமுருகாற்றுப்படை, மதுரைக் காஞ்சி, அகத்தியம் ஆகிய நூல்களில் மருதம் குறித்துச் சிறப்புறச் சொல்லப்பட்டுள்ளது.

மருதம், தமிழிசையில் ஒருவகையான பண். 'யாழ் கருவியின் நரம்பைத் தெரிந்து யாழோர் மருதப் பண்ணை இசைப்பர்' என்கிறது மதுரைக் காஞ்சி.

தமிழகத்தில் மருதமலை ஸ்ரீதண்டாயுதபாணி ஆலயம், பிள்ளையார்பட்டி ஸ்ரீகற்பக விநாயகர் ஆலயம், உடுமலைபேட்டை ஸ்ரீஅர்ஜுனேஸ்வரர் ஆலயங்களில் மருத மரமே தல விருட்சம்!

தோஷங்கள் நீக்கும் விளா மரம்!

விசாக நட்சத்திரத்துக்கான விருட்சம்

37

திருநின்றியூர்
ஸ்ரீலட்சுமிபுரீஸ்வரர் திருக்கோயில்


வெள்ளிக்கிழமைகளிலும், செப்டம்பர் 23 முதல் நவம்பர் 20-ஆம் தேதி வரையிலான நாட்களிலும், விருச்சிகம் மற்றும் துலாம் ராசியிலும் பிறந்தவர்கள் விசாக நட்சத்திரத்தின் ஆதிக்கத்துக்கு உட்பட்டவர் களாக இருப்பார்கள். இந்த நட்சத்திரத்தின் நண்பனாகத் திகழ்கிறது, விளா மரம்!

குழந்தை பாக்கியமின்மை, பிறக்கின்ற குழந்தை ஊனமாகப் பிறத்தல், வாயுத் தொல்லைகள், நோய்த் தொற்று, இருமல், ஆஸ்துமா, அலர்ஜி, சர்க்கரை நோய், மனப் பதற்றம், ஈறு மற்றும் கர்ப்பப்பைக் கோளாறுகள் ஆகியவை விசாக நட்சத்திரத்தின் கெட்ட கதிர் வீச்சுகளால் உண்டாகின்றன. இதனை விசாக நட்சத்திர தோஷம் என்பர். விசாகத்தின் விருப்பம் மிகுந்த விளா மரம், அதன் நல்ல கதிர்வீச்சுகளைத் தனக்குள் சேமித்து வைத்துக்கொள்கிறது. விளா மர நிழலில் இளைப்பாறினால், விசாக நட்சத்திர தோஷத்தில் இருந்து விடுபடலாம்!

நாகை மாவட்டம் மயிலாடுதுறையில் இருந்து சீர்காழி செல்லும் சாலையில், சுமார் 10 கி.மீ. தொலைவில் உள்ளது திருநின்றியூர். இங்குள்ள ஸ்ரீஉலகநாயகி சமேத



ஆலய நுழைவாயில்



ஆலயத்தின் உள்ளே...

ஸ்ரீலட்சுமிபுரீஸ்வரர் கோயிலின் தல விருட்சம் விளா மரம். திருமகள் வழிபட்டதால், இந்தத் தலம் திருநின்றியூர் எனப்படுகிறது (பூசலார் நாயனார் மனக்கோயில் கட்டி வழிபட்ட தலம், திருநின்றவூர்; திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ளது). தருமபுரம் ஆதீனத்துக்குச் சொந்தமான கோயில் இது.

திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர், சுந்தரர் ஆகிய மூவரால் பாடப் பெற்ற தலம்; இந்திரன், அகத்தியர் மற்றும் ஐராவதத்துக்கு சிவனார் பேரருள் புரிந்த தலம் எனப் புராணப் பெருமைகள் கொண்ட ஆலயம். பிரம்மஹத்தி தோஷத்தால் அவதியுற்ற கோச்செங்கட் சோழன், தினமும் சிதம்பரம் தலத்துக்கு வந்து, அர்த்தஜாம பூஜையைத் தரிசித்துச் சென்றான். அப்போது, திருநின்றியூர் பகுதி வனமாகத் திகழ்ந்ததாம். இரவு வேளையில் தீப்பந்த வெளிச்சத்தில் மன்னனும் படையினரும் பயணிக்க... இந்த வனத்தில் ஓரிடத்தில் தீப்பந்தங்கள் அனைத்தும் அணைந்துவிடுமாம்! அந்த இடத்தைக் கடந்ததும், மீண்டும் தீப்பந்தத்தை ஏற்றிச் செல்வார்கள். ஒருநாள்... வானில் இருந்து காமதேனு இறங்கி வந்து, ஓரிடத்தில் பால் சொரிந்துவிட்டுப் பறக்க... அதைக் கண்ட மன்னன் அதிசயித்துப் போனான். காமதேனு பால் சொரிந்த இடத்தில் தனது ஈட்டியால் குத்த... அந்த இடத்திலிருந்து ரத்தம் பீறிட்டது. அந்த இடத்தைத் தோண்டிப் பார்க்க, லிங்க மூர்த்தமாகத் தோன்றினார் சிவனார்! அதில் சிலிர்த்த மன்னன், அந்த இடத்தில் அழகிய கோயிலைக் கட்டி, வழிபட்டான். அவனது தோஷங்கள் யாவும் விலகின. பின்னாளில் நாட்டுக்கோட்டை நகரத்தார் எனப்படும் சமூகத்தினர், இந்தக் கோயில் திருப்பணிகளில் அதிக அளவில் ஈடுபட்டனர்.

மூன்று நிலை ராஜகோபுரம்; உள்ளே நுழைந்ததும், பலி பீடம், நந்தி மண்டபம், முன் மண்டபம் மற்றும்



விளா மரம்



சந்நிதிகள். வலது புறத்தில் அம்பாள் ஸ்ரீ உலகநாயகி; தென்முக வாயிலுக்கு நேர் சந்நிதியில் ஸ்ரீலட்சுமி புரீஸ்வரர் தரிசனம். இங்கு ஆடி வெள்ளிக்கிழமைகளில் சிறப்பு பூஜைகள் நடைபெறுகின்றன. சகல ஐஸ்வரியங்களுடன் திகழ, ஸ்ரீலட்சுமி ஹோமம் நடைபெறுகிறது. தாமரை இதழில் தேனூற்றி யாகம் செய்வது இங்கு விசேஷம். ஸ்ரீலட்சுமிபுரீஸ்வரரை வழிபட, பிள்ளை பாக்கியம் கிடைக்கும்; சொத்து வழக்குகளும் சிக்கல்களும் தீரும் என்பர்.

இந்தத் தலத்தின் விருட்சமான விளா மரம் ஒவ்வாமை, ரத்தப் போக்கு ஆகியவற்றைக் கட்டுப்படுத்தும். கல்லீரல், மண்ணீரல், நரம்பு, இதயம் மற்றும் எலும்புகளுக்குக் கூடுதல் பலம் தரவல்லது;



ஸ்ரீலட்சுமிபுரீஸ்வரர்



ஸ்ரீஉலகநாயகி

'கடன் தொல்லை நீங்கும்!'

"அனுஷம், விசாகம், கேட்டை ஆகிய நட்சத்திரங்களில் பிறந்தவர்கள் வணங்கி வழிபட வேண்டிய தலம் இது! இங்கு வழிபட்டால், அவர்கள் லட்சுமி கடாட்சத்துடன் வாழ்வர்; சகல தோஷங்களும் விலகும்; வியாதிகள் தீரும்; கடன் தொல்லையில் இருந்து விடுபடலாம்; பிள்ளை பாக்கியம் கிடைக்கும்.



சுப்ரமணிய குருக்கள்

சுமார் ஐந்து வயது வரை பேச்சு வராத குழந்தைகளுக்கு, இங்கு நைவேத்தியம் செய்த தேன் வழங்கப்படுகிறது. இந்தத் தேனை நாக்கில் தடவ... குழந்தைகள் பேசத் துவங்குவர் என்பது ஐதீகம்" என்கிறார் கோயிலின் சுப்ரமணிய குருக்கள்.

மார்பகம் மற்றும் கர்ப்பப்பையில் கேன்சர் வராமல் தடுக்கும் வல்லமையும் விளா மரத்துக்கு உண்டு.

இதன் பழம், வயிறு மற்றும் குடலுக்குத் தெம்பைத் தருகிறது; தாகம் தணிக்கிறது; வலி நிவாரணியாகத் திகழ்கிறது. பித்தத்தைப் போக்கி, வயிற்றுப் போக்கைக் கட்டுப்படுத்துகிறது. தொண்டைப் புண் மற்றும் கொப்புளங்கள் இருந்தால், விளாம்பழக் கஷாயத்தால்



வாய் கொப்பளிப்பது, மிகுந்த பயனைத் தரும்! இதன் பட்டை வெண் குஷ்டம், படை ஆகியவற்றைக் குணமாக்கும். வேர்ப் பட்டையைச் சாறாக்கி, மிளகு, பசு நெய் கலந்து குடித்தால், பிரசவித்த பெண்களுக்கு பலம் அதிகரிக்கும். இதன் துளிர் இலைக் கொழுந்துகளை ரசமாக்கி, பால் அல்லது தயிர் மற்றும் கற்கண்டுப் பொடி கலந்து சாப்பிட்டால், அழற்சி நோய் காணாமல் போகும்.

பெரும்பாணாற்றுப்படை, நற்றிணை ஆகிய சங்க இலக்கிய நூல்களில் விளா மரம் குறித்து விவரிக்கப்பட்டுள்ளது.

'*பார்வையாத்த பறை தாள் விளவின் நீழல் முன்றில் நிலவுரல் பெய்து*' என பெரும்பாணாற்றுப்படையில் வரும் வரிகளுக்கு, நச்சினார்க்கினியர் 'பார்வை மான் கட்டி நின்று தேய்ந்த தாளினையுடைய விளவினது நிழலையுடைய முற்றத் திட்டத்துத் தோன்றிய நில உரலிலே அப்புல்லரிசியைச் சொரிந்து' என்று உரை எழுதியுள்ளார்.

மேலும் '*விளாம்பழம் கமழும் கமஞ்சூழ குழீஇ*' என நற்றிணையில் கூறப்பட்டுள்ள வரிக்கு 'தயிர்த் தொழிலில் நறுமணம் கமழ்வதற்கு, அதனுள் விளாம்பழத்தை வைத்து மணம் ஏற்றுவர்' என்று பொருள் கூறப்படுகிறது. '*செண்பகம் கருவிளம் செங்கூதாளம்*' என்று இளங்கோவடிகள் குறிப்பிடுகிறார்.

கும்பகோணம் அருகில் உள்ள கபிஸ்தலம், நெல்லை மாவட்டம் விரவநல்லூர் அருகே அத்தானநல்லூர், புதுக்கோட்டை மாவட்டம் ஆவுடையார்கோவில் அருகில் உள்ள தியத்தூர் ஆகிய தலங்களிலும் விளா மரமே ஸ்தல விருட்சம்!

சதுரக்கள்ளி மரத்தின் மகிமை!

அனுஷம் நட்சத்திரத்துக்கான விருட்சம்

38

திருப்புனவாசல்
ஸ்ரீபழம்பதிநாதர் திருக்கோயில்

குடை வடிவில் வானத்தில் உள்ள மூன்று நட்சத்திரங்களின் கூட்டத்தை அனுஷம் நட்சத்திரக் கூட்டம் என அழைப்பர். செவ்வாய்க்கிழமை அல்லது அக்டோபர் 22 முதல் நவம்பர் 20 வரை பிறந்தவர்களை அனுஷ நட்சத்திரம் ஆட்சி செய்கிறது. செவ்வாய் கிரகம் மற்றும் விருச்சிக ராசியின் ஆதிக்கம் கொண்டவர்கள், இவர்கள்!

அனுஷ நட்சத்திரத்தின் நல்ல கதிர்வீச்சுகள் ஆரோக்கியமான பாலுணர்வும், குழந்தை பாக்கியமும் தர வல்லவை. இதன் கெட்ட கதிர்வீச்சுகள் ஆண்மை, பெண்மைக் குறைபாடுகள், மலட்டுத் தன்மை, உடல் பலவீனம் போன்றவற்றை ஏற்படுத்தும். இதை 'அனுஷ நட்சத்திர தோஷம்' என்பார்கள்.

இந்த தோஷத்தைப் போக்க சதுரக்கள்ளி உதவுகிறது. சதுரக்கள்ளி அனுஷ நட்சத்திரத்தின் நல்ல கதிர்வீச்சுகளை ஈர்த்துத் தன் உடலுக்குள் சேமித்து வைக்கும். அதை தொடுபவர்களுக்கு, அதன் அருகில் தினம் அரைமணி நேரம் செலவிடுபவர்களுக்கு, தோஷம் நிவர்த்தியாகும்!

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கிக்கு



சதுரக்கள்ளி

48 கி.மீ. தொலைவில் திருப்புனவாசல் என்ற தலம் இருக்கிறது. அருள்மிகு கச்சணி மாமுலை அம்மன் (பிரஹந் நாயகி) சமேத பழம்பதிநாதர் (விருத்தபுரீஸ்வரர்) இத்தல இறைவியும் இறைவனும் ஆவர். மூலவர் பெரிய லிங்கமாகக் காட்சியளிக்கிறார். தஞ்சைப் பெரிய கோயில், கங்கை கொண்ட சோழபுரக் கோயில் ஆகிய இரண்டுக்கும் அடுத்ததாக பெரிய லிங்கம் உள்ளது இந்தத் தலத்தில்தான்; 9 அடி உயரம், 30 அடி சுற்றளவு கொண்டது!

இந்த ஆலயம் சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேல் பழைமை வாய்ந்தது. ஸ்வாமி மற்றும் அம்பாள் சந்நிதிகளுக்கு நேரே ஐந்து நிலை ராஜகோபுரங்கள் உள்ளது. ஆனால், அம்பாள்


தோஷ நிவர்த்தித் தலம்!

சைவ புராணத்தில், 'ஏகாதச ருத்ர சம்ஹிதை'யில் விரிவாகக் கூறப்பட்டுள்ள தலங்களுள் திருப்புனவாசலும் ஒன்று.

பிரம்மா ஒருமுறை அறியாமையால் சிவ அபவாதம் செய்து, அதனால் படைப்புத் தொழிலை மறந்து தன் சத்திய லோகத்தை விட்டகன்று மனம் வருந்தினார். அம்பிகையின் அறிவுரைப்படி, இங்கு வந்து பழம்பதிநாதரைத் தொழுது, பின் தன் படைப்பாற்றலை மீண்டும் பெற்றார் என்கிறது ஸ்தல புராணம்.

அதேபோல், ஒருமுறை அங்காரகனுக்கு ஒரு முனிவரின் சாபத்தால் ஒளியும் சக்தியும் குறையத் தொடங்கியது. நாரத முனிவரின் அறிவுரைப்படி, இங்கு வந்து 10 தீர்த்தங்களிலும் நீராடி, இறைவன் இறைவியை வழிபட, மீண்டும் வீரியமும் ஒளியும் ஏற்பட்டதாம். அதன் விளைவாக இந்த இறைவனை வணங்கினால், வணங்குவோருக்கு அங்காரக தோஷம் நீங்கப்பெற வேண்டும் என்று வரமும் கேட்டுப் பெற்றானாம் அங்காரகன்.

அங்காரக தோஷம் உட்பட, அனைத்துத் தோஷ நிவர்த்தித் தலமாகவும் இது விளங்குவதாக பக்தர்கள் கூறுகின்றனர்.



ஸ்ரீவிருத்தபுரீஸ்வரர்

சந்நிதி கோபுரத்தில் சக்தி வாய்ந்த ஸ்ரீகாளி குடிகொண்டிருப்பதால், கோபுர வாயில் எப்போதும் அடைக்கப்பட்டிருக்கிறது.

ஆலயத்தினுள், சூரியன் இருக்கவேண்டிய இடத்தில் சந்திரனும், சந்திரன் இருக்க வேண்டிய இடத்தில் சூரியனும் காட்சி தருகிறார்கள். தண்டம் இருக்க வேண்டிய தட்சிணாமூர்த்தியின்

கையில் பாம்பும், கருவறைக்குப் பின்னே, கோஷ்டத்தில் இருக்க வேண்டிய லிங்கோத்பவருக்குப் பதிலாக மகாவிஷ்ணுவும் அனுமனும் இருப்பது விசேஷம்.

ஒரே இடத்தில் ஐந்து விநாயகர் விக்கிரகங்கள், சதுர்(நான்கு)முக லிங்கம், தனிச் சந்நிதியில் பிரம்மா மற்றும் விஷ்ணு, அம்பாள் சந்நிதிக்கு எதிரில் நந்தி போன்றவை இங்கு மட்டுமே காணக்கூடிய வித்தியாச – விசேஷங்கள்! உக்கிரம் கொண்டிருப்பதால் குடைவரைக் காளிதேவியை நேரடியாகப் பார்க்காமல் கண்ணாடி வழியாகப் பார்த்து தரிசிக்கலாம். திங்கட்கிழமை மட்டும் பூஜை செய்யப்படுகின்ற அகத்தியர், கபில புத்திரர்கள் ஒன்பது பேரின் விக்கிரகங்கள் என ஆன்மிக அன்பர்களுக்கு பல அதிசயங்கள் இங்கு காத்திருக்கின்றன.

மதுரை, திருப்புனவாசல், திருக்குற்றாலம், ஆப்பனூர், திருவேடகம், திருநெல்வேலி, ராமேஸ்வரம், திருவாடானை, திருப்பரங்குன்றம், திருச்சுழி, திருப்பத்தூர், காளையார்கோயில்,


உத்தியோக மாறுதல், பதவி உயர்வு, சுகப் பிரசவம்...

ஆலயத் தலைமை அர்ச்சகர் ராமநாத குருக்கள், "இங்கு தினமும் 6 கால பூஜை நடக்கிறது. கார்த்திகை சோம வாரத்தில் 1008 சங்கு அபிஷேகம், வைகாசியில் தேரோட்டம் சிறப்பாக நடத்துகிறோம்.

இங்கு வந்து வழிபட்டால், தீராத நோய்கள் நீங்கும்; தேவைப்படும் உத்தியோக மாறுதல், பதவி உயர்வு கிட்டும். குடைவரைக் காளியை வழிபட்டால் குழந்தைப் பேறும், தடைபட்ட திருமணம் நடந்தேறுவதும் கண்கூடு. சுற்று வட்டார பகுதிகளான சுமார் 100 கிராமங்களில் உள்ள பெண்களுக்குக் குழந்தை பிறந்ததும் தூக்கி வந்து குடைவரைக் காளிக்கு பூஜை செய்துவிட்டுப் போகிறார்கள்.


ராமநாத குருக்கள்

இந்துக்கள் மட்டுமல்லாது ஏனைய சில மதங்களைச் சேர்ந்த பெண்களும் ஒன்பதாவது மாதம் (சீமந்தத்தின்போது) இரண்டு வளையல்களை எடுத்துத் தனியாக வைத்து, சுகப் பிரசவம் நடக்க வேண்டுமென குடைவரைக் காளியிடம் பிரார்த்தித்துக் கொள்கிறார்கள். அவ்வாறே சுகப்பிரசவம் நிகழ்ந்ததும், அந்த இரு வளையல்களை எடுத்து வந்து காளிக்கு சமர்ப்பித்து, பூஜை செய்து வழிபட்டுச் செல்கிறார்கள்." என்று பெருமிதத்துடன் சொன்னார் ராமநாத குருக்கள்.



பிரான்மலை மற்றும் திருப்புவனம் ஆகிய இந்தப் பதினான்கு சிவத் தலங்களும் சிறப்புக்கு உரியவை. அவற்றில், திருப்புனவாசல் என்ற இந்த ஒரு தலத்தைத் தரிசித்தாலே, அவை யாவற்றுக்கும் சென்று தரிசித்த பலனும் புண்ணியமும் கிடைக்கும் என்பது ஐதீகம்! திருப்புனவாசலிலிருந்து சுமார் 7 மைல் தூரத்துக்கு எமன் அல்லது எம தூதர்கள் எவருக்கும் பிரவேச அனுமதி கிடையாது என்பது ஐதீகம்! அதனால் எமதர்மன் மூலம் எவருக்கும் இங்கே மரணம் இல்லையாம்!

இந்தத் தலத்தின் விருட்சங்கள் யுகத்துக்கு ஒன்று வீதம் மொத்தம் நான்கு... சதுரக்கள்ளி கிருத யுகத்திலும், குருந்த மரம் திரேதா யுகத்திலும், மகிழ மரம் துவாபர யுகத்திலும், புன்னை மரம் கலி யுகத்திலும் தல விருட்சமாக அமைந்ததாகக் கூறுகிறார்கள். சதுரக்கள்ளிக்கு வச்சிரம் என்ற பெயரும் உண்டு. திருப்புனவாசலுக்கு ஒருகாலத்தில் வச்சிரவனம் என்ற பெயர் இருந்ததாக புராணக் குறிப்பு உள்ளது. கோயிலைச் சுற்றியுள்ள பத்துத் தீர்த்தங்களிலும் நீராடி, இறைவனை வணங்கினால், அனைத்துப் பாவங்களும் நீங்கும் என்கின்றனர், பக்தர்கள். திருநாவுக்கரசர், சுந்தரரால் பாடல் பெற்ற தலம் இது.

திருப்புனவாசலின் தல விருட்சங்களில் ஒன்றான சதுரக்கள்ளி, தோல் நோய்களுக்கு நல்ல மருந்தாகும். சளித் தொல்லை மற்றும் வாத நோயைக் குணமாக்கும். மருக்களுக்கு, இந்தத் தைலத்தில் ஒரு சொட்டு வைத்தால் அது கரையும். எலி, நாய், பூனை ஆகியவை கடித்தால், கடிபட்ட இடத்தில் தைலத்தைத் தடவி, புண்ணாக்கி,



ஸ்ரீபிரஹன் நாயகி

சில நாட்கள் ஆறவிடாமல் வைத்து, பின் ஆறவிட்டால் விஷம் நீங்கும். மலச்சிக்கல், மார்ச்சளிக்கு மருத்துவ ஆலோசனையுடன் சதுரக்கள்ளியைப் பயன்படுத்தலாம்.

நரம்பு வியாதிகளான பாரிச வாயு, கை கால் விளங்காமை, மயக்க நிலை, கை கால் மரத்துப் போதல், நடுக்கம், சிறுநீர் அடைப்பு ஆகிய நோய்களைக் குணப்படுத்தும்.

பராய் மரத்தின் மகிமை!

கேட்டை நட்சத்திரத்துக்கான விருட்சம்

39

திருப்பராய்த்துறை
ஸ்ரீபராய்த்துறை நாதர் திருக்கோயில்

அரிச்சந்திரனைப் போன்று தாமும் உண்மை பேசுவதோடு, மற்றவர்களும் உண்மை பேச வேண்டும் என நினைப்பவர்கள்; யாருக்கும் தீங்கு விளைவிக்கக் கூடாது என்ற கொள்கை உடையவர்கள், பெரும்பாலும் கேட்டை நட்சத்திரக்காரர்களாகவே இருப்பார்கள்!

செவ்வாய்க் கிழமையன்றும், அக்டோபர் 22 முதல் நவம்பர் 20 வரையிலும், விருச்சிக ராசியிலும் பிறந்தவர்கள் கேட்டை நட்சத்திர ஆளுகைக்கு உட்பட்டவர்கள். பாலுணர்வு நோய்கள், மலச்சிக்கல், அடிவயிற்றுப் புண்கள், சைனஸ், யானைக்கால் நோய், சளித்தொல்லை, அடிக்கடி வரும் ஜுரம், நோய்த் தொற்று ஆகியவை கேட்டை நட்சத்திரத்தின் கெட்ட கதிர்வீச்சுகளால் வரும் பாதிப்புகள். இதை கேட்டை நட்சத்திர தோஷம் என்பார்கள்.

இந்த நட்சத்திரத்துக்கு உகந்த விருட்சம், பராய். இதன் அடியில் தினம் கொஞ்ச நேரம் இருப்பதன் மூலமும், அல்லது இந்த மரத்தைத் தினம் அரை மணி நேரம் கட்டிப்பிடிப்பதன் மூலமும், கேட்டை நட்சத்திர தோஷம் நீங்கி உடல் வலிமை பெறும் என வானவியல் மூலிகை சாஸ்திரம் கூறுகிறது.

திருப்பராய்த்துறை ஆலயத்தின் தல விருட்சமாக விளங்குகிறது பராய் மரம். திருச்சி - கரூர் சாலையில், திருச்சியிலிருந்து 16 கி.மீ. தொலைவில் உள்ளது இந்த ஊர்.

இங்குள்ள ஆலயத்தில் அருள்மிகு பசும்பொன் மயிலாம்பிகை(ஹேம வர்ணாம்பிகை) சமேத பராய்த்துறைநாதர் (தாருகாவனேஸ்வரர்) குடிகொண்டு பக்தர்களுக்கு அருள்பாலிக்கிறார்கள். பராய் மரக் காடு என்பது, புராண காலத்தில் தாருகாவனம் என்று குறிக்கப்பட்டது. கோயிலின் கிழக்கில் சுவாமி சித்பவானந்தர் உருவாக்கிய ராமகிருஷ்ண தபோவனம் அமைந்துள்ளது.

துறை என்னும் பெயரால் 13 திருத்தலங்கள் உள்ளன. அன்பில் ஆலந்துறை, ஆவடுதுறை, கடம்பந்துறை, தென் குரங்காடுதுறை, வட குரங்காடுதுறை, சோற்றுத்துறை, பராய்த்துறை, பாலைத்துறை, பாற்றுரை, வேணு பெருந்துறை, மயிலாடுதுறை, மாந்துறை, மற்றும் வெண்டுறை ஆகியவையே அவை.

பாவங்கள் நீங்கும்!


ஆலய அர்ச்சகரான சீனிவாச குருக்கள், "வைகாசி மாதம் 10 நாட்கள் இங்கு பிரம்மோற்ஸவம் நடைபெறும். காவேரி துலா ஸ்நானம் என்றதும் தமிழ்நாட்டில் நமக்கு நினைவுக்கு வருவது 2 ஊர்களேயாகும். ஐப்பசி முதல் நாள் திருப்பராய்த்துறை, ஐப்பசிக் கடைசி நாள் மயிலாடுதுறை.

திருப்பராய்த்துறையில் துலா ஸ்நானத்தன்று ஸ்வாமியும் அம்பிகையும் வெள்ளி ரிஷப வாகனங்களில் எழுந்தருளி, திருவீதிகளில் உலா வருவர். பின் காவிரியில் அஸ்திர தேவர் திருமுழுக்காடி அடியவர்களுக்கு தீர்த்தப் பிரசாதம் கொடுப்பார். அப்போது திரளான மக்களும் காவிரியில் நீராடுவது கண்கொள்ளாக் காட்சி!" என்கிறார்.


சீனிவாச குருக்கள்

'பிரமோத்தர காண்டம்' என்ற சமஸ்கிருத நூல் இப்படிக் குறிப்பிடுகிறது: 'சூரியன் துலா விஷுவை அடையும்போது பசு நாக்குப் போன்ற தன்மை கொண்ட இலையை உடைய பராய் மரம் கொண்ட க்ஷேத்திரத்தில் நீராடியவர்களுடைய பாவங்கள் யாவும் அகன்று, எல்லா நன்மைகளையும் பெறுகிறார்கள்.'

திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், மாணிக்கவாசகர், அருணகிரிநாதர், பட்டினத்தார் ஆகியோர் திருப்பராய்த்துறை இறைவரின் பெருமையைப் பாடிச் சிறப்பித்துள்ளனர்.




முன்னொரு காலத்தில் தாருகாவன முனிவர் தாம் செய்யும் தருமமே வீடு பேற்றை அளிக்கவல்லது என்ற செருக்குடன் சிவபெருமானை மதியாது வேள்விகளும் தவமும் இயற்றினார் (ததீசி உத்தரப் படலம், கந்தபுராணம்). இதை அறிந்த சிவபெருமான், திருமாலை மோகினி அவதாரம் எடுக்குமாறும், தாருகாவனம் சென்று முனிவரையும் அவர் சார்ந்த முனிவர் கூட்டத்தாரையும் மயக்கி, அவர்கள் விரதத்தைக் கெடுக்குமாறும் கோரினார். மோகினி வடிவில் திருமால் அங்கு சென்றதும், தாருகாவனத்து முனிவர்கள் அனைவரும் கிறங்கி, மோகினியைச் சூழ்ந்துகொண்டனர்.

அதேநேரம், சிவபெருமான் அழகிய பிட்சாடனர் வடிவம் கொண்டு, முனிவர்களின் குடில்களுக்குச் சென்று முனி பத்தினியரிடம் போய் பிட்சை கேட்டார். முனி பத்தினிகள் சிவனின் அழகில் கிறங்கிப் போயினர்.

இதுகண்ட தாருகாவன முனிவர் கோபம் கொண்டு புலியை சிவன் மேல் ஏவினார். சிவன் புலியைக் கொன்று அதன் தோலை உரித்து ஆடையாக அணிந்தார். பின்னர் முனிவர் ஏவிய திரிசூலத்தைப் படையாக ஏந்தினார். மான் கன்றை இடக்கரத்தில் தாங்கினார். பாம்புகளை அணிகலனாக அணிந்தார். பூத கணங்களைச் சேனையாகக் கொண்டார். உடுக்கையைக் கரத்தில் தாங்கி, முயலகன் என்கிற அபஸ்மாரத்தைத் தன் திருவடிகளின் கீழ் கிடத்தி, அதன் முதுகின் மேல் ஏறி நின்றார்.

பிட்சாடனராக வந்தவர் யார் எனப் புரிந்தது முனிவருக்கும் அவர் கூட்டத்தாருக்கும். தங்களை மன்னிக்குமாறு வேண்டினர். சிவனும் அவர்களை மன்னித்தருளினார். அதன்பிறகு முனிவர்கள் சிவனை வழிபடலானார்கள். அந்த இடமே தாருகாவனம் என்ற திருப்பராய்த்துறை ஆகும்.



இந்தத் திருத்தல ஆலய உட்கோபுரம் ஏழு நிலைகள் கொண்டது. இடப்பக்கம் உள்ள மண்டபத்தில் விவேகானந்தர் தொடக்கப்பள்ளி உள்ளது. செப்புக் கவசமிட்ட கொடிமரமும், பலி பீடமும், நந்தியும் நந்தி மண்டபத்தில் காணப்படுகின்றன. உள் பிராகாரத்தில் வலம்புரி விநாயகர், சப்த கன்னியர், 63 நாயன்மார், சோமாஸ்கந்தர், பஞ்சபூத லிங்கங்கள், பிட்சாடனர், பிரம்மா, துர்க்கை, பன்னிரு கைகளுடன் காட்சி தரும் ஷண்முகர் ஆகியோர் உள்ளனர்.

தட்சிணாமூர்த்தி சந்நிதி, தனி விமானமாக, சிங்கங்கள் தாங்கி நிற்கின்ற சிறந்த வேலைப்பாடமைந்த தூண்களைக் கொண்டுள்ளது.

ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனத்தின் பராமரிப்பில் இந்தக் கோயில் உள்ளது. இந்த ஆலயத்தின் தல விருட்சமாக பராய் மரம் விளங்குகிறது.

பராய் மரத்தின் இலை துவர்ப்பாகவும், பால் இனிப்பாகவும் இருக்கும். இலையின் நரம்புகளை எடுத்துவிட்டு, பசு நெய்யில் இட்டு வறுத்து, பனங்கற்கண்டு சேர்த்து அரைத்து சுமார் 5 கிராம் அளவு வீதம் தினமும் கொடுத்து வந்தால், சீதபேதி, ரத்தபேதி குணமடையும்.

பராய் மரத்துப் பாலை கை கால்களில் ஏற்படும் வெடிப்பு குணமடையத் தடவலாம்.



ஸ்ரீபராய்த்துறைநாதர்



ஸ்ரீஹேமவர்ணாம்பிகை

வெட்டை, மேகம், பிளேக், காச நோய் ஆகியவற்றின் பாதிப்பின்போது, தொடை மடிப்பு, அக்குள் மற்றும் தொண்டைப் பகுதியில் கழலைக் கட்டிகள் தோன்றும். பராய் இலைகளை அரைத்துப் பூசினால் கட்டிகள் கரைந்து குணம் பெறலாம்.

பராய் வேரைப் பாம்புக்கடி முறிவு மருந்தாகப் பயன் படுத்துகிறார்கள். வேர்ப் பட்டையை யானைக்கால், அடிக்கடி வரும் ஜுரம், மற்றும் நரம்பு சம்பந்தமான நோய்களுக்கு மருந்தாக்கித் தருவார்கள்.

பராய் மரத்துப் பாலைப் பூசுவதால் தலைவலி நீங்குகிறது. இதன் பழங்களை இடித்து கண் நோய் நீங்கப் பயன்படுத்துகிறார்கள். விதைகளை அரைத்துக் களிம்பாக்கி, வெண்குஷ்டம் அகலப் பூசுவார்கள். மூக்கிலிருந்து ரத்தம் வடிதல், மூலம், பேதி ஆகியவற்றைக் கட்டுப்படுத்த விதைகள் மருந்தாகின்றன.

இலவ மரத்தின் மகிமை!

மூலம் நட்சத்திரத்துக்கான விருட்சம்

40

திருமங்கலக்குடி ஸ்ரீபிராணநாதேஸ்வரர் திருக்கோயில்

தனித்துவ குணம், இறை பக்தி, எடுத்த வேலையை முடிக்கும் உறுதி, எதிராளிகளை அன்பால் வெல்லும் பாங்கு, சட்டென்று கோபப்படும் தன்மை ஆகியவை மூலம் நட்சத்திரத்தில் பிறந்த பெரும்பாலானவர்களின் இயல்புகள்!

தனுசு ராசி மற்றும் வியாழன் கிரகத்துடன் தொடர்பு கொண்டது இந்த நட்சத்திரம். வியாழக்கிழமை மற்றும் நவம்பர் 21 முதல் டிசம்பர் 20 வரை பிறந்தவர்களை மூல நட்சத்திரம் தன் ஆளுகைக்கு ஆட்படுத்துகிறது. இதன் கெட்ட கதிர் வீச்சுகள் பலவித நோய்களையும், நல்ல கதிர்வீச்சுகள் பல நன்மைகளையும் அளிக்கின்றன.

கோங்கிலம் (இலவம்) என்னும் மரமானது மூல நட்சத்திரத்தின் நல்ல கதிர்வீச்சுகளைத் தன் உடலுக்குள் சேமித்து வைத்துக்கொள்ளும். எனவே மூல நட்சத்திர தோஷம் உள்ளவர்கள், இந்த மரத்தின் நிழலில் தினமும் அரைமணி நேரம் செலவிட்டாலோ, இதனால் தயாரிக்கப்படும் மருந்துகளைச் சாப்பிட்டாலோ நல்ல பலன் கிடைக்கும் என்று வானவியல் மூலிகை சாஸ்திரம் கூறுகிறது.

கோங்கிலம், திருமங்கலக்குடி அருள்மிகு பிராணநாதேஸ்வரர் சமேத மங்களநாயகி ஆலயத்தின் தல விருட்சமாக உள்ளது. இந்த ஆலயம் திருவாவடுதுறை ஆதீனத்தின் கட்டுப்பாட்டில், சிறப்பாகப் பராமரிக்கப்பட்டு வருகிறது. தஞ்சை மாவட்டம், ஆடுதுறைக்கு 3 கி.மீ. தொலைவிலும், திருவிடைமருதூருக்கு 6 கி.மீ. தொலைவிலும் அமைந்துள்ளது திருமங்கலக்குடி.

மங்களாம்பிகை, மங்கல விநாயகர், மங்கல விமானம், மங்கல தீர்த்தம், தலம்- மங்கலக்குடி என ஐந்து சிறப்புகள் இங்கு இருப்பதால், 'பஞ்ச மங்கல க்ஷேத்திரம்' என்று போற்றப்படுகிறது. இவ்வாலய இறைவன் இறைவி இருவரையும் அப்பர், சம்பந்தர் இருவரும் புகழ்ந்து பாடியுள்ளார்கள். ராமலிங்க அடிகளார் *'கருமங்கள் ஓடிப்போய் காண் மங்கலக்குடி'* என்று போற்றிப் பாடியிருக்கிறார்.

முன்னொரு காலத்தில் காலவ முனிவர் என்பவர் தனக்குத் தொழுநோய் வரவிருக்கிறது என்பதை ஞான திருஷ்டியால் உணர்ந்து, சக முனிவர்களைக் கலந்தாலோசித்தார். அவர்கள் காலவ முனிவரை நவக்கிரகங்களைக் குறித்துத் தவம் மேற்கொள்ளுமாறு

பூர்வ ஜென்ம தோஷம் விலகும்!

ஆலய அர்ச்சகர் சுவாமிநாத சிவம் குருக்கள் கூறுகையில், "ஸ்ரீ பிராணநாதருக்கு 11 ஞாயிற்றுக்கிழமைகள் எருக்கன் இலையில் தயிர் அன்னம் நிவேதனம் செய்து சந்நிதியில் சாப்பிடுவதால், ரோகப் பிணிகள் நீங்கி நீண்ட ஆயுள் கிட்டும். 11 ஞாயிற்றுக்கிழமைகள் அர்ச்சனையும், தயிர்சாதம் அன்னதானமும் செய்தால் பூர்வ ஜென்ம தோஷம், பித்ரு தோஷம், நவக்கிரக தோஷம், முன்னோர்கள் சாபம், புத்திர தோஷம், ஏழரை நாட்டு சனி மற்றும் அட்டம சனி தோஷங்கள் நிவர்த்தியாகும்.

மங்களாம்பிகைக்கு வெள்ளிக்கிழமை அர்ச்சனை செய்வதால் திருமணத் தடை, களத்திர தோஷங்கள் நீங்குகின்றன. திருமணம் ஆன பிறகு, மாங்கல்ய தோஷம் உள்ளவர்கள அம்பிகை சந்நிதியில் 'மறு மாங்கல்ய தாரணம்' செய்து கொள்வதால், தீர்க்க சுமங்கலி பிராப்தம் பெறுகிறார்கள்.


சுவாமிநாத சிவம் குருக்கள்

இத்திருத்தலத்தை வழிபாடு செய்தபிறகு, நவக்கிரகத் தலங்களில் வழிபாடு செய்வதால், சகலவித தோஷங்களும் நிவர்த்தியாகும்; எல்லா நலன்களும் கிடைக்கும்!" என்று சுவாமிநாத சிவம் குருக்கள் தெரிவித்தார்.



இலவ மரம்

கூறினர். அதன்படி இமயமலைச் சாரலில் முனிவர் கடுந்தவம் மேற்கொள்ள, நவக்கிரகங்களும் மனம் மகிழ்ந்து அவர்முன் தோன்றி "உமக்கு என்ன வரம் வேண்டும்?" என்று கேட்டன.

"எனக்கு வரவிருக்கும் தொழுநோய் வராமலிருக்க அருள்புரிய வேண்டும்!" என்று கோரினார் முனிவர். "ஒருவருக்கு பூர்வ ஜென்ம வினைப்படி வரவேண்டிய கஷ்டங்கள் வந்தே தீரும். அதைத் தடுக்க எங்களுக்கு அதிகாரம் இல்லை; வேறு வரம் தேவையென்றால் கேளுங்கள்!" என்றன நவக்கிரகங்கள். காலவ முனிவர் கடும் கோபம் கொண்டார். "எனக்கு வரவிருக்கும் தொழுநோய் உங்களை இக்கணமே பற்றக் கடவது" என்று சபித்தார்.

இதன் விளைவாக நவக்கிரகங்களைத் தொழுநோய் பற்ற, அவை மனம் நொந்து, ஈசனைத் துதித்தன.

அப்போது, "காவிரி வடகரையில் வெள்ளெருக்கன் வனத்தில் நீங்கள் இருந்து அருகாமையில் உள்ள பிராணநாத ஸ்வாமியைத் தவம் செய்யுங்கள். தொடர்ந்து 11 ஞாயிற்றுக்கிழமை உச்சி வேளையில் வெள்ளெருக்கன் இலையில் தயிர் அன்னத்தை அருள்மிகு பிராணநாதேஸ்வரருக்கு நிவேதனம் செய்து நீங்கள் சாப்பிட வேண்டும். கூடவே, பக்தர்களுக்கு தயிர் அன்னத்தைத் தானம் செய்தால், சாபவிமோசனம் ஏற்படும்!" என்று வானில் அசரீரி எழும்பியது.

அதன்படி வழிபட, நவக்கிரகங்களுக்கு ஈசன் காட்சியளித்து சாப நிவர்த்தி அளித்ததாகப் புராணம் கூறுகிறது.



ஸ்ரீபிராணநாதேஸ்வரர்




ஸ்ரீமங்களநாயகி

நவக்கிரகங்கள் தவம் இருந்த வெள்ளெருக்க வனத்தில்தான் புகழ்பெற்ற சூரியனார் கோயில் அமைந்திருக்கிறது.

முதலாம் குலோத்துங்க சோழன் ஆட்சிக்காலத்தில் அவனுடைய அமைச்சர் அலைவாணர் என்பவர், வரிப்பணம் வசூல் செய்ய வந்த இடத்தில், ஸ்ரீபிராணநாதேஸ்வரரின் பெருமையை அறிந்தான். மெய்மறந்து அவருக்குத் தன்னிடமிருந்த வரிப்பணத்தில் கோயில் எழுப்பினான்; கூடவே, நவக்கிரகங்களுக்கும் வெவ்வேறு இடங்களில் தனித்தனி கோயில்கள் கட்டினான்.

தன் அனுமதி பெறாமல் அரசு கஜானாவுக்கு வந்து சேர வேண்டிய வரிப்பணத்தில் கோயில்களைக் கட்டிய அமைச்சரின் தலையைக் கொய்திட அரசன் உத்தரவிட்டான். தான் இறந்ததும் தன் உடலைத் திருமங்கலக்குடியில் அடக்கம் செய்யுமாறு மன்னனிடம் அமைச்சர் பணிவுடன் வேண்ட, அரசன் அதற்குச் சம்மதித்தான்.

சிரச்சேதம் செய்த அமைச்சரின் உடலை அடக்கம் செய்ய திருமங்கலக்குடிக்கு எடுத்து வந்தனர் சேவகர்கள். இந்தச் சமயத்தில் அமைச்சரின் மனைவி, அருள்மிகு மங்களாம்பிகை சந்நிதிக்குச் சென்று கண்ணீர் விட்டு அழுது புலம்பினாள். மனம் இரங்கிய மங்களாம்பிகை அமைச்சரின் உயிரைத் தருமாறு இறைவனிடம் வேண்டினாள். இறைவன் அதை ஏற்றார். உயிர்பெற்று எழுந்த அமைச்சர், “பிராணன் தந்த பிராணநாதேஸ்வரர்” என்று



ஆலயத்தின் உட்பிராகாரம்...

போற்றித் துதிக்க, அவர் மனைவி இறைவியிடம், "மாங்கல்யம் தந்த மங்களாம்பிகையே!" என்று தொழுது போற்றினாள்.

"என்னைப் போல் துயர்ப்படும் பெண்கள் உன்னை வழிபடும் போது, அவர்களுக்கு மாங்கல்ய பாக்கியம் அருள வேண்டும் தாயே!" என்று கோரினாள் அமைச்சரின் மனைவி. அம்பிகையும் அதை ஏற்றாள்.


திருமங்கலக்குடி ஆலயத்தில் சந்திரன், சூரியன் தனித்தனியாக இருந்து அருள்பாலிக்கிறார்கள்; இங்கு நவக்கிரகம் கிடையாது. இரண்டு துர்கைகள். சிவ துர்கை மேற்கு நோக்கி சூலாயுதத்துடன் காட்சியளிக்க, விஷ்ணு துர்கை வடக்கு நோக்கி, தரிசனம் தருகிறாள்.

மூலவரின் வாகனம் 'புருஷா மிருகம்' என அழைக்கப்படுகிறது. மனித முகம், மிருக உடம்பு, பறவையின் இறக்கைகளுடன் வித்தியாசமாக இருக்கிறது. புரட்டாசியில் நிறைபணித் திருவிழா இங்கு சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

கோங்கிலம் எனப்படும் இலவ மரம் இந்த ஆலயத்தின் தல விருட்சமாகப் போற்றப்படுகிறது. இது மிகுந்த மருத்துவ குணங்கள் கொண்டது. இதன் இலையை அரைத்துப் பசும்பாலில் கலக்கிக் கொடுத்தால் சிறுநீர் எரிச்சல் நீங்கும். பூவை குடிநீரில் போட்டுக் குடித்தால், மலக்கட்டு, நீர்க்கட்டு போகும். காய்ந்த பூவுடன் கசகசாவைச் சேர்த்து அரைத்து வெள்ளாட்டுப் பாலில் கலக்கி, சர்க்கரை சேர்த்துக் காய்ச்சி தினம் மூன்று வேளைகள் கொடுத்தால் ரத்தப் பித்தம் போகும்.

இலவம் கோந்து, நீண்ட நாள் வெள்ளைப்படுதல் மற்றும் சீதபேதியைக் கட்டுப்படுத்த வல்லது. இம்மரப் பிசினிலிருந்து தயாரிக்கும் லேகியம் ஆண்மை விருத்தியை ஏற்படுத்தும். இந்திரியத்தைச் சுரக்கவும் செய்யும். மலச்சிக்கலைப் போக்கும்.

முறையாகத் தயாரித்த சூரணத்தைத் தகுந்த மருத்துவரின் ஆலோசனையுடன் 40 நாட்கள் தொடர்ந்து சாப்பிட்டு வர, ஆண்மைச் சக்தியும் உடல் வலிவும் ஏற்பட்டு, குழந்தை பாக்கியத்துக்கு வழி வகுக்கும் என மருத்துவ நூல்கள் தெரிவிக்கின்றன.



ஆலயத்தின் கோபுரவாசல்

இலவம், இலவு என்றெல்லாம் குறிபிடப்படும் இந்த மரத்தின் செந்நிறமான பூக்கள் குறித்து குறிஞ்சிப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. *'ஈங்கை இலவம் தூங்கு இணர்க்கொன்றை'* என்று குறிஞ்சிப்பாட்டிலும், *'களிறு புலம் உரிஞ்சிய கருங்கால் இலவம்'* என்று அகநானூற்றிலும் இலவம் மரத்தை பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. யானைகள் தங்களின் தினவைப் போக்கிக் கொள்ள, முள் அமைந்த அடி மரத்தில் உராய்ந்து தேய்த்துக் கொள்கின்றன என்றும், இது பாலை நிலத்தில் வளரும் என்றும் சங்க இலக்கியங்கள் தெரிவிக்கின்றன.

மேலும், இலவ மலரின் செம்மை நிறத்தைப் பரணடி என்பவர் சான்றோரின் நாவிற்கு உவமை கூறிப் பெருமைப் படுத்தியுள்ளார்.

திருமங்கலக்குடி தவிர, திருநன்னிலத்துப் பெருங்கோயில், திருக்கோடி, திருக்கைச்சினம் ஆகிய திருக்கோயில்களிலும் இலவ மரமே தலவிருட்சம்.

பவழ மல்லிகை மரத்தின் மகிமை!

பூராடம் நட்சத்திரத்துக்கான விருட்சம்

41

சீர்காழி
ஸ்ரீபிரம்மபுரீஸ்வரர் திருக்கோயில்

தைரியம், நேர்மை, கண்ணியம், பயண ஆர்வம், நறுமணப் பொருட்கள் மீது பிரியம், பெற்றோரிடம் பாசம் ஆகியவை பூராடம் நட்சத்திரத்துக்காரர்களின் குணங்கள். தனுசு ராசி மற்றும் வியாழன் கிரகத்துடன் தொடர்பு கொண்டது இந்த நட்சத்திரம். வியாழக்கிழமை மற்றும் நவம்பர் 21 முதல் டிசம்பர் 20 வரை பிறந்தவர்கள், பூராடம் நட்சத்திரத்தின் ஆளுகைக்கு உட்பட்டவர்கள். இதன் கெட்ட கதிர்வீச்சுகள் பலவித நோய்களையும், நல்ல கதிர் வீச்சுகள் பல நன்மைகளையும் அளிக்கின்றன.

பவழ மல்லிகை மரமானது பூராட நட்சத்திரத்தின் நல்ல கதிர்வீச்சுகளை தன் உடலுக்குள் சேமித்து வைத்துக்கொள்ளும். எனவே பூராட நட்சத்திர தோஷம் உள்ளவர்கள், இந்த மரத்தின் நிழலில் தினமும் அரைமணி நேரம் செலவிட்டாலோ, இதனால் தயாரிக்கப்படும் மருந்துகளைச் சாப்பிட்டாலோ நல்ல பலன் கிடைக்கும் என்று வானவியல் மூலிகை சாஸ்திரம் கூறுகிறது.

பவழ மல்லிகை மரம், நாகை மாவட்டம், சீர்காழி ஸ்ரீதிருநிலைநாயகி சமேத ஸ்ரீபிரம்மபுரீஸ்வரர்





பவழ மல்லிகை

ஆலயத்தின் தல விருட்சமாக உள்ளது.இந்த ஆலயம் தருமை ஆதீன நிர்வாகத்தின் கீழ் உள்ளது.

காளிங்கப் பாம்பு பூஜித்த தலம் என்பதால், ஸ்ரீகாளிபுரம் என்று பெயர் பெற்று, அதுவே பின்னாளில் சீகாழி, சீர்காழி என மருவியதாம். இந்தத் தலத்தி மூலவர் ஸ்ரீபிரம்மன் ஸ்தாபித்த சிவலிங்கம் என்பதால், ஸ்ரீபிரம்மபுரீஸ்வர் என்று திருப்பெயர் அமைந்ததாம்.

நாற்புறமும் கோபுரங்கள், திருச்சுற்று மதில்கள், இதனுள் இறைவன், இறைவி மற்றும் திருஞானசம்பந்தருக்கும் தனித்தனி ஆலயங்கள் உள்ளன. வடக்கு உட்பிராகாரத்தில் ஸ்ரீமுத்து சட்டைநாதரும், தெற்கு உட்பிராகாரத்தில் அறுபத்து மூவரும் உள்ளனர். வடக்குப் பிராகாரத்தில் மேலே மலைக்குப் போக படிக்கட்டுகள் உள்ளன.

முதல் தளத்தில் பெரியநாயகி சமேத பெரியநாயகராக (உமா மகேஸ்வரர்) எழுந்தருளியுள்ள ஸ்ரீதோணியப்பரே குரு மூர்த்தம். ஏழு தீவுகள் அடங்கிய இப்பேரண்டத்தை பெரும் கடலானது ஊழிக்காலத்தில் பொங்கி அழித்தது. பின்னர் இறைவன் உயிர்களைப் படைக்க எண்ணி, பிரணவத்தைத் தோணியாகக் கொண்டு, சுற்றி வருகையில், பிரளயத்திலும் அழியாதிருந்த இந்தத் தலத்தைக் கண்டு இதுவே மூலாதார க்ஷேத்திரம் என அருளி, இங்கு தோணியுடன் வீற்று அருள்பாலிக்கத் தொடங்கினார் இறைவன்.

இரண்டாம் தளத்தில், மலை உச்சியில் ஸ்ரீசட்டைநாதர் இருக்கிறார். ஹரியும் ஹரனும் ஒன்று எனக் காட்டுவதற்காக, மகாவிஷ்ணுவின் தோலையும் எலும்பையும் சட்டையாக அணிந்து சட்டைநாதர் ஆனார் சிவன்.

இந்தத் தலத்தில்தான் திருஞானசம்பந்தருக்கு பார்வதி தேவி திருமுலைப்பால் அருளினாள்.

ஆலயத்தில் தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறுகின்றன. சித்திரை மாதத்தில் பிரம்மோற்ஸவம். இதில் இரண்டாம் திருவிழா, திருமுலைப்பால் உற்ஸவம் மிகவும் விசேஷமானது. ஸ்ரீ திருநிலைநாயகிக்கு ஆடிப்பூர உற்ஸவமும் நவராத்திரி உற்ஸவமும் வெகு சிறப்பாக நடைபெறுகின்றன.

இந்த ஆலயத்தின் தல விருட்சமாக பவழ மல்லிகை (பாரிஜாதம்) விளங்குகிறது. இதன் மூன்று இலைகளில் விஷ்ணு, சிவன், பிரம்மா

ஞானம் கிடைக்கும் தலம்!

ஆலய அர்ச்சகர் வெங்கட்ராம சிவாச்சார்யர், "இந்த ஆலய இறைவனான ஸ்ரீபிரம்மபுரீஸ்வரரை வணங்கிய பின்னரே பிரம்மா முதன் முதலில் படைப்புத் தொழிலைத் துவக்கினார் என்கிறது புராணம். இந்தத் தலத்து சிவ-பார்வதியை வணங்கினால் ஞானம் பெருகும். பலருக்கு தோஷ நிவர்த்தி செய்த இறைவன் என்பதால், சகல தோஷங்களும் நிவர்த்தியாகும்.



வெங்கட்ராம சிவாச்சார்யர்

பூர்வ ஜென்ம பாவ நிவர்த்தியும் அம்பிகையை வணங்கினால், மாங்கல்ய பலமும் கூடும்.

திருஞானசம்பந்தருக்கு அம்பிகை ஞானப்பால் தந்தருளிய ஸ்தலம் என்பதால், அம்பிகையைத் தொழுபவருக்கு அறிவு பெருகும், ஞானம் விருத்தியாகும்." என்கிறார்.



திருக்குளம்



ஆகியோர் அமர்ந்திருப்பதாக ஐதீகம்!

இந்த மூலிகையைப் பற்றி ஒரு வரலாறு உண்டு. மன்னர் ஒருவருக்கு பாரிஜாதகா என்ற மகள் இருந்தாள். அவள் கதிரவனுடன் காதல் கொண்டாள். ஆனால், அந்தக் காதலைக் கதிரவன் ஏற்றுக்கொள்ளவில்லை. விரக்தியடைந்த பாரிஜாதகா தன்னைத் தானே எரித்துக் கொண்டாள். அதில் வெளிப்பட்ட சாம்பலில் இருந்து பவழ மல்லிகைச் செடி உருவானதாக வரலாறு கூறப்படுகிறது. பவழ மல்லி இரவில் செழிக்கிறது; பகலில் சூரியனுக்கு முன்னால் உதிர்ந்து விடுகிறது.

பொதுவாக இந்துக்கள் மண்ணில் விழுந்த மலர்களை எடுத்து இறைவனுக்கு பூஜை செய்ய பயன்படுத்த மாட்டார்கள்; ஆனால், பவழ மல்லிகை மட்டும் விதிவிலக்கு!

பவழ மல்லியைக் கஷாயமிட்டு நீரிழிவு நோய், சிறுநீரகப் பிரச்னைகள் மற்றும் மூட்டு வலிக்கு மருந்தாகக் கொடுக்கிறார்கள்.

இதன் இலையை அரைத்துச் சாறாக்கி கொடுத்தால் வயிற்றுக் கோளாறைச் சரி செய்யும். பித்தக் காய்ச்சலுக்கும் இது மருந்தாகிறது. இதன் இலை, பின் தொடை நரம்பு வலிகளைக் குணப்படுத்தக்கூடியது. இதன் வேரை மெல்லுவதன் மூலம் பல் ஈறு வலிகள் நீங்கும்.



ஸ்ரீபிரம்மபுரீஸ்வரர்



ஸ்ரீதிருநிலைநாயகி

தளிர் இலைகளை அரைத்து இஞ்சிச் சாற்றில் கலந்து தினமும் இரண்டு வேளை கொடுத்து வந்தால், மூலம், முறை ஜுரம், முதுகு வலி ஆகியவை குணமாகிறது.

இலைகள், பூ, பட்டை ஆகியவற்றை மூலம், முடக்கு வாதம் போக்க உபயோகிக்கலாம். பூக்களும் பிஞ்சுகளும் இருமலைக் குணமாக்குகின்றன. இதன் விதைகளைப் பொடியாக்கி எண்ணெயில் குழைத்துத் தலையில் தடவினால், சொறி, சிரங்கு, நமைச்சல் போகும். மேக நோயைக் குணப்படுத்த பவழ மல்லிகை வேரை அரைத்துப் பாலில் கலந்து கொடுக்கலாம்.

பவழ மல்லிகை மலர் குறித்து சங்க இலக்கியங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. '*சேடல் செம்மல் சிறு செங்குரலி*' என்று குறிஞ்சிப்பாட்டில் வரும் 'சேடல்' என்ற வார்த்தைக்கு நச்சினார்க்கினியர் '*பவழக்கால் மல்லிகை*' என்று விளக்கமளித்துள்ளார். தமிழ்த் தாத்தா உ.வே.சா. இதை, 'பவழ மல்லிகை, பாரிஜாதம் எனவும் வழங்கும்' என்று குறிப்பிட்டுள்ளார். இந்தச் சிறு மரம் முல்லைக் குடும்பத்தைச் சேர்ந்தது.

திருத்துறைப்பூண்டியிலிருந்து 15 கி.மீ. தூரத்தில் உள்ள திருக்களர் ஆலயத்திலும், கும்பகோணத்துக்குத் தென்கிழக்கில் 9 கி.மீ. தூரத்தில் உள்ள திருநரையூர் சித்தீச்சரம் ஆலயத்திலும் பவழ மல்லிகையே, தல விருட்சமாக உள்ளது.

வாகை மரத்தின் மகிமை!

உத்திராடம் நட்சத்திரத்துக்கான விருட்சம்

42

திருவாழ்கொளி புத்தூர்
ஸ்ரீஇரத்தினபுரீஸ்வரர் திருக்கோயில்

கடவுள் பக்தி, தர்ம சிந்தை, சகல கலைகளையும் அறியும் ஆர்வம், அமைதி, பிறருக்கு மனதாலும் தீங்கு நினையாத இயல்பு ஆகியவை உத்திராடம் நட்சத்திரத்தில் பிறந்தவர்களின் குணங்களாக இருக்கும்.

சனிக்கிழமையன்றும் டிசம்பர் 21 முதல் ஜனவரி 19 வரையும் பிறந்தவர்களுக்குரிய நட்சத்திரம், உத்திராடம். மேற்கண்ட நாளிலும், காலங்களிலும் உத்திராட நட்சத்திரத்தின் கதிர்வீச்சுகள் அதிக அளவில் படும். அந்தக் கதிர்வீச்சுகளை வாகை மரம் தனக்குள் சேகரித்து வைத்துக் கொள்கிறது.

உத்திராட நட்சத்திரம், வாகை மரத்துடன் தொடர்பு கொண்டது. இந்த நட்சத்திரத்தின் கெட்ட கதிர்வீச்சுகளை சுத்தம் செய்து ஆக்ஸிஜனாக மாற்றிக் கொடுக்கிறது வாகை. இம்மரத்தைத் தினமும் தொடுவதாலும், இதன் நிழலில் இளைப்பாறினாலும் உத்திராட நட்சத்திரத்தின் கெட்ட கதிர்வீச்சுகள் நீங்கிவிடுகின்றன.

வாகை (வைகை) மரம், திருவாழ்கொளிபுத்தூர் ஸ்ரீவண்டமர் பூங்குழல் நாயகி (ஸ்ரீப்ரமா குந்தலாம்பாள்)

சமேத மாணிக்கவண்ணர் (ஸ்ரீரத்தினபுரீஸ்வரர்) ஸ்வாமி ஆலயத்தின் தல விருட்சமாக விளங்கி வருகிறது. நாகை மாவட்டம், மயிலாடுதுறை தாலுகா, திருப்புன்னத்துரிலிருந்து 8 கி.மீ. தூரத்தில் உள்ள இந்தத் திருத்தலம், திருவாழப்புத்தூர் என்றும் அழைக்கப்படுகிறது.

அருகில் உள்ள இலுப்பைப்பட்டு தலத்துக்கு பஞ்சபாண்டவர்கள் வந்தனர். அவர்களில் அர்ஜுனன் மட்டும் மேற்கில் இருந்த வாகை மரக் காட்டில் ஒரு மரத்தின் அடியில் போய் அமர்ந்தான். அவனுக்கு தாகமாக இருந்தது.

அப்போது முனிவர் ஒருவர் கையில் தண்டம் ஏந்தி அந்தப் பக்கமாக வர, "ஸ்வாமி, தாகமாக இருக்கிறது. இங்கு எங்கே தண்ணீர் கிடைக்கும்?" என்று விசாரித்தான். முனிவர் தன் கையிலிருந்த தண்டத்தினால் நீர் நிலை (தண்ட தீர்த்தம்) உண்டாக்கி, நீர் பருகச் சொன்னார். அர்ஜுனன் தன் உடைவாளை முனிவரிடம் கொடுத்துவிட்டு, தண்ணீரை இரு கைகளாலும் அள்ளிப் பருகினான். பின்னர் திரும்பிப் பார்த்தால், முனிவரைக் காணோம். முனிவரின் காலடிச் சுவட்டைத் தொடர்ந்து, தேடி அலைந்தான். முனிவராக வந்தது இறைவனே. அவர், ஒரு வாகை மரத்தடியில் புற்றில் இருந்த வாசுகி பாம்பின் பாதுகாப்பில் அர்ஜுனனின்

பில்லி சூனியம் அகலும்!

ஆலய அர்ச்சகர் நாகராஜ குருக்கள், "மகிஷாசுரமர்த்தன வதம் முடிந்தபின், துர்கை, வேண்டுவோருக்கு வேண்டும் வரம் நல்கும் நோக்கில் இங்கு எழுந்தருளியுள்ளாள். இந்த துர்கைக்கு செவ்வாய், ஞாயிறுகளில் ராகு கால பூஜை செய்வது விசேஷம். இவளை வழிபடுவோருக்கு பல நன்மைகள் கிட்டும். நவக்கிரக தோஷம், பில்லி சூனியம் அகலும். சித்தப் பிரமை, கொடிய ரோகங்கள் நிவர்த்தி மற்றும் குழந்தை பாக்கியம் கிடைக்கும்.


நாகராஜ குருக்கள்

இந்தத் தலத்தின் இறைவன் சந்நிதிக்கு முன்னே திருமணம் செய்வது விசேஷமானது. மக்கட்செல்வம், பொருட்செல்வம், நீண்ட ஆயுள் ஆகியவை இங்கு திருமணம் செய்து கொள்வோருக்குக் கிட்டுவதாக ஐதீகம்!

இந்த ஆலயத் தல விருட்சம், எடுத்த காரியத்தில் வெற்றி அளிக்கும் 'வாகை' மரம். அதை வழிபடுவோருக்கு வெற்றி நிச்சயம்." என்று கூறினார்.



வாளை கொடுத்துவிட்டு ஆலயம் அடைந்தார். தேடிவந்த அர்ஜுனன் இறைவனின் திருவிளையாடல் அது என்றறிந்து, பணிவாக இறைவனைத் தொழுதான். அவன் வழிபாட்டுக்கு இரங்கிய இறைவன், வாகை மரத்தடிப் புற்றில் வாசுகி பாம்பிடம் வாளைப் பெற்றுக் கொள்ளுமாறு கூறினார். இதனால் இந்தத் தலம் 'திருவாள் அளி புற்றூர்' என வழங்கலாயிற்று. பின் திருவாழ்கொளிபுத்தூர் என்றாகி, தற்போது திருவாழபுத்தூர் என அழைக்கப்படுகிறது.

ஒரு சமயம் கடும் பஞ்சத்தால் உலகம் தவித்தபோது, தானியங்கள், விலை மதிப்பற்ற ரத்தினங்கள், மழை ஆகியவற்றைப் பொழிந்து மக்களை மகிழ்வித்தாராம் இந்தத் தலத்தின் இறைவன். அதனால், அவருக்கு ஸ்ரீரத்தினபுரீஸ்வரர் என்று பெயர் வழங்கலாயிற்று.

இந்த ஆலயத்தில் உள்ள ஸ்ரீதுர்கை மிகவும் சாந்தமானவள் மட்டுமல்ல; சக்தி வாய்ந்த தெய்வமும் கூட.

மகிஷாசுரனை வதம் செய்ய, துர்கையாக அவதாரம் எடுத்தாள் அம்பிகை. வதம் முடிந்தபின், ரத்த வெறி நீங்கி, சாந்தம் கொண்டு அமர்ந்த இடம் இந்தத் தலம்!

இந்த ஆலயத்தில் ஸ்ரீபிட்சாடனர், ஸ்ரீநடராஜர், ஸ்ரீசிவகாமி, சனி பகவான் (இங்கு நவக்கிரகங்கள் இல்லை), பாற்கடலைக் கயிறாக கடைய உபயோகப்பட்ட வாசுகி பாம்பு ஆகியோர் உறைந்து பக்தர்களுக்கு அருள்பாலிக்கிறார்கள்.

திருவாழ்கொளிபுத்தூர் ஆலயத் தல விருட்சமாக வாகை மரம் விளங்குகிறது. இந்த மரத்தைச் சுற்றிவந்து பூஜை செய்வதால்,



வாகை மரம்



குழந்தை பாக்கியம் ஏற்படும் என்று பக்தர்கள் நம்புகிறார்கள். துர்கா பரமேஸ்வரி அசுரனை அழித்து வெற்றி பெற்ற அடையாளமாக தலவிருட்சமான 'வாகை' போற்றி வணங்கப்படுகிறது.

வாகை மரத்தின் இலைகளை அரைத்துக் கண்களில் வைத்துக் கட்டுவதன் மூலம் கண் நோய்கள் குணமாகும். இதன் இலைகளைக் கஷாயமாக்கிச் சாப்பிட்டால், மாலைக்கண் நோய் குணமாகும்.

பூக்களை அரைத்து, பாம்புக்கடி விஷ முறிவுக்குப் பயன்படுத்தலாம். இது தவிர, கட்டிகள், வீக்கங்களைக் குணமாக்கவும் பயன்படுத்தப்படுகிறது. வாகை மரப்பட்டை ரத்தமூலம், சீதபேதிக்கு மருந்தாகிறது.

மரத்திலிருந்து கசியும் பிசின் பெண்களின் வெள்ளைப்படுதல் முதலான நோய்களைக் குணப்படுத்துகிறது. விதைகளிலிருந்து எடுக்கப்படும் எண்ணெய், தொழுநோய்க்கு நல்ல மருந்தாகிறது.

உஷ்ண உடல் உள்ளவர்கள், வாகை மரத்தால் தயாரிக்கப்படும் மருந்துகளில் பசும் நெய் கலந்து பயன்படுத்த வேண்டும்!

வாகை, இலக்கியங்களில் பல இடங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. குறிஞ்சிப்பாட்டில், '*வடவனம் வாகை வான்பூங் குடசம்*' என்று குறிப்பு உள்ளது.



ஸ்ரீதுர்கை



ஸ்ரீரத்தினபுரீஸ்வரர்

படைகள் மோதும் போர் தவிர, போர்களில் பலவகை உண்டு. அவை: *'சொல்லானும், பாட்டானும், கூத்தானும், மல்லானும், சூதானும் பிறவற்ற ஆனும் வேறலாம்'* என்பார் நச்சினார்க்கினியர். இவ்வகைப் போர்களில் வெற்றி எய்தியவர் 'வாகை' சூடியவராவார்.

காற்று அடிக்கும்போது இதன் முற்றிய நெற்றில் உள்ள விதைகள் கலகலவென்று சிலம்பின் ஒலி போல ஒலிக்கும் எனவும், ஆரியக் கூட்டத்தார் கழையிற் கட்டிய கயிற்றின் மேல் நின்று ஆடும்போது கொட்டப்படும் பறையைப் போல, காற்றடிக்கும்போது வாகை நெற்று ஒலிக்கும் எனவும் கூறுவர்.

நன்னன் என்ற சிற்றரசனின் கொங்கண நாட்டில் வாகை மரங்கள் மிகுதி. அதை அவன் காவல் மரமாகக் கொண்டான். அதைக் கழங்காய் சென்னி நார்முடிச் சேரல் என்பவன் வெட்டி வீழ்த்தினான் என்று மூதெயின்னனார் புலவர் குறிப்பிட்டுள்ளார்.

பாலைநிலப் பாதை ஓரங்களில் வாகை மரம் நிழல் பரப்பி வளரும். எனவே, இதன் நிழலில் வழிப்போக்கர்கள் தங்குவர். இதன் நிழலில் ஊர் மன்றம் கூடும் என சங்க இலக்கியக் குறிப்புகள் தெரிவிக்கின்றன.

சரக்கொன்றை மரத்தின் மகிமை!

திருவோணம் நட்சத்திரத்துக்கான விருட்சம்

43

பந்தநல்லூர்
ஸ்ரீபசுபதீஸ்வரர் திருக்கோயில்

கல்வியாளர்கள், இசை விரும்பிகள், அறிஞர்கள், நறுமணப் பிரியர்கள், பலவகை ஆடையணிகளில் நாட்டமுடையோர், சுத்தமாக இருக்க விழைவோர் பெரும்பாலும் திருவோணம் நட்சத்திரத்தில் பிறந்தவர்களாகவே இருப்பார்கள்.

திருவோணம் நட்சத்திரம் மகர ராசி, சனிக் கிரகம் ஆகியவற்றுடன் தொடர்பு கொண்டது. சனிக்கிழமை அன்றும், டிசம்பர் 21 முதல் ஜனவரி 19 வரையிலும் பிறந்தவர்களை திருவோண நட்சத்திரம் ஆட்சி செய்கிறது. இந்தத் தினங்களில் மேற்படி நட்சத்திரத்தின் கதிர்வீச்சுகள் பூமியில் அதிக அளவில் படுகிறது.

கிரகம், ராசி, நட்சத்திரம் ஆகியவற்றுடன் பூமியில் உள்ள மரங்களுக்குத் தெய்விகத் தொடர்புகள் இருக்கின்றன. திருவோணம் நட்சத்திரத்துடன் சரக்கொன்றை மிகவும் நெருக்கம் கொண்டுள்ளது. இந்த நட்சத்திரத்தின் கதிர்வீச்சுகள் பூமியில் அதிகளவில் படும்போது சரக்கொன்றை மரம் அதை உள்வாங்கி, தனக்குள் சேமித்து வைத்துக் கொள்கிறது. இது, கெட்ட கதிர்வீச்சுகளை நலம் தரும் நல்ல கதிர்வீச்சுகளாக மாற்றிவிடுகிறது.

சரக்கொன்றை மரம் திருப்பந்தணை நல்லூர் (பந்தநல்லூர்) ஸ்ரீவேணுபுஜாம்பிகை சமேத ஸ்ரீபசுபதீஸ்வரர் ஆலய தல விருட்சமாக விளங்குகிறது. தஞ்சை மாவட்டம், திருவிடைமருதூர் வட்டத்திலுள்ள திருப்பந்தணை நல்லூர், கும்பகோணத்திலிருந்து வடகிழக்கில் 27 கி.மீ. தொலைவில் உள்ளது.

இந்த ஆலயத்தின் உள்ளேயே தனிச் சந்நிதியில் அருள்மிகு பரிமளவல்லித் தாயாருடன் ஆதிகேசவப் பெருமாளும் குடிகொண்டு பக்தர்களுக்கு அருட்காட்சி வழங்குகிறார்கள்.

சுயம்பு மூர்த்தியாக சிவபெருமான் புற்று வடிவில் அருள்மிகு பசுபதீஸ்வரர் என்ற பெயரில் இங்கு குடிகொண்டுள்ளார். புற்றின் மீது பசுவினால் மிதிக்கப்பட்ட குளம்புச் சுவடும், அம்பிகை ஆடிய பந்தின் சுவடும் இன்றும் காணலாம். அம்பிகையின் திருநாமம் ஸ்ரீவேணுபுஜாம்பிகை. அதாவது, 'மூங்கில் போன்ற தோள் அழகுடையாள்' என்பது பொருள். அம்பிகைக்கு வடக்கு நோக்கிய சந்நிதி. இதற்கு மேற்புறம், பத்ரகாளி; கீழ்ப்புறம் ஐயனார், கோபுர வாயிலில் ஸ்ரீமுனீஸ்வரர், ஸ்ரீதுர்கை - விஷ்ணு துர்கையாக, சங்கு சக்ரதாரி கோலத்தில் அழகாய் காட்சியளிக்கிறாள்.

அம்பிகைக்குப் பந்து ஆடுதலில் விருப்பம் வந்து இறைவனை வேண்டினாள். உலக முதல்விக்குச் சாதாரணமான பந்துகளைக்


வியாபாரம் செழிக்கும்!

ஆலய அர்ச்சகர் ராஜசேகர குருக்கள், "இது பித்ரு சாப நிவர்த்தித் தலம். கண் பார்வைக் குறைபாடுகளை நீக்கும் தலமாகவும் உள்ளது. சொத்து வழக்கு ஜெயம், கடன் வசூல் ஆதல், தொழில் அபிவிருத்தி இவை ஸ்ரீபசுபதீஸ்வரப் பெருமானாலும், வித்தை, கல்வி, குழந்தைப் பேறு இவை ஸ்ரீவேணுபுஜாம்பிகையாலும், பில்லி சூனியம், ஏவல், மனக் குழப்பம், காரியத் தடை நீங்கல், ஆகியவை ஸ்ரீமுனீஸ்வரர் அருளாலும், நேர்கோட்டில் நிற்கும் நவக்கிரகங்கள் அருளால் கிரக தோஷம் நீங்கும் தலமாகவும் விளங்குகிறது." என்று கூறினார்.

மேலும், "மூலவர் புற்று வடிவில் இருக்கிறார். லிங்கக் குவளை சாத்தி, அபிஷேகம் செய்து வருகிறோம்.

ஸ்ரீமுனீஸ்வரருக்கு ஞாயிறு, செவ்வாய், வெள்ளிக் கிழமைகளில் சிறப்பு பூஜைகள் நடைபெறும். செய்வினை, ஏவல், பில்லி சூனியம் அகற்றும் சக்தி வாய்ந்தவர் முனீஸ்வரர் என மக்கள் அதிக அளவில் வந்து வழிபட்டுச் செல்கின்றனர்!" என்று தெரிவித்தார்.


ராஜசேகர குருக்கள்



சரக்கொன்றை மரம்



கொடுப்பதா என இறைவன் சிந்தித்து, நான்கு வேதங்களையுமே பந்துகளாக்கிக் கொடுத்தார். திருக்கயிலையிலே பராசக்தி தோழியருடன் பந்தாடலில் தங்களை மறந்தாள்... இந்த விளையாட்டுக்கு இடையூறாக நிற்க விரும்பாத சூரியன், அஸ்தமனம் ஆகாமல், நெடும்பொழுது வானவீதியில் நிலைத்தான். விளயாட்டு வளர்ந்தது; பகலும் நீண்டது. உலகம் சோர்ந்தது.

பகற்பொழுது நீண்டதால் ஏற்பட்ட துன்பத்தை எடுத்துரைக்கச் சென்ற நாரதரையோ, தன் நாயகனையோ அம்பிகை நோக்கவில்லை; விளையாட்டில் ஆழ்ந்துவிட்ட அவள் மீது இறைவன் சினம் கொண்டார். காலனை உதைத்த திருக்காலால் அந்தப் பந்தை உதைத்தார். பந்து மண்ணுலகம் போய் விழுந்தது. அம்பிகை தன் தவறை உணர்ந்து



மன்னிப்புக் கேட்டாள். இறைவனின் ஆணைப்படி பசுவாக மாறி, மண்ணுலகம் வந்து, பந்து வந்து அணைந்த சரக்கொன்றை மர நிழலில், சுயம்பு லிங்கமாக இருந்த புற்றின் மீது பாலைச் சொரிந்து வழிபட்டாள். அதுதான் திருப்பந்தணை நல்லூராக விளங்குகிறது.

இங்கு, திருமணக் கோலத்தில் இறைவனும் இறைவியும் காட்சி தருவது கொள்ளை அழகு!

இங்கே, நேர் வரிசையில் நின்று திருக்காட்சி வழங்குகிறார்கள். இறைவனின் திருமணத்தைக் கண்டு வழிபட்ட ஆனந்தக் களிப்புடன் நேர் வரிசையில் நிற்கிறார்கள் நவக்கிரகங்கள். இவர்களை வழிபடுவோருக்குக் கோள்களால் ஏற்படும் துயரம் அழியும் என்பது ஐதீகம்!

ஆண்டுதோறும் ஆவணி மாதம் 19, 20, 21 தேதிகளில் இறைவன்



ஸ்ரீவேணுபுஜாம்பிகை



ஸ்ரீபசுபதீஸ்வரர்


திருமேனியில் சூரியக் கதிர் படும் அற்புதம் நிகழ்வதை பக்தர்கள் கண்டு களிக்கிறார்கள்.

கண்வ முனிவரும் பிற தேவர்களும் வேண்டியபடி, மகாவிஷ்ணு இங்கு பரிமளவல்லித் தாயார் உடனுறை ஆதிகேசவப் பெருமாளாக உறைந்து அருள்பாலிக்கிறார்கள்.

வாய்ப்புண், தொண்டைப் புற்று ஆகியவற்றைத் தடுக்கும் சக்தி, இந்த ஆலயத்தின் தல விருட்சமான சரக்கொன்றை மரத்துக்கு இருக்கிறது. இதன் இலைக் கொழுந்தை அரைத்துச் சாறாக்கி சர்க்கரை கலந்து உட்கொண்டால், உடலிலுள்ள கிருமிகள், பூச்சிகள் வெளியேறும். இலையைத் துவையல் செய்தும், கடைந்தும் சாப்பிடலாம். அரைத்துப் படர் தாமரைக்குப் பூசலாம். கீல்வாதம் மற்றும் முகத்தில் வலிப்பு உள்ள இடங்களில் இலையைத் தேய்க்கலாம். மூளைக் காய்ச்சலுக்கும் இது மருந்தாகிறது.

சரக்கொன்றைப் பூவுக்கு புழுக்களைக் கொல்லும் திறன் உண்டு. பூவைத் தனியாகவோ அல்லது இலைக் கொழுந்துடனோ அரைத்து, பாலில் கலந்து உட்கொண்டால் வெள்ளை, வெட்டை, பாண்டு, காமாலை நோய்கள் நீங்கும். பழச்சாற்றுடன் பூவை அரைத்துத் தேய்த்துக் குளித்து வந்தால், தேமல், சொறி ஆகியவை குணமாகும்.

பூவைப் பாலுடன் காய்ச்சி உட்கொண்டால், உடல் உறுப்புகளை வன்மைப் படுத்தும். மரப்பிசின் மலமிளக்கியாகச் செயல்படுகிறது. மரப்பட்டை அஜீரணம் போக்கும். சரக்கொன்றையினால்



ஸ்ரீபசுபதீஸ்வரர் திருக்கோயில்

தயாரிக்கப்படும் மருந்து தடைப்பட்ட மாத விலக்கை வெளியேற்றும்.

கடலூர் மாவட்டம் திருவதிகை ஸ்ரீவீரட்டேஸ்வரர் கோயில், மதுரை மாவட்டம் திருப்பனூர் கொன்றை வேந்தனார் ஆலயம் முதலான 15-க்கு மேற்பட்ட ஆலயங்களிலும் சரக்கொன்றையே தல விருட்சமாக உள்ளது.

கொன்றையை *'தூங்கிணர்க் கொன்றை'* என்றார் கபிலர். சங்க இலக்கியப் பெயராக கொன்றை எனவும், வேறு பெயர்களாக இகழி, தாமம், மதலை, ஆர்க்குவதம் எனவும், உலகு வழக்குப் பெயராக சரக்கொன்றை எனவும் இது அழைக்கப்படுகிறது. *'கொன்றை வேய்ந்த செல்வன் இணையடி'* என சிவபெருமானைத் தொல்காப்பியம் குறிக்கிறது.

மகாபாரதத்தில் எதிரிகளால் சூழப்பட்டு நின்ற அபிமன்யுவுக்காக வீமன் புகுந்தான். அவனைத் தடுக்க நினைத்த ஜயத்ரதன் சிவனிடத்தில் பெற்ற கொன்றை மாலையை வீமன் எதிரே ஏவினான். வீமன் அந்த மாலையைக் கண்ட அளவில் கை தொழுது வீழ்ந்தான். இது கண்ட திட்டத்துய்மன் வீமனைப் பழித்தான். அதற்குப் பதில் கூறும் விதமாகக் கொன்றை மாலையின் பெருமையை வீமன் பேசும் வரிகள் மகாபாரதத்தில் இடம்பெற்றுள்ளன.

வன்னி மரத்தின் மகிமை!

அவிட்டம் நட்சத்திரத்துக்கான விருட்சம்

44

வேதாரண்யம்
ஸ்ரீவேதாரண்யேஸ்வரர் திருக்கோயில்

புத்திசாலித்தனம்; அடக்கம்; இசையில் மிகுந்த ஈடுபாடு; வாக்கு சுத்தம்; நினைத்ததை அடைந்தே தீரும் முனைப்பு; நற்காரியங்களில் ஆர்வம்; பழி பொறுக்காத தன்மை; எதிரிகளை வீழ்த்தும் திறன்... இந்தக் குணங்கள் பெரும்பாலான அவிட்ட நட்சத்திரக்காரர்களுக்கு இருக்கும்.

சனிக்கிழமையிலும், டிசம்பர் 21 முதல் பிப்ரவரி 18 வரையிலும் பிறந்தவர்களை அவிட்ட நட்சத்திரம் ஆட்சி செய்கிறது. மகரம், கும்ப ராசிகள் மற்றும் சனிக் கிரகம் அவிட்ட நட்சத்திரத்துடன் தொடர்பு கொண்டது. அவிட்ட நட்சத்திரத்தின் கதிர்கள், மேற்குறிப்பிட்ட நாட்களில் அதிக அளவில் பூமியில் விழும். அதன் நல்ல கதிர்வீச்சுகள் நன்மையையும், கெட்ட கதிர்வீச்சுகள் தீங்குகள், மற்றும் நோய்களையும் விளைவிக்கும். வாத நோய், பித்தம் தொடர்பான நோய்கள், இருமல், சொறி, சிரங்கு, மார்புச் சளி, விஷக்கடி போன்றவை அவிட்ட நட்சத்திர தோஷத்தால் ஏற்படுபவையே.

இந்த நட்சத்திரத்தின் நல்ல கதிர்வீச்சுகளை வன்னி மரம் ஈர்த்துத் தன் உடலுக்குள் சேமித்து வைத்துக்



வன்னி மரம்

கொள்ளும். எனவே, அவிட்ட நட்சத்திரத்தின் தோஷத்திலிருந்து விடுபட, வன்னி மர நிழலில் சிறிது நேரத்தைத் தினமும் செலவிடவோ அல்லது வன்னி மரத்தின் பாகங்களைக் கொண்டு செய்யப்படும் மருந்துகளை உட்கொள்ளவோ செய்யலாம்.


வேதாரண்யம் ஆலயத்தின் தல விருட்சமாக விளங்குகிறது வன்னி மரம். நாகை மாவட்டம், திருத்துறைப்பூண்டியிலிருந்து 35 கி.மீ. தூரத்தில், கடற்கரையை ஒட்டி, வேதவனம் என்னும் வேதாரண்யம் அமைந்துள்ளது.

திருவாரூரில் பிறந்தால் முக்தி, காசியில் இறந்தால் முக்தி, திருவண்ணாமலையை நினைத்தால் முக்தி, சிதம்பரத்தைத் தரிசித்தால் முக்தி, காஞ்சியில் வாழ்ந்தால் முக்தி என்பார்கள். இவற்றைப் போல, வேதாரண்யத்தில் நீராடினால் முக்தி என்று ஓர் ஐதீகம் உள்ளது.

ஆலயம் ஊருக்கு நடுவே, இரண்டு இராஜ கோபுரங்களோடு பிரம்மாண்டமாக அமைந்துள்ளது. வேதங்கள் நான்கும் பூஜித்த தலம்; ஸ்வாமியின் திருநாமம் வேதாரண்யேஸ்வரர். சிவலிங்கத் திருமேனிக்குப் பின்னால் சிவபெருமான், பார்வதி தேவியுடன் திருமணக் கோலத்தில் காட்சி தருகிறார். இவ்வாலய அம்பிகையின் திருநாமம் ஸ்ரீவேதநாயகி.

ஒருமுறை ஸ்ரீசரஸ்வதி தேவி வித்யா கர்வத்துடன் யாழ் வாசித்துக் கொண்டிருக்க, அதைக் கேட்டு அம்பிகை 'சபாஷ்!' என்று பாராட்டினாளாம். அம்பாளின் குரல் இனிமை, சரஸ்வதி வாசித்த யாழ் இசையைவிடச் சிறந்திருக்க, அதற்கு இணையாக யாழில் சரஸ்வதியால் மீட்ட முடியாமற்போக கர்வம் சிதைந்தது. 'கற்றது கையளவு' என உணர்ந்து, இங்கு ஸ்ரீசரஸ்வதி யாழின்றிக் காட்சி தருகிறாள்.

சாந்த சொரூபினியாக இங்கு காட்சி தரும் ஸ்ரீதுர்கையை இலங்கை செல்லுமுன் ஸ்ரீராமன் பூஜித்து சென்றார் என்கிறது ஸ்தல புராணம். ஸ்ரீராமர் பூஜித்த லிங்கம், வழக்கமான வரிசையில் இல்லாமல், நேர் பக்க வரிசையில் அமைந்த நவக்கிரகங்கள், நடுக்கம் தீர்த்த விநாயகர் (தேர்வு, வேலை, தொழில், வியாபாரம் ஆகியவற்றில் பயத்தையும் தோல்வியையும் நீக்கும் விநாயகராம்



ஆலயத்தின் உள்ளே...

இவர்!), தனி ஆலயம் கொண்டுள்ள ஸ்ரீவீரகத்தி விநாயகர், மோட்சத்துவாரேஸ்வரர், தட்சிணாமூர்த்தி, முருகன், கஜலட்சுமி, சுரதேவர், சனீஸ்வர பகவான், அன்னபூரணி, சண்டிகேஸ்வரர், காலபைரவர் மற்றும் பலர் இங்கு உறைந்து பக்தர்களுக்கு அருள்பாலிக்கின்றனர்.

திருநாவுக்கரசரும் திருஞானசம்பந்தரும் பல க்ஷேத்திரங்களைத் தரிசித்துவிட்டு வேதாரண்யம் வருகையில், வேதங்கள் தங்கள் வழிபாட்டை முடித்துக்கொண்டு கதவை மூடிவிட்டுச்

ஸ்ரீராமன் வழிபட்ட ஸ்ரீதுர்கை

"திருமணம் ஆகாத ஆண் பெண்கள், ஸ்வாமியை 2 மாலைகள் சாத்தி பூஜை செய்து, பின் மாலையைப் பெற்று அணிந்து வலம் வந்தால், திருமணம் கட்டாயம் நடக்கும் என்பது இங்கு ஐதீகமாக உள்ளது.

ஸ்ரீராமரால் பிரதிஷ்டை செய்து பூஜித்த துர்கை தெற்கு நோக்கி இருக்கிறாள். இதுமாதிரி வேறு எங்கும் கிடையாது. துர்கைக்கு ராகு கால பூஜை செய்வது சிறப்பு!

இங்குள்ள சரஸ்வதியைத் துதித்தால், கர்வமில்லாத கல்வி, ஞானம், பெருமை எல்லாம் குறைவறக் கொடுப்பாள்.



செல்லப்பா குருக்கள்

வேதங்களே வழிபட்ட இறைவன் என்பதால், இவரை வழிபட, கல்வி சிறக்கும், அறிவு பெருகும். ஸ்ரீராமர் போர் புரிய இலங்கை செல்லுமுன் இந்த ஆலய இறைவனை வழிபட்டுப் பின் சென்று வெற்றியடைந்தார் என்பதால், இங்கு வழிபாடு செய்பவருக்கு அவர் முன்னெடுக்கும் அனைத்துக் காரியங்களிலும் வெற்றி கிட்டும் என்பதில் சந்தேகமில்லை!" என்று ஆலய அர்ச்சகர் செல்லப்பா குருக்கள் பெருமிதத்துடன் கூறினார்.



சென்றனவாம். பக்கத்தில் இருந்த சிறு திட்டிவாசல் வழியே குனிந்து உள்ளே செல்ல விரும்பாதவர்களாக, திருநாவுக்கரசர் ஆலயக் கதவு திறக்கப் பதிகம் பாடினார்; கதவு திறந்தது. உள்ளே சென்று தரிசனம் முடித்துத் திரும்பியதும், திருஞானசம்பந்தர் பாட, கதவு மூடிக்கொண்டது. மாசி மகப் பெருவிழாவில் இந்தக் கதவு திறக்கும் ஐதீக விழா நடந்து வருகிறது.

குசிக மன்னன் மரபில் வந்த காதி என்ற அரசரின் மகன் விஸ்வாமித்திரன். இவன் அரச பதவி ஏற்றவுடன் தன் பரிவாரங்களுடன் வசிஷ்ட முனிவரின் ஆசிரமத்துக்குச் சென்றான். வசிஷ்டர் தன் காமதேனுப் பசுவை அழைத்து மன்னனுக்கும் அவனுடைய பரிவாரங்களுக்கும் விருந்து அளிக்க உத்தரவிட்டார். அதைப் பார்த்துப் பிரமித்த விஸ்வாமித்திரன் தனக்கு அந்தப் பசுவை அளிக்குமாறு வசிஷ்டரிடம் கேட்டான். “வந்தால் கொண்டு செல்!” என்றார் முனிவர்.

தன் சக்தி, படை பலம் யாவற்றையும் பிரயோகித்தும் மன்னனால் காமதேனுப் பசுவை அசைக்கக்கூட முடியவில்லை. தவத்தின் வலிமையை உணர்ந்த மன்னன், அரசைத் துறந்து வன்னி மரத்தின் அடியில் கடும் தவம் மேற்கொண்டான். ஸ்ரீபிரம்மதேவன் விஸ்வாமித்திரர் முன் தோன்றி, வசிஷ்டரை அழைத்து, அவர் வாயால் ‘பிரம்ம ரிஷி’ என்ற பட்டத்தை அளிக்கச் செய்தான். (வேதாரண்யம் ஆலயத்தில் தல விருட்சமான வன்னி மரத்தின் அடியில், விஸ்வாமித்திரர் தவம் செய்யும் சந்நிதி உள்ளது).

வன்னி மரம் மிகுந்த மருத்துவக் குணங்களும் சிறப்புகளும் உடையது. வன்னி மரத்தைச் சுற்றி வந்து வழிபட்டால், குழந்தை பிறக்கும் என்பார்கள்.



திருக்குளம்

ஸ்ரீராமர் ராவணனுடன் போரிடப் புறப்படுவதற்கு முன் வன்னி மரத்தைத் தொட்டு வணங்கிய பின்னரே சென்றதாக ராமாயணம் தெரிவிக்கிறது.

பாண்டவர்கள் தங்கள் போர் ஆயுதங்களை வன்னி மரத்தில் மறைத்து வைத்திருந்ததாக மகாபாரதத்தில் குறிப்பு வருகிறது.

வன்னிக் காய்களைப் பவுடராக்கி, காலையும் மாலையும் சாப்பிட்டு வந்தால், பெண்களின் அதிகமான மாதவிலக்கு, ரத்தப் போக்கு, கர்ப்பப்பை புண், வீக்கம் ஆகியன குணமடையும். மேலும், சீதபேதி, மூக்கிலிருந்து ரத்தம் வடிதல், ரத்த வாந்தி, சளியில் ரத்தம் கலந்து வரும் நோய்கள், இந்தப் பவுடரைச் சாப்பிட்டால் குணமடையும்.

வன்னிக் காயைத் தண்ணீரில் கொதிக்க வைத்து அந்த நீரைக் கொண்டு வாய் கொப்பளித்தால் ஈறுகள், பற்கள், வாய், நாக்கில் புண், வலி, வீக்கம் ஆகியவை குணம் பெறும். வன்னிக் காய் பவுடரை தேங்காய் எண்ணெய் அல்லது தேன்மெழுகில் கலந்து களிம்பாகத் தயாரித்து மலத்துவாரத்துக்குள் பூசினால், மூலக் கட்டிகள் கரையும்; மூல நோய் நீங்கும்.

வன்னி மரத்தால் செய்யப்பட்ட பாத்திரத்தில் தண்ணீரை ஊற்றிவைத்துக் குடித்தால் கல்லீரல் வலி, வீக்கம் குறையும். வன்னிக் காய்களைத் தண்ணீரில கொதிக்க வைத்து, சர்க்கரை கலந்து குடித்தால் மஞ்சள் காமாலை குணமாகும்; அதிகமான பித்தம் வெளியேறும்.

விருத்தாசலம், திருவான்மியூர், மேலைத் திருக்காட்டுப்பள்ளி, திருப்பூந்துருத்தி முதலிய 15-க்கும் மேற்பட்ட ஊர்களின் ஆலயங்களில் தலவிருட்சமாக வன்னி மரம் போற்றி வணங்கப்படுகிறது.

கடம்ப மரத்தின் மகிமை!

சதயம் நட்சத்திரத்துக்கான விருட்சம்

45

மேலைக்கடம்பூர்
ஸ்ரீஅமிர்தகடேஸ்வரர் திருக்கோயில்

நீதி, நேர்மை, நல்லறிவு, பிறருக்கு உதவும் குணம் மற்றும் நல்லொழுக்கம் ஆகியவை பெரும்பாலும் சதய நட்சத்திரத்தில் பிறந்தவர்களின் குணங்களாக அமைந்திருக்கும்.

சதயம் (சதம்) என்பது ஒரு சமஸ்கிருத வார்த்தை; இதற்கு நூறு எண்ணிக்கை என்று பொருள். நூறு நட்சத்திரங்களின் கூட்டம், வானில் கோள வடிவில் காணப்படுவதால், இந்த நட்சத்திரக் கூட்டத்துக்கு 'சத(ய)ம்' என்று பெயர் வந்தது.

இது கும்ப ராசி மற்றும் சனி கிரகத்துடன் தொடர்பு கொண்டது. சனிக்கிழமைகள் மற்றும் ஜனவரி 20 முதல் பிப்ரவரி 18 வரையுள்ள தேதிகளில் பிறந்தவர்களை சதயம் நட்சத்திரம் ஆட்சி செய்கிறது.

சதய நட்சத்திரத்தின் நல்ல கதிர்வீச்சுகள், மனிதனுக்கு ஆரோக்கியத்தைக் கொடுக்கவல்லவை. கெட்ட கதிர்வீச்சுகள் நோய்களை உண்டாக்கும். இந்த நோய்களைக் குணப்படுத்த, கடம்ப மரம் உதவுகிறது. சதய நட்சத்திரத்தின் நல்ல கதிர்வீச்சுகள் பூமியில் படும்போது, கடம்ப மரம் அதைத் தனக்குள் ஈர்த்து சேமித்து வைத்துக் கொள்கிறது. இந்த

மரத்தின் அடியில் தினமும் அரை மணி நேரம் செலவிட்டால், சேகரித்து வைக்கப்பட்ட சதய நட்சத்திரத்தின் நல்ல கதிர்வீச்சுகள் அவர்களின் உடலுக்கு மாறி நற்பலன்களைக் கொடுக்கும்!

மேலைக்கடம்பூர் ஸ்ரீஜோதி மின்னம்மை சமேத அமிர்தகடேஸ்வரர் திருக்கோயிலின் தல விருட்சமாகக் கடம்ப மரம் விளங்குகிறது. சிதம்பரத்திலிருந்து காட்டுமன்னார்கோவில் வழியாக 31 கி.மீ. தூரத்தில் இந்தக் கோயில் அமைந்துள்ளது.

திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர், அருணகிரிநாதர், ராமலிங்க அடிகள், பாம்பன் சுவாமிகள், வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் போன்ற பல அடியார்கள் வழிபட்ட தலம் இது. திரேதா யுகத்தில் சூரிய-சந்திரர், தேவேந்திரன், ரோமரிஷி ஆகியோரும், துவாபர யுகத்தில் அஷ்ட பர்வதங்களும், பர்வத ராஜனும், கலியுகத்தில் பதஞ்சலி முனிவரும் இங்கு வந்து வழிபட்டனராம்.

மூலவர் அமிர்தகடேஸ்வரர் திருமேனி மீது பங்குனி 3,4,5 தேதிகளில் காலையில் சூரியன் தன் கதிர்களைப் பாய்ச்சுவது ஓர் அற்புதம். இறைவி ஜோதி மின்னம்மை காலையில் கலைமகளாகவும், மாலையில் திருமகளாகவும், இரவில் மலைமகளாகவும் காட்சி தந்து அருள்பாலிப்பது பக்தர்களை மகிழ்விக்கும் அற்புதச் செயலாகும்.

ராஜேந்திர சோழன் வாதாபிக்குப் படைகளுடன் சென்று அந்த நாட்டின் கோட்டை வாயிலில் இருந்த கணபதி சிலைகளையும்,

பிரதோஷத்தில் தரிசனம் தரும் மூர்த்தி!

முதலாம் குலோத்துங்க சோழன் அவையில் ராஜகுருவாக இருந்த, வங்க தேசத்தைச் சேர்ந்த ஸ்ரீகண்டசிவன், தன்னுடன் செம்பிலான ஸ்ரீதசபுஜ ரிஷபத் தாண்டவ மூர்த்தி சிலையைக் கொண்டு வந்தார். அதை, அவர் கட்டி முடித்த மேலைக்கடம்பூர் திருக்கோயிலிலேயே வைத்துச் சென்றார்.

இது ஒரு அற்புதமான கலைப் பெட்டகம். மேல் நோக்கி நிற்கும் ரிஷபத்தின் மேல், பத்துக் கரங்களில் கத்தி, சூலம், தீச்சட்டி, கபாலம், பாம்பு, கேடயம், தண்டம், குத்தீட்டி ஏந்தியவராக ஸ்ரீதசபுஜ ரிஷப தாண்டவமூர்த்தி காட்சி தருகிறார். பிரளய காலத்தில் சகல ஜீவ ராசிகளும் தன் அடியில் ஒடுங்கிய காட்சியைக் காட்டிடும் அற்புதத் திருவுருவாகும். உயிர்களுக்கு அடைக்கலம் தந்து பிரளய தாண்டவத்தின் மூலம் அருள்பாலிக்கும் இம்மூர்த்தியினை பிரதோஷ நாளில் மட்டுமே பக்தர்கள் தரிசனம் செய்ய முடியும்!



துவார பாலகர் சிலைகளையும் எடுத்து வந்தனர் என்பது வரலாறு. கொண்டு வந்த கணபதி சிலைகளில் ஒன்றை மேலைக்கடம்பூர் கோயிலிலும் மற்றதைத் திருச்செங்கட்டாங்குடிக் கோயிலிலும் பிரதிஷ்டை செய்ததாக அறிகிறோம். இதன் பின்னரே விநாயகர் வழிபாடு தமிழகத்தில் பிரபலம் அடைந்ததாகக் கூறுவர்.

தில்லையில் பதஞ்சலி முனிவர் தவம் மேற்கொண்டு வேண்டியதால், ஸ்ரீநடராஜர் இங்கு வந்து ஆனந்தக் கூத்தாடினார். அதனை வெளிப்படுத்தும் நிலையில் பதஞ்சலி முனிவர் தன் தலை மீது ஸ்ரீநடராஜரைச் சுமந்து கொண்டு ஆடும் அற்புதக் காட்சியை இங்கு காணலாம்.

அரக்கர்களும் தேவர்களும் திருப்பாற்கடலைக் கடைந்து அமிர்தத்தைக் கலசத்தில் சேகரித்தனர். தேவர்கள் முதலில் வழிபட வேண்டிய விநாயகரை வழிபடாமல் அமிர்தத்தை உண்ண முற்பட்டனர். அவர்களுக்குப் பாடம் கற்பிக்க எண்ணிய விநாயகர், அமிர்த கலசத்தைப் பூலோகத்தில் மறைத்து வைக்க எடுத்து வந்தார். வரும் வழியில் ஒரு துளி அமிர்தம் கடம்ப வனத்தில் சிந்தியது. அந்த இடத்தில் ஒரு லிங்கம் தோன்றியது. பிற்காலத்தில் அந்தக் கடம்பவனம் 'திருக்கடம்பூர்' என்று வழங்கலாயிற்று. தல விருட்சம் கடம்ப மரம் ஆனது. அமிர்தத்தை விநாயகர் மறைத்து வைத்த இடம், திருக்கடவூர் ஆகும். இதுதான் திருக்கடையூர் என மருவி நிற்கிறது. திருக்கடவூர், திருக்கடம்பூர் இரு தலத்து இறைவன் பெயரும் ஸ்ரீஅமிர்தகடேஸ்வரர் என்பதே ஆகும்.

திருக்கடவூரின் இறைவன் கால சம்ஹாரமூர்த்தியாகவும், திருக்கடம்பூரில் சாந்த மூர்த்தியாகவும் அருள்பாலிக்கிறார்.



கடம்ப மரமும் கடம்பவன நாதரும்...

திருக்கடையூரைப் போலவே திருக்கடம்பூரிலும் மக்கள் மணிவிழாச் சடங்குகளை மேற்கொண்டு இறையருள் பெறுகிறார்கள்!

கடம்ப இலையின் சாற்றை எடுத்து அதில் சீரகமும் சர்க்கரையும் சேர்த்து குழந்தைகளுக்குக் கொடுக்க, வயிற்றுப் பொருமல் மற்றும் அழற்சி நீங்கும்; அதிக தாகத்துடன் கூடிய ஜுரத்துக்கும் நல்லது.

இலைச்சாறு, வாய்ப்புண், தொண்டைப் புண் ஆகியவற்றைக் குணப்படுத்தும். 50 கிராம் பட்டையை நீரில் இட்டுக் காய்ச்சி அருந்திவர, காய்ச்சல் குணமாகும். பட்டையை இடித்து வலியுள்ள இடத்தில் வைத்துக் கட்டுப் போட்டால், வலி குணமாகும்.

கடன் தீர்க்கும் தலம்!



பாலகணேச குருக்கள்

ஆலய அர்ச்சகர் பால கணேச குருக்கள், "நான்கு சக்கரங்களுடன் கிழக்கு நோக்கி குதிரைகள் பூட்டப்பட்ட நிலையில் அழகிய தேரின் வடிவில் விளங்கும் ஒரே ஆலயம் இது!

இங்கு சனீஸ்வர பகவான் கழுகு வாகனத்தில் காட்சியளிக்கிறார். ராமாவதார காலத்துக்குப் பின்னரே காகம், சனி பகவானுக்கு வாகனம் ஆயிற்று. எனவே இது, இந்தக் கோயிலின் பழமையை உறுதிப்படுத்துகிறது.

கடன் தீர்க்கும் கடம்பவன நாதர் இவர். தொழிலில் மேம்பாடு, படிப்பில் சிறப்பு, திருமணத் தடை நீக்கம் ஆகியவை இங்கு பிரதோஷ பிரார்த்தனை செய்தால் கிட்டும். எல்லாத் தோஷங்களும் அகலுவதுடன் பக்தர்கள் வேண்டுவதை ஸ்ரீஅமிர்தகடேஸ்வரர் குறைவற அருளுவார்!" என்கிறார்.



ஸ்ரீஅமிர்தகடேஸ்வரர்



ஸ்ரீஜோதி மின்னம்மை

ஜுரத்துக்கும், வயிற்றுப் போக்குக்கும் கடம்ப பழச் சாறுடன் சிறிது சர்க்கரை சேர்த்துக் கொடுத்தால் குணம் உறுதி.

விதையை அரைத்து நீரில் கலந்து குடித்தால் கடுமையான நஞ்சு முறியும். விதையைப் பொடித்து மூக்கில் உறிஞ்ச, தலைவலி நீங்கும். பூக்கள் சமைத்து உண்ண ஏற்றது. இதற்கு ரத்தத்தை சுத்தம் செய்யும் குணம் உண்டு.

கடம்ப மரம், மதுரை மீனாட்சி ஆலயம், குளித்தலை திருக்கடம்பூர் ஆலயத்திலும் தல விருட்சமாக உள்ளது.

'சதுக்கமும் சத்தியும், புதுப் பூங்கடம்பும்' என்று கடம்பு புதிதாய் பூத்த தன்மை, திருமுருகாற்றுப்படையில் குறிப்பிடப்பட்டுள்ளது. *'மறை மரா அத்த பேஎமுதல் கடவுள் கொடியோர்த் தெறூஉம் என்ப'* என்று குறுந்தொகை குறிப்பிடுகிறது. கடம்ப மரத்தில் சிறு தெய்வம் இடம்பெறுவதாகவும், இந்தத் தெய்வம், கொடியோரை அழிக்கும் எனவும் மக்கள் நம்பினர் என்பது குறுந்தொகைக் காட்சி!

ஈச்சை மரத்தின் மகிமை!

பூரட்டாதி நட்சத்திரத்துக்கான விருட்சம்

46

ஈச்சங்குடி
ஸ்ரீகர்ஜபுரீஸ்வரர் திருக்கோயில்

பொறாமை, குற்றம் கூறினால் பொறுக்காத தன்மை ஆகியவை பூரட்டாதி நட்சத்திரத்தில் பிறந்தவர்களில் பெரும்பாலானவர்களின் குணங்களாக அமைந்திருப்பதைக் காணலாம்.

பூரட்டாதி நட்சத்திரம், கும்ப ராசி மற்றும் சனி கிரகத்துடன் தொடர்பு கொண்டது. சனிக்கிழமை, வியாழக்கிழமை மற்றும் ஜனவரி 20 முதல் மார்ச் 20-ம் தேதி வரை பிறந்தவர்களை பூரட்டாதி நட்சத்திரம் ஆட்சி செய்கிறது.

மேற்கண்ட காலங்களில் பூரட்டாதி நட்சத்திரத்தின் கதிர்வீச்சுகள் அதிக அளவில் பூமியில் விழும். அதன் நல்ல கதிர்வீச்சுகள் மனிதர்களுக்கு நன்மைகளையும், கெட்ட கதிர்வீச்சுகள் நோய்களையும் ஏற்படுத்தக்கூடியவை. தங்கள் நோய்கள் மற்றும் தோஷங்கள் நீங்க, பூரட்டாதி நட்சத்திரக்காரர்கள், ஈச்சை மரத்தைத் தினமும் அரை மணி நேரம் கட்டிப் பிடிக்கலாம் அல்லது தினமும் சிறிது நேரம் அந்த மர நிழலில் ஓய்வெடுக்கலாம்!

ஈச்சங்குடி ஸ்ரீகாருண்யவல்லி அம்பிகை சமேத ஸ்ரீகர்ஜபுரீஸ்வர ஸ்வாமி ஆலயத்தின் தல விருட்சமாக

ஈச்ச மரம் அமைந்துள்ளது. ஈச்சங்குடி, தஞ்சை மாவட்டம், பாபநாசம் வட்டத்தில் இருக்கிறது.

'கர்ஜூரம்' என்றால் ஈச்சை என்று பொருள். காவிரி தீரத்தின் வடகரையில் உள்ள கர்ஜூரவனம் என்ற இந்தத் தலம், மிகவும் புனிதமானது ஆகும்.

தேவர்களும் அசுரர்களும் அமுதம் வேண்டி, பாற்கடலைக் கடையும் பொருட்டு மத்தாகிய மந்தர மலையை நெருங்கினார்கள். அப்போது, அது நழுவிக் கடலில் விழுந்து பாதாளத்தில் மூழ்கியது. இதனால் செய்வதறியாது கவலையில் மூழ்கிய தேவர்கள் இந்தத் தலத்துக்கு வந்து ஸ்ரீகர்ஜபுரீஸ்வரரைத் தொழுதார்கள். இறைவன் அருளால், ஸ்ரீமன் நாராயணன் கூர்ம ரூபம் (ஆமை வடிவம்) எடுத்தார். கடலுக்குள் சென்று, மந்தர மலையின் அடியில் போய் அதைத் தூக்கி அழுத்தமாகத் தாங்க, பாற்கடலைக் கடைவது தேவர்களுக்கு சுலபமாயிற்று.

இந்தத் தலத்து இறைவன், அர்ஜூனனுக்கு திருக்கயிலாயக் காட்சி தந்ததாக பாடல் ஒன்று உண்டு.

வாஸ்து சாஸ்திரத்தின்படி மீன், ஆமை ஆகியவை முக்கியம் வாய்ந்தவை. இந்தத் தலத்து சிவனாரை, கூர்மாவதாரம் எடுத்தபோது மகாவிஷ்ணு பூஜித்ததாக ஸ்தல புராணம் கூறுகிறது. எனவே இங்கு வந்து வழிபட்டால், வாஸ்து தோஷங்கள் நீங்கும் என்பது ஐதீகம்!

ஞானக் குழந்தை வரம்!

ஆலயத்தின் நிர்வாகி சந்திரமௌலி நம்மிடம் சொன்னார்:

"கூர்மம் (ஆமை) வாஸ்துவுக்கு அதிபதி. வீடு, கட்டடம் சம்பந்தமான பிரார்த்தனைக்கு அருள்பாலிக்கிற இறைவனான அந்த ஸ்ரீமன் நாராயணனே பூஜித்த சிவ பெருமான் இங்கு குடிகொண்டுள்ளார். திருமணத் தடை பரிகாரத் தலமாகவும் இந்தக் கோயில் விளங்குகிறது.

இங்குள்ள அம்பிகையைப் பூஜித்தால் ஞானம் நிறைந்த குழந்தை பிறக்கும் என்பது பக்தர்களின் அழுத்தமான நம்பிக்கை.

நவராத்திரி, மார்கழி திருவாதிரை ஆகிய சமயங்களில் இந்தக் கோயிலில் திருவிழாக்கள் சிறப்பாக நடத்தி வருகிறோம்!" என்றார்.



சந்திரமௌலி



மேலும், தேவர்களின் பிரார்த்தனைக்கு இரங்கி, ஸ்ரீகாருண்யவல்லி அம்பிகை உடனுறை ஸ்ரீகர்ஜபுரீஸ்வரர் என்ற திருநாமத்துடன் சிவபெருமான் இங்கு இறைவனாக எழுந்தருளி, யுகம் யுகமாக கோயில் கொண்டுள்ளார்.

சிறிய கோயில் என்றாலும் ஸ்ரீவிநாயகர், ஸ்ரீ முருகன், நவக்கிரகங்களும் ஆலயத்தினுள் உறைந்து பக்தர்களுக்கு அருள்பாலிக்கிறார்கள்.

அம்பாளின் இடுப்பில் சிங்க உருவத்துடன் கூடிய ஒட்டியாணம் உள்ளது. இந்தக் கோயில் இப்போதுள்ள இடத்துக்கு ஒரு கி.மீ. தூரத்தில்தான் முதலில் இருந்ததாம். பெரும் வெள்ளம் வந்து



ஸ்ரீகர்ஜபுரீஸ்வரர்




ஸ்ரீகாருண்யவல்லி

கோயில் சுவர்கள் இடிந்து விழுந்தன. அப்போது தஞ்சையை ஆண்ட மராட்டிய மன்னரிடம் அமைச்சராக இருந்தவர் இந்த ஊர்வாசி என்பதால், மன்னரிடம் உத்தரவு பெற்று, கோயிலை இப்போதுள்ள இடத்துக்கு மாற்றினாராம்.

ஆலயத்து இறைவி ஸ்ரீகாருண்யவல்லி அம்பிகை மிகுந்த சக்தி வாய்ந்தவர் என்கிறார்கள். ஈச்சங்குடியில், தற்போது ஆலயம் உள்ள தெருவில் வசித்து வந்த மகாலட்சுமி அம்மாள் என்பவர், தினமும் ஆலயத்துக்கு வந்து அம்பிகையை மனமுருகி வழிபட்டு, ஞானம் நிரம்பிய குழந்தை வேண்டிப் பிரார்த்தனை செய்து வந்தாராம். அவர் வேண்டியவாறே, மகா ஞானம் நிரம்பிய குழந்தை மகாலட்சுமி அம்மாளுக்குப் பிறந்ததாம். அப்படிப் பிறந்த குழந்தை வேறு யாருமில்லை; காஞ்சி சங்கர மடத்தின் 'மகாப் பெரியவா' எனப் போற்றப்படும் ஸ்ரீசந்திரசேகரேந்திர ஸ்வாமிகள்தான்!

'மகாப் பெரியவா' பிறந்த வீடு, தற்போது வேதம் போதிக்கும் பாடசாலையாக விளங்குகிறது.


ஈச்சங்குடி ஆலயத்தில் தல விருட்சமாக உள்ளது ஈச்சை மரம்.



இதில் சிற்றீச்சை, பேரீச்சை என இரண்டு வகை உண்டு. இரண்டும் நிறைய மருத்துவ குணங்கள் கொண்டவை!

சிற்றீச்சை மரத்தின் பிசினை நீரில் கலந்து சிறிதளவு சாப்பிட்டால், அஜீரண பேதி மற்றும் சிறுநீரகம் சம்பந்தமான நோய்கள் நீங்கும். ஈச்சங் கொட்டையைப் பால் அல்லது தண்ணீரில் தேய்த்து, சிறிது கண்ணில் திற்றினால் கண்ணில் விழும் பூ குணமாகும். ஈச்சங் குருத்தைத் தின்பதால் பெண்கள் மாதவிலக்குப் பிரச்னைகள் தீரும். ஈச்சம் பாயில் உறங்கினால் உஷ்ணம் உண்டாகும்; பித்தம் நீங்கும்; கபம் அகலும்.

பேரீச்சங் காயின் பருப்பை நீக்கி அதைத் தேனில் ஊற வைத்துச் சாப்பிட்டு வர, மாரடைப்பு குணமாகும்; வாயுத் தொல்லை நீங்கும். பேரீச்சம் பழச் சதையில் இரும்புச் சத்து நிறைய இருக்கிறது. ஆண்மைக்கான அதிகச் சத்து இதில் உள்ளதுடன் இதைச் சாப்பிட, நரம்புத் தளர்ச்சி நீங்குகிறது. பேரீச்சம் பழத்தில் சர்க்கரைச் சத்து அதிகம் உண்டு எனினும், சர்க்கரை வியாதி உள்ளவர்கள் இதைப் பயன்படுத்தினால், ரத்தத்தில் சர்க்கரையின் அளவு அதிகரிப்பதில்லை!



காய்ச்சல், அம்மை நோய் பாதிக்கப்பட்டவர்களுக்குப் பாலுடன் பேரீச்சம் பழத்தையும் சேர்த்துக் கொடுக்க வேண்டும். பருவ வயது வந்த பெண்கள், வளரும் குழந்தைகளுக்கு பேரீச்சம் பழத்தைப் பாலுடன் கலந்து தருவது நல்ல ஊட்டச்சத்து உணவாக அமைகிறது.

பழனி முருகன் ஆலயத்தில் வழங்கப்படும் பஞ்சாமிருதத்துடன் சேர்க்கப்படும் கனி வகைகளில் பேரீச்சம்பழம் முக்கிய இடம் வகிக்கிறது.

முல்லைச் செடியின் மகிமை!

உத்திரட்டாதி நட்சத்திரத்துக்கான விருட்சம்

47

திருப்பல்லவனேஸ்வரம்
ஸ்ரீபல்லவனேஸ்வர ஸ்வாமி திருக்கோயில்

பிறர் மனம் புண்பட விரும்பாதவர்கள், தான் மகிழ்ச்சியாக இருந்து, மற்றவர்களையும் மகிழ்ச்சியடையச் செய்பவர்கள், பெற்றோர் மற்றும் உறவினர்களுக்கு மரியாதை தருபவர்கள், அறிவாளியாகவும் திறமைசாலியாகவும் இருப்பவர்கள்... பெரும்பாலும் உத்திரட்டாதி நட்சத்திரத்தில் பிறந்தவர்களாகவே இருப்பார்கள்!

உத்திரட்டாதி நட்சத்திரம், வியாழன் கிரகம் மற்றும் மீனம் ராசியுடன் தொடர்பு கொண்டது. வியாழக்கிழமைகளிலும், பிப்ரவரி 19 முதல் மார்ச் 20-ம் தேதி வரையிலும் பிறந்தவர்களை இந்த நட்சத்திரம் ஆட்சி செய்கிறது. இந்தக் காலங்களில் உத்திரட்டாதி நட்சத்திரத்தின் கதிர்வீச்சுகள் பூமியில் அதிக அளவில் படும்.

இந்த நட்சத்திரத்தின் நல்ல கதிர்வீச்சுகள் மனிதனுக்கு ஆரோக்கியத்தையும், கெட்ட கதிர் வீச்சுகள் நோய்களையும் உண்டாக்குகின்றன. முல்லை (மல்லிகை, வேப்பமரம் ஆகியவையும் இதே பலன்கள் கொண்டவை), உத்திரட்டாதி நட்சத்திரத்தின் கதிர்வீச்சுகள் பூமிக்கு வரும்போது



முல்லை

ஈர்த்து, தனக்குள் வாங்கி சேமித்து வைப்பதோடு, கெட்ட கதிர் வீச்சுகளை நல்ல கதிர்வீச்சுகளாக மாற்றி, மனிதர்களுக்கு நன்மை அளிக்கிறது.

சீர்காழி வட்டம், பூம்புகாரில் உள்ள திருப்பல்லவனேஸ்வரம் ஆலயத் தல விருட்சமாக விளங்குகிறது முல்லை. இங்கு ஸ்ரீசௌந்தரநாயகி சமேத பல்லவனேஸ்வர ஸ்வாமி உறைந்து பக்தர்களுக்கு அருள்பாலிக்கிறார்.

குபேரன், பட்டினத்தாராக நகரத்தார் குலத்தில் அவதரித்து அற்புதங்கள் பல படைத்தார். திருவிடைமருதூர் ஸ்ரீமகாலிங்க ஸ்வாமி, பட்டினத்தாரின் திருக்குமாரனாக இங்கு பிறந்து மருதவாணர் என்ற பெயர் தாங்கி 'காதற்ற ஊசியும் வாராது காண் கடை வழிக்கே ' என்ற உபதேசத்தைப் பட்டினத்தாருக்கு அருளினார்.

'கோவணமுண்டு, உறங்க புறத் திண்ணையுண்டு, உணவில் கடைக்காயிலை உண்டு, அருந்தத் தண்ணீர் உண்டு, அருந்துணைக்கே விடையேறும் ஈசர் திருநாமம் உண்டு... இந்த மேதினியில் வடகோடு உயர்ந்தென்ன, வான்பிறைக்கே' எனப் பரவசமாய்ப் பாடி பல தலங்கள் தரிசித்து இறுதியில் திருவொற்றியூர் சென்று முக்தி பெற்றவர் பட்டினத்தார். அவருக்கு இந்தக் கோயிலில் தனிச் சந்நிதி உள்ளது. இந்த ஆலயத்தின் இறைவனை காலவ மகரிஷி, காசிப முனிவர் ஆகியோர் பூஜித்து பேறு பெற்றதாகப் புராணக் குறிப்புகள் கூறுகின்றன.

பூம்புகார்-கல்லணை நெடுஞ்சாலையை ஒட்டித் தெற்கில் கோயில் அமைந்திருக்கிறது. கிழக்கு மேற்கில் 207 அடி, தெற்கு வடக்கில் 115 அடி - மூலஸ்தானம் திரிதள விமானமாக உயர்ந்துள்ளது. ஐந்து நிலை ராஜகோபுரம், கிழக்கு பார்த்த சந்நிதி, எதிரில் ஜாணவி தீர்த்தம், உள்ளே வலம் வந்தால், சூரியன், சிவ லிங்கங்கள், பட்டினத்தார், தல விநாயகர், ஸ்ரீவள்ளி தேவயானை சமேத



கோயில் கோபுரமும் திருக்குளமும்



ஸ்ரீபல்லவனேஸ்வரர்

ஸ்ரீசுப்ரமணியர், கஜலட்சுமி, அகத்தியர், சம்பந்தர், பைரவர், சந்திரன், நவக்கிரகங்கள் என தனித்தனி சந்நிதிகளுடன் ஆலயம் அழகுறத் திகழ்கிறது.

கி.பி. 2-ம் நூற்றாண்டில் கடற்கோளால் காவிரிப்பூம்பட்டினம் ஓரளவு கடலுக்குள் அமிழ்ந்து போயினும் எஞ்சிய பெரும்பகுதி பல்லவர் காலத்தில் பெருநகரமாக விளங்கியது. அந்த நகரின் நடுநாயகமான பகுதியில் விளங்கியதுதான் திருப்பல்லவனேஸ்வரர் திருக்கோயில்! கி.பி. 7-ம் நூற்றாண்டில் ஞானசம்பந்தப் பெருமான் அந்தப் பெருநகரையும் திருக்கோயிலையும் குறித்துப் பாடியுள்ளார்.

நினைத்தது நிறைவேறும்!

ஆலய அர்ச்சகர் கணேசமூர்த்தி, "இது பட்டினத்தார் வழிபட்ட தலம். இங்குள்ளது, பல்லவர் காலத்து லிங்கம். ஆலயத்துக்குச் சிறப்பான திருப்பணியை நகரத்தார் செய்திருக்கிறார்கள்.

நகரத்தார் உபயமாக பட்டினத்தாருக்கு ஆடி மாதத்தில் 12 நாள் திருவிழா, சிறப்பாக நடத்தப்படுகிறது.




கணேசமூர்த்தி

கோயிலின் தல விருட்சமாக முல்லை, மல்லிகை, புன்னை ஆகியவை உள்ளன. இங்கு தினமும் ஐந்து கால பூஜை நடக்கிறது. மாத விழாக்களாக கார்த்திகை, பிரதோஷம் ஆகியவை நடக்கின்றன.

இங்குள்ள இறைவனை வழிபட்டால் பக்தர்கள் நினைத்தது கட்டாயம் நிறைவேறும்!" என்று நெஞ்சம் நெகிழச் சொன்னார் அர்ச்சகர் கணேச மூர்த்தி.

ஒன்பதாம் நூற்றாண்டு சோழர் கால சிற்பக் கலை உச்சத்தைக் காட்டும் ஐம்பொன்னிலான உன்னதச் சிலையாக ஸ்ரீகுகாம்பிகை சிலை விளங்குகிறது. அழகே வடிவாக, கையில் தாமரை மலருடன் வலக்கால் மடக்கி, இடது காலைத் தொங்கவிட்டு அமர்ந்துள்ள அம்பிகை; பக்கத்தில் குழந்தை முருகன் அமர்ந்து விளையாடும் கோலம்... அற்புதம்!


ஸ்ரீகுகாம்பிகை

தல விருட்சமான முல்லைக்கு பல மருத்துவ குணங்கள் உண்டு. வாயுத் தொல்லையை நீக்கும்; சளியை வெளியேற்றும்; வலி நிவாரணியாகச் செயல்படும்; தடைப்பட்ட சிறுநீர் மற்றும் மாதவிடாயை வெளியேற்றும்; ஆண்மைச் சக்தியை அதிகரிக்கும்.

முல்லைப் பூக்களை முகர்ந்தால் மூளைக்கு சக்தியும் மனதுக்கு மகிழ்ச்சியும் கிடைக்கும். இதன் இலைக் கஷாயத்தில் வாய் கொப்பளித்தால் பல் வலி, வாய் வேக்காளம் போன்ற பிரச்னைகள் தீரும். இதன் வேரைத் தண்ணீரில் வேகவைத்துக் குடித்தால் தடைப்பட்ட மாதவிலக்கு பிரியும். பூக்களுடன் எள்ளைக் கலந்து எடுத்த எண்ணெயைக் கொண்டு பாரிச வாயு, வாய்க் கோணல், மூட்டு வலி மற்றும் பின் தொடை நரம்பு வலிக்கு மசாஜ் செய்தால் நல்ல பலன் கிடைக்கும்.


ஸ்ரீசௌந்தரநாயகி

குறிஞ்சிப்பாட்டில் தலைவன் '*பித்திகத்து அழகிய இதழ்களை உடைய பூவைத் தொடுத்து வடமாகச் சுற்றிக் கொண்டு வருவான்*' என்பார் கபிலர். '*வஞ்சி பித்திகம் சிந்துவாரம்*' என்பது குறிஞ்சிப்பாட்டில் வரும் அடியாகும்.

பித்திகை மலர்களை குருக்கத்தி மலர்களுடன் கலந்து உழவர் தனிமகள் விற்பனை செய்வாள் என்பது நற்றிணை கூறும் செய்தியாகும்.

திருக்கருகாவூர், திருக்கருப்பறியலூர், வடதிருமுல்லைவாயில் ஆகிய ஊர்களின் திருக்கோயில்களில் முல்லைக் கொடியும், திருவுசாத்தானம், திருஇலம்பையங்கோட்டூர் ஆகிய ஊர்களின் ஆலயங்களில் மல்லிகையும், திருக்கடவூரில் பிஞ்சிலம் என்னும் பெருமல்லிகையும் தல விருட்சங்களாக உள்ளன.

இலுப்பை மரத்தின் மகிமை!

ரேவதி நட்சத்திரத்துக்கான விருட்சம்

48

இலுப்பைப்பட்டு
ஸ்ரீநீலகண்டேஸ்வரர் திருக்கோயில்

திறமை, வீரம், அன்பு உள்ளவர்கள், புகழ் மற்றும் செல்வத்துடன் வாழ்பவர்கள் பெரும்பாலும் ரேவதி நட்சத்திரத்தில் பிறந்தவர்களாகவே இருப்பார்கள்.

ரேவதி நட்சத்திரம் வியாழன் கிரகத்துடனும், மீன ராசியுடனும் தொடர்பு கொண்டது. வியாழக் கிழமைகளில் மற்றும் பிப்ரவரி 19 முதல் மார்ச் 20-ம் தேதி வரை பிறந்தவர்களை ரேவதி நட்சத்திரம் ஆட்சி செய்கிறது. இந்தக் காலங்களில் ரேவதி நட்சத்திரத்தின் நல்ல கதிர்வீச்சுகள் பூமியில் அதிக அளவில் படும். இவற்றை இலுப்பை மரம் தன்னுள் சேமித்து வைத்துக் கொள்ளும். அதுவே காலப்போக்கில் மருத்துவ குணமாக மாறுகிறது.

ரேவதி நட்சத்திரத்து கெட்ட கதிர்வீச்சுகளால் உண்டாகும் தோஷம் மற்றும் நோய்கள் நீங்க, தினமும் அரை மணி நேரம் இலுப்பை மரத்தைக் கட்டிப் பிடிக்கலாம்; அதன் நிழலில் ஓய்வெடுக்கலாம். அல்லது இலுப்பை மரத்தின் பாகங்களால் செய்யப்படும் மருந்துகளை உட்கொள்ளலாம்.

இலுப்பை மரம் மண்ணிப்படிக்கரை என்ற இலுப்பைப்பட்டில் உள்ள ஆலயத்தின் தல



விருட்சமாக விளங்குகிறது. வைத்தீஸ்வரன் கோயிலிலிருந்து மேற்கே 13 கி.மீ. தூரத்தில் இந்தத் தலம் இருக்கிறது.

பஞ்ச பாண்டவர்கள், சூதாட்டத்தில் நாடு, நகரங்களை இழந்து காட்டில் வசித்தபோது உரோமச முனிவரின் ஆசிரமத்தை அடைந்து, தங்களுக்கு நேர்ந்த துன்பங்களை அவரிடம் முறையிட்டனர். அதற்கு அவர் "நீங்கள் மதுகாவனம் (இலுப்பைக் காடு) சென்று அங்குள்ள சிவ லிங்கங்களை வழிபடுங்கள். இஷ்ட சித்திகள் வசமாகும்!" என்றார். அதன்படி இலுப்பைப்பட்டு சென்று அங்குள்ள தெய்வங்களை வழிபட்டார்கள் பஞ்ச பாண்டவர்கள்.



ஸ்ரீஅமிர்தகரவல்லி

இந்தத் தலத்தில் உள்ள ஸ்ரீஅமிர்தகரவல்லி சமேத ஸ்ரீநீலகண்டேஸ்வரரை தருமர் வழிபட்டிருக்கிறார். அவர் பூஜித்த ஸ்ரீநீலகண்டேஸ்வரர் விஷம் சாப்பிட்டபோது அம்பாள் தவம் மேற்கொள்ள, விஷம்

அமிர்தமாக மாறியதாம். அம்பாள் கையில் அமிர்த கலசம் இருக்கிறது. அம்பாளின் திருநாமம், ஸ்ரீஅமிர்தகடவல்லி.

ஸ்ரீமங்களநாயகி சமேத ஸ்ரீபடிக்கரைநாதரை அர்ஜுனன் வழிபட்டான். 16 கோடுகள் உள்ள ஷோடச லிங்கமான ஸ்ரீமகதிஸ்வரரை வீமன் வழிபட்டான். இந்த லிங்கத்தை வழிபட்டால் அமாவாசை, பௌர்ணமி முதலிய 16 திதிகள் கொடுத்த புண்ணியம் கிடைப்பதோடு, அனைத்துத் தோஷங்களும் அகலும். கூடவே 16 செல்வங்கள் வந்து சேருமாம். நகுலன் ஸ்ரீபரமேஸ்வர லிங்கத்தை வழிபட்டான். இந்த லிங்கத்தை வழிபட்டால், வாகன யோகம் கிட்டுமாம். சகாதேவன் வழிபட்ட ஸ்ரீமுக்திஸ்வரர், ஞானகாரகன். நல்ல கல்வி, திருமணம், குழந்தை பாக்கியம் அனைத்தையும் அருளுவாராம். ஸ்ரீவலம்புரி விநாயகரை திரௌபதி வழிபட்டாள்.

இங்கு பூஜைகள் செய்த பின்புதான் குருக்ஷேத்திர யுத்தத்துக்கு பாண்டவர்கள் புறப்பட்டுச் சென்றார்கள்; போரில் வெற்றியும் பெற்றார்கள் என்கிறது ஸ்தல புராணம். இலுப்பைப்பட்டு ஆலயத்தின் தல விருட்சமான இலுப்பை மரத்திலிருந்து எடுக்கப்படும்

எதிரிகளை வெல்லலாம்!



இலுப்பை மரம்



சுப்ரமணிய சிவாச்சார்யர்

ஆலய அர்ச்சகர் கணபதி சுப்ரமணிய சிவாச்சாரியரைச் சந்தித்தோம்.

"தல விருட்சமான இலுப்பை நெய் தீபம் இட உகந்தது. இந்த மரத்தை ஒரு மண்டலம் வலம் வந்து சிவனை வழிபட்டால், குழந்தை பாக்கியம் இல்லாதோருக்குக் குழந்தை பிறக்கும்.

இங்குள்ள பஞ்சபாண்டவர்கள் பூஜித்த சிவ லிங்கங்களை வழிபட்டால், தோஷங்கள் அகலும். கல்வியில் சிறந்து விளங்கலாம். திருமணத் தடை நீங்கும்.

இந்தச் சிவலிங்கங்களை வழிபட்டு அதன் பின்பே குருக்ஷேத்திரப் போரில் கௌரவர்களின் 11 அக்குரோணி சேனையையும் பாண்டவர்கள் அழித்தொழித்து ஜெயம் அடைந்தார்கள்.

அதனால் எதிரிகளை வெற்றி கொள்ள இந்த ஆலயத்தில் வழிபாடு நடத்துவது நல்ல பலனளிக்கும்!" என்று கணபதி சுப்ரமணிய சிவாச்சார்யர் நம்மிடம் தெரிவித்தார்.



ஆலயத்தின் பிராகாரம்...



எண்ணெயிலும் நெய்யிலும் விளக்கு ஏற்றலாம். இலுப்பைப் பூக்களைத் தின்பண்டமாகப் பயன்படுத்துவார்கள். ஆனால், இதை அதிக அளவில் சாப்பிட்டால் போதை தலைக்கு ஏறிவிடும். 'ஆலை இல்லா ஊரில் இலுப்பைப் பூ சர்க்கரை' என்பது பழமொழி. கரும்பிலிருந்து சர்க்கரை எடுப்பதற்கு முன்பு இலுப்பைப் பூவிலிருந்து சர்க்கரை எடுத்துப் பயன்படுத்தியதாகக் கூறுவர்.

சொறி, சிரங்கு, புண்கள், காக்கை வலிப்பு, சொட்டுச் சொட்டாகச் சிறுநீர் பிரிதல், வயிற்றில் வளரும் நாக்குப் பூச்சி, கல்லீரல் மற்றும் நுரையீரல் நோய்கள் போன்றவற்றுக்கு இலுப்பை மரத் தண்டு, பூக்கள், விதைகள் பயன்படுவதாக மருத்துவ நூல்கள் கூறுகின்றன.

இலுப்பைப் பழம் வயிற்றைச் சுத்தம் செய்கிறது; மலச்சிக்கலைப் போக்குகிறது. மூட்டுவலி, இடுப்பு வலி, வாயுத் தொல்லை ஆகியவற்றைப் போக்குகின்றது. பூக்களைப் பால்விட்டு அரைத்துக் கொடுத்தால் உடல் இளைப்பு போகும். காய்ந்த பூக்களை வதக்கி வீக்கங்களில் ஒத்தடம் இட்டால், வீக்கம் குணமாகும்.

இலுப்பைப் பூவில் 50 கிராம் எடுத்து அரை லிட்டர் தண்ணீரில்



ஸ்ரீநீலகண்டேஸ்வரர்



ஸ்ரீபடிக்கரைநாதர்



ஸ்ரீமகதீஸ்வரர்



ஸ்ரீமுக்தீஸ்வரர்



ஸ்ரீபரமேஸ்வரர்

இட்டு, 200 மி.லி. அளவுக்குக் காய்ச்சி, வடிகட்டி, இரண்டு மாதங்கள் தினம் காலை வேளையில் தொடர்ந்து குடித்து வந்தால் சர்க்கரை நோய் குணம் பெறும்.

ஈரோட்டிலிருந்து 18 கி.மீ. தூரத்தில் உள்ள திருக்கொடிமாடச் செங்குன்றூர், ராமநாதபுரம் இலுப்பைக்குடி ஆகிய ஊர்களின் கோயில்களில் இலுப்பை மரம் தல விருட்சமாக உள்ளன.

படங்கள்: கே.கார்த்திகேயன், கரு.முத்து,
எல்.ராஜேந்திரன், 'ப்ரீத்தி' கார்த்திக், கே.குணசீலன்

வி.ஐ.பி-க்கள் பார்வையில்...



தமிழகத்தில் எண்ணற்ற திருத்தலங்கள்;

ஒவ்வொன்றும் ஒவ்வொரு மாதிரி

கரங்களின் விரல்களைப்போல -

ஒவ்வொரு தலத்திற்கும் ஒவ்வொன்று தல விருட்சம் -

விருட்சத்தை இறைமையுடன் இணைத்தால்
விருத்தி செய்வார்கள் -

மருத்துவ குணங்கள் மறையாமலிருக்கும்
என்பதே சூட்சுமம்

அவற்றையெல்லாம் தேடிப்பிடித்துத்
திரட்டித் தந்திருக்கிறார் ஜே.வி.

அவை தித்திக்கின்ற திரட்டுப் பாலாய்.

வாசிக்கும் போதே நாசிகளை நறுமணம் தடவும் அளவு

சுகானுபவம் உள்ளமெங்கும் வியாபிக்கிறது

'ஆலய விருட்சங்கள்' காவிய வெளிச்சங்கள்.

– **வெ.இறையன்பு**, ஐ.ஏ.எஸ்.



ஆன்மிகம் வளர்வதற்கான முதல் படிக்கட்டான கோயில்களில்தான் மனிதன் தன் மனச் சுமையை இறக்கி வைக்கிறான். எந்த மருத்துவ நிபுணராலும், எந்த மருந்தாலும் குணப்படுத்த முடியாத மனக் கவலைகளுக்கு அருமருந்தாக விளங்குபவன்தான் இறைவன். சிவனும், சக்தியும் காட்சி தரும் பல தலங்களுள், 48 தலங்களுக்கு அழைத்துச் செல்கிறார் ஆசிரியர். இவற்றுள் சில தலங்களுக்குச் சென்று வந்த வாய்ப்பைப் பெற்றவன் என்ற முறையில், மனிதனுக்கும், இயற்கைக்கும், இறைவனுக்கும் உள்ள தொடர்பை இலக்கிய நடையில், அறிவியல்பூர்வமாக, அழகான படங்களுடன் ஆசிரியர் மிகச் சிறப்பாகச் சொல்லியிருக்கிறார் என்பதை என்னால் அறிய முடிகிறது.

இந்த நூலைப் படிக்கையில், இங்கெல்லாம் செல்ல இயலாத மக்களுக்கு, சென்று வந்த ஆனந்தத்தை இந்த நூல் அளிக்கும் என்பது திண்ணம். மன அமைதியை இழந்து நிற்கும் தற்கால மனிதனுக்குத் தேவையான அருமருந்தான ஆன்மிகக் களஞ்சியத்தை இந்த நூலின் மூலம் அளித்திருக்கும் ஆசிரியருக்குத் தமிழ் கூறும் நல்லுலகம் என்றும் நன்றிக் கடன் பட்டிருக்கும்.

– **கி.இராதாகிருஷ்ணன்**, ஐ.பி.எஸ்.

விகடன் பிரசுரம்

AAROKKIYAM ARULUM
AALAYA VIRUTCHANGAL

₹ 125

ISBN 978-81-8476-402-4

9788184764024